24397) 85
11 APR
27

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 6, 1984—தொகுதி LIX எண் 3

Tuesday, 6th March 1984—Volume LIX No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LIX NO: 3

March 6th 1984

D
V211, 31 N84
N84-59.3
136223

V211,31 N84
N84.57-3
136223
600 008

## உள்ளடக்கம்.

6—3—1984


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள் : | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 271—301 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 301—402 |
| 2. தகவல் கோரல் : | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை : | 402 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| உதகமண்டலத்தில் படப்பிடிப்பின்போது கன்னட நடிகர் தாக்கப்பெற்றதாக பெங்களூரில் தமிழர்கள் தாக்கப்பெறுவது .. | 402—425 |
| 4. அரசினர் சட்ட முன்வடிவுகள் :— | |
| (அ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்த சட்டமுன் வடிவு, 1984 .. .. .. .. | 425 |
| (ஆ) இந்திய தண்டனைச் சட்டக்கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1984 .. .. .. | 426 |
| (இ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு) விதித் துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1984—(தொடர்ச்சி) .. .. .. | 426—440 |
| (ஈ) மகளிர் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு 1984 .. .. .. .. | 440—476 |
| (உ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1984 .. .. .. | 476—483 |
| (ஊ) பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1984 .. .. | 484—386 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அறிவிப்புகள் : | |
| (அ) மகளிர் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு 1984 (ஆ. இ.) .. .. .. | 440 |
| (ஆ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1984 (ஆ. இ.) .. .. | 476 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 486 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1984, மார்ச் 6, செவ்வாய்க்கிழமை

மாசி 23, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது".

ஒரு செயலைக் குறித்து ஆராய்ச்சி செய்வதன் முடிவு, அச் செயலைச் செய்து முடிக்க துணிவு கொள்ளுதலே ஆகும். அவ்வாறு செய்வதற்குத் துணிந்த செயலில் காலம் தாழ்த்தி நிற்பது குற்றமாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பஞ்சாலைகளுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் மின்கட்டணம்.

175—*வினா எண். 18301—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியம் பஞ்சாலைகளுக்குக் கூடுதல் மின் கட்டண சர்சார்ஜ் விதித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அதனால் ஆண்டுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) & (ஆ) : பஞ்சாலைகள் உள்ளிட்ட உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் எரிஎண்ணெய்க் கூடுதல் கட்டணமாக யூனிட் 1-க்கு 45 பைசா 1-2-1983 முதல் விதிக்கப்பட்டது. 22-2-1983-ல் இக்கட்டணம் ரத்து செய்யப்பட்டு மின் கட்டணத்தைப் பொதுவாக மாற்ற வேண்டிய அவசியத்தை விரிவாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க திரு. பணிக்கர்,

[1984 மார்ச் ..

ஐ. ஏ. எஸ்., அவர்களைக் கொண்ட ஒருநபர்க்குழு அமைக்கப்பட்டதும் இக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் திருத்திய பொது மின் கட்டணம் 16-5-1983 முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைகளிடமிருந்து அதிக கட்டணத்தை வாங்கி தேவையான மின்சாரத்தை வழங்கியுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். விவசாயத்திற்கு பற்றாக்குறை இருக்கின்ற காலக் கட்டங்களில் இப்படி பஞ்சாலைகளுக்கு அதிகமான கட்டணத்தை வாங்கிக்கொண்டு கொடுப்பதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின்நிலையத்தை பொறுத்தவரையில் எரி எண்ணெய் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. எரி எண்ணெய் வாங்குவதற்கு அதிகம் செலவழிக்க வேண்டி வந்தது. அந்தச் செலவை ஈடு கட்டுவதற்கு பெரும் தொழிற்சாலைகளுக்கு 'பியூவல் சர்சார்ஜ்' என்ற அளவில் கட்டணம் அப்போது அதிகமாக வசூலிக்கப்பட்டது. இதற்கும் விவசாயத்திற்குத் தருகின்ற மின்சாரத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பஞ்சாலைகளிடமிருந்து அதிகமாக கட்டணத்தொகை வசூல் செய்ததன் காரணமாக மின்சார வாரியத்திற்கு எவ்வளவு வருவாய் வந்தது என்பதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. திரு. பணிக்கர் குழுவின் அறிக்கையை ஒட்டி நாம் இந்தக் கட்டண உயர்வு செய்தபோது 53.57 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் வருமானம் கிடைத்தது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிக்கர் குழுவின் அறிக்கையை ஒட்டி கட்டணம், சர்சார்ஜ் என்ற பெயரால் வசூல் செய்ததன் அடிப்படையில் 53 கோடி ரூபாய் வருமானம் வந்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரணமாக கிராமங்களில் இருக்கும் வீடுகளுக்கும் அண்மையில் கட்டண உயர்வு உயர்த்தப்பட்டு இருக்கிறதே அதை அரசு அறியுமா? அதோடு மட்டும் அல்லாமல் முன்பு எல்லாம் 3 மாதங்களுக்கு ஒரு தடவை டெபாசிட் வசூல்





[1984 மார்ச் 6]

செய்வார்கள். தற்போது ஒவ்வொரு மாதமும் கட்டணம் வசூல் செய்கிறார்கள். இப்போதும் 3 மாத டெபாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லி வற்புறுத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளுக்கு, அதிகமான கட்டணம் வசூல் செய்வதில் கிராமமா நகரமா என்று பார்ப்பது இல்லை. யார் யார் வீடுகள் வைத்து இருக்கிறார்களோ அந்த வீடுகளுக்குப் பொதுவான கட்டணம்தான் வசூல் செய்யப்படுகின்றன. குடிசைகளுக்குத்தான் குறைந்த கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஆகவே, வீட்டுக் கட்டணத்தைக் குறைப்பது என்பது இயலாத காரியம். அடிஷனல் டெபாசிட் அவர்கள் ஒரு ஆண்டில் அதிக மான மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற நிலை வருகிற போது அந்த அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்துகிற அள வுக்கு சராசரி கணக்கெடுத்துப் பார்த்து அதற்கு ஒரு உத்திரவாத மாக அந்த அடிஷனல் டெபாசிட் கேட்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள், ஆஸ்டட்டல்கள், ஆர்ப்ப னேஜ் இதுபோன்ற இடங்களில் அதிகமான கட்டணம் வசூலிக்கப் படுவதும் அதோடு அடிஷனல் சார்ஜ் அதிக அளவுக்கு கேட்கிறார் கள். அதனால் மாணவர்களுக்கு அவதி ஏற்படுகிறது. இவை களுக்கு மட்டுமாவது விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இத்தகைய பொது நிறுவனங்களுக்கு ஏற்கெனவே வணிக நிறுவனங்களோடு சேர்த்துக் கட்டணங்கள் விதிக்கப் பட்டன. பணிக்கர் குழுவின் அறிக்கைக்குப் பிறகு இது ஒரு தனிவகைக் கட்டணத்திலே போடப்பட்டிருக்கிறது. கல்வி நிறுவனங்கள், மாணவர் விடுதிகள், கோயில்கள், அரசு மருத்துவமனைகள், பொது படிப்பகங்கள், அனாதை இல்லங்கள் ஆகியவை தனியே தொகுக்கப்பட்டு அவைகளுக்கென தனியே கட்டணம் இப்பொழுது விதிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இரங்கசாமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாலைகளுக்கு மின் கட்டண சர்சார்ஜ் விதிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார் கள். அந்தக் குழுவின் பரிந்துரையில், வேறு தொழில்களுக்கு சர்சார்ஜ் இதைப்போன்று விதிக்க வேண்டுமென்று இருக்கிறதா? பஞ்சாலைகளுக்கு ஒரு யூனிட்டிற்கு எவ்வளவு சர்சார்ஜ் விதிக்கப் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பணிக்கர் குழு அறிக்கைக்குப் பிறகு அந்த சர்சார்ஜ் ரத்து செய்யப்பட்டுவிட்டது. நாமாக அந்த சர்சார்ஜைப்

போட்டோம். அதாவது நான் ஏற்கனவே சொன்ன பதிலில் குறிப்பிட்டதைப்போல, 1—2—1983 முதல் விதிக்கப்பட்டது; 22—2—1983-ல் இக்கட்டணம் ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பிறகு பணிக்கர் குழு போடப்பட்டது. ஆகவே, இப்பொழுது அந்த ஃப்யூயல் சர்சார்ஜ் இல்லை.

### புதிய மின் திட்டங்களுக்கான மைய அரசின் அனுமதி.

176—(*வினா எண். 19936)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசு புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குகிறபோது நிபந்தனைகளின் அடிப்படையில் முடிவெடுப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், நிபந்தனைகளைத் தளர்த்தி மாநில மின் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு அனுமதி வழங்க மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) நிபந்தனைகள் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவை என்பதால் தளர்த்த வேண்டியதில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி நிபந்தனைகள் விதித்தாலும், கல்பாக்கம் அணு மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் அதில் உற்பத்தியாகக் கூடிய அனைத்து மின்சாரத்தையும் தமிழ் நாட்டிற்கே தருவதாக முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டு, பிறகு அண்டை மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதே, அப்படி இல்லாமல் அந்த மின் உற்பத்தி முழுவதையும் நாம் முழுமையாகப் பெறுவதற்கு எந்தவகையில் முயன்றிருக்கிறோம் என்ற விவரத்தையும், அதற்கு மத்திய அரசாங்கத்தின் பதில் என்ன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்வி, புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குகிறபோது இந்திய அரசு எந்தகைய நிபந்தனைகளை விதிக்கிறது என்பதைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கல்பாக்கத்தைப் பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். இன்னும் கொஞ்சம் நேரம் பொறுத்திருந்தால் அது நான்காவது கேள்வியாக வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி அனுமதி அளிக்கப்பட வேண்டிய புதிய மின் திட்டங்கள் எத்தனை இன்னும் இருக்கின்றன? இதுவரையில்



எத்தனை மின் உற்பத்தி நிலையங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது என்ற விவரத்தையாவது அமைச்சரவர்கள் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல சிறு திட்டங்கள் அனுமதி அளிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தாலும் நாம் வற்புறுத்தி வருவது, இரண்டு முக்கியமான திட்டங்கள். வட சென்னை அனல் மின் திட்டம், தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம். வட சென்னை அனல் மின் திட்டத்திற்கு நாம் 210 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட ஐந்து யூனிட்டுகள் கேட்டிருந்தோம். மூன்று யூனிட்டுகளுக்கான அனுமதி கிடைக்கும் தறுவாயில் இருக்கிறது. அதற்கான நிலக்கரி, மற்றவைகள் எல்லாம் தருவதற்கு இந்திய அரசு சம்மதித்திருக்கிறது. தூத்துக்குடியிலே அதேபோல இரண்டு யூனிட்டுகளை நாம் கேட்டிருக்கிறோம். அதற்கும் அனுமதி தரும் நிலையிலே இப்பொழுது இருக்கிறது. கடைசியாக 18—1—1984 அன்று மத்திய மின்சாரக் குழு சில விவரங்களைக் கேட்டிருந்தார்கள். அதையும் நாம் அனுப்பியிருக்கிறோம். தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் சில விவரங்களை மீண்டும் கேட்டிருக்கிறார்கள். இதற்கு 16—2—1984 அன்று இங்கிருந்து விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் இந்த இரண்டு திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாட்டினுடைய வாழ்வும், வளமும் இந்த மின்சாரத்தோடு இணைந்திருப்பதாலே, மத்திய அரசாங்கம் போடுகின்ற நிபந்தனைகளினாலே நம்முடைய விவசாயமும், தொழில்களும் பாதிக்கப்படுகின்றனவே, ஆகவே, நான் அறிந்துகொள்ள விரும்புவதெல்லாம், இந்த நிபந்தனைகளையெல்லாம் அடுத்து நாம் போடும் திட்டத்தால் இந்த நடைமுறை ஆண்டிலே எவ்வளவு மெகாவாட் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் அதற்கான திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்திய அரசு போடுகின்ற நிபந்தனை என்ன என்பதைச் சொல்லிவிட்டால் இந்தக் குழப்பம் வராது என்று கருதுகிறேன்.

1. மின் உற்பத்தி இயந்திரங்களும், சாதனங்களும் உள்நாட்டு நிறுவனங்களிலிருந்தே வாங்கப்படவேண்டும்.

2. திட்டத்தை நிறைவேற்ற அமுலில் இருக்கும் திட்ட காலத்தில் (கரன்ட் ப்ளான்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

3. அனல் மின் திட்டத்திற்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதற்கான வழிவகைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

4. அண்டை மாநிலங்களின் தொடர்புள்ள திட்டமாக இருந்தால், திட்டம் நிறைவேற அந்த மாநிலங்களின் ஒப்புதல் பெறவேண்டும்.

5. திட்டத்தின் காலமுறை முன்னேற்ற அறிக்கையை மத்திய மின் அதிகார மன்றத்திற்கும்/மத்திய திட்டக் குழுவிற்கும் அனுப்புதல் வேண்டும்.

6. திட்டங்கள் சரியானபடி வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் நிறைவேற்றும் பொருட்டு தேவையான கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்திருத்தல் வேண்டும்.

இவைகள் எல்லாம் அவர்கள் விதித்திருக்கின்ற கண்டிஷன்ஸ். ஆனால், இப்போது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பீடு உள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. இதற்கு மாறாக, 10 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பீடு உள்ள திட்டங்களுக்கு மட்டும்தான் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று விதிமுறை செய்யவேண்டும் என்று நமது அரசின் சார்பிலே நான் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கலில் காவிரியில் கர்நாடக மாநில அரசும், தமிழக அரசும் சேர்ந்து புனல் மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம் ஏற்கெனவே ஆய்வில் இருந்தது. அது சம்பந்தமாக மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கின்றதா ? மத்திய அரசு அதற்கு அனுமதி வழங்கிவிட்டதா என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது காவிரி சம்பந்தப்பட்டிருப்பதால், காவிரிப் பிரச்சினை தீருவதைப் பொறுத்துத்தான் இதுவும் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### காடம்பாறை மின் திட்டம்.

177—(*வினா எண். 20038)—திரு. ஏ. டி. கருப்பையா மற்றும் திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காடம்பாறை நீரேற்று மின்திட்டம் முடிக்கப்படாமல் காலதாமதப்படுத்தப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ.டி. கருப்பையா : தலைவர் அவர்களே, காடம் பாறை நீர்மின் திட்டம் பற்றி ஆய்வு செய்யப்பட்டது எப்போது? எப்போது வேலை முடிந்துவிட்டதா? காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் பேசிக் கொள்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட நிலைமை இருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1978 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மின் நிலையத்திற்காக அகழ்வுப் பணிகள் முற்றுப் பெறும் நிலையில், மின் நிலையத்தின் பக்கவாட்டில் 38 மீட்டர் ஆழத்தில் எதிர்பராத பாறையில் விரிசல் ஏற்பட்டது. இந்த விரிசல் சம்பந்தப்பட்ட நிபுணர்களைக் கொண்டு சரிசெய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய காரணங்களால் மின் உற்பத்தித் திட்டத் தொடக்கப் பணி ஓராண்டு காலம் தாமதப்படலாம். அதாவது மின் உற்பத்தி ஆரம்பம் ஜூன் 1984 என்ற இலக்கிலிருந்து ஜூன் 1985-க்குப் போகலாம்.

திரு. ஏ.டி. கருப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது காலதாமதம் ஏற்பட்டது உண்மை என்று கூறினார்கள். அவ்வாறு காலதாமதம் ஏற்பட்டதன் காரணத்தால் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்பதால் இதற்காக மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா? அப்படியானால் எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது முழு விவரமும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த மின் திட்டம் அநேகமாக இந்தியாவிலேயே இல்லாத முறையில் பூமிக்கடியில் மின் நிலையத்தை உருவாக்கக்கூடிய திட்டமாகும். எனவே இந்தத் திட்டம் மிகவும் திறமையான காண்ட்ராக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டு அதற்காக அவர்களுக்கு அதிகமான பணமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி எல்லாம் அரசு கொடுத்திருக்கும்போது, இப்போது பூமிக்கடியில் தோண்டி சுரங்க வேலை நடந்துகொண்டிருக்கும்போது பாறை வந்துவிட்டது என்று சொன்னால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிலத்திற்கு அடியில் பாறை வந்துவிட்டது என்று சொல்லவில்லை. பக்கவாட்டுப் பாறையில் விரிசல் ஏற்பட்டுவிட்டது என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. கு. ரமணி : விரிசல் இருந்தாலும் சரி அல்லது பாறை இருந்தாலும் சரி. அந்தப் பாறை எப்படிப்பட்டது, என்ன தன்மை உடையது என்பன போன்றவற்றை எல்லாம் பரிசீலிப்பதற்காகத் தான் மின்சார இலாக்காவின் ஒரு பகுதியே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அப்படி இருக்கும் போது இம்மாதிரியான விரிசல் விடக்கூடிய பாறை அதற்கடியில் இருக்கின்றது என்பதைப் பற்றி ஆராய்ந்து தெரிந்துகொள்ளாமல் செய்தது யாருடைய குறை ? அது கான்ட்ராக்டருடைய குறை என்றால் இந்தத் தாமதத்தால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை அவர்களிடமிருந்து வசூலிக்கவும், திட்டத்தை மேலும் துரிதப்படுத்தவும், அரசு தன்னுடைய திறமையான இன்ஜினியர்களைக் கொண்டு ஆலோசனைகள் கொடுக்கவும் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இது அன்டர் கிரவுன்ட் பவர் ஹவுஸ். ஆகவே பூமிக்கடியில் தோண்டி அந்த மின்உற்பத்தி நிறுவனத்தை நாம் அமைக்கிறோம். அவ்வாறு தோண்டியபிறகு அந்தப் பாறையிலே அவர்கள் சில வேலைகளைச் செய்துகொண்டிருக்கும்போது அதிலே இலேசான முறையில் விரிசல் ஏற்பட்டது. அதனால் ஆபத்து ஒன்றும் இல்லை. சென்ட்ரல் மைனிங் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், பீகார், மாநிலத்திலுள்ள தன்பாத்திலிருந்து சைன்டிஸ்ட்ஸ் எல்லாம் வந்து பார்த்தார்கள். அதே போல ஐதராபாத்திலேயிருந்து வந்து பார்த்தார்கள். A Resident Geologist from Hyderabad is now stationed at Kadambarai. அவர்கள் எல்லாம் பார்த்து அதனாலே ஒன்றும் பாதகம் இல்லையென்று சொல்லி அதற்குச் சில பாதுகாப்பு எல்லாம் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். இது சாதாரணமாக கான்ட்ராக்டரினாலே ஏற்பட்டதா அல்லது அவர்களிடத்திலேயிருந்து நஷ்டஈடு வசூல் பண்ண வேண்டுமா என்பதெல்லாம் ஆராய்ந்து பார்த்து செய்யவேண்டிய விவகாரம்.

தென் பிராந்தியத்தில் அணு மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான கோரிக்கை.

178—(*வினா எண் 20638)—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) தென் பிராந்தியத்தில் 'South) 2000 மெகாவாட் அணு மின உற்பத்தி நிலையத்தை அமைக்க மத்திய அரசு ஆலோசித்துள்ளதா ?

(ஆ) அதைத் தமிழ்நாட்டில் அமைக்க அரசு கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்த விபரம் என்ன ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ), (ஆ) மற்றும் (இ.) தமிழ்நாட்டில் பற்றாக் குறையை சரிக்கட்டும் நோக்கத்துடன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடங்குளத்தில் இரண்டாவது அணுமின் நிலையம் அமைப்பதற்கு மாநில அரசு மைய அரசைக் கேட்டுள்ளது. இது குறித்து மத்திய அரசின் பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மத்திய அரசினிடத்தில் தமிழ்நாட்டிற்கு இந்த அணு மின் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுள்ளது கிடைக்கும்படியான சாதகமான நிலையில் அவர்களிடம் இருந்து ஏதாவது பதில் கிடைத்திருக்கிறதா? அல்லது இது வேறு எங்காவது செல்லக்கூடிய நிலையில் அபாயம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நமக்கு இல்லை என்ற பதில் இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே சாதகம் என்றே நினைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த அணு மின் நிலையம் ஏற்படுத்தப்படும்போதும் அலலது எந்த ஒரு மின் நிலையத்தை ஒரு மாநிலத்தில் உருவாக்கும்போதும் அந்த மின் நிலையம் இருக்கும்படியான மாநிலத்திற்கு அதிகப்படியான அளவுக்கு அதிலிருந்து உற்பத்தியாகும் கரண்டை அந்த மாநிலத்திற்கு விநியோகம் செய்ய வேண்டுமென்ற பழக்கமோ அல்லது நடைமுறை ஏற்பாடோ இன்றைக்கு அமுலில் இருக்கிறதா? அல்லது அங்கே 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி ஆகும் என்று சொன்னால், பூரா கரண்டும் நமக்கே கிடைக்குமா என்று சொன்னால் கிடைக்காது. ஒரு ரீஜியன் என்ற முறையில் பக்கத்தில் இருக்கும்படியான மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற ரீதியில் அவர்கள் விதி இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியானால், அது இங்கே கிடைத்தாலும் கூட நமக்கு எவ்வளவு மெகாவாட் கிடைப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டாவது அணு மின் நிலையம் வேண்டுமென்று கேட்கிறோம், அது எத்தனை மெகாவாட் என்பதை அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். 2,000 மெகாவாட் என்று நாம் எடுத்துக் கொள்வது சரியாகாது.

அடுத்தபடியாக, மத்திய அரசு தான் நிறுவுகின்ற மின் உற்பத்தி நிலையங்கள் அந்த வட்டாரத்திலே உள்ள மாநிலங்கள் முழுவதற்கும் பயன்பட வேண்டும்; குறிப்பாக, தென் பிராந்தியத்திலே அவர்கள் நிறுவுகிறார்கள் என்றால், 4 மாநிலங்களுக்கும் பயன்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதைக்கூட

நாம் எதிர்க்கவில்லை. நாம் கேட்பது அத்தகைய பிராந்தியத்திலே உள்ள மாநிலங்களின பற்றாக்குறையைக் கணக்கெடுத்து, மின் உற்பத்தியைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்றுதான். You take deficit into account. ஆனால், 1978 ஆம் ஆண்டிலேயே இத்தகைய மின் திட்டங்களுக்கு அவர்கள் ஒரு கொள்கை வகுத்தார்கள். அதாவது மத்திய சர்க்காரினுடைய நிதி உதவியை ஒவ்வொரு மாநிலத்திற்கும் காட்கில் பார்முலா அடிப்படையில் தருவதை ஒட்டியும் சில ஆண்டுகளில்—அதற்கு முந்தைய ஆண்டுகளில்—மின்சாரம் எவ்வளவு பயன்படுத்தியது ஒவ்வொரு மாநிலமும் என்கின்ற சராசரியையும் கணக்கெடுத்தார்கள். தமிழ்நாட்டிற்கு என்ன நிலைமை என்றால், முந்தைய ஆண்டுகளில் தொடர்ந்து மின்வெட்டு இருந்த காரணத்தினால மின்சாரத்தைப் பயன்படுத்தியதே குறைவு. காட்கில் பார்முலாப்படி மத்திய திட்ட நிதி உதவியிலேயே சராசரி தனி நபர் வருமானத்தைவிட கொஞ்சம் தான் நாம் கூடுதல். ஆகவே, அதிலேயும் நாம் இழந்தோம். ஆகவே இரண்டையும் பார்க்கிறபொழுது குதிரை கீழேயும் தள்ளி, குழியையும் பறித்தது என்பதைப்போல் பற்றாக்குறை நமக்கு அதிகமாக இருந்தும் நாமே மின் உற்பத்தி திட்டங்களைப போடுவதற்கான வாய்ப்புக்கள் குறைந்தும இருக்கக்கூடிய சூழ்நிலையால் மத்திய அரசு தன்னுடைய திட்டங்களின்மூலம் நமக்குத் தருவதும் குறைந்துவிடுகிறது. ஆகவே, இதையெல்லாம் விளக்கி, சட்டப்பேரவை மூலமாகவும் மேலவையின் மூலமாகவும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பலாம் என்று உள்ளோம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கான திட்டம் ஏறத்தாழ 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை 10 ஆண்டுக் காலமாக மத்திய அரசு இன்னமும் பரிசீலனை செய்து வருகிறது என்ற நிலை இருக்குமானால் அது வருந்தத்தக்கது. இதற்கு ஒரு காலக் கெடுவை நிர்ணயித்து, மத்திய அரசை அதிகமான வற்புறுத்தலுக்கு உள்ளாக்கி இந்தத் திட்டத்தை இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 10 ஆண்டுக்காலமாக பரிசீலனை செய்து வருகிறார்கள் என்பது உண்மை. அதிலிருந்தே இது எவ்வளவு ஆழமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இருப்பினும் நம்முடைய பசியை உடனடியாகப் போக்குகின்ற அளவிற்கு விரைவாக கூடங்குளத்தில் இரண்டாவது அணு மின் உற்பத்தி திட்டம் வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்களும் நானும் பாரதப் பிரதமரை நேரில் சந்திக்கும்போதும் கடிதம் மூலமாகவும் வற்புறுத்தி வருகிறோம்.



(முற்பகல் 9-20)

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையம் முடிந்து இதை ஆரம்பிப்பதற்கு காரணம் அதற்கு கமிஷன் பண்ணுவதற்கு தேவையான ஹெவி வாட்டர் கிடைக்காத காரணத்தாலேயும், ஆண்டுதோறும் கிடைக்கக்கூடிய ஹெவி வாட்டர் சப்ளை போதுமானதாகஇல்லை என்ற காரணத்தாலேயும் தான் என்று சொல்லப்படுகிறதே, இப்போது இரண்டாவது அணு மின் திட்டம் ஆரம்பிப்பதற்கு போதுமான அளவிற்கு ஹெவி வாட்டர் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? அதனுடைய விவரங்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் எல்லாம் பாராளுமன்றத்திலே கேள்வி போட்டால் கிடைக்கப் பெறலாம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாநிலங்கள் தான் மின் உற்பத்தியிலே தன்னிறைவு பெற்றிருக்கின்றன. மின் பற்றாக்குறையுள்ள தமிழகத்தில் அணு மின் நிலையத்தை கட்டாயமாக அமைக்கவும், கல்பாக்கம் மற்றும் ஆந்திராவில் உள்ள இராமகுண்டம் போன்ற அணு மின் நிலையங்களிலிருந்து அதிகமாக மின் உற்பத்தியைப் பெறுவதற்கும் தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, புனல் மின் திட்டங்களைப் பொறுத்தவரையில் நிறைவேற்றிவிட்ட தமிழ்நாடு அணு மின் திட்டத்தையும், அனல் மின் திட்டத்தையும் தான் நம்பியுள்ளது. அணு மின் திட்டம் முழுக்க முழுக்க இந்திய அரசின் பொறுப்பில் உள்ளது. நாம் கேட்கலாமே தவிர கொடுத்தபோது தான் நம்பலாம். அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிலக்கரியைத் தரவேண்டியது இந்திய அரசு. அண்மைக் காலமாக மாநிலங்கள் இத்தகைய அனல் மின் திட்டங்களை போடுவதற்கு பதிலாக நிலக்கரி கிடைக்கிற இடங்களிலே மத்திய அரசே பெரும் பெரும் திட்டங்களை உருவாக்கி வருகிறது. அந்த அடிப்படையிலே தான் இராமகுண்டம் திட்டம் உருவாகி வருகிறது. அதிலேயிருந்து எப்படி நிலக்கரி கிடைத்தால் ஒரு புதிய அனல் மின் திட்டத்தை நாம் போட்டிருப்போமோ அதே அளவிற்காவது அங்கே உற்பத்தி ஆகிற மின்சாரத்திலேயிருந்து தமிழ்நாட்டிற்குத் தரவேண்டுமென்று நாம் கேட்டு வருகிறோம்.

[1984 மார்ச் 6

## தமிழக வன வளத்திற்கான சுவீடன் நாட்டின் நிதி உதவி.

179—(*வினா எண். 13587)—திரு பி ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வன வளத்திற்கு 45 கோடி ரூபாய் சுவீடன் தேசம் உதவியளிப்பதாகக் கூறப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) என்னென்ன நிபந்தனைகள் ?

(ஈ) இந்த நிதி எப்படிப் பயன்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) : இந்திய அரசுக்கும் சுவீடன் நாட்டு அரசுக்கும் கையெழுத்தான ஒப்பந்தப்படி 1981 முதல் 1986 வரைக்கான ஐந்தாண்டுகளுக்குத் தமிழகத்தில் செயல்படும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 45 கோடியாகும். இதில் சுமார் ரூ. 30 முதல் ரூ. 35 கோடி வரை (சுமார் 195 மில்லியன் குரோனர்கள்) சுவீடன் அரசு இந்திய அரசுக்கு உதவித் தொகையாக வழங்கும். இத் தொகையில், இந்திய அரசு மாநில அரசுக்கு சுமார் 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் வழங்கும்.

இத் திட்டத்தின் கீழ் பெறும் நிதியை ஒதுக்கக் காடுகள் அல்லாது அரசிற்கும் மற்றும் பொது மக்களுக்கும் சொந்தமான நிலங்களில் மரங்கள் நட்டு வளர்க்கப் பயன்படுத்தப்படும் திட்டம் ஏற்கனவே நடைபெற்று வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சமூகக் காடுகள் என்ற பெயரால் பல்வேறு இடங்களில் சாலை ஓரங்களில் கூட அமைக்கப்படுவதாக அறிய வருகிறேன். இந்த சமூகக் காடுகள் சாலை ஓரங்களில் அமைக்கப்படுவதோடு மாத்திரம் இல்லாமல் சில இடங்களில் காடுகள் தூர்ந்துபோய் இருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏற்கனவே புலி சரணாலயம் என்ற பெயரால் முண்டந்துறையிலே, மஞ்சன்சேரியிலே, தரவட்டான் பாறையிலே பல்வேறு பகுதிகளிலே காடு வளர்ப்பு இல்லாமல், விறகிற்காக காடுகள் அழிந்து புதுப்பிக்கப்படாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட காடுகளை வளர்ப்பதற்கான முறையிலே அரசாங்கம் திட்டமிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் என்பது குறிப்பாக கிராம மக்களுடைய, சமுதாய மக்களுடைய தேவைக்கும், அவர்களோடு தொடர்பு கொள்கிற திட்டமாகத் தான் இது நிறைவேற்றப்பட வேண்டும் என்பது





இதனுடைய அடிப்படை விதி. ஆகவே நம்முடைய மாநிலத்தில் உள்ள காடுகள் அல்லது அழிக்கப்பட்ட காடுகள் அல்லது புதியதாக வளர்க்கப்படும் காடுகளுக்கு இந்த விதியைப் பயன்படுத்த முடியாது. அது நம்முடைய மாநில, மத்திய அரசினுடைய திட்டங்களிலிருந்து செய்யப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவ அவர்களே, சமூகக் காடுகள் என்ற முறையில் வரும்போது பெரும் பகுதி இடங்களில் குளங்கள், சாலையோரங்களில் போடப் படுகின்றன. அப்படிப் போடப்படும்போது கிராம மக்கள் குளங்களில் மாடு கன்றுகளை குளிப்பாட்டுவதில் கஷ்டம் இருக்கிறது என்று முறையிடும் போது அதை பரிசீலிக்காமலேயே குளங்களில் சமூகக் காடுகள் வளர்க்கும்போது கிராம மக்களுக்கும் பாரஸ்ட் டிப்பார்மென்டினருக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. அப்படி மோதல் ஏற்படாமல் இருப்பதற்கு குளங்களில் அப்படிப் போடுவதில்லை என்று செய்து கிராம மக்களுக்கு உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இது மிகுந்த நுட்பமான பிரச்னை. இந்தத் திட்டப்படி ஒரு ஐந்தாண்டுக் காலத்தில் 1,77,480 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்களில் நாம் மரங்களைப் பயிரிட்டாக வேண்டும். அதே போல் 6,075 கிலோ மீட்டர் சாலையோரங்களில் மரங்களைப் பயிரிட்டாக வேண்டும். இப்படிப் பயிரிட்டால்தான் இந்த மாநிலத்திலுள்ள சமுதாய மக்களின் தேவையை நிறைவேற்ற முடியும் என்பது ஒரு கணக்கு. இதுபோன்று 501 இலட்சம் கன்றுகளை பொது மக்களுக்கு வழங்கி அவர்களும் அதை பயிர் செய்தாக வேண்டும். அப்படித் தேடுகிறபோது நமக்கு இப்போது இருக்கக்கூடிய இடங்கள் பஞ்சாயத்துக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள், ஏரி உள்வாயிலுள்ள கரைகள் இப்படிப் பட்ட இடங்களைத் தான் நாம் தேர்ந்து எடுக்க வேண்டியிருக்கிறது. நீண்ட காலமாக நம் மக்கள் எங்கெங்கு காலியிடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஆக்கிரமிப்பு செய்கிற உணர்வை பழக்கப்படுத்தியிருக்கிறார்கள். காடு வளர்ப்புத் திட்டம் என்பது பொது மக்களுக்காகத் தான் என்ற உணர்வை நாம் இப்போது ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. சில இடங்களில் நெருக்கடியாக வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு முக்கிய வாழ்க்கைப் பிரச்சினையாக அமைகிற இடத்தில் நாம் மிகத் தெளிவாக ஆணைகள் பிறப்பித்திருக்கிறோம். வனத் துறை அதிகாரிகளும் தேவையானால் வருவாய்த் துறை அதிகாரிகளும் நேரில் போய் பரிசீலித்து அந்த மக்களோடு கலந்து பேசி அந்த மக்களுடைய உதவியோடு தான் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, சாலையோரங்களில் நடப்பெறும் மரங்கள் பெருவாரியாக பாதுகாக்கப்படாமல் ஆரம்பத்திலேயே அவை பட்டுப்போய் விடுகின்றன. ஆகவே மரங்

[1984 மார்ச் 6

களை நடுவது என்று மட்டும் இல்லாமல் நடப்பட்ட மரங்களைப்
பாதுகாப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டு வருகின்றன என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்
களே, சாலையோரங்களில் மரங்களை நட்டு வளர்ப்பது என்பது
ஒரு சிக்கலான பிரச்னை. நாம் எல்லோரும் அதை உணர்ந்து
இருக்கிறோம். ஆனால் இந்த மரங்களை வளர்க்கும் பிரச்
னையைப் பொறுத்து ஒரு துறை மட்டும் அக்கறை கொண்டு
வளர்ப்பது என்பது நடக்காத காரியம். சமுதாயத்திலுள்ள எல்
லோருக்கும் மரங்களை வளர்ப்பது, அதைப் பாதுகாப்பது என்ற
உணர்வு ஏற்பட வேண்டும். சாலையோரங்களில் நீண்ட தூரத்
திற்கு மரங்களை நடும்போது அதற்கு வேலி எல்லாம் அமைத்து
மாடு கன்றுகள் தின்றுவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும்
இருக்கிறது. அதற்குப் பண முதலீடும் தேவைப்படுகிறது. இதற்
காக கிராமப்புறங்களில் இதைப் பாதுகாப்பதற்கு என்று
அலுவலர்களை இப்போது நியமித்திருக்கிறோம். என்ன இருந்
தாலும் மாடு கன்றுகள் தின்றால் கூட தடுத்துவிடலாம் போல்
இருக்கிறது. மனிதர்கள் அதை அழிக்கிறபோது என்ன செய்
வது என்று பார்க்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்களைப்
போன்றவர்கள் மரங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்க உதவ
வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நட்ட மரங்களைப் பாதுகாப்பது சம்பந்த
மாகச் சொன்னார்கள். அதிகமான அளவிற்கு மரங்களை நட்டு
அவற்றைப் பாதுகாப்பு இல்லாமல் விட்டு விடுவதால் அவற்றில்
பெரும்பகுதி அழிந்து போய்விடுகின்றன. உதாரணமாக ஹாஸ்டல்
பக்கத்தில் கூவம் நதியோரத்தில் அதிகமான மரங்கள் நடப்பட்டு
எட்டு அடி, ஒன்பது அடி உயரம் இருந்தது இப்போது அதில்
பெரும் பகுதி பாதுகாக்கப்படாமல் அழிந்துவிட்டதாகத் தெரி
கிறது. ஆகவே நடப்பட்ட மரங்களைப் பாதுகாப்பதற்கு வேண்
டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்
பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
சென்னை நகருக்குள்ளே கூவம் கரையோரம் முழுவதும் மரங்
களை நடவேண்டும் என்ற திட்டத்தைத் துவக்கியபோது நம்
விடுதிக்குப் பின்னால் மரங்களை நட்டு வளர்க்க ஆரம்பித்
தோம். நகரத்திற்குள்ளே எந்த அளவிற்கு உரிமையோடு நாம்
எல்லோரும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோமோ அந்த அளவு
உரிமையோடு மாடு கன்றுகளை வளர்க்க அனுமதி அளித்திருக்கி
றோம். மாடு கன்றுகள் நுழைந்து இப்படி பொது இடங்களில்
உள்ள கன்றுகளை பாழ்படுத்தி வருகின்றன. வளர்க்கப்பட்ட
செடிகள் அழிக்கப்பட்டு உள்ளன என்ற செய்தி இப்போது
தான் கிடைத்திருக்கிறது. தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்படும்.



1984 மார்ச் 6]

## அறநிலைய ஆட்சித் துறைக்குட்படாமல் தனித்து இயங்கிவரும் ஆலயங்கள்.

*180—(* வினா எண் 14921)—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்படாமல் தனித்து இயங்கிவரும் ஆலயங்கள் எத்தனை ?*

*(ஆ) அவற்றை அறநிலையத்தின் நிர்வாகத்தில் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?*

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) 31-12-1982 தேதிய நிலவரப்படி 333 ஆலயங்கள் தனித்து இயங்கி வருகின்றன.

(ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்கு வரப்பெறாமல் உள்ள அனைத்து ஆலயங்களையும் அத்துறையின் கீழ்க் கொண்டு வர விரைவான மற்றும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-30)

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இந்த ஆலயங்களைக் கொண்டுவர வேண்டுமென்ற அரசாங்கத்தினுடைய முயற்சி விரைந்து எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொளவதோடு, இன்றைக்கு சில ஆலயங்களில் சாதாரண பூஜை கூட நடத்த முடியாயத அளவுக்கு வறிய நிலையில் இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், தீபம்கூட ஏற்ற முடியாத நிலையில் சில ஆலயங்கள் இருக்கின்றன. எனவே அரசாங்கம் இத்தகைய ஆலயங்களை இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வருவதோடு, இந்த ஆலயங்கள் உலகத்திலே வேறு எங்கும் கண்டிராத அளவுக்குட் பிரமாதமாக, ஒரு சவாலாக, இணையாக இருப்பதால், அவைகளைப் பாதுகாக்கின்ற வகையில் அரசாங்கம் இந்தச் கோயில்களை இந்துசமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர, இன்னும் நல்ல முறையில் அவைகளை பாதுகாக்க வேறு என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதை அறிந்துகொளள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஆலயங்கள் அனைத்தையுமே அறநிலையத் துறையின் ஆளுகைக்கு உட்படுத்தி, அதை நிர்வகிப்பது என்பதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன; சிக்கல்கள் இருக்கின்றன; பொருளாதாரப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனாலும், இப்படி பொது ஆலயங்கள், பொது மக்கள் வணங்குகின்ற ஆலயங்கள், பல பேர், தனிப்பட்டவர்கள்

தங்கள் சொத்துக்களாக வைத்துக்கொண்டு, அதில் வரும் வருமானங்களை ஆங்காங்கே பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிர்வாகத்தின்கீழ் உள்ள ஆலயங்களை அரசு, அறநிலையத் துறையின்மூலம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறோம். அறநிலையத் துறையின் ஆளுகைக்கு கொண்டுவந்து, அவைகளின் நிர்வாகத்தை அரசே முழுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணவில்லை. ஆனால், கிராமங்களில் அந்தந்த மக்கள், தாங்களாகவே அக்கறை கொண்டு, அவைகளைப் பாதுகாக்கின்ற உணர்வோடு இருந்தால், அது பொதுமக்கள் சொத்தாகவே பாதுகாக்கப்படுமானால், அச்சொத்தை களவாடுகின்ற முயற்சியில் ஈடுபடாமல் இருந்தால், அப்படிப்பட்ட ஆலயங்களை அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவர முயற்சிக்க வேண்டாம் என்று தெளிவாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், ஒழுங்கான முறையில் நடைபெறாத ஆலையங்களை அறநிலையத் துறையின் ஆளுகைக்கு கீழ் கொண்டுவந்த பிறகுதான், அதனுடைய வருமானங்கள், சொத்துக்கள் நல்ல அடிப்படையில் அமைந்திருக்கின்றன. பொதுமக்கள் தருகின்ற வசூலைக் கொண்டு இன்றைக்கு ஆலையங்கள் ஓரளவுக்கு ஒழுங்காக நடைபெறுகின்றன. நிறைய சொத்துக்களை வைத்துக் கொண்டிருக்கும் ஆலையங்களாக இருந்தாலும், —பேரு பெத்த பேரு, தாகத்திற்கு நீர் இல்லை—அதுபோன்று அன்றாட பூஜைக்குகூட அல்லாடிக் கொண்டிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றிற்கும் நம்முடைய நிதியிலே இருந்து, அவைகளுக்கு வேண்டிய காரியங்களை நடத்துவது என்பது முடியாத காரியம். ஆகவே, வசதியான ஆலையங்களிலிருந்து, வசதியற்ற ஆலயங்களுக்கு நிதி ஒதுக்குவது என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எப்படியிருந்தாலும், பொது மக்கள் அக்கறை செலுத்தினால்தான், இந்த ஆலையங்களை நாம் ஒழுங்காகப் பேணிப் பாதுகாக்க முடியும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கோயில்களில் ஒரு லட்சத்திற்கு மேலாக வருமானம் வருகின்றது. அங்கே பரம்பரை அறங்காவலர்கள் இருந்து கொண்டு, அந்த கோயில் வருவாயை தாங்களே எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். இதனால் அந்த கோயிலினுடைய காரியங்கள் தடைபடுகின்றன. எனவே, அந்த பரம்பரை அறங்காவலர்கள் நிர்வாகத்தை அரசு எடுத்து, அந்தக் கோயில்களை அரசே நிர்வகிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அதைத்தான் முதலிலேயே பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட, பல இலட்சம் ரூபாய், வருமானம் வரக்கூடிய ஆலையங்களின் சொத்துக்களை, தங்கள் சொந்த சொத்துக்களாக வைத்துக்கொண்டு அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இன்னும் தமிழகத்திலே அப்படிப்பட்ட நிலைமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





ஆனால், அதற்குள்ளே நுழைகிறபோது, அரசியல் சட்டப்படி அவர்களுக்குப் பாதுகாப்பு வருவதினால், அது சம்பந்தமாக அரசு எப்படி நடவடிக்கை எடுத்தால், அதைத் தீர்க்க முடியும் என்பதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையங்களில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று, ஆலையமாக இருப்பது, மற்றொன்று, சந்நியாசியாக இருந்து, அவர் இறந்தபிறகு, சமாதி ஆலையமாக வைக்கப்பட்டிருப்பது. ஆகவே, இந்த சமாதி ஆலையங்களை எடுப்பதற்கு அரசு யோசித்திருக்கிறதா ? அப்படி கொண்டு வருகின்ற காலத்தில், அதற்கு ஒரு புது சட்டம் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆலையம் என்கின்ற தலைப்பிலே நம்முடைய அறநிலையத் துறை சட்டத்திலே தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆலையம் என்பது, அதற்கென ஒரு கருவறை, மூல விக்கிரகம் வைத்து வணங்குகின்ற ஆலயமாக இருக்கலாம் அல்லது பெரியவர்கள், வணக்கத்திற்குரியவர்கள் அங்கே அடக்கம் செய்யப்பட்டு, அவர்களை வணங்குகின்ற ஆலயமாக இருக்கலாம். அப்படி பொது மக்கள் வணங்குகின்ற ஆலையங்களை அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வருகின்ற நடவடிக்கை எடுக்கின்றபோது, சட்டத்தின் துணைகொண்டு சிலர் அதற்குள்ளே புகுந்துவிடுகிறார்கள். அதுபற்றி ஒரு தெளிவு தேவையென்பதால் ஒரு சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டுமா அல்லது இருக்கின்ற சட்டத்தைப் பயன்படுத்த முடியுமா என்கின்ற பிரச்சினைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மிக விரைவிலே அதற்கான சட்ட திருந்தத்தை நம்முடைய சட்டமன்றத்திலே அறிமுகப்படுத்த இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கோவில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அறநிலையத் துறையின் அனுமதி பெறவேண்டுமென்ற அடிப்படையில் அரசு திட்டம் கொண்டுவருமா ? அது மட்டுமல்லாமல் ரோடு ஓரங்களில் மரங்கள் இருக்கின்றன. அந்த மரத்தையே தெய்வமாக்கி அந்த மரத்தின் கீழே பேயடித்துவிட்டது என்று சொல்லி அதற்கு மலர்மாலைகள் சாற்றி அந்த மரத்தையே தெய்வமாக ஆக்கிவிடுகிறார்கள். அதனால் அந்தப் பக்கம் குழந்தைகள் கூட போகப் பயப்படுகிறார்கள். ஆகவே, மரத்தை தெய்வமாக்கும் நிகழ்ச்சி தமிழ்நாட்டில் ஒழிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே மரத்தை தெய்வமாக்கும் வழக்கம் தமிழகத்தில் ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் ஒன்றாகும். மரத்தைப் பாதுகாப்பது என்பதில் தெய்வத்திற்குச் சமமாக பாதுகாக்கவேண்டும். இன்

றைக்கு உலகமே அதைத்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. மரங்கள் இல்லையென்றால் நமக்கு வளங்கள் இல்லை. ஒரு முறை ரசிகமணி டி. கே. சி. அவர்களிடத்தில் வெளிநாட்டுக்காரர் ஒருவர் கேட்டார், உங்கள் நாட்டில் மரங்களை நீங்கள் எப்படிப் பாதுகாக்கிறீர்கள் என்று. அதற்கு ரசிகமணி அவர்கள் சொன்ன பதில், நீங்கள் மரங்களைப் பாதுகாக்கிறீர்கள். ஆனால் நாங்கள் மரங்களைத் தெய்வமாக வழிபடுகிறோம் என்று சொன்னார்கள். அதனால்தான் நமது நாட்டில் பல்லாண்டு காலமாக மரங்களை தெய்வமாக வழிபடும் முறை இருந்து வருகிறது. மரங்களை தெய்வமாக்குவது என்பதை சிலர் தங்களுடைய பிழைப்புக்காக செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தீவிர முயற்சி எடுத்து அதெல்லாம் தவறான கருத்து என்று விளக்கினால் நல்ல பலன் ஏற்படும். ஆகவே, மரங்களை தெய்வமாக வழிபடும் முறை தவறானது என்பதை மாற்ற வேண்டுமே தவிர மரத்தை தெய்வத்திற்குச் சமமாக பாதுகாப்பது என்ற உணர்வை அழித்துவிடக்கூடாது.

**பெரியகுளத்திலுள்ள கும்பக்கரையைச் சுற்றுலாத் தலம் ஆக்கும் திட்டம்.**

181—(வினா எண் 17879)—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—.

பெரியகுளத்திலுள்ள கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : மாவட்ட உலாத் தலமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கும்பக்கரை என்பது பெரியகுளத்திற்கு அருகில் உள்ள சுற்றுலாத்தலமாகும். அந்த இடத்திலே இயற்கையிலேயே ஆண்டுதோறும் நீர்வீழ்ச்சி விழக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்து சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தால் இன்னும் நிறைய சுற்றுலாப் பயணிகளைக் கவர முடியும். எனவே, அந்த இடத்தை அபிவிருத்தி செய்து, பயணிகள் தங்குவதற்கு வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இரண்டு முக்கியமான இயற்கை அழகுள்ள இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட உலாத்தலங்களாக ஆக்கப்படுவதற்கான திட்டத்தின் அடிப்படையில் மதுரை மாவட்டத்தில் விகனூர் அணைப் பகுதி அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. இரண்டாவதாக அந்தக் கும்பக்கரை நீர்வீழ்ச்சி அபிவிருத்தி திட்டத்திற்காக சுமார் 7 லட்சம் மதிப்பீட்



டில் பல்வேறு துறைகளின் மூலம் அந்த நீர்வீழ்ச்சிப் பகுதியை அழகுள்ளதாக மக்கள் விரும்புகிற வகையில் வசதிசெய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கும்பக்கரையைச் சுற்றுலாத்
தலமாக ஆக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். அந்தக் கும்பக்கரைக்கும் மேலே கொடைக்கான
லுக்கு வெள்ளக்கல் வழியாக குறுக்கே பாதை போடுவதற்கு
இதற்கு முன்பு ஒரு அமௌன்ட் கூட சாங்ஷன் செய்யப்பட்டு
இருந்தது. அந்த ரோடு போட்டால், இந்த கும்பக்கரை
சுற்றுலாத் தலமாக ஆகும்போது இன்னும் அதிகமான பயணிகள்
வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.
இதை அரசாங்கம் சிந்தித்து செயல்படுத்துமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற திட்டத்தின்படி அம்மாய
நாயக்கனூர் மற்றும் பெரியகுளம் வழியாக கும்பக்கரை வரைக்கும்
சுமார் 4½ லட்சம் ரூபாய் செலவில் ஒரு சாலையை அமைக்க வேண்
டிய திட்டம் ஒன்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்
தது போல், கொடைக்கானலை தொடர்பு கொள்ளத்
தக்க வகையில் அந்தப் பாதையை அமைக்க வேண்டு
மானால், அது காடுகளுக்குள்ளே, காடுகள் வழியாக பாதை
அமைக்கவேண்டுமென்று நினைக்கிறேன். காடுகளுக்குள்ளே இப்
போது பாதைகளை அமைப்பது சுலபமான காரியம் அல்ல.
'பாரெஸ்ட் கன்சர்வேஷன் ஆக்ட்' என்று மத்திய சர்க்கார் ஏற்ற
பிறகு, மலை வாழ் மக்களுக்கு பாதை அமைத்துக் கொடுப்
பதற்கு அனுமதி வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.
ஆகவே பொதுவாக காடுகளுக்குள்ளே பாதைகள் அமைப்பது,
கட்டிடங்கள் கட்டுவது என்பது மத்திய அரசு மாநில அரசு
பொதுவாக இப்போது குறைத்துகொண்டு வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்களுடைய
பதிலில் கும்பக்கரையைச் சுற்றுலாத் தலமாக ஆக்கு
வதற்கு ரூ. 7 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு அது ஆய்வில்
உள்ளதாகச் சொன்னார்கள். இதை மிகவும் துரிதமாகச் செய்ய
வேண்டிய வேலை. காரணம் என்னவென்றால், வெளிநாடுகளி
லிருந்து சுமார் 372 குழந்தைகள் கொடைக்கானலில் இருந்து
படித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வந்து இறங்கி
குற்றாலத்திற்குப் போகவேண்டுமென்றால், கும்பக்கரைச்
சுற்றுலா மையமாக தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தால்
நல்லது. அடிக்கடி சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும்.
நமக்கும் அதிகமான வருமானம் வரும். ஆகவே அதற்கு முன்
னுரிமை அளிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுமா என்பதை அறிய

விரும்புகிறேன். நான் ஏற்கனவே கொடைரோட்டில் சுற்றுலா
மையம் அமைக்க ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறேன். இதை
இணைத்துப் போடுவார்களானால் நன்றாக இருக்கும். எனவே
இரண்டையும் இணைப்பதற்கு வழிவகை செய்யப்படவேண்டு
மென்று கேட்டிருக்கிறேன். அதற்கும் சேர்த்து வழிவகை செய்
யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்
களே, வீராகனூர் அணைப் பகுதி இப்போது முதல் கட்டமாகப்
பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரண்டாவது கட்ட
மாகத் தான், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### துளசியாப்பட்டினத்திலுள்ள ஔவையார் கோவில்.

182 —(*வினா எண் 20341) —திரு. எம். எஸ். மாணிக்கம் :
மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் துளசியாப்
பட்டினத்தில் ஔவையாருக்குக் கோயில் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஔவையாருக்கு விழா ஏதாவது எடுக்
கூப்படுகின்றதா?

(இ) அரசு சார்பில் ஔவையாருக்கு விழா எடுக்க அரசு
நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் சதய நட்சத்
திரத்தில் ஔவையாருக்கு விழா எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) ஔவையாருக்கு விழா எடுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டு
விழா நடத்தப்பட்டு வருகிறது. விழாவினை சிறப்பாக நடத்து
மாறு தஞ்சை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை துணை
ஆணையர் கோரப்பட்டுள்ளார்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, ஔவையார் கோவிலுனுடைய வருமானம் குறை
வாக இருப்பதனாலே, அந்தக் குழுவினர் நன்கொடை வசூல்
செய்து தான் விழாவினை நடத்த வேண்டிய நிலையில் விழா
வினை சிறப்பாக நடத்தமுடியாமல் இருக்கிறது. வசதியுள்ள
வெளியிலுள்ள கோவில்களிலிருந்து நிதியளித்தோ, அல்லது அர
சாங்கமே அந்த விழாவினை நடத்தவோ முன்வருமா?



மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்
களே, இதுபோன்ற விழா எல்லாம் பொதுமக்களின் ஆதர
வோடும், பொது மக்களின் முழுமையான உணர்வோடும் தான்
நடத்தப்படவேண்டுமே தவிர, எதற்கெடுத்தாலும், பெரிய ஆல
யங்களின் உதவி அளிக்கவேண்டுமென்று சொல்வதும், அரசாங்கமே
நடத்தவேண்டுமென்று சொல்வதும் சரியல்ல. இருந்தாலும
தமிழகத்திலே ஒரே ஒரு இடத்தில்தான் இந்த ஔவையார்
ஆலயம் அமைக்கப்பட்டு, அங்கே அந்த விழா நடைபெற்று வரு
கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, முயற்சி எடுத்து,
இந்த விழாவில் பணியாற்றலாம். தேவையான உதவிகளை அற
நிலையத்துறை மூலம் அரசு அவர்களுக்கு வழங்கும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. எம்.எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, இந்த
விழாவை ஆரம்பக் காலத்தில் நல்லமுறையிலே சிறப்பாக
நடத்திக் கொண்டுவந்தார்கள். ஆனால் ஊரிலே சில பிரச்சி
னைகள் வந்தபோது விழா நடத்துவதில் சில சங்கடங்கள்
வந்தன எனவே அரசாங்கமே அதை நடத்தினால் சிறப்பாக
இருக்கும். ஆகவே அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் விழா
வாக அதை நடத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
அப்படிப்பட்ட ஒரு சிக்கல் இருப்பதாக இதுவரை அர
சாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.
அப்படி ஒரு வேளை பொதுமக்கள் ஒத்துழைப்போடு. இந்த
விழாவை நடத்துவதில் சிக்கல் இருந்தால், அந்த விழாவை
அறநிலையத்துறையின் மூலம் அரசே ஏற்று நடத்தும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழகத்தில் 'Free Trade Zone' ஏற்படுத்தும் திட்டம்.

183—(*வினா எண். 17099) திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிர
மணியன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 'Free Trade Zone' ஏற்படுத்த மைய
அரசை மாநில அரசு கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) :
தமிழ்நாட்டில் சென்னையில் தடையற்ற வாணிப மண்டலம்
அமைப்பதற்கான தமிழ்நாடு அரசின் கருத்திற்கு மைய அரசு

தற்போது அனுமதி அளித்துள்ளது. இம்மண்டலத்தில் துவங்கப்படும் தொழில்களுக்கு மூலப் பொருட்கள், துணைப் பொருட்கள், இயந்திரங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்வதில் சலுகைகள், வசதிகள் அளிக்கப்படும் என மைய அரசு அறிவித்துள்ளது.

திரு. கோவைத் தம்பி : தலைவர் அவர்களே, இந்த ஃப்ரீ ட்ரேட் சோன் எவ்வளவு ஏக்கர் பரப்பில் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது? இதனால் அரசுக்கு ஏதாவது முதலீடு செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறதா? இதனால் அரசிற்கு எதிர் காலத்தில் கிடைக்கக் கூடிய தொழில் துறை பெருக்கத்தில் லாபம் எவ்வளவாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஃப்ரீ டிரேட் சோனைப்' பொறுத்தவரைக்கும் ஆரம்ப கட்டமாக 200 ஏக்கர் நிலம் மாநில அரசால், அதற்குச் சொந்தமான நிலம் இந்த அமைப்புக்காக மத்திய அரசினுடைய இந்த திட்டத்திற்காக தரப்பட்டிருக்கிறது. மேற் கொண்டு இன்னும் ஒரு 200 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த 'ஃப்ரீ டிரேட் சோன்' திட்டம் நடைமுறைப்படுத்துகிறபோது அந்நியச் செலாவணியிலிருந்து அளவு கடந்த லாபம் மத்திய அரசுக்குக் கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்த வரைக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக பெற்றுத் தரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அத்தோடு, மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், டெக்னாலஜிக்கல் டெவலப்மென்ட் இன் பாரின் கண்ட்ரிஸ்' அதாவது வெளிநாடுகளிலிருந்து வருகிற, தொழில் நுட்பம், தொழில் நுணுக்கங்களை அறியக் கூடிய வாய்ப்பும் கிடைக்கிறது. எக்ஸ்போர்ட் ஓரியண்டட் என்ற முறையில், ஏற்றுமதி அடிப்படையில், இந்த ஃப்ரீ டிரேட் சோன் அமைக்கப்படுகிற காரணத்தால், மேல் நாடுகளில் வளர்ந்து இருக்கிற தொழில் நுணுக்கங்களை தமிழகத்திற்குக் கொண்டு வரக்கூடிய வாய்ப்பையும் நாம் பெறுகிறோம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஃப்ரீ டிரேட் சோன்' அமைப்பதற்கான மாநில அரசு இடம் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னையிலே எந்த இடம் கொடுக்கப்படுகிறது. அதே போல் இந்த ஃப்ரி டிரேட் சோன் எப்போது ஆரம்பிப்பதற்கு தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்-போர்ட் அருகிலே இந்த அமைப்பை நிறுவ நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.





திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்துகின்ற வகையிலே இந்த வரியில்லா, தடையில்லா வர்த்தக அமைப்பை ஆரம்பிப்பது என்பது ஒரு நல்ல முயற்சி. மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், மின்சாரம், வணிக வரி, போன்ற சலுகைகளில் எவை எவற்றைக் கொடுக்க உத்தேசித்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலை இங்கே ஊக்குவிக்க வேண்டும் என்று நோக்கோடு மத்திய அரசு முதற்கண் பல சலுகைகளை தந்திருக்கிறது. மத்திய அரசுக்குப் பல முறை எழுதி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்த அமைப்பை தமிழகத்திற்குத் தர வேண்டும் என்று சொல்லிய பின் மத்திய அரசு அனுமதியை வழங்கியிருக்கிறது. அப்படி வழங்கிய போது மத்திய அரசினுடைய சலுகைகளாக தொழில் அமைக்கத் தேவைப்படும் எல்லா விதமான உரிமங்களும் இங்கேயே வழங்கப்பட வேண்டும் என்ற முறையில், 'சிங்கிள் விண்டோ கிளியரன்ஸ் சிஸ்டம்' என்று சொல்லக் கூடிய அந்த அமைப்பு முறையை இங்கே கொண்டு வருவதற்கு மத்திய அரசு அனுமதி தந்திருக்கிறது.

அதைப் போலவே உற்பத்திக்குத் தேவைப்படும் கருவிகள், உதிரி சாமான்கள், கச்சாப் பொருள்கள் போன்றவைகளை எந்த விதமான உரிமங்கள் இல்லாமலும் இறக்குமதி செய்யலாம் என்ற சலுகையையும் தந்திருக்கிறார்கள். தான் விரும்பும் நாட்டிலிருந்து தேவையான கருவிகளை எந்த விதமான சுங்க வரியும் இல்லாமல் இறக்குமதி செய்யலாம் என்ற சலுகையும் தரப்பட்டிருக்கிறது. உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருட்கள், உதிரிச் சாமான்கள், சோதனைக் கருவிகள், போன்றவைகள் கூட சுங்க வரி இல்லாமல் இறக்குமதி செய்யலாம் என்ற சலுகையும் தரப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு மத்திய அரசினுடைய தீர்வையும் கிடையாது.

அது மட்டுமல்லாமல், வாணிப வரி, சொத்து வரி, நகர்ப்புற நுழைவு வரி போன்ற சலுகைகளையும் அளித்திருக்கிறார்கள். முதல் 5 ஆண்டுக்காலம் வருமான வரி விலக்கு கூட அளிக்கப்பட்டு இருக்கிறது. வாணிபம் சம்பந்தமாக வெளிநாடு செல்லவும், மற்றத் தேவைகளுக்கும் சுலபமாக அந்நியச் செலவாணி கொடுக்கப்படும் என்ற சலுகையும் தரப்பட்டு இருக்கிறது. வெளி நாடுகளில் இருந்து வந்து இந்தப் பகுதிகளில் நடத்தும் தொழில் களில் வரும் லாபத்தை, மற்றும் தொழில் முதலீட்டை, 'If it is a foreign investment, the foreign investor can take it back' திருப்பி எடுத்துக் கொள்ளலாம் என்ற சலுகையைக் கூட அளித்து வெளி நாட்டிலே வளர்ந்து விட்ட தொழில் நுணுக்கங்கள் தமிழகத்திற்கு வர வேண்டும் என்ற முறையிலே அந்தச் சலுகையையும்

தந்திருக்கிறார்கள். மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், ஸ்டேட் சப்சிடி, 10 சதவீதம், மாநில சலுகையைப் பொறுத்த வரைக்கும், மானியத் தொகை அந்தப் பகுதிக்கும் அப்ளிகப்பிள் என்ற முறையில் அந்த எக்ஸ்டென்ட் செய்யப்பட்டிருக்கிறது அதுவும் குறிப்பாக

'Electronic based industry;
Automobile based industry;
Drugs and Pharmaceuticals based industry'.

ஆகிய தொழில்கள் எல்லாம் முன்னுரிமை பெற்று தொழில்கள் என அந்தத் தொழில்களுக்கு எல்லாம் இந்த 10 சதவீதம் சலுகையும் தரலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசு ஏற்றுமதி தொழில் மண்டலத்திற்கான நிலத்தை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தர உள்ளது. 50 வருடம், 90 வருடம் 100 வருடம் என்று நீண்டக் கால லீஸ் அடிப்படையிலே தரப்பட இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்குச் சலுகை கிடைக்கிறது.

அது மட்டுமல்ல, எலக்ட்ரிசிடி டாரிப் கன்செசன், மின்சாரம் அவர்களுக்கு சலுகை விலையில் தர வேண்டும் என்று உத்தர விட்டு இருக்கிறது. அதைப் போலவே ஐ.டி.பி.ஐ. போன்றவைகளிடமிருந்து லோன்ஸ் 'சீட் கேப்பிட்டலாக', 15 இலட்சம், அல்லது 10 சதவீதம் என்ற அளவிற்கு அவர்களுக்கு தரப்பட வேண்டும் என்ற சலுகையும் தரப்பட்டிருக்கிறது.

## அரசு தயாரிக்கும் எல்காட் கடிகாரங்களை விற்பனை செய்வதற்கான உரிமம்

184—*வினா எண். 17922—திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் அரசு தயாரிக்கும் 'எல்காட்' கடிகாரங்களை விற்பனை செய்ய தனியார் வியாபாரிகளுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் யார் யாருக்கு அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) : அவை முன் **விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

** 487-489-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலம் புகளூரில் அமைக்கப்படும் காகித ஆலை

185-*வினா எண். 20065—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் மூலம் புகளூரில் அமைக்கப்படும் காகித ஆலைக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்கக் கோரி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலம் புகளூரில் அமைக்கப்படும் காகித ஆலைக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்குமாறு மைய அரசை கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு மத்திய நிதி அமைச்சர், ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி வரிவிலக்கு அளிப்பதற்கான அதிகாரம் அரசுக்கு கிடையாது ; இனி இறக்குமதி செய்யவிருக்கும் பொருட்களுக்கு இறக்குமதி வரி விலக்கு அளிப்பது குறித்து நிர்வாக அமைச்சகத்தின் தொழில் நுட்ப அதிகாரிகளுடன் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. ஒரு முடிவெடுக்கப்பட்டவுடன் மாநில அரசுக்கு அறிவிக்கப்படுமென அறிவித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9-50)

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரிலே அமைக்கப்பட இருக்கிற அந்த காகித ஆலைக்கு வரி விலக்கு அளித்தால் ஏறக்குறைய 12 கோடி ரூபாய் அளவிற்கு மிச்சமாகும் என்று அந்த அதிகாரிகள் எல்லாம் சொல்கிறார்கள். அப்படியானால், அதற்கு நம்முடைய அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து. அந்த வரி விலக்கை பெறுவதற்கான முயற்சிகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவிர முயற்சி என்ற அடிப்படையில் அதிகாரிகள் அளவில் மைய அரசோடு இது குறித்து பேசினால் போதாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் 4-8-1983 அன்றும் 28-10-1983 அன்றும், மைய அரசுக்கு, மைய நிதி அமைச்சருக்கு, இந்த சலுகைகளை மைய அரசு அளிக்க வேண்டும் என அஞ்சல் எழுதி மைய அரசு அதைப் பரிசீலித்து வருகிறது. விரைவில் மைய அரசு சுமூகமான ஒரு முடிவு எடுக்கும் என இந்த அரசு நம்புகிறது.

[1984 மார்ச் 6

பின்தங்கிய தாலுக்காக்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள்.

186— (*வினா எண். 20371) திரு. எஸ். டி. உக்கம்சந்த் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தமிழக அரசு அறிவித்துள்ள பின்தங்கிய தாலுக்காக்களில் எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவைகளில் அரசு தொழிற்சாலைகள், கூட்டுறவுத் தொழிற்சாலைகள் யாவை ?

(இ) மதுராந்தகம் வட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் யாவை ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ): தமிழக அரசு . 33 வட்டங்களை பின்தங்கிய வட்டங்களாக அறிவித்துள்ளது. இவ்வட்டங்களில் 41 நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் துவக்கப்பட்டுள்ளன. அவைகளில் அரசு தொழிற்சாலைகள் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) அரசு தொழிற்சாலைகள் | .. .. | 2 |
| (2) கூட்டுறவு தொழிற்சாலைகள் | .. | 7 |
| (3) அரசு தனியார் கூட்டு தொழிற்சாலை | | 1 |
| ஆக மொத்தம் | .. | 10 |

(இ) மதுராந்தகம் வட்டத்தில் துவங்கப்பட்டுள்ள பெரிய மற்றும் நடுத்தர தொழில், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம்.

திரு. ஏ.சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, தொழில்கள் பெருக வேண்டும் என்றுதான் தமிழக அரசு சென்ற ஆண்டு பின் தங்கிய தாலுக்காக்களை அறி வித்தது. அதைப்போலவே இந்த ஆண்டும் பின் தங்கிய தாலுக் காக்களை அறிவிக்க அரசு ஆயத்தமாக உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரது ஊர் ஒன்றும் பின் தங்கிய பகுதி அல்ல.



1984 மார்ச் 6]

புதுக்கோட்டை காவேரி நூற்பாலை.

187—*வினா எண் 2140-3 திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை காவேரி நூற்பாலையைத் தமிழக அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆலையின் வருங்கால அமைப்பு பற்றிய அரசின் செயற் குறிப்புகளில், இவ்வாலையை நாட்டுடமை ஆக்குவது சம்பந்தமான செயற்குறிப்பும் உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் நாட்டுடைமையாக்கும் செயற் குறிப்பில் இந்த ஆலை இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து அது நலிந்து கொண்டு வருகிறது. மேலும் அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத ஒரு நிலை இருக்கிற காரணத்தால், தற்போது அதை எடுத்துக் கொள்ள அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களின் நலன்மீது இந்த அரசு அக்கறை கொண்டிருந்த காரணத்தால்தான் ஐ. டி. ஆர். ஆக்ட் 21 ஆம் பிரிவின்படி மைய அரசு நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்தி, மைய அரசு அனுமதி தந்து, தற்போது தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அந்த நிர்வாகத்தை மேற்கொண்டு தொழிலாளர்களை காக்க நடைமுறைகளைச் செய்து வருகிறது. நாட்டுடமையாக்கவேண்டும் என்பதற்காக மைய அரசு மீண்டும் அனுமதி தர வேண்டும். தனியாக சட்டம் கொண்டு வர வேண்டும். ஏனென்றால், கான்கரண்ட் ஆர்டிகல் என்ட்டிரி லிஸ்ட் 42-வது பிரிவின் படி மைய அரசின் அனுமதி இல்லாமல் நாட்டுடமையாக்க முடியாது. அதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம். மைய அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றும் அனுப்பப் பட்டிருக்கிறது. மைய அரசுக்கு மாநில அரசு இது குறித்து நினைவுபடுத்தியிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலுள்ள இந்த காவிரி நூற்பு ஆலை கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நலிவுற்ற நிலையிலே இருந்து வருகிறது. இன்றைக்கும் அந்த ஆலை இயங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. இதனால் அந்தப் பகுதியிலேயே தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், அங்கேயிருக்கிற தொழிலாளர்கள் அவர்களுக்குரிய பல தொழில் சட்டங்களிலிருந்தும் விதிவிலக்கு அளிக்கப்பட்டு, பின் தங்கிய நிலையில் தள்ளப்பட்டு, தற்போது அவர்களுக்கு

[1984 மார்ச் 6

வேலையற்ற நிலைமையே உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே,
அதை கருத்தில் கொண்டு, உடனடியாக அதை அரசு எடுத்து
நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று
அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
ஆலைக்குச் சொந்தக்காரர்களுக்கு இந்த அரசு எந்தச் சலுகை
யையும் அளிக்கவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு
நன்கு தெரியும். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் தொழி
லாளர்களுக்கு சலுகை அளிக்கவேண்டுமென்ற நோக்குடன்
இருக்கிறது. அந்த ஆலையின் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள
வேண்டுமென்று முதற்கட்டமாக மைய அரசிடம் கூறி, மைய
அரசு நிர்வாகத்தை எடுத்திருக்கிறது. ஆலையை நாட்டுடைமை
யாக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. காரணம், இருக்
கின்ற மூலதனத்தை வைத்து அந்த ஆலையை செம்மைப்
படுத்திவிட முடியாது. நாட்டுடைமையாக்கி இன்ஸ்ட்டிடியூஷனல்
பைனான்ஸ் மூலமாக செம்மைப்படுத்தினால் ஆலையிலே
பணியாற்றுகின்ற தொழிலாளர்களாக இருந்தாலும் சரி,
தொழில் வளர்ச்சியாக இருந்தாலும் சரி, அது அதற்கு உகந்த
தாக இருக்கும் என்ற முறையிலே அரசு நடவடிக்கைகளை எடுத்து
வருகிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவர்
அவர்களே, காவிரி மில்லிலே இருக்கக்கூடிய அந்த மெஷி
னரிகள் எல்லாம் அந்த மில் என்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதோ
அன்றைக்குப் போடப்பட்டவை. அவைதான் இன்றைக்கும்
இருக்கின்றன, பழைய மெஷினரிகள். அந்தக் காரணத்தினால்
அடிக்கடி அந்த மில் மூடப்படவேண்டிய நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணத்தினால் அந்தத்
தொழிலாளர்களுக்கு பகுதி நாள் வேலை கிடைப்பதும் பகுதி
நாள் வேலை கிடைக்காமலும் போய்விடுகிறது. அதை
அரசாங்கம் என். டி. சி. மூலமாக விரைவிலே எடுத்துக்கொண்டு
அந்த மெஷினரிகளைப் புதுப்பித்து ஓட்டுவதற்கு ஆவன
செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, நிர்வாகத்தை எடுக்க மைய அரசு அனுமதித்து
மாநில அரசு 57 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அளவுக்கு பொறுப்
புறுதி வழங்கி அந்த ஆலையிலே உள்ள பழமையான கதிர்களை
யெல்லாம் மாற்றிப் புதுமையாகப் போடுவதற்கு அரசு நட
வடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இதுபோன்ற பணிகளை
தொடர்ந்து முழுமையாகச் செய்யக்கூடிய முறையிலே அந்த
ஆலையை நாட்டு உடைமையாக்கிவிட்டால் இன்னும் சற்று
அதிகமான முறையிலே இன்ஸ்டிட்யூஷனல் பைனான்ஸ் பெற்று
செம்மைப்படுத்த முடியும். மாநில அரசு மைய அரசிடம்
அதற்கு அனுமதி கேட்டிருக்கிறது. அந்த அனுமதி வந்தவுடன்
தக்க சட்டம் இயற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1984 மார்ச் 6]

மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

188—*வினா எண். 12818—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) பல் மருத்துவம் பயின்றவர்களை மாவட்ட, தாலூகா தலைநகர்களுக்கு அனுப்பும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) : இது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த பல் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களுக்கு எப்படிப் பல் வைத்தியம் செய்வது என்ற பயிற்சியை அளிக்கக்கூடிய முறையைக் கொண்டு வர செயற்குறிப்பு இருக்கிறதா ? மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்தில் பல்நோய்த் தடுப்பு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவர் அவர்களே. மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை. இன்னொரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு உண்டா என்பது தான் மூலக் கேள்வி. இன்னொரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கவேண்டுமென்றால் 1 கோடியே 50 லட்ச ரூபாய் நான்-ரெக்கரிங் என்ற முறையிலே செலவாகும். எக்விப்மெண்ட்ஸிற்கு 20 லட்ச ரூபாயும், ஸ்டாஃபிற்கு 20 லட்சம் ரூபாயும் செலவாகும். இதை மதுரையில் அமைக்கவேண்டுமென்று நாம் தீவிரமாக இருக்கிறோம். அதற்கான செயற்குறிப்புகளை சேகரித்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் முடிக்கப்படும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதே நேரத்திலே கிராமப் பகுதிகளிலே பல் வைத்தியப் பரிசோதனை முகாம்கள், சிகிச்சை முகாம்கள் நடத்த வேண்டுமென்ற முறையிலே ஆங்காங்கே உள்ள கல்லூரி மாணவர்கள் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவர்கள் சென்று அதை நடத்திக்கொண்டு வருகிறார்கள். இலவசமாக பல்பொடி பொட்டலம் சத்துணவு மையங்களிலே கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, புதிதாக பல் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு வெளிநாட்டிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் உதவி செய்கிறார்கள் என்று தெரி

[1984 மார்ச் 6

கிறது. ஆனால் மத்திய அரசு மூலம்தான் அது வரவேண்டும் என்ற நிலைமை இருப்பதால் நேரடியாக அதைப் பெறுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : அது இயலாத காரியம். வெளிநாட்டுப் பணமாக இருந்தாலும் அல்லது உதவி யாக இருந்தாலும் அது எல்லாம் மத்திய அரசாங்கத்தின் மூல மாகத்தான் வரவேண்டும். அண்மையிலே ஒரு செயற்குறிப்பு வந்தது. இரண்டு கோடி ரூபாய் சென்னையிலே உள்ள நம் முடைய மெட்ராஸ் டென்டல் காலேஜிற்கு நிதி தருவதாக எப்.டி.ஆர். ஒத்துக்கொண்டிருக்கிறது. நாம் மத்திய அரசாங்கத் தின் மூலமாகத்தான் அதைப் பெறவேண்டும். நாம் மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்கிறோம். வெகு விரைவிலே வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் நேரம் இத்துடன் முடிகிறது. இன்னும் வினாப் பட்டியலில் உள்ள 6 வினாக்களுக்கு விடை அளிக்கப்பெறவில்லை. அவற்றை அச்சிட்டு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இது போலவே வினாக்களுக்கு விடை யளிக்க முடியாதுபோன நிலைமை முன்பு ஒரு சமயம் ஏற்பட்டது. அப்போது ஒரு தீர்ப்பு வழங்கினீர்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டில் வினாக் கள் - விடைகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் எடுத்துக் கொள்வது கிடையாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்-விடைகள் நேரத்தில்தான் பல முக்கியமான தகவல்களை அறிந்து கொள்ள, உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் போடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றன (குறுக் கீடு) அதனால் இந்த மன்றம் மட்டும் அல்லாமல் வெளியில் உள்ள மக்களும் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. இதுபோன்று பல கேள்விகளைக் கேட்க வேறு சந்தர்ப்பம் எங்களுக்கு இல்லை. தயவுசெய்து நீங்கள் ஒவ்வொரு கேள்விக்கும் 5 நிமிடம்; 10 நிமிடம் என்று வைத்துக்கொண்டு எல்லாக் கேள்விகளையும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கவேண்டும். இப்போது 20 கேள்விகள்தான் பட்டியலில் போடுகிறீர்கள். அதிலும் மூல வினா கேட்டவருக்கு இரண்டு துணை வினா, மற்றவர்களுக்கு ஒரு துணை வினா என்கிற முறையில்தான் கேட்க அனுமதிக்கிறீர்கள். அப்படி உள்ளபோது இல்லாத ஒரு மரபை தயவுசெய்து ஏற்படுத்த வேண்டாம் (குறுக்கீடு)



136223

1984 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லாத மரபு இல்லை. இன்று காலையில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர் கள் அனல் மின்சாரத்தில் ஆரம்பித்து மின்சாரத்தைப் பற்றி விளக்கமாகக் கூறினார்கள். அவரது கேள்விக்கு 22 நிமிடங்கள் ஆனது ; அதன் பிறகு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மரங்கள், காடுகளைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இவை எல்லாம் முக்கியமான கேள்விகள், சமுதாயத்திற்குத் தேவையான கேள்விகள்தான் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம் முக்கியமான கேள்விகள்தான். நான் இல்லை என்று சொல்லவில்லை, முன்னால் இருப்பவர்கள் துணை வினாக்கள் பல கேட்டுள்ளார் கள். இன்று பல பேர்கள் பின்னால் கையைத் தூக்கியும் நான் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க நேரமில்லை. எனக்கு இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்கிறேன். இன்று 6 சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டாக வேண்டும். முக்கியமான ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வர இருக்கிறது. எவ்வளவு நேரம் இதற்கு ஆகும் என்று தெரியவில்லை. வேண்டு மானால் அவையை மாலையில் வைத்துக்கொள்ளலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் இரவு பத்து மணி வரை ஆனாலும் அவையில் இருப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சட்டசபைக் கூட்டம் இன்னும் பல நாட்கள் தொடர்ந்து நடக்கும். இன்றைக்கு விடுபடும் கேள்விகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது ; பட்டியலில் விடுபெற்ற மற்ற கேள்விகள் பிரிதொரு நாளன்று எடுத்துக்கொள்ளப்படும்.

Y211,31 N84
N84.59.3

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

மதுரை தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்லூரி விடுதியில் நடைபெற்ற முறைகேடுகள்.

1 —வினா 1425 —திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்லூரி விடுதியில் நடைபெற்ற முறைகேடுகள் பற்றி விசாரணை நடத்துமாறு கோரி விடுதி மாணவர்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் யாது ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மாணவர்கள் விடுதியில் செலுத்தப்பட்ட தொகைக்கு ரசீதுகள் உடனுக்குடன் கொடுக்கப்படவில்லை என்பது போன்ற புகார்களை தெரிவித்தனர்.

(இ) இது குறித்து விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அப்பயிலக முதல்வருக்கு தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அப் பயிலக முதல்வர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

**இராமேஸ்வரம் அரசு மருத்துவ மனையில் பெண் மருத்துவர் நியமனம்.**

2—வினா 1455—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் அரசு மருத்துவ மனையில் சுமார் 7 மாதங்களாக லேடி டாக்டர் இல்லாததால் பெண்கள் அவதியுறுகிறார்களென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) சில நிர்வாக காரணங்களால் இங்கு பெண் மருத்துவர் இடத்தை இடையிடையே நிரப்ப முடியவில்லை.

(ஆ) இப்போது ஒரு பெண் மருத்துவர் 31-7-1982லிருந்து பணிபுரிந்து வருகிறார்.

**1—4—1970-க்குப் பின்னர் 'ஏ' பிரிவு பள்ளிகளில் பணியாற்றிய பட்டதாரி ஆசிரியர்களை பணிவரன்முறைப் படுத்துதல்.**

3—வினா 1619—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1-4-1970-க்குப் பின்னர் (ஏ—விங்) பள்ளிகளில் 10(a) (1) ஆக பணியாற்றிய பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர் ?





(ஆ) அவர்களை அவர்கள் பணியில் சேர்த்த நாள் முதலே பணிவரன்முறைப் படுத்தாத காரணம் யாது ?

(இ) 'பி' விங் பட்டதாரி ஆசிரியர்களைச் செய்தது போல அவர்களையும் பணியில் சேர்ந்த நாள் முதலே பணிவரன்முறைப் படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

விடை —

(அ) 211.

(ஆ) மற்றும் (இ): 'பி' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப் பட்ட பள்ளி உதவியாசிரியர்களைப் போல் 'ஏ' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி உதவியாசிரியர்களின் பணியினை 1-4-1970 முதலோ அல்லது அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலோ எது பிந்தியதோ அதிலிருந்து வரன்முறை செய்ய ஜூலை திங்கள் 1982-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.**

4—வினா 1810—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப் பட்டதை ஒட்டி, அதிகரித்துள்ள அலுவலகப் பணிக்கென கூடுதலாக எழுத்தர்களை (Clerks) நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை —

மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பணியாளர்களை நியமிக்கும் கருத்துரு அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

**சேலம் மாவட்டத்தில் கனிம பொருட்கள் ஆய்வு இயக்குநரகம் நிறுவுதல்.**

5—வினா 3505—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இரும்பு, கனிமம், மாக்னசைட், சுண்ணாம்புக்கல், கருப்புக்கல் போன்ற பல பொருட்கள் கிடைப்பதால் சேலத்தில் "Directorate of Mining and Geology" நிறுவப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) சேலம் மாவட்டத்தில் "Directorate of Mining and Geology" நிறுவ உத்தேசமில்லை.

**திருப்பத்தூர் தாலுக்கா நிலச்சுவான்தார்கள் மீது போடப்பட்ட வழக்குகள்.**

6 —வினா 5374 —திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(ஆ) விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்படாத நிலச்சுவான்தார்கள் மீது வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தாலுக்காவில் வழக்குகள் போடப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து விவரங்கள் என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி வழங்காத குற்றங்களுக்காக வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுக்காவில் 1980-81 ஆம் ஆண்டில் மொத்தம் 36 வழக்குகள் நிலச்சுவான்தார்கள் மீது தொடரப்பட்டன. இவை 1981-82-ல் முடிக்கப்பட்டன. இவற்றில் நான்கு வழக்குகளில் ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்ட நிலச்சுவான்தாரருக்கு ரூபாய் 25 அபராதமும், ஒரு வழக்கில் ரூபாய் 20 அபராதமும் விதிக்கப்பட்டன. மீதமுள்ள 31 வழக்குகளில் தொழிலாளிகளுக்கு சேரவேண்டிய மீதி ஊதியம் வழங்கப்பட்டு சமரசம் மேற்கொள்ளப்பட்டது. இந்த தாலுக்காவில் 1981-82 ஆம் ஆண்டில் புதிதாக வழக்குகள் ஏதும் தொடரப்படவில்லை.

**மதுராந்தகம் தொகுதியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த் தொட்டிகள்.**

7 —வினா 6960 —திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியம் மற்றும் லத்தூர் ஒன்றியங்களில் எத்தனை மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன ?



(ஆ) அவைகளில் எத்தனை இயங்குகின்றன ?

(இ) பல மேல்நிலை தொட்டிகள் கட்டப்பட்டு இயங்காமல் இருப்பதன் காரணம் என்ன ?

விடை —

(அ), (ஆ) மற்றும் (இ) மதுராந்தகம் ஒன்றியத்தில் 23 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. 19 மேல்நிலைத் தொட்டிகள் இயங்குகின்றன. நான்கு மேல்நிலைத் தொட்டிகள், கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தால் இயங்கவில்லை. புதிய ஆழ்க்குழாய் கிணறுகள் அமைக்கத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

லத்தூர் ஒன்றியத்தில் 18 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. 14 மேல்நிலைத் தொட்டிகள் இயங்குகின்றன. நான்கு மேல்நிலைத் தொட்டிகள் கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தால் இயங்கவில்லை. புதிய ஆழ்க்குழாய் கிணறுகள் அமைக்கத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வடாற்காடு மாவட்டம் இராமநாத ஈசுவர ஆலயத்திலிருந்து திருடப்பெற்ற சிலைகள்.**

8 —வினா 7070 —திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள ராமநாத ஈசுவர ஆலயத்திலிருந்து மாணிக்கவாசகர், சிவன் —பார்வதி சிலைகளை திருடிச் சென்ற ராம்னிக்—லால்பட் என்பவரை பம்பாய் போலீசார் பிடித்து சிலைகளை மீட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்கள் என்ன ?

(இ) புராதன மதிப்புமிக்க கோவில் விக்கிரகங்களையும் சிற்பங்களையும் அடிக்கடி திருடிச் செல்வதை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ), (ஆ) மற்றும் (இ)* விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

*490-492-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்று உள்ளது.

[1984 மார்ச் 6

மரத்தால் ஆன ஆயுர்வேதிக் குவளைகளை அரசு மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு வழங்குதல்.

9—வினா 7651—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி, தோல் வியாதி போன்றவற்றைப் போக்கும் மரத்தால் ஆன ஆயுர்வேதிக் டம்ளர்கள் சென்னை கோபாலபுரம் அவ்வை சண்முகம் சாலை சுவாதி அன் கோ. நிறுவனத்தில் விற்பனை செய்யப்படுவது அரசு அறியுமா ?

(ஆ) அந்த டம்ளர்களை வாங்கி அரசு மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்தக் குவளைகள் வேங்கை மரத்தாலானவை. சித்த ஆயுர்வேத மற்றும் யூனானி மருத்துவ சாத்திர நூல்களில் இதுபற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. எனவே, இக்குவளைகளை இந்திய மருத்துவ முறையின் கீழ் பயன்படுத்த இயலாது. எனினும், இக்குவளைகள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு அரசு மருத்துவ மனைகளில் அறிமுகம் செய்வது பற்றி முடிவெடுக்கப்படும்.

மதுரை மாவட்ட நீதிமன்ற வளைவில் கட்டப்பட்டுள்ள பிள்ளையார் கோயில்.

10—வினா 7672—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில், மாவட்ட நீதிமன்ற வளைவில் ஒரு பிள்ளையார் கோயில் கட்டப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசாங்கமோ உயர்நீதிமன்றமோ அனுமதி ஏதேனும் வழங்கியுள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.



1984 மார்ச் 6]

திருநெல்வேலி மாவட்டம், தென்கால் பகுதியில் பழந்தொழி சாகுபடிக்கு தண்ணீர் வழங்கல்.

11—வினா 8353—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அணைத் தென்கால் பகுதியில் பழந்தொழி சாகுபடிக்கு இவ்வாண்டு தண்ணீர் தர மறுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதற்குரிய காரணம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவு தண்ணீர் இருந்ததால் தென்கால் பகுதியில் பழந்தொழி சாகுபடிக்கு, 1981 ஆம் ஆண்டில் தண்ணீர் வழங்க இயலவில்லை.

குளத்தூர் தொகுதியிலுள்ள கோயில்களை புதுப்பித்தல்.

12—வினா 8523—திரு. நா. மாரிமுத்து : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதியில் உள்ள பல கோவில்கள் குறிப்பாக, கீரனூர், வெள்ளனூர், சத்தியமங்கலம் போன்ற ஊர்களில் உள்ள சிவன் கோவில்கள் பராமரிப்பு குறைந்து மிகவும் சீர்கெட்டு உள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அக்கோவில்களை அரசு செலவில் புதுப்பிக்க இயலுமா ?

(இ) அக் கோவில்களுக்கு உரிய மானியநிலங்கள் எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கோவில்களை அரசு செலவில் புதுப்பிக்கும் திட்டம் தற்பொழுது இல்லை. ஆலயங்களின் நிதி நிலை திருப்திகரமாக இல்லாததால் பொதுமக்களிடம் கணிசமான நன்கொடை பெற்று திருப்பணி வேலைகளை மேற்கொள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

(இ) கீரனூர் அருள்மிகு உத்தமநாத சுவாமி ஆலயம் மற்றும் வெள்ளனூர் அருள்மிகு அகத்தீசுவரர் ஆலயங்களுக்கு சொந்தமான நிலங்கள் இல்லை. சத்தியமங்கலம் அருள்மிகு சோளீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமாக 7.47 ஏக்கர் நன்செய் நிலமும், 4.47 ஏக்கர் புன்செய் நிலமும் மானியமாக உள்ளன.

[1984 மார்ச் 6

### ஒருங்கிணைந்த சாலைகள் பணிகளை ஒரு வாரியத்தின் கீழ் கொண்டுவரும் செயற்குறிப்பு.

13—வினா 8615—திரு. டி. மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைகள், பஞ்சாயத்து ஒன்றியங்களிலிருக்கும் சாலைகள், பஞ்சாயத்திலிருக்கும் சாலைகள் இவைகளை ஒருங்கிணைத்து வேலைகள் துரிதமாக நடைபெற ஒரு வாரியத்தின் கீழ் அனைத்தையும் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு அந்த வாரியம் நிறுவப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### சென்னை திருவேற்காடு அருகில் கண்டு எடுக்கப்பட்டுள்ள கடவுள் சிலைகள்.

14—வினா 8711—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஜனவரியில் சென்னையை அடுத்த திருவேற்காடு, அருகில் தனியார் நிலத்தில் கடவுள் சிலைகள் கண்டு எடுக்கப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) சிலையின் மதிப்பென்ன ?

(ஈ) சிலை எங்கு வைக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னையை அடுத்த திருவேற்காடு நகரியத்தில் வள்ளிக்கொல்லை மேடு என்ற இடத்தில் செங்கல் சூளை உரிமையாளர் ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் மண் அகழ்ந்து எடுக்கும்போது 42 உடைந்த சிலைகளும், 3 பீடங்களும் மற்றும் சில கோயில் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.

(இ) அவற்றிற்கு இன்றைய உலோக மதிப்பு எவ்வளவு என்று தெரியவில்லை.

(ஈ) கைப்பற்றப்பட்ட சிலைகள் அனைத்தும் மதுரவாயில் காவல் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.



1984 மார்ச் 6]

### தமிழ்நாட்டிற்கு அதிக சிமெண்ட் ஒதுக்கும் கோரிக்கை.

15—வினா 8754—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு அதிக சிமெண்ட் ஒதுக்கக் கோரி தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நமது மாநிலத்திற்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் 6 இலட்சம் டன் சிமெண்ட் தேவைப்படுகிறது. ஆனால் மைய அரசு 1981 ஆம் வருடம் நான்கு காலாண்டுகளிலும் சராசரியாக 3.9 இலட்சம் டன் சிமெண்ட் ஒதுக்கி வந்தது. ஒதுக்கப்பட்ட அளவு சிமெண்ட் மிகக் குறைவாக இருப்பதை சுட்டிக்காட்டி ஒவ்வொரு காலாண்டிலும் அதிக ஒதுக்கீடு செய்வதற்கும், அலுவல் சார்பிலும் தொலை வழி செய்திகள் மூலமும், மற்றும் முதலமைச்சரிடமிருந்து மைய தொழிலமைச்சருக்கு நேர்முகக் கடிதங்கள் மூலமும், நேரில் பேசியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. 1981-ல் முதல் காலாண்டில் 50,000 டன் அதிகமாக ஒதுக்கீடு செய்ததை அடுத்த காலாண்டில் சரி செய்து விட்டார்கள். இரண்டாவது காலாண்டிற்கு அதிக ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 3-வது மற்றும் 4-வது காலாண்டுகளிலும் கூடுதல் ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை. 1982 மார்ச்சில் மத்திய அரசு சிமெண்டின் மீதான கட்டுப்பாட்டை ஓரளவு தளர்த்திய பின்பு ஒரு காலாண்டுக்கு சராசரியாக 1.42 இலட்சம் டன் ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து 1982-ல் எந்த காலாண்டிற்கும் கூடுதல் ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை.

### காட்டு நாய்க்கர் சமூகம் வசிக்கும் மாவட்டங்கள்.

16—வினா 8852—திரு. என். பழனிவேல், திரு. எம். ஆறுமுகம், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் காட்டு நாய்க்கர் சமூகம் வசிக்கிறார்கள் ?

(ஆ) மதுரை மாவட்டத்தில் அந்த சமூகத்தார் ஜாதி சான்றிதழ் வாங்க முடியாமல் சிரமப்படுவது அரசு அறியுமா ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி, நீலகிரி, மதுரை, திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம் முதலிய மாவட்டங்களில் காட்டு நாய்க்கர் சமூகத்தினர் வசித்து வருவதாக 1971 மக்கள் கணக்கெடுப்புப்படி தெரிய வருகின்றது. இந்த கணக்கெடுப்பின்படி இச் சமூகத்தினருடைய மொத்த எண்ணிக்கை 2,822 ஆகும்.

(ஆ) தமிழ்நாடு முழுவதும் காட்டு நாய்க்கன் இனம் பழங்குடியினமாக இந்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. காட்டு நாய்க்கன் சமூகத்தினர் சாதி சான்றிதழ் வாங்க முடியாமல் சிரமப்படுவது பற்றி வந்த முறையீடுகள் பொதுவானவையென்று விசாரணைக்குப் பின் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுவதாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். எனினும் சாதி சான்றிதழ் வழங்குவதில் தாமதம் கூடாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுரை வழங்கியுள்ளார் என்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1980–81-ல் முந்திரிக்கொட்டை ஏலம் மூலம் கிடைத்த வருவாய்

17—வினா 8959—திரு. டி. மணி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–81 இல் எத்தனை டன் முந்திரிக்கொட்டை ஏலத்திற்கு விடப்பட்டது?

(ஆ) அதன் மூலம் கிடைத்த மொத்த வருவாய் எவ்வளவு?

(இ) எந்த எந்த ஆலை முதலாளிகள் இதனை வாங்கியுள்ளார்கள்?

விடை—

(அ) 1980–81 இல் பொது ஏலத்தில் 482.853 டன் முந்திரிக் கொட்டை விற்கப்பட்டது.

(ஆ) அதன் மூலம் ரூ. 46,35,265.19 வருமானம் கிடைத்தது.

(இ) விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

*493-494-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



குன்னூர் வட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இசைபெழுப்பும் கற்கள்.

18—வினா 9210—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தாலுகா காட்டேரி கிராமம் மணிக்கல் என்னுமிடத்தில் இசை எழுப்பும் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) குன்னூர் வட்டத்தில் கடிகரத்தி கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலத்தின் மத்தியில் ஏழு கற்கள் வெவ்வேறு அளவிலும் வடிவத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மூன்று பக்கங்களிலும் சுவர்களால் சூழப்பட்டு, கோவிலாக உள்ளது நிலத்தில் ஓரளவு புதைந்து காணப்படும் இக்கற்களை மணிக்கல் என வழங்குகின்றனர். இக்கற்களை தட்டும் நேரத்தில் உலோக ஒலி எழுவதால் மணிக்கல் என அழைக்கப்படுகிறது.

உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியு மருத்துவம் அதிகாரிகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களாக நியமிக்கும் கோரிக்கை.

19—வினா 9330—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி நிறுவனங்களில் வேலை பார்க்கும் மருத்துவ அதிகாரிகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களாக நியமிக்க வேண்டும் என அரசுக்கு மருத்துவ யூனியனிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடை—

(அ) ஆம்.

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்களில் வேலை பார்க்கும் மருத்துவ அதிகாரிகளை (எம்.பி.பி.எஸ். பட்டதாரிகளை மட்டும்) உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வயது சான்றிதழ் அளிக்கவும் மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கலாமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அவர்களை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களாக (Authorised Medical Attendant) நியமிக்க இயலாது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

## அனைத்துப் பள்ளிகளிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் திட்டம்.

20—வினா—9620—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அனைத்துப் பள்ளிகளிலும் ஆலோசனைக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த முறை வரும் கல்வி ஆண்டிலிருந்து அமுல் படுத்தப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு கல்வி விதிகளின்படியும், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி (ஒழுங்குமுறை) சட்டத்தின்படியும், தனியார் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மேலாண்மைக் குழு ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. மேலாண்மைக் குழு ஏற்படுத்த தவிர்ப்பளிக்கப்பட்ட பள்ளிகளில், ஒரு ஆலோசனைக் குழு கட்டாயமாக அமைக்கப்பட வேண்டுமென தமிழ்நாடு கல்வி விதிகளின்கீழ், விதி 12 (2)-ல் வகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர, அனைத்து வகை நிர்வாகங்களின் (அரசு, தனியார், தல நிர்வாகம் போன்றவை) கீழுள்ள பள்ளிகள் அனைத்திலும் ஊழியர் குழு (Staff Council) ஒன்று அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர அனைத்து வகைப் பள்ளிகளிலுமுள்ள ஆசிரியர்களின் குறைகளைக் களைய ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கு ஒன்றும், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கு ஒன்றும், மாநிலத்திற்கு ஒன்றும் ஆக மூன்று மட்டங்களில் ஆசிரியர்கள் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர வேறு குழுக்கள் அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

## சிறு விவசாயிகளின் கடனை ரத்து செய்யும்போது வருவாய்த்துறை மூலம் நில உடைமை விவரம் பெறுதல்.

21—வினா 9679—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களில் சிறு விவசாயிகளின் கடனை ரத்துச் செய்யும்பொழுது சங்கங்களில் உள்ள நில அடங்கல் ரிஜிஸ்தரை வைத்து தீர்மானிப்பதை மாற்றி வருவாய்த் துறை மூலம் நில உடைமை விவரம் பெற்று சலுகை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?





விடை—

சங்கங்களில் உள்ள நிலப்பதிவேடு, வருவாய்த்துறையைச் சார்ந்த கிராம அதிகாரிகளால் பராமரிக்கப்பட்ட நில அடங்கல்'-பதிவேடுகளில் உள்ள நில உடைமைகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் அடங்கியதாகும். ஆகவே வருவாய்த் துறை மூலம் நில உடைமை விவரம் பெற வேண்டிய அவசியம் இல்லை.

22—வினா 9680—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடன் பெற்ற தேதியில் கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்கப்பட்ட கடன் ஆஸ்திப் பொறுப்பில் கிராம கர்ணம் கொடுத்த நில அளவை மட்டும் வைத்தே கூட்டுறவு அதிகாரிகள் பெரும்பான்மையான இடங்களில் கடனை ரத்து செய்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி கடன் பெற்றவரின் மொத்த நில உரிமை அந்த குறிப்பிட்ட தேதியில் எவ்வளவு என்பதை வட்ட ஆட்சியர்க்கு குறையாத தகுதியுடைய வருவாய்த்துறை அதிகாரிகளிடம் சான்று பெற்று நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்குமா ?

விடை—

(அ) வருவாய்த்துறையைச் சார்ந்த கிராம அதிகாரிகளால் பராமரிக்கப்படும் பதிவேடுகளில் உள்ள நில உடைமை விவரங்களைக் கொண்டுதான் விவசாய சேவா கூட்டுறவுச் சங்கத்திலுள்ள நில உடைமைப் பதிவேடுகள் பதியப்படுகின்றன. இந்தப் பதிவேடுகளிலுள்ள விவரங்களின் அடிப்படையில்தான் சம்பந்தப்பட்ட கடன்கள் ரத்து செய்யப்படுகின்றன.

(ஆ) அ-வில் கூறிய காரணங்களினால், வட்ட ஆட்சியர்க்குக் குறையாத தகுதியுடைய வருவாய்த்துறை அதிகாரிகளிடம் சான்று பெற்று கடன் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க அவசியமில்லை.

## இ. எஸ். ஐ. மருத்துவமனைகளில் மருத்துவர்கள் நியமன விகிதம்

23—வினா 9709—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ. எஸ். ஐ. மருத்துவமனைக்கு 1000 பேர்களுக்கு ஒரு டாக்டர் வீதம் நியமனம் செய்ய வேண்டுமென்பது உண்மையா ?

[1984 மார்ச்

(ஆ) ஆம் எனில், இதன் அடிப்படையில் எந்த இடத்தில் டாக்டர்கள் நியமனம் செய்யப்பட்டனர் ?

(இ) இந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பெறாத இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் எவை ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : ஒரு விவர அறிக்கை* அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

தவில், நாதஸ்வரத்தில் தலைசிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் செயற்குறிப்பு.

24—வினா 9765—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தவில், நாதஸ்வரத்தில் தலை சிறந்த மாணவர்களுக்கு அறநிலையத் துறையிலிருந்து உதவித் தொகை அளிக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தவில், நாதஸ்வரம் ஒவ்வொன்றிலும் தலைசிறந்த ஐந்து மாணவர்களுக்கு அரசு முறையே ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு முறையே ரூ. 300-ம் ரூ. 500-ம் 1978-ம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது.

மாவட்ட வாரியாக அரசு போக்குவரத்துத்துறை கழகங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

25—வினா 9907—திரு. ஏ. எம். சேதுராமன் மற்றும் திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டவாரியாக அரசு போக்குவரத்துத் துறைக் கழகங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

---

*495-501ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1984 மார்ச் 6]

(ஆ) ஆம் எனில், வடாற்காடு மாவட்டத்தில் எப்போது ஏற்படுத்தப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) முன்னர் வட ஆற்காடு மாவட்டத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகமும் (மாவட்டப் பிரிவு), தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகமும் பேருந்துகளை இயக்கி வந்தன. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை (மாவட்டப்பிரிவு), பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்கழகம் என்று பெயரிட்டு வட ஆற்காடு மாவட்டத்திற்கென தனிக்கழகமாக பேருந்துகளை இயக்க அரசு ஆணையிட்டது. இக்கழகம் 1—12—1982 முதல் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி தொழிற்கூடம் அமைத்தல்.

26—வினா 10067—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் அரசு பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி செய்யும் தொழிற்கூடம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பாலியஸ்டர் நாரிழை தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் பின்தங்கிய பகுதியில் அமைக்க முன்உரிமம் வழங்க மே 1980-ல் மைய அரசை கேட்டுக் கொண்டார்கள். இத்திட்டத்திற்கு விரைவில் உரிமம் வழங்குமாறு மைய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டது. எனினும் பாலியஸ்டர் நாரிழைத் தொழிலில் புதிதாக கூடுதல் உற்பத்தித் திறனுக்கு தக்க எதிர்காலம் இல்லை என்ற அடிப்படையில் இத்திட்டத்திற்கான முன் உரிமம் வழங்குவதை மைய அரசு நிராகரித்து விட்டது.

[1984 மார்ச் 6

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

27—வினா 10188—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாவை வளர்க்க கட்டம் கட்டமாக அமுலாகும் திட்டத்தை செயல் படுத்த எண்ணியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : விவரமான அறிக்கை* பேரவையில் வைக்கப்படுகின்றது.

எம். ஃபில். படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்கள் செலுத்தும் கட்டணம்.

28—வினா 10359—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எம். ஃபில். (Phil) படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்கள் பச்சையப்பன் கல்லூரியில் சேருகின்றவர்களுக்கு மட்டும் கல்லூரிக் கட்டணம் ரூ. 550-ம் மற்ற கல்லூரிகளில் சேருகின்றவர்களுக்கு ரூ. 70-ம கட்டணமாக செலுத்துகிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இந்தக் கட்டண வேறுபாடுகளைக் களைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 24-12-1981 நாளிட்ட அரசு ஆணை எண் 2584-ன்படி அரசால் தேர்வு செய்யப்பட்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் படிக்க அனுப்பப்பட்ட தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு சிறப்பு மற்றும் சில்லரைச் செலவினக் கட்டணமாக ரூ. 350 அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற கட்டணங்களாகிய நுழைவுக் கட்டணம் ரூ. 10-ம் பதிவுக் கட்டணம் ரூ. 50-ம் ஆக மொத்தம் ரூ. 60 ஆசிரியர்கள் செலுத்த வேண்டும்.

(ஆ) கூடுதல் கட்டணத்தை ஆசிரியர்களிடம் திரும்பச் செலுத்த பச்சையப்பன் பொறுப்புக் கழகச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

* 502-504-ம் பக்கங்கள் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1984 மார்ச் 6]

1980-81 ஆம் ஆண்டில் கருப்புக் கற்கள் ஏற்றுமதி மூலம் கிடைத்த வருவாய்.

29—வினா எண். 10422—திரு. பி. எஸ். துரைசாமி மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜப்பான் நாட்டிற்குக் கருப்புக் கற்கள் எத்தனை மெட்ரிக் டன் அரசு ஏற்றுமதி செய்துள்ளது ?

(ஆ) 1980-81-ம் ஆண்டில் ஏற்றுமதியில் அரசு துறை சார்பில் வருவாய் எவ்வளவு ?

(இ) தனியார்துறை சார்பில் வருவாய் எவ்வளவு ?

விடை—

(அ) 1980-81-ல் சுமார் 1,046 க. மீ. கருப்பாறைகளை தமிழ்நாடு கனிம நிறுவனம் ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

(ஆ) ரூ. 43.71 இலட்சம்.

(இ) தகவல்கள் இல்லை.

*Collection of huge amounts as donation and fees by the private Schools affiliated to Central Board of Secondary Education*

30—Q. 10447—Thiru. R. UMANATH : Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) Whether this Government is aware that a number of private schools affiliated to Central Board of Secondary Education are indulging in charging exhorbitant fees, collecting huge amounts as donation, compelling parents to give a loan to be paid to the student at the time of the student leaving the school etc, which cuts at the root of the concept of free Education,

(b) If so, the number of cases dealt by this Government, and

(c) the action taken thereon ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : சம்மந்தப்பட்ட பள்ளிகள் அனைத்தும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் நேரடி ஆளுகைக்குட்பட்டு இயங்குவதால், கிடைக்கப்பெறும் புகார்கள் அனைத்தும், சென்னையில் இயங்கிவரும் மேற்படி வாரியத்தின் மண்டல அலுவலருக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

[1984 மார்ச் 6

## கோவை நகராட்சியின் கீழ் இயங்கும் பள்ளிகளில் ஆசிரியர்கள், ஊழியர்கள் பதவிகளுக்கு ஒப்புதலளிப்பதற்கான நடவடிக்கை.

31 வினா 10530—திரு கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சியின் கீழ் உள்ள பள்ளிகளில் அதிக வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்களுக்கும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்கும் தேவையான ஆசிரியர்கள் பதவிகளும், ஆசிரியர்களல்லாத ஊழியர்கள் பதவிகளும் ஒப்புதலளிப்பதில் பெரும் காலதாமதம் ஏற்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) 1980 சனவரியிலிருந்து 1981 ஜூன் முடிய நகராட்சியிலிருந்து இவ்வாறு கேட்கப்பட்டுள்ள பதவிகள் எவ்வளவு?

(இ) அதன் மீது கல்வி இலாகா எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 1980—81 ஆம் ஆண்டில் பீளமேடு ஆரம்பப்பள்ளியில் 6-வது வகுப்பு ஒன்று மட்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே புதுப் பணியிடங்கள் கோரப்பட்டு ஒப்புதலளிப்பதில் காலதாமதம் ஏற்படவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் | .. | 8 |
| இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் | .. | 18 |
| உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் | .. | 16 |
| உடற்கல்வி இயக்குநர் பணியிடங்கள் | | 4 |
| தமிழாசிரியர்கள் பணியிடங்கள் | ... | 13 |
| மொத்தம் | .. | 59 |

(இ) கோவை, முதன்மை கல்வி அலுவலர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட பணியிடங்கள் :—

| | | |
|---|---|---|
| (i) பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் | | 19 |
| (ii) உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள். | | 4 |
| மொத்தம் | .. | 23 |



1984 மார்ச் 6]

## தமிழகத்திலுள்ள யானைகள்.

32—வினா 10590—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள யானைகள் எத்தனை என்று கணக்கு உள்ளதா?

(ஆ) கேரளா பகுதியில் தேக்கடி, போடிமெட்டு வழியாக வந்து போகும் யானைகள் யாருக்குச் சொந்தம்?

விடை—

(அ) 1979 ஆம் ஆண்டு மே மாதத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி தமிழ்நாட்டில் 2,994 யானைகள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

(ஆ) யானைகள் எப்பொழுதும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. அவைகளின் உணவு, தண்ணீர் வசதிகளுக்கேற்ப இடம் விட்டு இடம் மாறக் கூடியவை. கேரள மாநிலத்திலுள்ள எல்லைப் பகுதிகளில் உள்ள யானைகள் தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் உள்ள யானைகள் கேரளத்திற்கும் இடம் விட்டு இடம் மாறிச் செல்லும். ஆகையால் போடிமெட்டு, தேக்கடி காட்டுப் பகுதிகளில் காணப்படும் யானைகள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவை என்று குறிப்பிட்டுக் கூற இயலாது.

## 1979-80 ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கருப்புக் கற்கள்.

33—வினா 10636—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலிருந்து கருப்பு கற்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், 1979—80 ஆம் ஆண்டில் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது.

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1979–80 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிலிருந்து மொத்தம் ரூ. 10.40 கோடி மதிப்புள்ள 22,659 கன மீட்டர் அளவு கரும்பாறைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

### தமிழ்நாடு மின் வாரியத் தொழிலாளர்களிடமிருந்து ஒய்வுகால நிதித் திட்டத்திற்காக பிடித்தம செய்யப்பட்ட தொகை.

34—வினா 10750—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மின்சார வாரியம் தொழிலாளர்கள் ஒய்வு கால நிதித் திட்டம் (Family Pension Scheme) என்ற பெயரால் தொழிலாளர்களிடமிருந்து 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பிடித்தம் செய்யப்பட்ட பணத்தை இதுவரையில் வைப்பு நிதியில் (Provident Fund) செலுத்தாமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

(இ) எவ்வளவு பணம் அவ்வாறு செலுத்தப்பட வேண்டும்?

விடை—

(அ) மின்வாரியத்தில் உள்ள மொத்தம் 25 மின் திட்டங்களில் , 18 மின் திட்டங்களில் உள்ள தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை பிராந்திய வருங்கால சேம நிதி அலுவலக ஆணையாளருக்கு (சென்னை) முழுவதுமாக செலுத்தப்பட்டுவிட்டது. இன்னும் 7 மின் திட்டங்களில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) (1) 1–10–1977 முதல் வருங்கால சேம நிதிக்கணக்கு அந்தந்த மின் திட்டங்கள் வைத்துக் கொள்ள பிரித்து அனுப்பப்பட்டது.

(2) ஒரு மின் திட்டத்திலிருந்து மற்றொரு மின்திட்டம் பிரிக்கப்படுவதால் பிடித்தம் செய்யப்பட்ட பணம் குறித்த விவரங்களை மாற்றம் செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

(இ) உத்தேசமாக ரூ. 14,46,829 செலுத்த வேண்டும் (ரூபாய் பதினான்கு இலட்சத்து, நாற்பத்தாறாயிரத்து, எண்ணூற்று இருபத்தொன்பது.)





### காஞ்சிபுரம், அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவ மனை.

35—வினா 10763—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனையில் புற்றுநோய் ஆராய்ச்சி பிரிவு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### சிறந்த நாடகத்திற்கு பரிசு வழங்கும் திட்டம்.

36—வினா 10854—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறந்த சினிமா படத்திற்குப் பரிசு வழங்குவது போல் சிறந்த நாடகத்திற்கும் பரிசு அளிக்க அரசு முன் வருமா ?

விடை—

சிறந்த நாடகத்திற்குப் பரிசு அளிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால் சிறந்த நாடக குழுக்களுக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் ஒரு சுழற் கேடயம் பரிசு வழங்க முன் வந்திருக்கிறது.

### கரூர்–திண்டுக்கல்—மதுரை—தூத்துக்குடிக்கு புதிய இரயில்பாதை அமைக்கும் பணி.

37—வினா 11161—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கரூர்—திண்டுக்கல்—மதுரை—தூத்துக்குடிக்கு புதிய இரயில் பாதை அமைப்பது பற்றி மத்திய அரசு மாநில அரசின் ஆலோசனையை கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எப்போது வேலை துவங்கப்படும் ?

[1984 மார்ச் 6

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) இவ்வரசின் வற்புறுத்தலின் பேரில், மத்திய அரசு 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கரூரிலிருந்து திண்டுக்கல் வரை அகல இருப்புப் பாதை அமைப்பதற்கும், திண்டுக்கல்லிலிருந்து மதுரை வரை இணையாக இன்னொரு அகல இருப்புப் பாதை அமைப்பதற்கும், மதுரையிலிருந்து மணியாச்சி வரையிலுள்ள இருப்புப்பாதையை அகல இருப்புப்பாதையாக மாற்றுவதற்கும் மற்றும் தூத்துக்குடியில் இருந்து திருநெல்வேலி வரை மணியாச்சி வழியாக இணையாக இன்னொரு அகல இருப்புப் பாதையை அமைப்பதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. இரயில் பாதை அமைப்பதற்கான அளவை நடைபெற்று வருகிறது. அதற்கான நில எடுப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்ப் பாடங்களை நடத்த புலவர் பட்டம் பெற்றவர்களை அமர்த்துதல்.

38—வினா 11188—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தற்போது உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு தமிழ் பாடங்களை நடத்த புலவர் பட்டம் பெற்றவர்களை பணிக்கு அமர்த்த அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

தற்போது அநேகமாக பெரும்பான்மையான உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள் தான் தமிழ் பாடம் நடத்தி வருகின்றனர்.

### நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் அளவு.

39—வினா 11523—திரு. கு. ரமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில் அரிசியின் தேவை ஜுன், ஜுலை மாதங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், முன் மாதங்களில் கொடுக்கப்பட்ட அரிசியின் அளவென்ன ?

(இ) அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?





விடை—

(அ) ஜுன், ஜுலை மாதங்களில் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் தேவை அதிகரித்தது உண்மை.

(ஆ) ஜனவரி 1982 முதல் ஜுலை 1982 முடிய கொடுக்கப்பட்ட அரிசியின் அளவுகள் பின்வருமாறு :—

| | | | (மெ. டன்கள்.) |
|---|---|---|---|
| ஜனவரி | .. | .. | 48,407 |
| பிப்ரவரி | .. | .. | 43,123 |
| மார்ச் | .. | .. | 42,764 |
| ஏப்ரல் | .. | .. | 34,133 |
| மே | .. | .. | 37,617 |
| ஜுன் | .. | .. | 49,758 |
| ஜுலை | .. | .. | 52,165 |

(இ) 1981 இல் உயர்த்தப்பட்டது.

(ஈ) நெல் கொள்முதல் விலைகள் உயர்த்தியதையொட்டி மத்திய தொகுப்பிலிருந்து மாநில அரசுகளுக்கு பொது வினியோகத்திற்கு வழங்கும் அரிசியின் விலையை மத்திய அரசு உயர்த்தியது. மாநில அரசு நியாய விலைக் கடைகளில் வழங்கும் சாதாரண ரக அரிசியின் விலையை கிலோ ரூ. 1.60-லிருந்து ரூ. 1.75 ஆகவும், சன்னரக அரிசியின் விலையை கிலோ ரூ. 1.80-லிருந்து ரூ. 2.00 ஆகவும், மிகச் சன்னரக அரிசியின் விலையை கிலோ ரூ. 2.15 ஆகவும் 1-2-1981 முதல் நிர்ணயித்துள்ளது.

### கோவையில் கல்லூரிகளில் நடைபெற்ற போராட்டம் மீதான நடவடிக்கை.

40—வினா 11527—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் தமிழ்நாடு தனியார் கல்லூரிச் சட்ட விதிகள் அமுலாக்கப்படாமல் மீறப்படுவதை எதிர்த்து ஆசிரியைகள் மறியல் போராட்டம் நடத்தியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) உண்மை.

(ஆ) இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு பரிசீலித்து வருகிறது.

[1984 மார்ச் 6

41—வினா 11607—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி, ராமகிருஷ்ணா மிஷன் வித்தியாலயக் கலைக் கல்லூரி, கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஆசிரியர்கள் ஆகஸ்டு மாதம் முதல் வாரத்திலிருந்து போராட்டத்திலிறங்கியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) பிரச்சினைகளைத் தீர்க்க உரிய சமரச முயற்சிகளைப் பல்கலைக்கழகமும் அரசும் எடுத்தன. அதன் பலனாக போராட்டம் கைவிடப்பட்டுத் தற்போது இக் கல்லூரிகள் அமைதியாக இயங்கி வருகின்றன.

1981 ஆம் ஆண்டில் காடம்பாறை நீரேற்று மின் திட்டப் பணியில் விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை.

42—வினா 11606—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் கோவை மாவட்டம் காடம்பாறை நீரேற்று மின் திட்டப் பணியில் டன்னல் டிரில்லிங்கிலேயே இரண்டு பேர்கள் இறந்ததும் பலருக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டதும் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த விபத்துக்கு காரணமென்ன?

(இ) இந்த டன்னல் வேலை ஆரம்பித்தது முதல் இவ்வித விபத்துக்கள் எவ்வளவு நடந்துள்ளது? இறந்தவர்கள் எவ்வளவு பேர் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் மின் நிலையத்திற்குச் செல்லும் சுரங்கப் பாதையில் துளை கருவியினால் பாறையைத் துளையிடும்போது திடீரென்று பாறை வெடிப்பு



1984 மார்ச் 6]

ஏற்பட்டு பாறை பிளந்து சிதறியதால் தொழிலாளர்கள் தாக்குதலுக்கு ஆளாயினர். ஏற்கனவே வெடி வைக்கப்பட்டு வெடிக்காத துளைகளில் சிக்குண்டிருந்த "வெடிக்கத் தூண்டும் கருவியில்" (Detorator) துளைக்கருவி பட்ட காரணத்தால் வெடி விபத்து ஏற்பட்டது.

(இ) காடம்பாறை நீரேற்று திட்ட சுரங்கப் பாதை வேலை ஆரம்பித்ததிலிருந்து 31-7-1981 அன்று நடந்த விபத்தையும் சேர்த்து இதுவரை ஐந்து விபத்துக்கள் நடந்துள்ளன. இதனால் ஏழு பேர்கள் உயிரிழந்துள்ளார்கள்.

மேல் நிலைப் பள்ளி தொலியழிலுக்கான பாடப் புத்தகங்கள்.

43—வினா 11615—திரு. ப. வெங்கடசுப்பிரமணிய : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் தொழிலியலுக்குத் தகுந்த பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆசிரியர்கள் தொழிற் பாடம் நடந்துவதற்காக" குறிப்புப்புத்தகங்கள் மட்டும் போதுமானதாக கருதப்படுவதால் மேல்நிலைப் பாடத் திட்டத்தில் தொழிற் பிரிவு பாடங்களுக்கு பாட புத்தகங்கள் இல்லை.

குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துக் கொள்பவர்களுக்கு ஊக்கத் தொகை அதிகரித்தல்.

44—வினா 11625—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு" ஊக்கத் தொகையை உயர்த்தித் தருவதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா?

விடை —

1983 பிப்ரவரி 28 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 303-இல், குடும்பநல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூபாய் 85-ஐ, ரூபாய் 115 ஆக உயர்த்தியும், ஆண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூபாய் 75-ஐ ரூபாய் 105 ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

குடவாசல் அரசினர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு.

45—வினா 11678—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் ஆண்கள் மற்றும் பெண்கள் அரசினர் மேல்நிலைப்பள்ளிகட்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழகத்தில் குற்றப்பரம்பரை என இறுதிச் சான்றிதழ் பெற்ற மாணவர்கள்.

46—வினா 11700—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உயர்நிலைப்பள்ளி இறுதி சான்றிதழில் (DNT) என்றுள்ள இனத்திற்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா ?

(ஆ) தமிழகத்தில் குற்றப்பரம்பரை என்று இறுதிச் சான்றிதழ் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) தமிழகம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்கள் படிக்க வாய்ப்புள்ளது. மேலும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கென்று மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் மேற்படி இனத்தவரைத்தவிர ஏனைய இனத்தைச் சார்ந்தவர்களும் படித்து வருகின்றனர். எனவே, இது பற்றிய விவரங்கள் ஏதும் அரசிடம் இல்லை.



1980-81 ஆம் ஆண்டு தொழிற் பயிற்சி பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.

47—வினா 11799—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1980–81 ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள 32 தொழிற் பயிற்சி பள்ளிகளில் (Industrial Training Institutes) சேர்க்கைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) கூடுதல் மாணவர்களை சேர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) 1980–81 ஆம் ஆண்டு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 92,607.

(ஆ) சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை—7,891.

(இ) 1981–82 புதிதாக இரண்டு தொழிற்பயிற்சி பள்ளிகள், கடலூரில் ஒன்றும் அரக்கோணத்தில் ஒன்றும் துவக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 128 பெண்களும் 112 ஆண்களும் கூடுதலாகப் பயன் பெறுவார்கள்.

பாளையம் பேரூராட்சிப் பகுதிக்குக் கூட்டுக் குடிநீர் திட்டம்.

48—வினா 11800—திரு. வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

வேடசந்தூர் தொகுதி பாளையம் பேரூராட்சிப் பகுதிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமுல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை —

இல்லை.

[1984 மார்ச் 6

1980-81 ஆம் ஆண்டில் தமிழக பொறியியற் கல்லூரிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.

49—வினா 11803—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பொறியியற் கல்லூரிகளில் சேர்க்கப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) அவர்களில் பின் தங்கியோர் தாழ்த்தப்பட்டோர் எத்தனை பேர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1980–81 ஆம் ஆண்டில் தமிழகப் பொறியியற் கல்லூரிகளில் சேர்க்கப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | மொத்த இடம். | பின் தங்கியோர். | தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (1) தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தின் கீழ் உள்ள பொறியியற் கல்லூரிகள். | 1,353 | 784 | 233 |
| (2) அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழுள்ள பொறியியற் கல்லூரிகள். | 587 | 328 | 37 |



1984 மார்ச் 6]

கோவை ஆர். எஸ். புரம் கௌலி பிரௌன் சாலையில் பொது நூலகம் கட்ட ஒதுக்கப்பட்ட இடத்தில் திரையரங்கு கட்டும் திட்டம்.

50—வினா 11810—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகர் ஆர். எஸ். புரம் கௌலி பிரௌன் சாலையில் பொது நூலகம் கட்ட ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் திரையரங்கு நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மறைமுகமாகக் கட்டாய நன்கொடை வசூலிக்கும் பள்ளி, கல்லூரி நிருவாகங்கள் மீதான புகார்கள்.

51—வினா 11841—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளி, கல்லூரி, நிருவாகங்கள் மாணவர்களைச் சேர்க்கும் போது மறைமுகமாகக் கட்டாய நன்கொடை வசூலில் ஈடுபடுவது பற்றி அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

விடை—

அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளைப் பொறுத்தவரை இது போன்ற புகார்கள் ஏதும் வரப்பெற்றதாகத் தெரியவில்லை. சில கல்லூரி நிருவாகங்கள் மாணவர்களைச் சேர்க்கும் போது மறைமுகமாக கட்டாய நன்கொடை வசூலில் ஈடுபடுவது பற்றி அவ்வப்போது புகார்கள் வந்ததுண்டு. எனினும் விசாரணையின் முடிவில் அவை ஆதாரமற்றவை என்று தெரிய வந்தது. குறிப்பிட்ட பள்ளி கல்லூரிகளின் மீது தகுந்த ஆதாரங்களுடன் புகார்கள் வருமானால், நடைமுறையிலுள்ள விதிகளின்படி, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### அரசு தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் சேம நல நிதி கணக்குகள்.

52—வினா 11941—திரு மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு தொழில் நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களின் சேம நல நிதி கணக்குகள் 1970-ல் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அதற்கான தொகை முழுவதும் மண்டல சேம நல நிதி ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### *Constitution of Fair Rent Committee to fix fair rent for the building and sites owned by the Temples*

53. Q. 12038 Thiru P. VENKATASUBRAMANIAM: Will the Hon. the Minist r for Information and Religious Endowment be pleased to state :

(a) Whether a Fair Rent Committee has be n constituted in the Hindu R ligious and Charitable Endowment Department to fix fair rent for the buildings or the sites own d by th temple and

(b) the details of th buildings given to this Committee ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை **அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 504 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

** 504—506 ஆம பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



### நியாய விலை அங்காடியில் விலைப்பட்டியல் வைத்தல்.

54—வினா 12045—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இருக்கும் நியாய விலை அங்காடிகளில் விலைப் பட்டியல் வைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) விலைப் பட்டியல்களை வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மாநிலத்திலுள்ள எல்லா நியாய விலை அங்காடிகளிலும் விலைப் பட்டியல் வைக்கும்படி ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### போலி குடும்பக் கார்டுகளை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை.

55—வினா 12109—திரு. கு. ரமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து புது ரகக் குடும்பக் கார்டு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், புதிய ரக கார்டில் என்ன மாற்றங்கள் செய்யப்பட உள்ளன ?

(இ) போலிக் கார்டுகளை பூரணமாக ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம். ஏற்பாடுகள் செய்யப்பட்டு புதிய குடும்ப அட்டைகள் எல்லா மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) புதிய குடும்ப அட்டைகள் 'பாஸ் புக்' வடிவில் பிளாஸ்டிக் உறையுடன் அமைந்திருக்கின்றன. முன்பு நடைமுறையில் இருந்த குடும்ப கார்டுகளில் உள்ள விவரங்களுடன் புதிதாக குடும்பத்திற்கு சமையல் வாயு இணைப்பு உள்ளதா என்பதுடன் குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களுடைய பெயர், வயது, மாத வருமானம் மற்றும் உறுப்பினர்களுக்கும் குடும்பத் தலைவருடன் உள்ள உறவு போன்ற விவரங்கள் சேர்க்கப்பட்டு ஐந்தாண்டுகட்கு பயன்படும் வகையில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) வீடு வீடாகச் சென்று பொதுக் கணக்கெடுப்பு செய்து குடும்ப அட்டைகள் வழங்கியதன் காரணமாக போலி கார்டுகள் நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கணக்கெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டும் புதிய கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகையினால் போலி கார்டுகள் பற்றிய பிரச்சினை எழவில்லை.

கோடிக்கரை பறவைகள் சரணாலயத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

56—வினா 12244—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோடிக்கரை பறவைகள் சரணாலயம் அபிவிருத்தி செய்யும் திட்டம் தீட்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோடிக்கரை பறவைகள் சரணாலயத்தை விரிவுபடுத்தும் பொருட்டு வேதாரண்யேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 327.19 ஹெக்டேர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. இச் சரணாலயத்தில் உள்ள வன விலங்குகளும், பறவைகளும் தாராளமாக வசிக்கவும், நடமாடும் பொருட்டும், இச் சரணாலயத்தை ஒட்டியுள்ள சுமார் 194.23 ஹெக்டேர் நிலப்பரப்பளவுள்ள பஞ்சாயத்துக் காடுகளை 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாள் முதல் வனத்துறை எடுத்துக் கொண்டுள்ளது. 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சோடிக்கரையிலிருந்து அதிராம்பட்டினம் வரை உள்ள இடைப்பட்ட வனப்பகுதியை சரணாலயப் பகுதிகளாக அறிவிக்க செயற் குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

தாமரைப்பாக்கத்திலிருந்து சென்னைக்கு நிலத்தடி நீர் கொண்டு வரும் செயற்குறிப்பு.

57—வினா 12303—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"சென்னையை அடுத்துள்ள தாமரைப்பாக்கத்தில் இருந்து சென்னைக்கு நிலத்தடி நீர் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?



விடை—

சென்னையை அடுத்துள்ள தாமரைப் பாக்கத்தில் இருந்து சென்னைக்கு நிலத்தடி நீர் கொண்டுவரும் செயற் குறிப்புகளை அரசு பரிசீலித்து அதற்கு ஒப்புதலும் அளித்ததின் பேரில் திட்டம் முடிக்கப்பட்டு தற்பொழுது செயல்படத் துவங்கியுள்ளது.

உடல் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இட ஒதுக்கீடு.

58—வினா 12538—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1981–82 ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கீடு செய்வதற்கு அரசு பரிசீலனை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) முந்திய ஆண்டுகளில் மூன்று இடங்கள் என்றிருந்ததை 1981–82 ஆம் ஆண்டில் 33 இடங்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதில் 1981–82 ஆம் ஆண்டில் பி.யூ.சி. மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்பட்ட புதுமுக மருத்துவ வகுப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூன்று இடங்களும் அடங்கும்.

மாணவர்களிடம் சிறு சேமிப்புத் திட்டத்தை தீவிரப்படுத்தும் நடவடிக்கை.

59—வினா 12552—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாணவர்களிடம் சிறு சேமிப்புத் திட்டத்தை தீவிரப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) 1980–81 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் எத்தனை மாணவர்கள் சிறு சேமிப்பில் பங்கு கொண்டுள்ளனர் ?

விடை—

விவர அறிக்கை * பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

* 507 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1984 மார்ச் 6

சேலம், திருச்சி, நெல்லை ஆகிய நகரசபைகளை மாநகராட்சி களாக உயர்த்தும் செயற்குறிப்பு.

60—வினா 12577—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம், திருச்சி, நெல்லை ஆகிய நகரசபைகளை மாநகராட்சிகளாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) இது பற்றி அரசு இன்னும் ஒரு முடிவு எடுக்கவில்லை.

சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் விமான நிலையங்கள் அமைத்தல்.

61—வினா 12584—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் விமான நிலையங்களை அமைப்பது பற்றி மாநில அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தியது எந்த நிலையில் உள்ளது ?

விடை —

சேலத்தில் விமான நிலையம் அமைப்பது குறித்து மைய அரசிடமிருந்து சாதகமான பதில் இதுவரை பெறப்படவில்லை.

2. மூன்றாவது நிலை விமானப் போக்குவரத்து அமைப்பின் கீழ் நாட்டில் பல பாகங்களை இணைக்கும் முயற்சியில் ஏற்கனவே விமான தளங்களாக இருந்த இடங்களை விமானப்போக்குவரத்துப் பணி மூலம் இணைப்பதை குறித்து கருத்துரு ஒன்று மைய அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும், அதில் தூத்துக்குடி அருகே பொருத்தமான ஓரிடத்தில் விமானப் போக்குவரத்துப் பணியினை துவக்கலாமா என்பது இடம் பெற்றுள்ளதாகவும் மைய அரசின் சுற்றுலா மற்றும் வான் வெளிச் செல்கைத் துறைச் செயலாளர் தனது 15-4-1982 ஆம் நாளிட்ட நேர்முக கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



1984 மார்ச் 6]

கோவையில் சாராய வியாபார உரிமம் பெற்று கள்ளச் சாராயம் விற்றவர்கள் மீது நடவடிக்கை.

62—வினா 12587—திரு. கு. ரமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டத்தில் அண்மையில் போலீசார் நடத்திய சோதனையில் சில சாராய வியாபார உரிமம் பெற்றுள்ள காண்டிராக்டர்கள் விரிவான அளவில் கள்ளச் சாராயம் விற்பதைக் கண்டுபிடித்து அவர்களின் உரிமங்களை சஸ்பெண்டு செய்யப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன ?

(இ) அதே நபர்கள் தொடர்ந்து கள்ளச்சாராய வியாபாரம் நடத்தாமலிருக்க எடுக்கப்பட்ட இதர நடவடிக்கைகள் என்ன ?

விடை —

(அ) மற்றும் (ஆ) 17-12-1981-ல் நடத்திய சோதனையில் கனுவாய் கிராமத்திலுள்ள சாராயக்கடை எண். 22-ன் உரிமதாரரும், 23-11-1981-ல் நடத்திய சோதனையில் சீரநாயக்கன்பாளையம் கிராமத்திலுள்ள சாராயக்கடை எண். 35-ன் உரிமதாரரும் கள்ளச் சாராயத்தை அக்கடைகளில் விற்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் அவர்கள் மீது 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 4(1) (a) பிரிவின்படி வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவ்வழக்குகள் நடவடிக்கையிலுள்ளன.

(இ) இதைப்போன்ற கள்ளச் சாராய வியாபாரம் இந்த இடங்களிலும் மற்ற இடங்களிலும் நடைபெறாமலிருக்க மதுவிலக்கு போலீசார் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

திருவாளர் கண்ணதாசன் அவர்களின் சிறந்த கவிதைகளை மலிவு விலையில் விநியோகித்தல்.

63—வினா 12596—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசவை கவிஞராக இருந்த திரு. கண்ணதாசனின் சிறந்த கவிதைகளை தொகுத்து மலிவு விலையில் விநியோகிக்க அரசு முன்வருமா ?

விடை —

இது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

நெய்வேலியில் ராட்சத அனல் மின் நிலையம் துவக்கும் திட்டம்.

64—வினா 12680—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் ராட்சத அனல்மின் நிலையம் துவக்கலாமென தமிழக அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) மத்திய அரசின் பதில் என்ன ?

(ஈ) இதனால் கிடைக்கும் பலன் எவ்வளவு ?

விடை—

(அ) நெய்வேலியில் ராட்சத அனல் மின் நிலையம் (Super Thermal Station) அமைக்க தமிழக அரசு மைய அரசிடம் கோரவில்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

டில்லியில் நடைபெற்ற மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாடு.

65—வினா 12701—திரு. கு. ரமணி மற்றும் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 நவம்பர் மாதம் முதல் வாரத்தில் டில்லியில் நடைபெற்ற மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாநில மின் வாரியங்களின் மின் உற்பத்தி விநியோகத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்ளும் யோசனை முன் வைக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து தமிழக அரசு எடுத்த நிலை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





ஆண்டாள்புரம் கூட்டுறவுத் துறை அச்சகத் தொழிலாளர்களின் கோரிக்கை.

66—வினா 12765—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஆண்டாள்புரத்தில் உள்ள கூட்டுறவுத் துறை அச்சகத் தொழிலாளர்கள் இரண்டு வருட காலமாக சம்பள உயர்வு, பஞ்சப்படி கேட்டு போராடி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அச்சக ஊழியர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து பரிகாரம் காண அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை கூட்டுறவு அச்சக நிர்வாகத்தினரிடமும் அச்சக ஊழியர்களிடமும் அரசு மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்தி அச்சக ஊழியர்களின் கோரிக்கைகள் முடிந்த அளவு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அரிசனங்கள் தவணை முறையில் வீடுகட்ட இரண்டாவது தவணை கடன் தொகையை உடனடியாக வழங்கல்.

67—வினா 12777—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சுற்றுப்புற சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்கள் வீடுகட்ட தவணை முறையில் கடன் அனுமதிக்கப்பட்டு இரண்டாவது தவணை கடன் தொகை பெற இயலாத நிலையில் பல அரிசனங்களின் வீட்டு வேலைகள் பாதியில் நின்று விட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இரண்டாவது தவணை கடன் தொகை உடனடியாக கொடுப்பதற்கு அரசு எடுத்த முயற்சிகள் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிராம வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் ஆண்டு இலக்கான 40,000 வீடுகளை கட்டுவதற்குத் தேவையான விண்ணப்பங்களைவிட அதிக அளவு விண்ணப்பங்களை அனுமதித்ததாலும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவி பெறும் திட்டத்தின்கீழ் இரண்டாம் மற்றும்

மூன்றாம் தவணைகள் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும் முதல் தவணை பெற்ற சிலர் கடைக்கால் மட்டம் வரை கட்டி முடிக்காததினாலும் காலதாமதம் ஏற்பட்டது. அரசு தேவையான நிதியினை வழங்கி தற்போது இரண்டாவது தவணை பெற வேண்டிய ஆதி திராவிடர்களின் எண்ணிக்கை 7,249 லிருந்து 2,435-க்கு குறைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கட்டுமான நிலையிலுள்ள வீடுகளுக்குத் தேவையான நிதியினை அரசு வழங்கியுள்ளது.

**சென்னையில் பிணங்களை எரிக்கவும், புதைக்கவும் கட்டணம் வசூலிப்பதில் முறைகேடு பற்றிய புகார் மீதான நடவடிக்கை.**

68—வினா 12827—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் பிணங்களை எரிக்கவும் புதைக்கவும் கட்டணம் வசூலிப்பதில் முறைகேடு நடப்பதாக அரசுக்கு 1981 ஆம் ஆண்டு டிசம்பரில் பொது மக்களிடமிருந்து புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பொது மக்களிடமிருந்து இரண்டு புகார்கள் மாநகராட்சிக்கு வந்தன என்றும் பொறுப்பான 3 வெட்டியான்களின் உரிமங்கள் (Licences) திரும்பப் பெறப்பட்டன எனவும் தெரிகிறது.

**நகரங்களில் நியாய விலைக்கடைகள் மூலம் காய்கறி விற்பனை செய்தல்.**

69—வினா 12837—திரு. கு. ரமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரங்களில் காய்கறி விலைகள் ஏறியுள்ளதால் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதை அரசு கவனித்துள்ளதா ?

(ஆ) அதை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

(இ) நகரங்களில் உள்ள எல்லா நியாய விலைக்கடைகளிலும் காய்கறி விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னையிலுள்ள இரண்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் காய் கறிகள் விற்பனை செய்யும் திட்டத்தை அமுல்படுத்தி சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் காய்கறிகளின் விலையேற்றத்தை தடுப்பதற்கு அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 20 விற்பனைக் கூண்டுகளை அமைப்பதற்காகவும் 5 மூன்று சக்கர மோட்டார் வாகன வண்டிகளை விலைக்கு வாங்குவதற்காகவும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கும், பார்க்டவுன் கூட்டுறவு மொத்த பண்டக சாலைக்கும் ரூ. 2.10 லட்சம் அரசு நிதி உதவி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் இருந்தும் சென்னையின் சுற்று வட்டாரத்திலிருந்தும் காய்கறிகளை ஒட்டு மொத்தமாக வாங்கி பொது மக்களுக்கு நியாய விலையில் விற்கப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து பிப்ரவரி வரையில் சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள 26 கடைகளில் ரூ. 6.50 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாட்டினால் வியாபாரிகள் தங்களிடமுள்ள காய்கறிகள் கூட்டுறவு சங்கங்கள் விற்கும் விலைக்கே விற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

(இ) செயல் முறையில் உள்ள இடர்பாடுகளினால் தற்போது முடியாது. கூடுமானவரையில் சென்னையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவைகளின் கிளைகளில் வியாபாரத்திற்கான இடம் போன்ற வசதிகள் எங்கெங்கு உண்டோ அங்கங்கு நடைபெற வழிவகை செய்யப்படும். இந்தத் திட்டம் சென்னையில் திருப்திகரமாக இயங்கினால் மற்ற நகரங்களிலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தலாம்.

**திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.**

70—வினா 12850—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

[1984 மார்ச் 6

விடை—

(அ) ஆம்.

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1981 தமிழ்நாடு சட்ட மன்றம் மற்றும் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகின்றது.

சென்னை ஆவணக் காப்பகத்தில் நடைபெற்ற முறைகேடு.

71—வினா 12869—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை ஆவணக் காப்பகத்தில் முறைகேடு நடந்துள்ளதாக அரசுக்கு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் புகார் வந்துள்ளதா ?

விடை—

சென்னை ஆவணக் காப்பகத்தில் முறைகேடு நடந்துள்ளதாக டிசம்பர் திங்களில் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது என்பது அரசிற்குத் தெரியும்.

தெரு விளக்குகளுக்கு வழங்கப்படும் பல்புகள்.

72—வினா 12875—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெரு விளக்குகளுக்கு சப்ளை செய்யப்படும் பல்புகள் தரமானவைகளாக (Quality Material) இல்லாததால் அடிக்கடி பியூஸ் (Fuse) போய்விடுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) பல்புகள் தரக்குறைவும், சில சமயங்களில் ஏற்படும் அதிக மின் அழுத்தம் ஆகிய இரண்டும் தெருவிளக்குகள் அடிக்கடி பியூஸ் போய்விடுவதற்கு முக்கிய காரணங்களாகும். இவற்றைத் தடுக்க 230 வோல்ட் பல்புகளுக்கு பதிலாக தரமான 250 வோல்ட் பல்புகளையே பிரசித்தி பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் மின்வாரியம் தற்போது வாங்குகிறது.



1984 மார்ச் 6]

நெல்லை மாவட்டத்தில் புதிய கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

73—வினா 12913—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் புதிய கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

நெல்லை மாவட்டத்தில் எட்டையபுரத்தில் பாரதி நூற்பாலை என்ற பெயரில் ஒரு கூட்டுறவு நூற்பாலை நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர், ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திட்டம்.

74—வினா 12915—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றை செயல்படுத்தும் பரிசீலனை அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின் நோக்கம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்த முறையினால் மேற்பரப்பு நீரையும் நிலநீரையும் வேண்டிய அளவு பயன்படுத்தி தண்ணீரை சேமிக்க வழி காணலாம். மேற்பரப்பு நீருக்குத் தட்டுப்பாடு வரும்போதோ அல்லது கிடைக்காமல் போகும் போதோ நிலநீரைப் பயன்படுத்தி பயிரைப் பாதுகாத்து விளைச்சலை அதிகரிக்கலாம்.

ஊனமுற்ற குழந்தைகளை அகில இந்திய ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டிக்கு அரசு செலவில் அனுப்பும் செயற்குறிப்பு.

75—வினா 12917—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வென்ற ஊனமுற்ற குழந்தைகளை அகில இந்திய ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டிக்கு அரசுச் செலவில் அனுப்பும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாநில அளவில் முதலாவது மற்றும் இரண்டாவதாக வெற்றி பெற்ற ஊனமுற்ற மாணவ மாணவியர்கள் அகில இந்திய அளவில் அகமதாபாத்தில் 3-12-1981 முதல் 6-12-1981 முடிய நடத்தப் பட்ட தேசிய விளையாட்டுப் போட்டியில் அரசு செலவில் பங்கு பெற்றனர்.

### சென்னையில் குடி தண்ணீர் மீட்டர் பொருத்தும் குடிநீர் வாரிய ஊழியர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கும் செயற்குறிப்பு.

76—வினா 12919—திரு. ரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் குடிதண்ணீர் மீட்டர் பொருத்தும் குடிநீர் வாரிய ஊழியர்களுக்கு முறைகேடுகளை தடுக்கும் ஏற்பாட்டுடன் 'அடையாள அட்டை' கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

அடையாள அட்டை ஏற்கெனவே கொடுக்கப்பட்டுவிட்டது.

### சமயபுரம் மாரியம்மன் கோயில் கோபுரக்கலசம் திருடு போனது பற்றிய புகார் மீது நடவடிக்கை.

77—வினா 12920—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவிலில் கோபுரக் கலசம் திருடு போய்விட்டதாக 1981 ஆம் ஆண்டு இறுதியில் அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்,

(ஆ) ரூபாய் 2,500 மதிப்புள்ள ஒரு கலசம் களவு போனது சம்பந்தமாக துப்புத் துலக்க போலீஸ் பிரிவு ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அன்று இரவு விமான காவல் பணியாற்றிய ஆலய இரவு காவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



### வணிகவரி அதிகாரிகளின் நடவடிக்கை குறித்து கொடுக்கப்பெற்ற மனு.

78—வினா 13111—திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி சங்கம் வணிக வரி அதிகாரிகளின் நடவடிக்கை குறித்து 1-8-1980 ஆம் தேதி வருவாய்த்துறை அமைச்சரிடம் மனு கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு 1-8-1980-ம் தேதியில் வருவாய்த்துறை அமைச்சரிடம் மனு கொடுத்ததாகத் தெரியவில்லை.

ஆனால் 11-8-1980 அன்று தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி சங்கம் தமிழக முதலமைச்சரது அலுவலகத்திற்கு ஒரு மனு கொடுத்தது. அதில் எவர்சில்வர் பாத்திரங்கள் செய்யும் தொழிலாளர்களை வணிக வரித் துறையினர் சோதனை செய்து எவர்சில்வர் தகடுகள் அல்லது அதில் செய்த பாத்திரங்களின் உரிமையாளர்கள் பற்றிய தகவல் கேட்டு தொல்லை கொடுப்பதாகவும் அவ்வாறு தகவல் கொடுத்தால் எவர்சில்வர் பாத்திரம் செய்யும் வியாபாரிகள் தங்களுக்கு கூலி வேலை தரமாட்டார்களென்றும் இதைத் தவிர்க்க வேண்டிக் கொண்டனர். அம்மனுவை அரசு பரிசீலித்தது. வரி ஏய்க்கும் நோக்கத்துடன் கடைக்காரர்களுக்கும் கூலி வேலை செய்வோருக்கும் இடையே கூட்டு முயற்சி இருக்குமேயானால், தகுந்த ஆதாரம் இல்லாமல் செல்லும் போக்குவரத்தை நிறுத்தி விசாரணை செய்யும் நடவடிக்கைகளை வணிக வரிகள் துறை மேற்கொள்கிறது என்றும் வணிகவரி அதிகாரிகளின் தீவிர நடவடிக்கையைத் தவிர்க்க வேண்டுமானால் அத்தகைய பொருளின் உரிமையாளரைப் பற்றிய தகவல்கள் அடங்கியபடிவம் XXVIII ஆனது எவர்சில்வர் தகடுகளுடனோ அல்லது செய்து முடிக்கப்பெற்ற பாத்திரங்களுடனோ எடுத்துச் செல்லப் பட வேண்டும் என்றும் 30-12-1981 நாளிட்ட அரசு கடிதத்தில் அச்சங்கத்திற்கு பதில் அனுப்பப்பட்டு உள்ளது.

### திருச்செந்தூர் கோவில் அறநிலையக்குழு தலைவருக்கு பால் கமிஷன் முன்புவழக்கு நடத்த அறநிலைய துறைமூலம் பணம் ஒதுக்கீடு.

79—வினா 13120—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூர் அருள்மிகு செந்திலாண்டவர் கோவில் அறநிலையக் குழுத் தலைவருக்கு பால் கமிஷன் முன்பு வழக்கு நடத்த அறநிலையத் துறையிலிருந்து பணம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதா?

[1984 மார்ச் 6

விடை—

இந்த ஆலய அறங்காவலர் குழுவின் முன்னாள் தலைவருக்கு வழக்கு நடத்த அறநிலையத் துறையிலிருந்து பணம் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆனால் பால்கமிஷன் முன்பாக ஆலயத்தின் சார்பில் விவரங்களை எடுத்துரைக்க அமர்த்தப்பட்ட இரு வழக்குரைஞர்களுக்கு ஆகும் செலவை, இந்த ஆலயத்தின் நிதியிலிருந்து வழங்கலாமென அனுமதி அளிக்கப்பட்டது.

### திண்டுக்கல்—சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து விடல்.

80—வினா 13125—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்—சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து விட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பேருந்து எப்போது விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1-3-1982 முதல் திண்டுக்கல்—சென்னை வழித்தடத்தில் இரு விரைவுப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது.

### சென்னையில் ஈ.வெ.ரா. பெரியார் அரங்கு அமைக்கும் திட்டம்.

81—வினா 13131—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஈ. வெ. ரா. பெரியார் அரங்கு அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஈ. வெ. ரா. 95 ஆண்டுகளை நினைவுபடுத்தும் வகையில் 95 அடி உயரத்தில் நினைவுக் கோபுரம் ஒன்றை சென்னையில் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் நூற்றாண்டு விழாக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.



1984 மார்ச் 6]

### கோவை மாவட்டத் தொழிற்சாலைகளில் இ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவு படுத்துதல்.

82—வினா 13160—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவினாசி, தடாகம் சாலைப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில், இ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவுபடுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை—

கோவை மாவட்டம், அவினாசி, தடாகம் சாலைப் பகுதிகளுக்கு ஈட்டுறுதி திட்டத்தை விரிவு படுத்துவதற்குரிய செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

### தமிழகத்தில் தொழுநோயை நீக்க புதிய திட்டத்தை தீவிரப்படுத்துதல்.

83—வினா 13224—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழுநோய் நீக்க அரசு புதிய திட்டத்தை தீவிரப்படுத்த முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) எந்த மாவட்டம் முதலில் எடுத்துக் கொள்ள உத்தேசம் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) தொழு நோயாளிகளுக்கு டி.டி.எஸ். என்ற மாத்திரைகளை கொடுத்து சிகிச்சை அளிப்பதின் மூலம் நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. தற்சமயம் டி.டி.எஸ். மாத்திரை ஒரு சிலரது உடலில் தடுப்பு சக்தி குறைந்து செயலற்று நின்றுவிடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அத்தன்மை உள்ளவர்களுக்கு மாற்று சிகிச்சை முறையில் ''ரிபமைசன்'' என்ற புது மருந்து கண்டுபிடிக்கப்பட்டு சீரிய முறையில் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படுகிறது. இரண்டுக்கு மேற்பட்ட மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் மருந்தின் செயற்பட இல்லாத தன்மையை நீக்க முடிகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் தாம்பரத்தில் உள்ள அரசு தொழு நோய் கட்டுப்பாடு நிலையத்தில் 1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் ஒரு முன்னோட்ட ஆய்வுக்காக பல நோக்கு மருந்து திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனுபவத்தின் மூலம் காஞ்சிபுரத்தில் உள்ள தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்திற்கும் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மற்ற பகுதிகளுக்கும், சேலம் மாவட்டத்திலும், 1982 ஆம் ஆண்டு முடிவிற்குள் இத்திட்டம் செயல்பட இருக்கிறது. தொழுநோயை முழுவதுமாக ஒழிக்க பலநோக்கு மருந்து திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் செயலாக்கப்பட இருக்கிறது.

### பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

84—வினா 13238—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்காடு மாவட்டத்தில் மணலூர்பேட்டை அருகில் பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு பரிசீலித்ததா ?

(ஆ) ஆம் எனில், வரும் நிதி ஆண்டில் அந்த திட்டம் சேர்க்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். ஆனால் நிதி நெருக்கடியின் காரணமாக இப்பொழுது எடுத்துக்கொள்ள இயலவில்லை.

### கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம்.

85—வினா 13292—திரு தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் வேறு மாநிலத்திற்கு கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) தமிழ்நாட்டிற்கு எத்தனை சதம் ஒதுக்கப்படுகிறது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கல்பாக்கம் அணுமின் நிலையம் உற்பத்தியை இன்னும் தொடங்கவில்லை. கல்பாக்கம் அணுமின்நிலையத்தின் முதல் பிரிவு (235 மெ.வா.) முழு உற்பத்தியும் இரண்டாவது பிரிவு (235 மெ.வா.) உற்பத்தியில் 50 சதவீதமும் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் என்றும் மீதி தென் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



### மதுரை மீனாட்சி அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம். வகுப்பு தொடங்குதல்.

86—வினா 13307—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மீனாட்சி அரசினர் கலைக் கல்லூரியில், பி. காம். வகுப்பு தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்போது நடவடிக்கை எடுக்க வாய்ப்புகள் இல்லை.

### புதிய பேருந்துகள் வாங்குவதற்கு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மூலம் நிதியுதவி.

87—வினா 13316—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்கள் புதிய பேருந்துகளை வாங்குவதற்கு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் நிதி உதவி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை (31—1—1982) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 8,247.03 இலட்சம் (31—1—1982 வரை).

### புதிய குடும்ப அட்டைகள் வழங்கல்.

88—வினா 13407—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் புதிதாக ரேஷன் கார்டு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பொது கணக்கெடுப்பிற்கு பின் 1982ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன.

ஆடுதுறையிலுள்ள நிலவள வங்கியை திருவிடைமருதூருக்கு மாற்றும் செயற் குறிப்பு.

89—வினா 13479—திரு. செ. இராமலிங்கம் :- மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் உள்ள நிலவள வங்கியை திருவிடை மருதூருக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

விடை—

(ஆ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கொல்லிமலையில் சமூக வனத்திட்டத்தை செயல் படுத்துதல்.

90—வினா 13526—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலைக்கு தனி மாவட்ட வன அலுவலர் நியமித்து சமூக காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் கொண்டு வர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கொல்லிமலையில் சமூக வனத் திட்டம் செயல்படுத்தப்படும். ஆனால் கொல்லிமலைக்கு மட்டுமே தனி மாவட்ட வன அலுவலரை நியமிக்கும் கருத்து அரசுக்கு இல்லை.

கொல்லி மலையில் பிற்பட்ட மாணவ, மாணவியர்களுக்குத் தங்கும் விடுதி அமைத்தல்.

91—வினா 13540—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லி மலையில் பிற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?



விடை—

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தின் கொல்லிமலையில் பிற்பட்ட மக்களின் ஜனத்தொகையையும் பிற்பட்ட மாணவர் எண்ணிக்கையையும் கவனிக்கும்போது அங்கு பிற்பட்டோருக்காக தனி விடுதி ஒன்று அமைக்க அவசியமில்லை.

வாழவந்தி நாடு சந்தன பாறை அருகில் பெரிய நீர்த்தேக்க அணை கட்டுதல்.

92. வினா 13552—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் வாழவந்தி நாடு, சந்தனப்பாறை அருகில் பெரிய நீர்த்தேக்க அணை கட்ட நடவடிக்கை எடுக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : வாழவந்தி நாடு, சந்தனப் பாறை அருகில் கொல்லிமலையில் அணை கட்டும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், கொல்லிமலையிலிருந்து வரும் அய்யாறு ஆற்றின் குறுக்கே திருச்சி மாவட்டத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

கோவையில் நீர் நுட்பவியல் மையம் ஆரம்பிக்கும் பணி.

93—வினா 13603—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர் நுட்பவியல் மையம் ஒன்று கோவையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் என்ன ?

விடை—

ஒரு விவர அறிக்கை * அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 507-508-ம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1984 மார்ச் 6

ஈரோடு நகரில் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம்.

94—வினா 13696—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் ஈரோடு நகரில் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

பெரியார் மாவட்டம் ஈரோடு நகரில் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் எதுவும் இத்துறையைப் பொறுத்த அளவில் இல்லை.

1981இல் டில்லியில் மத்திய தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தம்.

95—வினா 13718—திரு. கு. ரமணா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேக்னசைட் பிரைவேட் லிமிடெட் கம்பெனி நிர்வாகப் பிரதிநிதி, தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தமிழக அரசு தொழிற் துறை இணைச் செயலாளர் ஆகியோர்களுக்கு மத்தியில் 5–5–1981 தேதி டில்லியில் மத்திய லேபர் கமிஷனர் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மையா ?

(ஆ) அந்த ஒப்பந்தப்படி மேக்னசைட் கம்பெனி பழைய நிர்வாகத்திடமிருந்து தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நஷ்ட ஈடு, தொடர் கிராஜுவட்டி, லீவுச் சம்பளம் கொடுக்கப்பட்டுவிட்டதா ?

விடை—

(அ) டில்லியில் மே, 1981-ல் ஏற்பட்ட இணக்கம் (understanding) தொழிற் தகராறுகள் சட்டத்தின்கீழ் ஏற்பட்ட ஒப்பந்தம் அல்ல. 1947-ம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 12 (3)-ன் கீழ் நிர்வாகப் பிரதிநிதிகளுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே மண்டல தொழிலாளர் ஆணையர் (மத்திய அரசு) முன்னிலையில் 1–6–1982 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.



1984 மார்ச் 6]

(ஆ) மேற்சொன்ன ஒப்பந்தத்தின் 3-வது ஷரத்தின்படி ஈட்டிய விடுப்புகளை சம்பளமாக்கிய தொகையும், எக்ஸ் கிரேஷியா தொகையும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு விட்டதாக மண்டல தொழிலாளர் ஆணையர் (மத்திய அரசு) தெரிவித்துள்ளார். ஒப்பந்தத்தின் 5-வது ஷரத்தின்படி பணிக்கொடை (Gratuity) அளிப்பது குறித்து பரிசீலனையில் உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் மருந்தகங்களை ஆரம்பித்து நடத்த அனுமதி வழங்கல்.

96—வினா 13743—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மருத்தகங்களை ஆரம்பித்து நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி யூனியனுக்கு உட்பட்ட திருச்சோபுரத்தில் ஒரு ஒன்றிய மருந்தகத்தை ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

தென்னாற்காடு மாவட்டத்தில் டேனிடா திட்டத்தின் கீழ் விரிவுபடுத்தப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

97—வினா 13744—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்பு ஆண்டில் (1982) தென்னார்காடு மாவட்டத்தில் எந்தெந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 'டேனிடா' (Danida) திட்டத்தின்கீழ் விரிவுபடுத்த (Up grade) எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன ?

விடை—

'டேனிடா' திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவுபடுத்த (Up grade) நிதி ஒதுக்கப்படவில்லை.

ஒரே தரமுள்ள அனைத்து திரையரங்குகளில் ஒரே சீரான நுழைவு கட்டணம் நிர்ணயித்தல்.

98—வினா 13747—திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தரம் வாரியாக சினிமா தியேட்டர்கள் பிரிக்கப்பட்டு ஒரே தரமுள்ள அனைத்து தியேட்டர்களிலும் ஒரே சீரான டிக்கட் கட்டணத்தை நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி நுழைவுக் கட்டணத்தை நிர்ணயிப்பது நடைமுறைக்கு ஒத்து வராது என கருதப்படுகிறது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்த இயக்கம்.

99—வினா 13748—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் எழுத்துச் சீர்திருத்த இயக்கம் என்ற தனி அமைப்பு நடத்தப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த அமைப்பின் மூலமாக அரசுக்குப் பரிந்துரைகள் அனுப்பப்பட்டதா?

(இ) அதன் மீது, அரசு என்ன நடவடிக்கை எடுத்தது

விடை—

(அ) தெரியாது.

(ஆ) மற்றும் (இ) : இவைகளுக்கு இடமில்லை.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம சிறு தொழில்களுக்கு கடன் வழங்கல்.

100—வினா 13793—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறுதொழில்களுக்கு கடன் வழங்க அரசு உத்திரவு இருந்தும், கூட்டுறவு அர்பன் பாங்க் மூலம் கடன் வழங்க மாநில பதிவாளர் அவர்கள் உத்திரவிட்டுள்ளது உண்மையா?



(ஆ) இதனால் சிறுதொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையா?

விடை —

(அ) மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம்தான் சிறு தொழில்களுக்கு கடன் வழங்கப்படவேண்டும் என்று அரசு உத்திரவேதும் இல்லை.

(ஆ) சிறு தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சாராயத் தொழிற்சாலை அமைத்தல்.

101—வினா 13816—திரு. இல. பலராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சாராய தொழிற்சாலை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பழனியில் பெண்கள் பல்கலைக் கழகம் நிறுவுதல்.

102—வினா 13843—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) அரசு துவக்க உத்தேசித்துள்ள பெண்கள் பல்கலைக் கழகத்தை பழனியில் நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) தொடங்க உள்ள பெண்கள் பல்கலைக் கழகத்தினை பழனியில் நிறுவ உத்தேசமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### முன்னாள் இராணுவ வீரர்களுக்கென குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

103—வினா 13883—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

" முன்னாள் இராணுவ வீரர்களுக்கென குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதா?

விடை—

இல்லை.

### மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாட போதனைக்கு பகுதி நேர ஆசிரியர்கள் நியமனம்.

104—வினா 13897—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப்பள்ளிகளில் (Vocational Course) களுக்கு பகுதி நேர ஆசிரியர்கள் தான் நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனால் மாணவர்கள் பாதிக்கப் படுவது உண்மையா?

விடை—

(அ) ஆம். அரசாணை நிலை எண் 1971, கல்வி, நாள்: 14–9–1978-ன்படி முன்னாள் இரு முனைப் பாடதிட்ட ஆசிரியர்களை தொழிற்பாட போதனைக்கு உட்படுத்தப்பட்ட இடங்கள் தவிர மற்ற இடங்களில் பகுதி நேர ஆசிரியர்களையே நியமிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

### மூலைக்கரைப்பட்டி நகரத்திற்கு கருங்குளத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் செயற் குறிப்பு.

105—வினா 13905—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) நெல்லை மாவட்டம் மூலக்கரைப்பட்டி நகரத்திற்கு கருங்குளத்திலிருந்து ஆற்று நீர் கொண்டுவரும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழ இடமில்லை.

### நகரங்களில் வீட்டு மனைகளை அரசே வாங்கி நியாயமான விலைக்கு குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வழங்கும் திட்டம்.

106—வினா 13965—திரு. கு. ரமணி : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரங்களில் வீட்டு மனைக்கான காலியிடங்களை அரசே வாங்கி நியாயமான விலைக்கு குறைந்த வருமானமுள்ள மக்களுக்கு வினியோகிக்கும் திட்டம் ஒன்று அரசு வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

(இ) எப்பொழுது முதல் அது நடைமுறைக்கு வரும்?

விடை—

(அ) நகரங்களில் வீட்டு மனைக்கான காலியிடங்களை அரசே வாங்கி நியாயமான விலைக்கு குறைந்த வருமானமுள்ள மக்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் வினியோகிக்கும் திட்டம் ஒன்றும் அரசு வகுக்கவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

### கரூரில் வீட்டு வசதி திட்டம்.

107—வினா 13983—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூரில் வீட்டுவசதி திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரில், கரூர் புறநகர் திட்டம் பகுதி ஒன்றின்கீழ் 1,410 வீட்டுமனைகள் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கரூர் புறநகர்த் திட்டம் பகுதி இரண்டின் கீழ் 1,450 வீட்டு மனைகள் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கரூர் நகராட்சியின் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டங்களின் கீழ் கொளந்தா கவுண்டனூரில் குடியிருப்பு மனைகள் 213-ம் தொழிலாளர்களுக்கான மனைகள் 57-ம், அபிவிருத்தி செய்வதாக உள்ளது. அருகம்பாளையம் கிராமத்தில் உயர்வருவாய் குடியிருப்பு மனைகள் 22-ம், குறைந்த வருவாய் மனைகள் 32-ம் மற்றும் நலிவடைந்தோர் குடியிருப்பு மனைகள் 32-ம் அபிவிருத்தி செய்வதாக உள்ளது. இது தவிர அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் இரண்டின் கீழ் 18 குடியிருப்புகள் கட்டுவது சம்பந்தமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

### சோளிங்கர் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்தல்.

108—வினா 14061—திரு. சி. கோபால் : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கர் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கர் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க கோரிக்கை ஏதும் அரசு மட்டத்தில் பெறப்படவில்லை.



### சோளிங்கர் நகரில் துணைக் கருவூலம் அமைத்தல்.

109—வினா 14066—திரு. சி. கோபால் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கர் நகரில் துணைக் கருவூலம் ஒன்று அமைக்கக் கோரி பொது மக்களிடம் இருந்து முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கர் நகரில் துணைக் கருவூலம் அமைக்கக் கோரி பொது மக்களிடம் இருந்து முறையீடு ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

### வத்தலகுண்டு அரசு உயர்நிலைப்பள்ளிக்கு தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் பெயர் வைக்கும் செயற் குறிப்பு.

110—வினா 14069—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டில் இருக்கும், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு, தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் பெயர் வைக்க, அரசு ஏற்பாடு செய்யுமா ?

விடை—

நிலக்கோட்டைத் தொகுதியிலுள்ள வத்தலக்குண்டு அரசு உயர் நிலைப்பள்ளிக்கு, தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் பெயரினை வைக்க, இதுவரை எவ்விதமான கோரிக்கையும் பெறப்படவில்லை. அப்பள்ளியின் வளர்ச்சிக் குழு அல்லது ஊர் பொது மக்களின் வாயிலாகக் கோரிக்கைகள் பெறப்படுமானால், அது பற்றிய பரிசீலனைக்குப் பின் முடிவெடுக்கலாம்.

[1984 மார்ச் 6

சில்லா பத்திரிகையாளர்களுக்கும் பாலேகர் நீதி மன்றப் பரிந்துரைகளை அமல்படுத்தும் நடவடிக்கை.

111—வினா 14151—திரு. எம். அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலேகர் கமிஷன் பரிந்துரைகள் எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பாலேகர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை செயற்படுத்துவது குறித்து பத்திரிக்கை நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகத் தரப்புப் பிரதிநிதிகளின் கூட்டமொன்றினை தொழிலாளர் நல அமைச்சர் 12–3–1981 அன்று கூட்டி வலியுறுத்தினார். இதனை அடுத்து, எல்லா பத்திரிக்கை நிறுவனங்களுக்கும் பாலேகர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்தும்படி தொழிலாளர் நலத்துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து அறிக்கை அனுப்பி வேண்டுகோள் விடப்பட்டது. இது தவிர, சென்னை மாநகரிலும் மற்றும், மாநிலத்திலுள்ள பிற இடங்களிலும், தொழிலாளர் துறை ஆய்வர்கள் ஆய்வு செய்து, பத்திரிக்கை நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு இப்பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு ஆணைகள் வழங்கியும் வருகின்றனர்.

திருத்துறைப்பூண்டியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைத்தல்

112—வினா 14170—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தனியாக அமைப்பதற்கு பெற்றோர் சங்கத்திலிருந்து ரூ. 10,000 கட்டியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தப் பள்ளி எப்பொழுது துவக்கப்படும் ?



1984 மார்ச் 6]

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளை தனியே பிரித்து 6 முதல் 10 ஆம் வகுப்புக்களைக் கொண்ட ஓர் புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளியை துவக்கக் கோரும் கருத்துரு காலதாமதமாக பெறப்பட்டதால் இவ்வருடம் அக்கோரிக்கையை பரிசீலிக்க முடியவில்லை.

சுருளி மலையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம்.

113—வினா 14173—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பம தொகுதியிலுள்ள சுருளிமலையில் மூலிகைப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணியக் கழகத்தில் லெவி நெல் கொள்முதல் செய்ய கலைத்துறைப் பட்டதாரிகள் நியமனம்.

114—வினா 14220—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் லெவி நெல் கொள்முதல் செய்வதற்கு தற்காலிகமாக நியமனம் செய்யப்படும் பட்டதாரிகள் அறிவியல் பட்டதாரிகளாக மட்டும் ஏன் அரசு நியமனம் செய்கிறது ?

(ஆ) கலைத்துறைப் பட்டதாரிகளை நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(இ) இல்லை யெனில் என்ன காரணம் ?

[1984 மார்ச் 6

விடை—

(அ) நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள் முதல் நிலையங்களிலும் மற்றும் லெவி வசூலிக்கும் நிலையங் களிலும் உதவித்தர கட்டுப்பாடு ஆய்வாளராக நியமிக்கப்படு பவர்கள் கழகத்தின் பணி விதிகளின்படி விவசாய பட்டதாரி யாகவும் அல்லது தாவரவியல், ரசாயனம் அல்லது விலங்கியலை முக்கிய பாடமாகவும்; இதில் குறைந்த பட்சம் ஏதாவது இரண்டு பாடங்களை துணைப் பாடமாகவும் எடுத்துப் படித்துத் தேறிய அறிவியல் பட்டதாரியாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேலே கூறிய பட்டதாரிகளை மட்டுமே நுகர்பொருள் வாணிபக் கழகம் நியமனம் செய்கிறது.

(ஆ) இல்லை.

(இ) நேரடிக் கொள்முதல் நிலையங்களிலும் மற்றும் லெவி வசூலிக்கும் நிலையங்களிலும் உள்ள பணியினை மேலே கூறிய பட்டதாரிகளாலேயே செவ்வனே செய்ய முடியும் என்பதால் ஏனைய பட்டதாரிகளை நியமிப்பது உகந்தது அல்ல என்று நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இரவு நேரங்களில் போக்குவரத்து வாகனங்களின் முன் விளக்கை அணைக்காமல் செல்பவர்கள் மீது நடவடிக்கை.

115—வினா 14234—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரவு நேரங்களில் போக்குவரத்து வாகனங்கள் (குறிப் பாக லாரிகள்) எதிரே வரும் வண்டிகளுக்கு முன் விளக்கை (Head light) அணைக்காமல் வருவதால் விபத்து ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அப்படிச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஆம். இரவு நேரங்களில் போக்கு வரத்து வண்டிகள் முன் விளக்கை அணைக்காமல் வருவது தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் விதிகளின்படி குற்றமாகும். இத் தகைய குற்றங்கள் தொடர்பாகக் காவல்துறை நடவடிக்கை எடுக்கிறது.



1984 மார்ச் 6]

எஸ். எஸ். எல். சி. தேர்வில் அதிக மார்க் வாங்கும் மாணவர்களுக்கு பரிசுத் திட்டம்.

116—வினா 14241—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தமிழ் நாட்டில் அதிக மார்க் வாங்கும் மாணவர்களுக்கு பரிசுத் திட்டம் ஏற்படுத்தும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி., ஏ.ஐ.எஸ்.எல்.சி. மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் அதிக மதிப் பெண்கள் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு தங்க, வெள்ளிப் பதக்கங்கள் பரிசுகளாக அளிக்கப்படுகின்றன.

எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் அதிக மதிப் பெண்கள் பெறும் (i) முதல் இரு ஆதி திராவிட மாணவ மாணவியர்க்கு மாவட்ட வாரியாக ஆதி திராவிட நலத்துறையினரால் பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது. (ii) 60 சதவீதம் மற்றும் அதற்கு மேல் மதிப்பெண்கள் வாங்கும் ஒவ்வொரு ஆதி திராவிட/பழங் குடி/கிருத்துவத்திற்கு மதம் மாறிய மாணவ/மாணவிக்கும் ரூ. 300 தகுதி மானியமாக வழங்கப்படுகிறது. (iii) மாநிலத்திலேயே முதலாவதாக தேறும் ஒவ்வொரு பிற்பட்டோர் மற்றும் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச்சார்ந்த மாணவ மாணவிக்கும் (ஒரு மாணவர் + ஒரு மாணவிக்கு) தலா ரூ. 500 பரிசுத் தொகையாக பிற்பட்டோர் நலத் துறையினரால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

அரியலூர் புறச்சாலை அமைக்கும் திட்டம்.

117—வினா 14254—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அரியலூர் புறச்சாலை (By pass road) அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

அரியலூர் புறச்சாலை அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1984 மார்ச் 6

அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட வழங்கும் கடன் தொகையை மாவட்ட வாரியாக அதிகரிக்கும் செயற்குறிப்பு.

118—வினா 14256—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட கடன் வழங்கப்படும் தொகை மாவட்ட வாரியாக மிகவும் குறைவாகவே ஒதுக்கீடு செய்யப்படுவதால் அதனை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

கொண்டாரெட்டி பிரச்சினையில் உயர்நீதி மன்றத் தீர்ப்பின்மீது அரசு மேல் நடவடிக்கை.

119—வினா 14268—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொண்டாரெட்டி பிரச்சினையில் உயர்நீதி மன்றம் சமீபத்தில் வழங்கிய தீர்ப்பின் மீது அரசு மேல் நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : அரசின் ஆய்விலுள்ளது.

எல்லா மாவட்டங்களிலும் தேசிய மாணவர்படை பயிற்சி முகாம் நடத்துதல்.

120—வினா 14274—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசிய மாணவர் பயிற்சிப் படையினர் நடத்தும் பயிற்சி முகாம் எல்லா மாவட்டங்களிலும் நடத்த அரசு ஆவன செய்யுமா?



1984 மார்ச் 6]

விடை—

தேசிய மாணவர் படையினர் பயிற்சி முகாமை நடத்துவதற்குமுன் மாணவர் படையினருக்குத் தேவையான மருத்துவ வசதி, செய்தித் தொடர்பு வசதி, காய்கறிகள், இறைச்சி, சமையல் எண்ணெய், விறகு, தண்ணீர் வசதி ஆகியவைகளைக் கருத்திற்கொண்டு முகாம் நடத்துவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. எனவே எப்பொழுதும் மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி முகாம் நடத்துவதென்பது இயலாததொன்றாகும். இருந்தபோதிலும், மேற்கூறப்பட்ட வசதிகள் நிறைந்துள்ள தமிழ்நாடு, பாண்டிச்சேரியைச் சேர்ந்த மாவட்டங்களில் உள்ள அநேக இடங்களில் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

" நான் குடித்துக் கொண்டே இருப்பேன் " / திரைப்படத்திற்கு வரி விலக்கு.

121—வினா 14317—திரு. இரா. தாமரைக்கனி : மற்றும் திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மது கொடுமைகளை விளக்கி, மதுவிலக்குப் பிரசாரப் படமாக " நான் குடித்துக்கொண்டே இருப்பேன் " என்ற திரைப்படம் வெளி வந்து இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) இக்கேள்வியில் சம்பந்தப்பட்ட திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்களிக்கும் கோரிக்கையினை அரசு ஏற்கனவே பரிசீலித்து, கோரிக்கையை ஏற்க இயலவில்லை என்று தெரிவித்து விட்டது.

சென்னை மாநகராட்சியால் ஆண்டுதோறும் நடத்தப்படும் கொழு கொழு குழந்தைகளுக்கான போட்டிகள்.

122—வினா 14324—திரு. எம். சின்னசாமி [மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொழு கொழு குழந்தைகளுக்கான போட்டியினை சென்னை மாநகராட்சி ஆண்டுதோறும் நடத்தி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கட்கும் அத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து அரசின் ஆணை எதுவும் கிடையாது. மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் விரும்பினால் நடத்தலாம்.

**Installation of cat scanor in the General Hospital.**

123—Q. 14330—Thiru P. VENKATASUBRAMANIMA : Will the Hon. the Minister for Health, be pleased to state—

(a) Whether a cat scanor has been installed in the General Hospital ; and

(b) If so, the details thereof ?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) தலையில் ஏற்படும் காயம் மற்றும் மூளைப்பகுதியில் ஏற்படும் வியாதிகளைக் கண்டறியக் கூடிய ஸ்கானர் கருவி 1980-ம் ஆண்டு நவம்பர் மாதம் ரூ. 40 லட்சம் செலவில் வாங்கப்பட்டு சென்னை அரசு பொது மருத்துவமனையில் நரம்பியல் பிரிவில் வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**சென்னையில் பயணிகளிடம் முறைகேடாக நடந்துகொள்ளும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை.**

124—வினா 14334—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் பயணிகளிடம் அதிக வாடகை கேட்டும் (மீட்டருக்கு அதிகப்படியாக) பயணிகளிடம் சரியாக நடந்து கொள்ளாமல் இருப்பது பற்றிம் புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) தவறு செய்யும் ஓட்டுநர்களை விசாரித்து குற்றம் நிரூபிக்கப்பட்ட பின் அவர்களுடைய உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன. இம்மாதிரி திரும்பத் திரும்ப தவறுகள் செய்வோரின் ஓட்டுநர் உரிமங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**இந்துசமய நிறுவனங்கள் பற்றி அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவின் முடிவுகள்.**

125—வினா 14344—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்து சமய நிறுவனங்களைப் பொறுத்து எழும் பொதுப் பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துக்கூற அமைக்கப்பட்டுள்ள " உயர்மட்ட ஆலோசனைக் குழு " இதுவரை என்ன முடிவுகள் எடுத்துள்ளது ?

விடை :—

விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன்கள்.**

126—வினா 14434—திருவாளர்கள் மு. அம்பிகாபதி மற்றும் திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன்களை கட்ட இயலாதவர்களில் சொந்த நிலம் உள்ளவர்கட்கு நிலவள வங்கி மூலமாக கடன் வழங்கி கூட்டுறவு வங்கி கடன்களை தீர்க்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை :—

இல்லை.

---

* 508-509ம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பெற்றுள்ளது

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் லெவி மூலம் கொள்முதல் செய்த அரிசி மற்றும் நெல்.

127. வினா 14465—திரு. பொ. உத்திராபதி மற்றும் திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் முடிய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் லெவி மூலம் கொள்முதல் செய்த அரிசி மற்றும் நெல் எவ்வளவு ?

(ஆ) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்தது எவ்வளவு ?

(இ) ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் தனியார் வியாபாரிகளிடமிருந்து வாங்கிய அரிசி எவ்வளவு ? நெல் எவ்வளவு ?

விடை :—

(அ) 1981 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 55,032 டன்கள் அரிசியையும், 301,580 டன்கள் நெல்லையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் லெவி மூலம் கொள்முதல் செய்தது.

(ஆ) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் 58,930 டன்கள் நெல் வாங்கப்பட்டது.

(இ) ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் 1981 ஆம் ஆண்டு தனியார் வியாபாரிகளிடமிருந்து 8,023 டன் அரிசி வாங்கப்பட்டது.

*Draft Bill according recognition to Trade Unions.*

128. Q. 14469—Thiru P. VENKATASUBRAMANIAM : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) Whether any draft bill according recognition to Trade Unions was placed before the Labour Advisory Board during 1981-82 ; and

(*b*) When the Bill would be introduced in the Assembly ?

Answer (*a*) and (*b*) :

One of the subjects discussed at the 40th meeting of State Labour Advisory Board held at Madurai on 17th May 1982 was "Uniform policy for recognition of Unions in private, co-operative and public sector undertakings". The members were informed that the State Governments were already considering legislative measures to



provide for statutory backing to the recognition of representative unions and that this formate of legislation would be placed before the Committee on Labour Laws and with the recommendation of that committee, it would be placed before the State Labour Advisory Board. While the finalisation of the Bill with reference to these discussions was under consideration of the Government, the National Tripartie Labour Conference convened by the Government of India recommended further amendments to the Industrial Disputes Act and the Trade Union Act, including amendments on the procedure for recognition of Trade Unions, etc., As the Government of India are examining the recommendations of the National Tripartite Labour Conference, the State Government have decided to defer their proposal to amend the Act for the present.

(அ) மற்றும் (ஆ) : 17—5—1982 அன்று மதுரையில் நடைபெற்ற மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் 40-வது கூட்டத்தில் தனியார், கூட்டுறவு மற்றும் பொதுத் துறைகளில் உள்ள தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதற்கான சட்டமியற்றுதல் பற்றியும் விவாதிக்கப்பட்டது. தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்க வகை செய்யத் தேவையான சட்டமியற்றும் செயற் குறிப்பு ஏற்கனவே மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும் இதற்கான சட்ட முன்வடிவு தொழிலாளர் நலச் சட்டங்களுக்கான குழுவின் முன் வைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகளுடன், மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படும் என்றும் தொழிலாளர் துறை ஆணையர் குழு உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். இவ்விவாதங்களின் அடிப்படையில் அச்சட்ட முன் வடிவினை திருத்தியமைத்து இறுதியாக்கும் வேளையில், மைய அரசினால் கூட்டப்பட்ட தேசிய முத்தரப்புக் குழு, தொழிற் சங்கங்களை அங்கீகரிக்க வழி முறைகள் உட்பட மேலும் சில திருத்தங்களை தொழிற் தகராறுகள் சட்டத்திலும், தொழிற் சங்கச் சட்டத்திலும் செய்யப் பரிந்துரைத்தது. மைய அரசு தேசிய முத்தரப்புக் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து வருவதால், தொழில் தகராறுகள் சட்டத்தைத் திருத்தும் கருத்துருவை தற்போதைக்கு நிறுத்தி வைக்கலாம் என்று மாநில அரசு முடிவு செய்துள்ளது.

கீழ்மேட்டூர் மின் திட்டத்தில் காண்டிராக்ட் எடுத்துள்ள எச்.சி. கம்பெனிக்கு வழங்கப்பட்ட முன்பணம்.

129. வினா 14520—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் மேட்டூர் மின்திட்டத்தில் காண்டிராக்ட் எடுத்துள்ள எச்.சி.சி. கம்பெனிக்கு மின் வாரியம் ஒரு கோடியே எண்பது லட்ச ரூபாய் முன் பணமாகக் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவ்வளவு பெரும் தொகை முன் பணம் கொடுக்கப்படுவதற்கான அவசியமென்ன ?

(இ) மற்றுமுள்ள காண்டிராக்டர்களுக்கும் முன் பணம் கொடுத்ததுண்டா ?

விடை —

(அ) கீழ் மேட்டூர் திட்டத்திற்காக எச். சி. சி. கம்பெனிக்கு முன் பணம் ரூ. 145 லட்சம் கொடுக்க மின் வாரியம் ஒப்புக் கொண்டுள்ளது.

(ஆ) ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி கட்டுமான வேலைகளுக்கு இயந்திரங்களைத் தருவிக்கவும் வேலை நடக்கும் இடங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்லவும் குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை முடிக்கவும் முன் பணம் கொடுக்கப்படுகிறது.

(இ) ஆம்.

### ஈரோடு நகரில் இ. எஸ். ஐ. சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள பகுதிகள்.

130. வினா 14531 — திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம் ஈரோடு நகரத்தில் இ.எஸ்.ஐ. (E. S. I.) சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் யாவை ?

(ஆ) என்னென்ன தொழில்களில் எவ்வளவு தொழிலாளர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

(இ) எண்ணெய் மில்கள், கேலண்டரிங் மில்களில் உள்ள தொழிலாளர்களிடம் இ.எஸ்.ஐ. சட்டப்படி பணம் பிடித்து வந்தும் நிர்வாகம் அதற்கான நம்பர் கார்டு கொடுக்காததால் பயன்பெற முடியாமல் இருப்பது உண்மையா ?

விடை —

(அ) பெரியார் மாவட்டத்தில் ஈரோடு தாலுகாவில் உள்ள வருவாய் கிராமங்களான ஈரோடு சூரம்பட்டி, பெரிய சேமூர், பிராமண பெரிய அக்ரஹாரம், புஞ்சைலக்கபுரம் முதலிய பகுதிகளில் இ.எஸ்.ஐ. சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) வினாவில் குறிப்பிட்டுள்ளது போல் இதுவரை புகார் ஏதுமில்லை.

---

* 510-516 ஆம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



### திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கேரளாவிற்கு கால்நடைகள் கடத்தல்.

131. வினா 14711 — திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கேரளாவிற்கு அடிமாட்டிற்கு வாரந்தோறும் பல ஆயிரக்கணக்கான மாடுகள் அனுப்பப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்று வட்டாரத்திலிருந்து விவசாயிகளாலும் வியாபாரிகளாலும் சந்தைக்கு கொண்டு வரப்படுகிற மாடுகள் வியாபாரரீதியில் வாங்கப்பட்டு, செங்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் வழியாக கேரளாவுக்கு அனுப்பப்படுவது உண்மையே. இந்தச் சந்தை பல காலமாகக் கூட்டப்படுவதுடன் இங்கு கால்நடை விற்பனையும் வெகு காலமாக நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து அடிப்பதற்காக (Slaughter) 1981—82 ஆம் ஆண்டு கேரளாவுக்கு அனுப்பப்பட்ட கால் நடைகள் விவரம் :—

| | செங்கோட்டை வழியாக. | நாகர்கோயிலில் உள்ள களியக்காவிளை சோதனைச் சாவடி வழியாக. |
|---|---|---|
| 1. நாட்டினம் | 1,17,373 | 88,705 |
| 2. கலப்பினம் .. .. | .. | 406 |
| 3. எருமையினம் .. .. | 33,737 | 13,176 |
| மொத்தம் | 1,51,110 | 1,02,287 |

[1984 மார்ச் 6

நீலகிரி மாவட்ட நியாய விலைக்கடைகளில் விநியோகிக்கும் அரிசியின் அளவை உயர்த்தக் கோரிக்கை.

132—வினா 14740— திரு. சே. உச்சி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

நீலகிரி மாவட்டத்தில் நியாய விலைக்கடைகளில் விநியோகிக்கும் அரிசியின் அளவை உயர்த்த வேண்டுமென்ற பொதுமக்களின் வேண்டுகோளை நிறைவேற்ற அரசிற்கு எண்ணம் உண்டா ?

விடை —

நியாயவிலைக் கடைகளில் விநியோகிக்கும் அரிசியின் அளவை உயர்த்த வேண்டுமென்று நீலகிரி மாவட்ட பொது மக்களிடமிருந்து கோரிக்கை எதுவும் வரவில்லை. மேலும் அரிசியின் அளவை உயர்த்த இப்போது சாத்தியக்கூறு இல்லை.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன ஏரிகளை அகலப்படுத்தி ஆழப்படுத்தும் திட்டம்.

133—வினா 14779—திரு. கு. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன ஏரிகளை அகலப்படுத்தவும், ஆழப்படுத்தவும், திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஏரிகள் 1982—83 இல் எடுத்துக் கொள்ளப்படும் ?

(இ) அதற்காகும் மொத்தச் செலவு எவ்வளவு ?

விடை —

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன ஏரிகளை அகலப்படுத்தவும், ஆழப்படுத்துவதற்குமான ஒருங்கிணைந்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.



1984 மார்ச் 6]

கோவில்பட்டி-சென்னைக்கு விடப்படும் திருவள்ளுவர் விரைவுப் பேருந்து.

134—வினா 14795—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கு விடப்பட்டிருந்த திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில் காரணம் யாது ?

விடை —

(அ) இவ்வழித்தடம் நிறுத்தப்படவில்லை. தூத்துக்குடி வரை நீட்டிக்கப்பெற்று செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

இருகூர் பேரூராட்சியிலுள்ள கிணற்றிற்கு மோட்டார் பொருத்தி குழாய் மூலம் நீர்வழங்கல்.

135—வினா 14826—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் சூலூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இருகூர் பேரூராட்சியில் உள்ள கிணற்றிற்கு மோட்டார் பொருத்தி குழாய் மூலம் நீர் வழங்கப்படுகிறதா ?

(ஆ) கிணற்றருகில் ஒரு தண்ணீர் தொட்டி கட்டி நீர் விநியோகிக்க பொது மக்கள் ரூ. 10,000 தந்ததை பயன்படுத்தி நீர் விநியோகம் நடக்கிறதா ?

விடை —

(அ) மற்றும் (ஆ): இருகூர் பேரூராட்சியில் உள்ள கிணற்றிற்கு மோட்டார் பொருத்தி குழாய் மூலம் 15—2—1982 முதல் குடிநீர் வழங்கப்படுகிறது. இதற்கென பொது மக்கள் வழங்கிய ரூ. 10,000-ம் இத் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 6

### பொள்ளாச்சி தாலுக்காவில் தோல் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைத்தல்.

136—வினா 14827—திரு. கு. ரமணி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகாவில் தோலினால் செய்யப்படும் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்த விவரங்கள் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### வீராணம் திட்டத்தில் போடப்பட்டுள்ள சாலையை சென்னை திருச்சிக்கு மாற்று வழிப்பாதையாக அமைத்தல்.

137—வினா 14843—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வீராணம் திட்டத்தில் போடப்பட்டுள்ள சாலையை சென்னையிலிருந்து திருச்சிக்கு செல்லும் மாற்றுவழிப்பாதையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

வீராணம் திட்டத்தில் போடப்பட்ட சாலையை சென்னையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் மாற்று வழிப் பாதையாக அமைக்க இயலாது.

### சிவந்திபுரம் ஊராட்சி பகுதியில் விடப்பட்டுள்ள கல்குவாரி

138—வினா 14895—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் சிவந்திபுரம் ஊராட்சி பகுதியில் கல்குவாரி ஏலம் விடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.



1984 மார்ச் 6]

### வத்தப்பிள்ளையூரிலுள்ள தடுப்பு அணையை பழுதுபார்க்கும் நடவடிக்கை.

139—வினா 14896—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குளித்தலை தாலுக்கா, நாதனூர் கிராமத்தில் உள்ள வத்தப்பிள்ளையூர் Check Dam 1977-ம் ஆண்டு புயல் வெள்ளத்தின் போது பழுதாகியுள்ளதா ?

(ஆ) இதைப் பழுது பார்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை —

(அ) குளித்தலை தாலுக்கா நாதனூர் கிராமத்தில் உள்ள வத்தப்பிள்ளையூரில் Ch ck Dam இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### திரு. வி. க. அவர்களின் நூற்றாண்டு விழா

140—வினா 14911—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட அரசு திட்டமிட்டுள்ளதா ?

விடை —

28-8-1982 மற்றும் 29-8-1982 ஆகிய நாட்களில் தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### மரங்களின் மகசூல்களை அனுபவித்துவரும் தனியார்களுக்கு 2-சி பட்டா உரிமை வழங்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை.

141—வினா 14957—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பலன்தரும் மரங்களின் மகசூல்களை அனுபவிக்கும் 2-சி பட்டா உரிமை வழங்கப்பட்டுள்ள தனியார்கள் மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் அரசுக்கு வரும் வருவாய் எவ்வளவு ?

[1984 மார்ச் 6

விடை —

(அ) தமிழகத்தில் பலன்தரும் மரங்களின் மகசூல்களைத் தனியார்கள் அனுபவிக்கும் 2-சி பட்டா உரிமை வழங்கப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கை 18,44,664.

(ஆ) அதன் மூலம் அரசுக்கு வரும் வருவாய் ரூ. 23,63,657.82.

தாழையூத்து கிராமத்திலுள்ள நரிக்கல்பட்டி ஊராட்சி அலுவலகம்.

142 —வினா 15016— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நரிக்கல்பட்டி ஊராட்சியின் அலுவலகம் அவ்வூரிலிருந்து 7 மைல்களுக்கு அப்பாலுள்ள தாழையூத்து கிராமத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதை மாற்றி அவ்வலுவலகம் நரிக்கல்பட்டியிலேயே செயல்பட வேண்டும் என்று கோரி அவ்வூர் மக்களிடமிருந்து விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) நரிக்கல்பட்டி தனி ஊராட்சி அல்ல ; ஆகவே இக் கேள்விக்கு இடமில்லை.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

மைய அரசு பணிகளில் பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்தல்.

143 —வினா 15202 —திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மைய அரசுப் பணிகளில் பின்தங்கிய வகுப்பினர்க்கு ஒதுக்கீடு செய்யக் கோரி மைய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா ?

விடை —

இல்லை.



1984 மார்ச் 6]

சொத்து வரியை அதிகப்படுத்துதல்.

144 —வினா 15245 —திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகராட்சி இவ்வாண்டு (1982-83) சொத்து வரியை அதிகப்படுத்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனால் வருவாய் எவ்வளவு அதிகம் கிடைக்கும் ?

விடை —

(அ) ஐந்து ஆண்டுக்கொருமுறை நடத்தும் பொது ஆய்வு முறையிலோ அல்லது வரி வீதத்தை உயர்த்தியோ இவ்வாண்டு வரி உயர்வு எதுவும் செய்யவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

சாரணர் பயிற்சியில் சேரும் ஏழை மாணவர்களுக்கு உதவி.

145 —வினா 15247 —திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாடு அரசு சாரணர் பயிற்சியில் சேரும் ஏழை மாணவர்களுக்கு உதவி செய்ய உத்தரவிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) 1981-82-ல் 10,000 ஏழை சாரண சாரணியர்களுக்கு இலவசமாக சீருடை தைத்து வழங்க ரூ. 5 லட்சம் மானியமாக அரசு அளித்துள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் ஆர்ஜிதம் செய்யப்படும் காலி இடங்கள்.

146—வினா 15248—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசு நகரங்களில் உள்ள காலி இடங்களை தமிழ் நாடு நகர்ப்புற உச்சவரம்பு சட்டத்தின் கீழ் ஆர்ஜிதம் செய்ய முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) முதல் கட்டமாக எடுத்துக் கொண்ட நகரங்கள் எவை ? எவை ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ)— 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புமற்றும் (முறைப்படுத்தல்) சட்டம், இம் மாநிலத்தில் 3-8-1976 முதற்கொண்டு (1) சென்னை, (2) மதுரை, (3) கோயம்புத்தூர், (4) திருச்சிராப்பள்ளி, (5) சேலம், (6) திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சட்டத்தின் பிரிவுகள் 9—11-ன் படி, உச்சவரம்புக்கு மிகையாக உள்ள நிலத்தை நகர்ப்புற நில உடமையாளர்களிடமிருந்து கையகப்படுத்தப்படும். நகர்ப்புற கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட நபரோ, ஒரு குடும்பமோ அல்லது ஒரு தொழில் நிறுவனமோ கீழ்க்கண்ட உச்சவரம்புக்குட்பட்டு வைத்து வர அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு சட்டம் 24/78.

| நகர்ப்புற கூட்டுப் பகுதி. | | வகைப்பாடு. | தனிப்பட்ட நபர். | ஒரு குடும்பம். | தொழில் நிறுவனம். |
|---|---|---|---|---|---|
| | | | (சதுர மீட்டர்கள்.) | | |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| சென்னை | .. | I | 500 | 2,000 | 2,000 |
| மதுரை—<br>கோயம்புத்தூர்<br>திருச்சிராப்பள்ளி.<br>சேலம். | } | II | 1,500 | 3,000 | 3,000 |
| திருநெல்வேலி | .. | III | 2,000 | 4,000 | 4,000 |

முதல் கட்டமாக எடுத்துக் கொண்டுள்ள நகரங்கள் என்ற பாகுபாடு இல்லை. ஆனால், மேற்கண்ட ஆறு நகரங்களில் ஏககாலத்தில் மேற்கண்ட சட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது



நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்.

147—வினா 15252—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-82-ல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷன் நிர்ணய இலக்குக்கு மேல் மின் உற்பத்தி செய்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தமிழ் நாடு மின்வாரியம் இதை பின்பற்ற வேண்டுமென அரசு அறிவுறுத்தியுள்ளதா ?

விடை—

(அ) அரசு அறியும்.

(ஆ) ஆம்.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் மூலம் ஏற்பட்ட சேதம்.

148—வினா 15329—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் 1982-ல் தீ விபத்தின் மூலம் ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

(ஆ) விபத்திற்கான காரணம் என்ன ?

(இ) அதனை போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 1982-ல் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தீ விபத்து ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

முருகமலையில் சிறு சிமெண்ட் ஆலை தொடங்கும் திட்டம்

149—வினா 15353—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மதுரை மாவட்டம் வத்தலகுண்டு அருகே உள்ள முருகமலையில் முதல்தரமான சுண்ணாம்புக்கல் கிடைப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அப்பகுதியில் ஒரு சிமெண்ட் ஆலையைத் தொடங்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பகுதியில் மிகக் குறைந்த அளவே சுண்ணாம்புக் கல் காணப்படுவதால் இதனை ஆதாரமாகக் கொண்டு சிறு சிமெண்ட் ஆலை அமைக்க இயலாது.

**1981 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்பெற்ற அரிசி.**

150—வினா 15435—திரு. பொ. உத்திராபதி : மற்றும் திரு. டுசா. அழகர்சாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1981 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அரிசி வாங்கியதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு அரிசி வாங்கப்பட்டது ?

(இ) அதன் கொள்முதல் விலை டன்னுக்கு எவ்வளவு ?

(ஈ) ரயில் மூலமோ, லாரிகள் மூலமோ கொண்டு வந்த வாடகை செலவு உள்பட அடக்க விலை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) (இ) மற்றும் (ஈ) : ஒரிசா மாநிலத்தில் டன் ரூபாய் 2,300 என்ற விலையில் 2,169 டன்கள் வாங்கப்பட்டன. அதன் அடக்க விலை டன்னிற்கு ரூபாய் 2,600, மத்தியப் பிரதேசத்தில் டன் ரூபாய் 2,300 என்ற விலையில் 2,350 டன்கள் வாங்கப் பட்டன. அதன் அடக்க விலை டன்னிற்கு ரூபாய் 2,600 ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து டன் ரூபாய் 2,242 என்ற விலையில் 77,541 டன்கள் வாங்கப்பட்டன. அதன் அடக்க விலை டன்னிற்கு ரூபாய் 2,542.





**வாடிப்பட்டியருகில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் திட்டம்.**

151—வினா 15438—திரு. ஏ. சந்திரசேகரன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சோழவந்தான் தொகுதி வாடிப்பட்டி அருகாமையில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**நிலத்தடி நீர் ஆராய்ச்சி மூலம் ஆறுகள் கண்டுபிடிப்பு.**

152—வினா 15440—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நிலத்தடி நீர் ஆராய்ச்சியில் பூமிக்கடியில் ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு அப்பால் ஆறுகள் (Parellal rivers) இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

விடை—

நில நீரானது ஊடுருவும் தன்மையுள்ள புவியியல் படிவங்களில் காணப்படுகிறது. இப்படிவங்கள் நீரைத் தன்னுள் தேக்கி வைத்துக் கொள்வதோடு நீரோட்டத்தையும் அனுமதிக்கின்றது. நிலத்தடியில் ஆறு எதுவும் ஓடுவது இல்லை.

**ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக கட்டிக் கொடுக்கப்படும். வீடுகளுக்கு, வீட்டு வரி குறைக்கும் செயற்குறிப்பு**

153—வினா 15472—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளுக்கு பஞ்சாயத்து வீட்டு வரி ரூபாய் 25 வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை குறைப்பதற்கு அரசு முன் வரும்மா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### சென்னை நகரில் பள்ளிகளின் வேலை நேரத்தை மாற்றி அமைக்கும் கோரிக்கை.

154—வினா 15514—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னை நகரில் உள்ள பள்ளிகளின் வேலை நேரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று ஆசிரியர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

விடை—

ஆம். சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் காரணமாக காலை 9 மணிக்கு தொடங்கி நடைபெற்று வரும் பள்ளிகளின் சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் (அரசு, தனியார் நிர்வாகம் மற்றும் கூனியார்) விரும்பினால் காலை 10 மணிக்கு பள்ளிகளை துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### கேரள மாநில எல்லையிலுள்ள கண்ணகிக் கோயில்.

155—வினா 15532—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கேரள மாநிலத்தின் எல்லையிலுள்ள கண்ணகிக் கோயிலுக்கு சொந்தமான இடம் சொந்தம் குறித்து சர்ச்சையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கண்ணகி கோயில் தமிழ்நாட்டைச் சார்ந்ததுதான் என்று இலக்கிய மற்றும் சரித்திரச் சான்றுகளுடன் சுட்டிக் காட்டி, எல்லையைக் கூட்டு நில அளவை செய்திட, மத்திய அரசுடனும் கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன,





### தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மூலம் எண்ணெய் கிடங்கு கட்டும் செயற்குறிப்பு.

156—வினா 15545—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) Tamil Nadu Warehousing Corporation, Oil Tankers கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திடம் எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் (Oil Tankers) கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது எதுவும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எல்லா மாவட்டங்களிலும் கோழி வளர்ப்புத் திட்டம்.

157—வினா 15548—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்புத் திட்டம் எல்லா மாவட்டத்திலும் நிறைவேற்ற அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

### தூத்துக்குடி நகரப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம்.

158—வினா 15611—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் தற்போது நடைபெற்றுவரும் பாதாள சாக்கடைத் திட்டம் தூத்துக்குடி நகரப் பிற பகுதிகளுக்கு எப்பொழுது விஸ்தரிக்கப்படும்?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு ?

(இ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தூத்துக்குடி நகராட்சியில் தற்போதுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) எழவில்லை.

### கதர்மற்றும் பட்டுத் துணிகளுக்கான சரிகைத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு.

159— வினா 15620—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் மற்றும் பட்டுத் துணிகளுக்கு பயன்படுத்தப்படும் சரிகைத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை, ஆனால், 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அரசுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு சரிகை நிறுவனம் சரிகை உற்பத்தி செய்து பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ''கோ-ஆப் டெக்ஸ்'' மூலம் வழங்கி வருகிறது.

### மூக்கையூர் கிராமத்தருகில் மீன் பிடித் துறைமுகம் கட்டுதல்

160— வினா 15697—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் கிராமத்தின் அருகில் மீன்பிடித் துறைமுகம் கட்ட பொதுமக்களின் கோரிக்கை வரப்பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கை மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் கிராமத்தின் அருகில் மீன்பிடி துறைமுகமொன்று கட்ட வேண்டுமென்ற கோரிக்கை எதுவும் அப்பகுதி மக்களிடமிருந்து பெறப்படவில்லை.





### மருத்துவ மனைகளில் உள்நோயாளிகளாக உள்ள காச நோயாளிகளுக்கு அரசு அனுமதிக்கும் தொகையை உயர்த்துதல்.

161— வினா 15730—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக உள்ள காச நோயாளிகளுக்கு அரசு அனுமதிக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) அதை உயர்த்த அரசு பரிசீலிக்குமா ?

விடை—

(அ) அரசினர் காசநோய் மருத்துவமனையில் ஒரு காச நோயாளிக்கு நாள் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 5.30 உணவிற்காக செலவிடப்படுகிறது. அரசினர் பொது மருத்துவமனைகளிலுள்ள காச நோய் பிரிவில் சேர்க்கப்படும் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு நாள் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 8 உணவிற்காக செலவிடப்படுகிறது.

(ஆ) தற்சமயம் இல்லை. எனினும் அரசு ஆணை (நிலை) எண். 1497, சுகாதாரம், நாள் : 20—7—1982 ஒரு உயர் மட்ட (காசநோய்) குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு காசநோய் பற்றிய விஷயங்களுடன் ஒரே சீரான (Uniform) காச நோயாளிக்கான உணவை அனைத்து காசநோய் நிலையங்களிலும் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யும்.

### இராசிபுரம்-சென்னை விரைவுப் பேருந்து விடல்.

162— வினா 15758—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம்—சென்னை (வழி) நாமகிரிப்பேட்டை, மங்களாபுரம், ஆத்தூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய வழித்தடத்தில் திருவள்ளுவர் விரைவுப் பேருந்து விட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இராசிபுரம்-சென்னையை இணைக்கும் வகையில், சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு விழுப்புரம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், மங்களாபுரம், நாமகிரிப் பேட்டை, இராசிபுரம் மற்றும் ஈரோடு வழியாக 22—3—1982 முதல் 617 எண் உள்ள வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரு விரைவுப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

## உத்திரமேரூர் ஏரி.

163—வினா—15792—திரு. சி. கணேசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஏரிக்கு வரும் தண்ணீர் அதன் எது வாயில் பயிரிடுபவர்களால் பாதிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) அவ்வாறு ஏரிக்கு நீர் வரத்து பாதிக்கப்படுவதில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## மதுராந்தகம் தொகுதியில் திருத்தி அமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

164—வினா 15819—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்த எந்த வட்டாரங்களில் திருத்தி அமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம் நடைபெறுகின்றது ?

(ஆ) மதுராந்தகம் தொகுதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா ?

விடை—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில், சித்தலபாக்கம், குன்றத்தூர், சோழவரம் வட்டாரங்களில் திருத்தியமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம் நடைபெற்று வந்தது. மேற்கண்ட திட்டம் 1—7—1982 முதல் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) 1—7—1982 முதல் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மதுராந்தகம் உள்பட எல்லா வட்டாரங்களிலும நடைமுறைக்கு வந்துள்ளது.



## கோவை பாரதியார் பல்கலைக் கழக அமைப்புப் பணிகள்.

165—வினா 15839—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் அமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெறவில்லை என்பது உண்மையா ?

(ஆ) இதுவரை நடந்தேறியுள்ள பணிகளின் விவரங்கள் என்ன ?

விடை—

(அ) உண்மை அல்ல.

(ஆ) இப்புதிய பல்கலைக் கழகத்தில், துணை வேந்தர், பதிவாளர், நிதி அலுவலர், தேர்வு அலுவலர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டு பணிகள் செவ்வனே நடந்து வருகின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் பராமரிப்பில் இருந்து வந்த பட்ட மேற்படிப்பு மையம்-பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு 1—4—82 முதல் மாற்றப்பட்டு ஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. அனைத்துத் துறைகளிலும் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகியவற்றிற்கான பாடத் திட்டங்கள் மாற்றப்பட்டு இக் கல்வியாண்டு முதல் அமுலுக்கு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கல்வியாண்டிற்கான பாடப்புத்தகங்கள் பல்கலைக் கழகத்தால் தயார் செய்யப்பட்டு அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து மாற்றப்பட்டு முழுமையாகக் கட்டி முடிக்கப்பெறாத, நூலகக் கட்டிடம் கட்டி முடிக்கப் பெறும் தருவாயில் தற்சமயம் உள்ளது. பல்கலைக் கழகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு 1000 ஏக்கர் நிலம் கையகப்படுத்த அரசு வருவாய்த் துறை நில ஆர்ஜிதச் சட்டத்தின் 4 (1) பிரிவின்படி தக்க அறிக்கைகள் விட்டு தற்சமயம் 5 (ஏ) பிரிவின்படி விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கட்டிடங்கள் கட்டுவதற்கான தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் ஒரு செயற்பொறியாளர் தலைமையில் வேண்டிய பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சிக்குழு, பேரவை நிதிக் குழு ஆகியவை முறைப்படி விரைவில் அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

## வெளிநாடுகளுக்கு உயர்தர மீன்களை ஏற்றுமதி செய்யும் திட்டம்.

166—வினா 15900—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனளத்துறையின் மூலம் வெளிநாடுகளுக்கு உயர்தர மீன்களை ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

## சென்னையில் கண்டுபிடிக்கப்பட்ட சிமெண்ட் கலப்படம்

167 – வினா 15954 — திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் 1982 மே மாதத்தில் சிமெண்ட்டில் கலப்படம் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 29—5—1982 அன்று, ஓட்டேரியைச் சேர்ந்த திரு. மோகன் என்பவர், தான் வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த திரு. மனோகரன் என்பவரிடமிருந்து வாங்கிய சிமெண்ட்டில் கலப்படம் உள்ளதாக, உணவுப் பொருள் குற்ற புலனாய்வுத் துறைக்கு புகார் கொடுத்தார். இது குறித்து வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## சேலத்தில் வைக்கப்பட்ட காமராஜர் சிலை.

168 — வினா 15976 — திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலத்தில் காமராஜர் சிலை வைக்கப்பட்டதை அகற்றிவிட்டு வேறு சிலையை நிறுவிய நிகழ்ச்சி அரசின் உத்திரவுபடி செய்யப்பட்டதா ?

(ஆ) முதலில் காமராஜர் சிலையை வைக்க அரசின் அனுமதி பெறப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அந்த அனுமதியை யார் எப்பொழுது பெற்றார்கள் ?



விடை —

(அ) சேலத்தில் விஜயராகவாச்சாரியார் சிலையை நிறுவுவதற்காகக் கட்டப்பட்டு வந்த பீடத்தின்மீது அரசு அனுமதி பெறாமல், திடீரென்று காமராஜர் சிலை ஒன்று வைக்கப்பட்டதால் அது அகற்றப்பட்டது. வேறு சிலை எதுவும் அதில் நிறுவப்படவில்லை.

(ஆ) இல்லை.

(இ) எழவில்லை.

## 1980 81-ம் வருடத்தில் தமிழகக் கல்லூரிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை.

169 — வினா 15988 — திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள பதினோரு தமிழ்க் கல்லூரிகளில் கடந்த சுமார் பத்தாண்டுகளாக மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாகக் குறைந்து வருவது உண்மையா ?

(ஆ) 1980–81 வருடங்களில் இப்பதினோரு கல்லூரிகளில் மொத்தமிருந்த மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) ஆம் எனில் இதற்கு என்ன காரணம் ? இதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை —

(அ) உண்மையே.

(ஆ) 865.

(இ) பொதுவாக இக்கல்லூரிகளில் விருப்பமுள்ள மாணவர்கள்தான் பயில வருவார்கள். மற்றும் படித்தபின் வேலையின்மையும் இதற்குக் காரணமாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. மேலும் கலை-அறிவியல் கல்லூரிகளிலும் பி.ஏ., (தமிழ்) மற்றும் எம். ஏ. (தமிழ்) ஆகியவை உள்ளதால் இத்தமிழ்க் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்வது குறைவாக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

[1984 மார்ச் 6

## தமிழகத்திலுள்ள இலவச மதிய சத்துணவு வழங்கும் மையங்கள்.

170—வினா 15995—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு சத்துணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச மதிய சத்துணவு வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் எத்தனை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன ?

(ஆ) எத்தனை குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது?

விடை—

(அ) 18—2—1983 அன்றுள்ளபடி முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 2+ முதல் 4+ வயதுத் தொகுதியிலுள்ள குழந்தைகளுக்காக கிராமப்புறங்களில் 23,013 சத்துணவு மையங்களும், நகர்ப்புறங்களில் 4,907 சத்துணவு மையங்களும் ஆக மொத்தம் 27,920 மையங்கள் திறக்கப்பட்டு உள்ளன.

(ஆ) கிராமப்புறங்களில் 19.74 இலட்சம் குழந்தைகளுக்கும், நகர்ப்புறங்களில் 3.93 இலட்சம் குழந்தைகளுக்கும் ஆக மொத்தம் 23.67 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது.

## திண்டுக்கல்லிலுள்ள ஜி. டி. என். கலைக் கல்லூரி.

171—வினா 16006—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல்லில் உள்ள ஜி. டி. என். கலைக் கல்லூரியில் ஆசிரியர், ஊழியர் நியமனங்கள் மாணவர்கள் சேர்க்கை ஆகியவைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ விதிகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கைகள் விவரம் என்ன ?

விடை—

(அ) மேற்சொன்ன கல்லூரி சிறுபான்மையினர் கல்லூரி என்றும், ஆகையால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விதிகளைப் பின்பற்றும் பிரச்னைக்கிடமில்லை என்றும் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இருப்பினும் அந்தக் கோட்பாட்டிற்கு முடிந்த வரை மதிப்பளிக்கப்பட்டு மாணவர்கள் சேர்க்கை மற்றும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



1984 மார்ச் 6]

(ஆ) இக்கல்லூரி நிர்வாகம் திண்டுக்கல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் இக்கல்லூரியினை ஓர் சிறுபான்மைக் கல்லூரி என அறிவிக்கக் கோரி மூல வழக்கு எண் 570/81-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளது. அது தற்பொழுது அந்த நீதி மன்றத்தின் நடவடிக்கையில் உள்ளது.

## 1982 ஆம் ஆண்டு + 2 வகுப்புகளில் 100 சதவீதம் வெற்றி பெற்ற பள்ளிகள்.

172—வினா 16034—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் ஆண்டு + 2 வகுப்புகளில் 100 சதவிகிதம் வெற்றி பெற்ற பள்ளிகள் எவை ?

(ஆ) ஒருவர் கூட வெற்றிபெறாத பள்ளிகள் எத்தனை ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூரிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி வாரிய ஜவுளிக்கடை.

173—வினா 16046—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி வாரியம் சிங்கப்பூரில் ஜவுளிக்கடை திறந்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சிங்கப்பூரில் தமிழக கைத்தறி துணிகளின் விற்பனைக்குப் பெரும் வாய்ப்புகள் இருப்பது கண்டறியப்பட்டு, 'கோ-ஆப் டெக்ஸ்' விற்பனை மற்றும் ஏற்றுமதிகளை கவனிக்கும் நிலையம் ஒன்று 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சிங்கப்பூர் ஆர்சார்டு சாலையில் உள்ள பிளாசா செண்டரில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு விற்பனை மேலாளரை நியமித்து அங்குள்ள வியாபாரிகளிடமும் அங்கு வாழும் மக்களிடமும் மாதிரி துணிகளை காண்பித்து ஆர்டர் பெறுவதற்கும், மக்களின் ரசனையைத் தெரிந்து விற்பனையை அதிகரிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

---

*513–514 ம் பக்கங்களில் இணைப்பு XII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1984 மார்ச் 6

## சென்னை எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி

174—வினா 16052—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி நிர்வாகம் 1982–83-க்கு எந்த வகுப்பிலும் மாணவிகளை சேர்ப்பதில்லை என முடிவு எடுத்திருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) அறியும்.

(ஆ) 1982–83 ஆம் கல்வி ஆண்டில் இளநிலை பட்டப் படிப்பு முதலாம் ஆண்டு மற்றும் மேல் பட்டப் படிப்புக்கு மாணவிகளைச் சேர்க்க வேண்டாம் என அக்கல்லூரி நிர்வாகம் தீர்மானித்தது.

(இ) அரசு எடுத்த முயற்சிகளைத் தொடர்ந்து மாணவிகள் மேற் சொன்ன பிரிவுகளுக்கு சேர்க்கப்பட்டு விட்டனர்.

## சட்டக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமனம்.

175—வினா 16084—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சட்டக் கல்லூரிகளில் ஆசிரியர்களின் இடங்கள் பல காலியாக இருந்து வருவதுண்மையா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கல்லூரிகளில் எவ்வளவு இடங்கள் காலியாக உள்ளன ?

(இ) அவைகளை நிரப்ப என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : கேள்விக்கு இடமில்லை.



1984 மார்ச் 6]

## பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு.

176—வினா 16092—திரு.வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

பாலிடெக்னிக்குகள் மற்றும் தொழில் நுட்ப தனி நிறுவனங்களைப் பொறுத்தவரை 20 விழுக்காடு வரை கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பொறியியற் கல்லூரிகளைப் பொறுத்தவரை கூடுதலாக மாணவர்களை அனுமதிக்க வேண்டி செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

## கோவையில் கண்டுபிடிக்கப்பட்ட போதை தரும் மதுவகைகளை தயாரிக்கும் ஆலை.

177—வினா 16164—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் 1982 ஜூலையில் அரசு அனுமதி இல்லாமல் கஷாயம் என்ற பெயரில் போதை தரும் மது வகைகளைத் தயாரித்த ஆலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரமென்ன ?

(இ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 515-516 ம் பக்கங்களில் இணைப்பு XIII-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1984 மார்ச் 6

சுற்றுலாத் துறை மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா பேருந்து வசதி.

178—வினா 16206—திரு. செ. செம்மலை: மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களில் உள்ள சுற்றுலா மையங்களைக் காண வரும் பயணிகளுக்கு வசதியாக சுற்றுலாத் துறையின் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா பேருந்து வசதி செய்யப்படுமா?

விடை—

அப்படிப்பட்ட திட்டம் தற்போது இல்லை.

சேலம் மாவட்டத்தில் சத்துணவு திட்டத்தின் கீழ் உள்ள மையங்களை அதிகரிக்கும் செயற்குறிப்பு.

179—வினா 16207—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சத்துணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட மையங்கள் எத்தனை?

(ஆ) அந்த மாவட்டத்தில் அம்மையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) சேலம் மாவட்டத்தில் முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் நலக் கூடங்களின் எண்ணிக்கை :

| | | |
|---|---|---|
| 1,616 | 257 | 1,863 |
| (கிராமப்புறம்) | (நகர்ப்புறம்) | மொத்தம். |

(ஆ) குழந்தைகள் நலக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.



1984 மார்ச் 6]

கீரிப்பாறை அரசு ரப்பர் தொழிற்சாலை.

180—வினா 16219—திரு. டி. மணி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டத்தின் கீரிப்பாறை கோட்டத்தில் ஸ்கிராப், ஷெல், திரைந்த பால் ஆகியவற்றை பாதுகாப்பாக சேமிக்கப் போதுமான கொட்டகைகள் இருந்தும், அவற்றை வெயிலும், மழையும் படும்படி வைத்திருப்பதன் நோக்கம் என்ன?

(ஆ) ஆம் எனில், இதனால் அரசுக்கு ஏற்படும் இழப்பைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கீரிப்பாறை அரசு ரப்பர் தொழிற்சாலையில் ஸ்கிராப் (Scrap) மற்றும் ஷெல்லை பாதுகாத்து வைக்க கொட்டகைகள் அமைக்கப்பட்டு அவை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. திரைந்த பால் (P. C. Lump) சேமித்து வைப்பதற்கு மட்டும் கிடங்குகள் இல்லை. எனினும் அது உடனுக்குடன் கிரேப் (Crepe) இயந்திரத்திலிட்டு கிரேப் ஷீட்டாக செய்யப்படுகிறது. மேலும், திரைந்த பால் திரவ நிலையில் இல்லாதபடியால் அது வெயிலிலும் மழையிலும் வைத்திருந்தாலும் கெட்டுப் போவதில்லை. இதனால் அரசுக்கு இழப்பு ஏதுமில்லை.

திருவையாறு பேரூராட்சி பேருந்து நிலையத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம்.

181—வினா 16279—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு பேரூராட்சி பேருந்து நிலையத்தில் தினசரி வந்து செல்லும் பேருந்துகள் எண்ணிக்கை என்ன?

(ஆ) இந்தப்பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகளான குடிநீர், சீரான சாலை, நவீன சுகாதார கழிப்பிட வசதிகள் செய்வதற்கான திட்டம் எதுவும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) 50.

(ஆ) மற்றும் (இ) : அடிப்படை வசதிகள் ஏற்கெனவே இருக்கின்றன.

## 1982-ஆம் ஆண்டில் பெட்டிக் கடைகள் வழங்கப்பட்ட செருப்பு தைக்கும் தொழிலாளிகள்

182—வினா 16336—திரு. பி. மொக்கையன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் வருடத்தில் செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு பணி செய்யும் பொருட்டு பெட்டிக் கடைகள் வழங்கப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது மாவட்ட வாரியாக ?

விடை—

(அ) ஆம். 1982 ஆம் வருடத்தில் செருப்பு தைக்கும் தொழிலாளிகளுக்கு பணி செய்யும் பொருட்டு பெட்டிக்கடைகள் வழங்கப்பட்டன.

(ஆ) 1982-83-ஆம் வருடத்தில் 28-2-1983 வரை 444 செருப்பு தைக்கும் தொழிலாளருக்கு பணிக்கூடங்கள் (பெட்டிக் கடைகள்) வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாக விவரங்கள் வருமாறு :—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | இதுநாள் வரையில் வழங்கப்பட்ட பெட்டிக்கடைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | கோயம்புத்தூர் .. .. | 34 |
| 2 | பெரியார் .. .. .. | 30 |
| 3 | சேலம் .. .. .. | 28 |
| 4 | நீலகிரி .. .. .. | 20 |
| 5 | தென்னாற்காடு .. .. | 26 |
| 6 | தஞ்சாவூர் .. .. .. | 32 |
| 7 | திருச்சிராப்பள்ளி .. .. | 35 |
| 8 | புதுக்கோட்டை .. .. | 25 |
| 9 | செங்கல்பட்டு .. .. | 25 |
| 10 | சென்னை .. .. .. | 16 |
| 11 | வட ஆற்காடு .. .. | 25 |
| 12 | தர்மபுரி .. .. .. | 23 |
| 13 | மதுரை .. .. .. | 30 |
| 14 | இராமநாதபுரம் .. .. | 20 |
| 15 | திருநெல்வேலி .. .. | 50 |
| 16 | கன்னியாகுமரி .. .. | 25 |
| | | 444 |



## நூலக இயக்குநர் மூலம் அரசு வாங்கும் நூல்களுக்கு பணம் வழங்குவதில் தாமதத்தைப் போக்கும் நடவடிக்கை.

183—வினா 16379—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நூல் நிலையங்களுக்கு நூலக இயக்குநர் மூலமாக தமிழக அரசு வாங்கும் நூல்களுக்குப் பணம் வழங்குவதில் அளவு கடந்த தாமதம் செய்யப்படுவதாக புகார் வந்துள்ளதா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நூல்கள் வாங்கியதற்குரிய தொகை அநேகமாக எல்லா பதிப்பாளர்களுக்கும் கொடுக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள சில பதிப்பாளர்களுக்குரிய தொகையை அளிக்க மாவட்ட நூலக அலுவலர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## அந்தோனியார்புரத்திலுள்ள பனைப் பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை.

184—வினா 16398—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கதர் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி அந்தோனியார் புரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனைப் பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) அது இப்பொழுது செயல்படுகிறதா ?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் அந்தோனியார் புரத்தில் பனைப் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

பாரதியாரின் புகழைப் பரப்ப வெளிநாடுகளுக்கு குழுக்களை அனுப்புதல்.

185—வினா 16431—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரதியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாரதியாரின் புகழைப்பரப்ப வெளிநாடுகளுக்கு கலைக்குழு, அறிஞர்கள் குழுக்களை அனுப்ப முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்படும் ?

(ஈ) குழுக்களில் இடம் பெறுவோர் எத்தனை பேர் ?

விடை—

விவரங்கள் அடங்கிய ஓர் அறிக்கை *அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

மணிமுக்தா, கோமுகி அணைகளிலிருந்து மேமாத்தூர் விருத்தாசலம் அணைகளுக்கு தண்ணீர் விடல்.

186—வினா 16443—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேமாத்தூர், விருத்தாச்சலம், அணைகளுக்கு மணி முக்தா, கோமுகி அணைகளிலிருந்து போதுமான தண்ணீர் விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோமுகி, மணிமுக்தா நதி நீர்த்தேக்கங்களிலிருந்து மேமாத்தூர், விருத்தாச்சலம் அணைகளுக்கு தண்ணீர் விட உத்தேசிக்கப்படவில்லை.

---

*..516-ம் பக்கத்தில் இணைப்பு XIV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



மத்திய அரசிடம் கேட்கப்பட்ட அரிசி, கோதுமையின் அளவு.

187—வினா 16467—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு வறட்சி காரணமாக மத்திய அரசிடம் அரிசி, கோதுமை அளவை உயர்த்தி தர கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாதம் ஒன்றுக்கு 80,000 டன்கள் அரிசியும் 40,000 டன்கள் கோதுமையும் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மணலி உரத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கு நிலம் ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு.

188—வினா 16502—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலி உரத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கு நிலம் ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மணலி உரத்தொழிற்சாலையின் (Madras Frtilizers Limited) விஸ்தரிப்புக்கு கூடுதல் நிலம் ஒதுக்கீடு செய்வது பற்றிய செயற்குறிப்பு இல்லை.

மத்திய அரசு வழங்கிய அரிசி.

189—வினா 16512—திரு. கு. ரமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டின் தேவைக்காக மத்திய அரசிடம் அக்டோபர் மாத ஆரம்பத்தில் எண்பதாயிரம் டன்கள் அரிசி தரும்படி மாநில அரசு கேட்டதுண்மையா ?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசு எவ்வளவு அரிசி வழங்கியது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு அரிசி ஏதும் வழங்கவில்லை.

27—10—1982-ல் சென்னை பொது மருத்துவமனையில் பல ஒலிப்பெருக்கிகள் மூலம் சினிமா பாட்டுகள் ஒலிபரப்பியதால் நோயாளிகள் பாதிப்பு.

190—வினா 16529—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி வளாகத்திற்குள் 27—10—1982 அன்று பல மைக்குகள் கட்டப்பட்டு சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பியதால் நோயாளிகள் அவதிக்குள்ளானது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பெண்கள் பயிற்சி அறுவை மருத்துவர்களின் விடுதியில் பணி புரியும் ஆயாக்கள் ஒலி பெருக்கிகள் கட்டி 27-10-1982 அன்று ஆயுத பூஜை கொண்டாடியிருக்கிறார்கள். ஆனால். மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு எந்த தொந்தரவும் நேராவண்ணம் ஒலிபெருக்கிகள் சாலையை பார்த்து கட்டப்பட்டிருந்தன. மேலும் ஒலி பெருக்கி மருத்துவமனை கட்டிடத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இது போன்று, இனி செய்யக்கூடாது என்று பெண்கள் பயிற்சி மருத்துவர் விடுதியில் பணி புரிவோர் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் இது போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் மருத்துவ மனை வளாகத்திற்குள் நடத்தக்கூடாது என்று அறிவுரைகள் எல்லா இயக்குநர்களுக்கும் வழங்கப்பட்டு இருக்கின்றன.

திருச்சி நகரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நட்சத்திர ஓட்டல் கட்டுதல்.

191- வினா 16613- திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நட்சத்திர ஓட்டல் ஒன்று கட்ட முன்வருமா,?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) திருச்சி நகரில் நட்சத்திர ஓட்டல் கட்டும் திட்டம் தற்பொழுது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



நிலக்கடலை பயிரிட புதிய திட்டம்.

192. வினா 16704—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நிலக்கடலை பயிரிட புதிய திட்டம், கொண்டு வர உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) இத்திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமுலாக்கப்படும் ?

விடை—

(அ) தமிழ்நாடு அரசு நிலக்கடலை பயிரிடுவது குறித்த புதிய திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) எழவில்லை.

ஆனைமலை வன விலங்கு சரணாலயம்.

193. வினா 16707—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலை வனவிலங்கு சரணாலயத்தில் காட்டெருமைகள் தற்சமயம் குறைந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் பாதுகாப்பிற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) காட்டெருமைகளின் எண்ணிக்கை தற்சமயம் குறைந்து வருகின்றது என்று கூறுவது சரியல்ல. மாறாக, அவைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கருத சாத்தியக் கூறுகள் உள்ளன.

(ஆ) வினா எழ இடமில்லை.

[1984 மார்ச் 6

மத்திய அரசு மூலம் கூடுதல் அரிசி, கோதுமை ஒதுக்கீடு.

194. வினா 16895—திரு. சே. செம்மலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடுதலாக அரிசி, கோதுமை ஆகியவைகளை ஒதுக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மத்திய தொகுப்பிலிருந்து மாதம் ஒன்றுக்கு 80,000 டன்கள் அரிசியும் 40,000 டன்கள் கோதுமையும் ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசு கோரப்பட்டுள்ளது.

புதுடெல்லி ஆசிய விளையாட்டு போட்டிக்கு தமிழ்நாடு சார்பில் அனுமதிக்கப்பட்ட கலைக்குழு.

195. வினா 17104—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுடெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின்போது தமிழ்நாடு அரசு சார்பில் கலைக்குழு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) எந்தெந்த வகையான கலைக்குழு அனுப்பப்பட்டன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): புதுடெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின் தொடக்க நாளான 19–11–1982 அன்று கரகம், காவடி போன்ற கலை நிகழ்ச்சியும், நிறைவு நாளான 4–12–1982 அன்று பொய்க்கால் குதிரை நடனம், காளை, மயில் நடனங்கள் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் நையாண்டி மேளம், தாரை, தப்பட்டை, கொம்பு போன்ற பக்கவாத்தியங்களும் இடம் பெற்றன. இதில் மொத்தம் 186 கலைஞர்கள் அடங்கிய கலைக் குழுவினர்கள் பங்கேற்றனர்.



1984 மார்ச் 6]

செங்கற்பட்டு பாலாற்ற கரையிலுள்ள சாராயத் தொழிற் சாலைகள்.

196— வினா 17287—திரு. சி. கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு பாலாற்றங்கரையில் இருக்கும் சாராயத் தொழிற்சாலையால் பாலாற்றில் இருந்து செங்கை மக்களுக்குக் கிடைக்கும் குடிநீர் பாழாகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்து உள்ளதா ?

(ஆ) 'ஆம்' எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

அண்டுகோடு கிராம புறம் போக்கில் திருடு போன அயனி மரங்கள்

197—வினா 18943—திரு. டி. மணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தாலுகாவில் அண்டுகோடு கிராமம் புதிய பல எண். 173/14 அரசு புறம்போக்கில் நின்ற சுமார் ரூ. 15 ஆயிரம் விலை மதிப்புள்ள அயனி (ஆஞ்சில்) மரத்தை மாலைக் கோடு என்னுமிடத்தைச் சார்ந்த ஒருவர் திருடியுள்ளதாக 17–8–1982ல் அரசுக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திருடப்பட்ட மரத்தைக் கைப்பற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) 4-4–1982 அன்று அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

(ஆ) 4—4—1982 அன்று அந்த மரங்கள் கைப்பற்றப் பட்டன. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதை குறிக்கும்

[1984 மார்ச் 6

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, ஏறக்குறைய 16 அரிசன மாணவர்கள், அவர்கள் தங்கும் விடுதி யில் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள்; ஸ்ட்ரைக் நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அங்கே அரிசன மாணவர்கள் உண்ணா விரதம் இருக்கிறார்கள், (குறுக்கீடு)... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாணவர்கள் உண்ணா விரதம் இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். இன்ன சாதியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று சொல்லா தீர்கள்; சாதியை நாம் ஏற்றுக்கொள்வது இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : ஹாஸ்டல் ஸ்டுடன்ட்ஸ் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்; அதைப்பற்றி நாளைக்காவது எடுத்துக்கொள்வீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்ளலாம்.

## 3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### தக மண்டலத்தில் படப்பிடிப்பின்போது கன்னட நடிகர் தாக்கப் பெற்றதாக பெங்களூரில் தமிழர்கள் தாக்கப்பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ. சிவசாமி, தி.கா. நல்லப்பன், அ. ரகுமான்கான், மு. அப்பாத் துரை, பொ. உத்திராபதி, கே. கல்லன், மு. அரங்கநாதன், இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், ஆர். டி. கருப்பையா, சு. பாலன், இரெ. இராசமாணிக்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், டி. மணி, ப. நெடுமாறன், ரா. கிருஷ்ணன், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் ஆகியோர் ''உதகமண்டலத்தில் கன்னடப் படம் எடுக்கும்போது தகுந்த பாது காப்பு கொடுக்காததால் ஏற்பட்ட கல்லெறிச் சம்பவத்தால் இங்குள்ள பதட்ட நிலையும் இது தொடர்பாக பெங்களூரில் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலை குறித்தும் விவா திக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண் டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறி விப்புகள் கொடுத்துள்ளனர்.



1984 மார்ச் 6] [பேரவைத் தலைவர்]

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என் பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.........

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். எங்கள் கட்சியின் சார்பிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசாமி அவர்கள் கொடுத்ததை நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். அந்தச் சம்ப வம் பற்றி அறிவிப்புக் கொடுத்துள்ளவர்களின் பெயர்களையும் தான் நான் சொன்னேன். (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தங்களுடைய கவ னத்திற்கு நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம், திரு. ரகுமான் கான் அவர்கள் பெங்களூர் தமிழர்களை உள்ளிட்டுத்தான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் வாசகத்தை அமைத்திருந்தார்கள். ஆனால், அந்த வாசகங்கள் அடியோடு நீக்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''பெங்களூரில் தமிழர் களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலை குறித்தும்'' என்று நான்தான் சொல்லியிருக்கிறேனே இதை விவாதிக்கும்பொழுது திரு ரகுமான்கான் அவர்கள் தம் கருத்தைச் சொல்லட்டும். அவர்கள் பேசும்பொழுது அந்த வாசகம் வராதா? அவரது வாச கமே வர வேண்டுமென்பது என்ன விதி? அது முறை அல்ல.

(முற்பகல் 10-10)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நான்காம் தேதியன்று ஊட்டியில் ராஜ்குமார் என்ற கன்னட நடிகர் அவரது படத்தை எடுப் பதற்காக வந்திருந்த நேரத்தில் நடைபெற்ற சம்பவங் களின்போது அவருக்குச் சரியான முறையில் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்ற காரணத்தால், அந்தக் காரணத்தைச் சுட்டிக்காட்டி பெங்களூரில் இருக்கின்ற தமிழர்களுக்கு எதிராக ஒரு வெறி கிளப்பி விடப்பட்டிருப்பதை இந்த மன்றத்தில் இருக்கின்ற நாம் அனைவரும் அறிவோம். பெங்க ளூரில் உள்ள தமிழ் மகன் அங்கமுத்து என்பவர் தாக்கப்பட்டிருக்கி றார். அவர் படுகாயம் அடைந்திருக்கிறார். அங்கே தமிழர்கள் நடமாடவே முடியாத ஒரு நிலைமை, ஒரு ஆபத்தான நிலைமை உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். அதன் காரணமாக இன்றைக்கு தமிழகத்திலே தமிழ் பேசக் கூடிய மக்கள் மத்தியில் ஒரு உணர்வு ஏற்பட்டு ஒரு பதட்ட நிலை உருவாகி இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். இப் படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது அவசியம்தானா என்பதை நாம் அமைதியோடு சிந்தித்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட் டிருக்கின்றது.

[திரு. இரா. கருப்பையா] [1984 மார்ச் 6

சென்ற சில மாதங்களுக்கு முன்பு கர்நாடக மாநிலத்தில் நடிகர் ராஜ்குமார் அவர்கள் ஒரு வெறியினைத் தூண்டக்கூடிய நிகழ்ச்சியினை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து தமிழகத்தில் அம்மாதிரியான நிலைமை உருவாகியது. அதற்குப் பிறகு அவர் ஊட்டிக்கு படப்பிடிப்பிற்காக வந்திருந்தபோது அவருக்கு எதிரான ஒரு நிலைமை உருவாகியது. எனவே, இது தனிப்பட்ட முறையில் அந்த நடிகருக்கு ஏற்படுத்தப்பட்டது என்று சொல்வதைக் காட்டிலும் அந்த மொழி பேசக்கூடிய மக்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்று உணர முடிகிறது. ஆகவே, இவ்வாறு மொழி வெறியினைத் தூண்டக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது தமிழ் மொழி பேசக்கூடிய மக்கள், கர்நாடக மாநிலத்தில் கன்னடம் பேசும் மக்கள் என்ற இரண்டு பகுதியினருக்கிடையே ஒரு பெருத்த வேற்றுமையையும், மொழி வெறி உணர்வையும் தூண்டிவிடக்கூடிய முறையில் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அது யாராக இருந்தாலும் சரி, எந்த மொழி பேசக்கூடிய மக்களாக இருந்தாலும் சரி, அவரவர்கள் மாநிலங்களிலே, அவரவர்கள் வாழக்கூடிய பகுதிகளிலே அந்த மொழியைப் பேசுவதற்கான அனைத்து உரிமைகளும் நாம் பெற்றிருக்கிறோம். இருந்தாலும் கூட மொழியின் பெயரால் ஒரு வெறி தூண்டிவிடப்பட்டு ஒரு இனக் கலவரத்தை உண்டாக்கக்கூடிய முறையில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஊட்டியில் நடைபெற்ற சம்பவத்தைப் பொறுத்தவரையில் சரியான பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்ற காரணத்தால் பாதுகாப்பு அளிக்கத் தவறிய காவல் துறை கண்காணிப்பாளர் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார். ஒரு தலைமைக் காவலர் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்திகளை நாம் அறிவோம். அந்த அளவிற்கு நம்முடைய மாநில அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்ற அதேநேரத்தில் கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பது மிகவும் வருந்தத்தக்கது. அதுமட்டுமல்ல, இதைத் தொடர்ந்து கர்நாடக சட்டமன்றத்திலே அந்த மாநிலத்தின் முதல்வர் அவர்கள் பேசக்கூடிய நேரத்திலே அவர் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்.

ஊட்டியில் நடைபெற்ற சம்பவங்கள் சமபந்தமாக நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் ஒரு நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய்வதற்கு ஒப்புக் கொண்டார் என்று ஒரு செய்தியினை அந்த சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்றக் கூட்டம் இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தமிழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி, அதைத் தொடர்ந்து கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் நடைபெற்றிருக்கக்கூடிய நிகழ்ச்சி என்றெல்லாம் நடந்திருக்கின்றபோது இந்த மாதிரியான ஒரு அறிவிப்பை நம்முடைய மாநில சட்டமன்றத்தில் அறிவிக்காமல் கர்நாடக மாநிலத்திலே உள்ள சட்ட மன்றத்திலே அந்தக்

செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. எனவே, நமமுடைய சட்ட மன்றத்திலே இதுபற்றி உரிய முறையில் காலாகாலத்தில் தகவல் கொடுக்கப்படவில்லை என்பதே வருந்தத்தக்க ஒன்றாகும்.

இனத்தால், மொழியால் நாம் வேறுபட்டிருந்தாலும்கூட நாம் அனைவரும் இந்திய மக்கள். நாம் அனைவரும் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால் நாம் அனைவரும் ஒரே உணர்வோடு வாழவேண்டும் என்பதை, அதாவது எந்த பிரதேசத்து மக்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரிடமும் இப்படிப்பட்ட நல்ல உணர்வை ஏற்படுத்தவேண்டியது நம்முடைய கடமை. அப்படி ஏற்படுத்தவேண்டும் என்பது நம்முடைய தமிழக அரசினுடைய கடமை என்பதோடு, அதுதான் கர்நாடக மாநில அரசின் கடமையும் என்று சுட்டிக்காட்ட நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் தற்போது அதற்கு அப்பாற்பட்டு தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு எதிரானவெறி கிளப்பிவிடப்பட்டிருக்கின்றது. அதைத் தடுத்துநிறுத்த வேண்டும். அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நாம் முழுமையாக பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும். கர்நாடக மாநில அரசினை வற்புறுத்துவதற்குரிய நடவடிக்கையை நாம் எடுக்கவேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க வேண்டி இருப்பதாலும், இது குறித்து விரிவாகப் பரிசீலிக்க வேண்டி இருப்பதாலும் இந்தப் பேரவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இன்றைக்குக் கர்நாடகத்திலே தமிழர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறையான சம்பவத்தை இங்கே இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஏழரை கோடி தமிழர்கள் சார்பாக வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சட்டமன்றத்திலே நாம் தெரிவிக்கின்ற இந்தக் கண்டனம் பெங்களூரில் மட்டும் அல்ல, இந்தியா முழுவதும, உலகம் முழுவதும் எதிரொலித்தாக வேண்டும். இன்றைக்கு நம்முடைய சகோதரர்கள், நம்முடைய சகோதரிகள், நம்முடைய தமிழர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பெங்களூர் வீதிகளிலே நடமாட முடியாத அளவு அவர்களுடைய உயிர்களுக்கும் உடமைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அங்கமுத்து என்ற 19 வயது இளைஞர், கன்னட வெறியர்களாலும், இராஜ்குமார் என்பவருடைய ரசிகர் மன்றத்தினராலும், ரசிகர்களாலும் தாக்கப்பட்டு மரணப் படுக்கையிலே கிடக்கிறார். செஞ்சியைச் சேர்ந்த இன்னொரு சகோதரர்—நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த கதிர்வேலு—கட்டிடத் தொழிலாளி, இங்கிருந்து பிழைக்கச் சென்றவர், சைக்கிளிலே செல்லு

இன்றபொழுது, மழை பெய்த காரணத்தினாலே சைக்கிள் கீழே விழ நடந்தே போவோம் என்று தமிழிலே சொல்லிய காரணத்திற்காக "தமிழா பேசுகிறாய், நீ தமிழன் தானா" என்று கேட்டு பட்டாக் கத்தியாலே படுகொலை செய்து, இந்த உலகத்தை விட்டே அவர் போய் இருக்கிறார் ; மரணம் அடைந்திருக்கிறார், கதிர்வேலு என்ற சகோதரர் பெங்களூரிலே.

அதே போல, தமிழ் பேசிய தம்பதிகள் இரண்டு பேரைப் பார்த்துவிட்டு, தமிழ் பேசுகிறார்கள் என்று சொல்லி, அந்தத் தமிழச்சிப் பெண்ணை கன்னட வெறியர்கள் இராஜ்குமார் என்ற நடிகர் மன்றத்தினர், ரசிகர் மன்றத்தினர், கேவலப்படுத்தி, கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இங்கே தமிழகத்திலேயிருந்து பெங்களூருக்குச் சென்ற பஸ்கள் அனைத்தின் மீதும் கல்லெறியப்பட்டு, சேதப்படுத்தப்பட்டு இருக்கின்றன, டிரைவர்கள அடிக்கப்பட்டிருக்கிறார்கள், கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. பஸ்கள் எதுவுமே இப்பொழுது பெங்களூர் செல்கின்ற நிலையில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலே தமிழகத்திலிருந்து செல்கின்ற லாரிகள் எல்லாம் கூட அங்கே தடுக்கப்பட்டு, கல்வீச்சு சம்பவங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. லாரி டிரைவர்கள் எல்லாம் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் சினிமா காட்டுகிற இடங்களில் எல்லாம் இந்த ரசிகர் கும்பல்களும் கன்னட வெறியர்களும் காலித்தனம் செய்து, தியேட்டர்கள் மீது கல்லெறிந்திருக்கிறார்கள். தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளுக்கெல்லாம் சென்று பலரைக் கொலை செய்கின்ற காரியங்களிலே, கல்லெறிகின்ற காரியங்களிலே, வன்முறையில் ஈடுபடுகின்ற காரியங்களிலே, ஈடுபடுவதால், இன்றைக்குத் தமிழர் சமுதாயத்திற்கு—அங்கே இருக்கக் கூடிய தமிழர்களுக்கு மிகப் பெரிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதை இந்த மன்றம்தான் சிந்தித்து, இதற்குத் தகுந்த முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், அதற்குக் காரணம் சொல்கின்றபொழுது, ஊட்டியிலே நடைபெற்ற ஒரு சம்பவம்—கர்நாடகத்தைச் சேர்ந்த ஒரு நடிகர் தாக்கப்பட்டார், ஆகவே, அதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடைபெற்றதாகப் பத்திரிகையிலே சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே நடிகர் இராஜ்குமார் அவர்கள் தாக்கப்பட்டிருந்தால்—அவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, கர்நாடகத்தைச் சேர்ந்தவரா, பம்பாயைச் சேர்ந்தவரா என்று இல்லாமல், ஒரு மனிதர் என்ற முறையில், அப்படிப்பட்ட தாக்குதல் அவர்களுக்கு எதிராக நடைபெற்றிருந்தால், நிச்சயமாக அது வருத்தத்திற்குரியது, கண்டனத்திற்குரியது, அநியாயமானது, மனிதத் தன்மையற்றது. இதை ஹெக்டே அவர்களே கர்நாடக சட்டசபையில் சொல்லியிருக்கிறார்கள். இராஜ்குமாருக்கு எதிராக தாக்கப்பட்ட சம்பவம் "இன்ஹியூமன் அன்ட் அன்சிவிலைஸ்ட்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்திலே நமக்கு வேறுபாடில்லை. ஆனால், அதே நேரத்திலே நான் கேட்பதெல்லாம் நம்முடைய முதல் அமைச்சர்



அவர்கள் கூட உடனே தொலைபேசியிலே ஹெக்டே அவர்களோடு தொடர்பு கொண்டு இந்தச் சம்பவத்தை அறிந்து நான் வருந்துகிறேன் என்று சொல்லியதோடு அல்லாமல், உடனடியாக நீதி விசாரணை—ஜுடிஷியல் என்கொயரி—போடப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். போலீஸ் அதிகாரி ஒருவர் டி.எஸ்.பி. மாற்றப்பட்டிருக்கிறார். போலீஸ் துறையைச் சேர்ந்த இன்னொருவர்—காவலர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். இப்படி எல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழர்களின் சார்பாகப் பேசுகின்றேன் என்பதனாலே நான் கேட்கின்றேன், கர்நாடகத்திலே தமிழர்களுக்கு எதிராக இந்தச் சம்பவம் நடைபெற்றதற்குக் காரணம், ஊட்டியிலே திரு. இராஜ்குமார் தாக்கப்பட்டார் என்ற சம்பவத்தினால் மட்டும்தானா? இது ஒரு தப்பான சம்பவமாக, வன்முறைச் சம்பவமாக இருந்தால் வருத்தத்திற்குரியது. அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அதே நேரத்திலே உங்கள் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய முதலமைச்சர் காவேரி நீர் பிரச்னை சம்பந்தமாக பெங்களூருக்குச் சென்றிருந்த பொழுது கன்னட வெறியர்கள், அங்கே அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதே முதலமைச்சருக்கு எதிராகக் கொடும்பாவி கொளுத்தினார்கள்.

அது மட்டுமல்ல, இன்னொன்றையும் கூட நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே கர்நாடகத்திலே இருக்கக் கூடிய பக்தவத்சலம் என்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்-தமிழைத் தவிர வேறு மொழி தெரியாதவர்-தமிழிலே பதவிப் பிரமாணம் எடுக்கிறார். ஆனால் அவரைக் கொலை செய்கின்ற அளவுக்கு முயற்சி எடுத்து, சபாநாயகர் அறைக்குள்ளே நுழைந்து, தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதோடு மட்டுமல்ல, இங்கே ஆந்திராவிலிருந்து பிழைக்க வந்தவர்கள் இருக்கிறார்கள் ; கேரளாவிலிருந்து பிழைக்க வந்தவர்கள் இருக்கிறார்கள் ; சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்— மைனாரிட்டீஸ்—இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தாய் மொழியாகிய கன்னடத்தையோ, மலையாளத்தையோ, பள்ளிக் கூடத்திலே முதல் பாடமாகப் படிப்பதற்கு இங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது அண்ணா காலத்தில் உண்டு ; காமராஜர் காலத்தில் உண்டு ; பக்தவத்சலம் காலத்தில் உண்டு, கலைஞர் காலத்திலும் உண்டு.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 6

[முற்பகல் 10-20]

சிறுபான்மை மக்கள் முதல் பாடமாக அவர்களுடைய தாய் மொழியைப் படிக்கலாம். ஆனால் இந்த வாய்ப்பு கர்நாடகத்தில் இருக்கிற சிறுபான்மை மக்களுக்கு இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. தமிழ் தெரிந்த அதிகாரிகள் அங்கே வேலை செய் கிறார்கள். இங்கேயும் மலையாளம் தெரிந்த அதிகாரிகள், கன்னடம் தெரிந்த அதிகாரிகள் வேலை செய்கிறார்கள். ஆனால் ஹெக்டே அவர்கள் கன்னடம், தெரிந்துகொள்வதற்கு 3, 4 மாதங்கள் இருக்கட்டும் என்று அவகாசம் கொடுக்கிறார்கள். அப்படி அவகாசம் கொடுப்பதே தவறு என்று சொல்லி "தமிழர் களே பெங்களூரை விட்டு வெளியேறு" என்று சொல்லக்கூடிய ஒரு கும்பலுக்கு தலைமை தாங்கிக் கொண்டு இராஜ்குமார் அவர்களும், அவருடைய ஆதரவாளர்களும் கன்னட வெறியர் களும் தொடர்ந்து இந்த வெறியாட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. நம்முடைய தமிழ் சினிமா உலகத்தைச் சேர்ந்தவர்கள் விஜயகாந்த், சங்கிலி, சந்திரன், நடிகை நளினி, டைரக்டர் அமிர்தம் இவர்கள் எல்லாம் பெங்களூருக்கு படம் எடுக்கப் போனார்கள். வேங்கையின் மைந்தன் என்ற தமிழ் படமும் கண்டத்தேரி கண்டு என்கிற கன்னடப் படமும் எடுக்கப் போனார்கள். அந்தப் படங்களை எடுப்பதற்கு ஷூட்டிங்கிற்காக அங்கே போன போது கன்னட வெறியர்கள் அவர்களைத் தாக்கவில்லையா? படப்பிடிப்பு நடக்க விடாமல் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவில்லையா? கல் எறியவில்லையா ? உயிரைக் காப்பாற்றிக் கொள்கிற அளவிலே நம்மவர்கள் தப்பித்துக் கொண்டு வந்தார்கள். இவ்வளவு காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன. நான் கேட்கிறேன், ஹெக்டே அவர்கள் ஒரு நடிகர் இராஜ்குமார் தாக்கப்பட்டார் என்று சொன்ன உடனே ஒரு ஜுடிஷியல் என்க்குயரி வேண்டு மென்று கேட்டாரே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அது போல கேட்டிருக்கிறாரா ? நான் கேட்க விரும்புகிறேன், நம் முடைய தமிழ் மக்கள் அங்கே அவதிப்படுகிறார்களே, தமிழ் மகன் கொல்லப்பட்டிருக்கிறானே, இங்கே ஒரு ஜுடிஷியல் என்குயரி என்றால் ஹெக்டே அவர்களிடம் நாம் கேட்டிருக்க வேண்டாமா ? எங்களுடைய தமிழகத்தைச் சார்ந்த கனகரத் தினம் கொல்லப்பட்டிருக்கிறாரே, இன்னொருவர் அங்கமுத்து என்பவர் கத்தியால் குத்தப்பட்டிருக்கிறாரே, தமிழச்சிகள் கற்பு பறிக்கப்படுகிறதே, சொத்துக்கள் சூறையாடப்படுகிறதே, உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து எனவே ஒரு என்குயரி கமிஷன் போடுங்கள் என்று நம்முடைய முதலமைச்சர் கேட் டார்களா என்றால் இல்லை. ஆனால் அதே நேரத்தில் அங்கே இருக்கக் கூடிய இராஜ்குமார் ஆதரவாளர்களைத் திருப்திபடுத்து வதற்காக டி.எஸ்.பி.-ஐ நான் மாற்றி இருக்கிறேன், போலீஸ் காரரை சஸ்பென்ட் செய்திருக்கிறேன் என்று சொல்கிற நேரத் தில் இந்த நடவடிக்கை கர்நாடகத்திலும் இருக்க வேண்டாமா ? ஆகவே சபாநாயகர் அவர்களே உங்கள் மூலமாக கேட்டுக் கொள்வதெல்லாம்....



1984 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்க வேண்டியதை எல்லாம் கேட்டு விட்டீர்களே, முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நாம் எல் லோரும் சகோதரர்கள், தேசிய ஒருமைப்பாட்டை நேசிப்பவர் கள்தான். ஆனால் தேசிய ஒருமைப்பாடு என்பது "one way traffic-ஆக" இருக்கக் கூடாது. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேகமாகப் பேசும்போது வேறு பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற் காகத்தான் சொல்கிறேன் ; முடித்து விடுங்கள். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : ஒரு குறிப்பிட்ட சமுதாய மக் களுக்கு எதிராக விரோத உணர்ச்சியைத் தூண்டி விடுவதற்காக இதை நான் பேசவில்லை. நான் சொல்ல விரும்புவதெல்லாம் நம் முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் கர்நாடகாவில் நடை பெற்ற அக்கிரமங்களையும், சம்பவங்களையும் சேர்வியுற்றும் தமிழ் மக்கள் அமைதியாக இருந்தார்கள் என்று ஹெக்டே அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்து பத்திரிகையிலோ, எக்ஸ் பிரஸ் பத்திரிகையிலோ படித்ததாக என் நினைவு. அதிலே போடப்பட்டிருக்கிறது. ஹெக்டே அவர்கள் பேசியிருக்கிறார் கள். இவ்வளவு அக்கிரமங்கள் நடைபெற்றதற்குப் பிறகும், பெங்களூர் தமிழர்களுக்கு எதிராக சம்பவங்கள் நடைபெற்ற தற்குப் பிறகும் தமிழர்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது என்று ஹெக்டே அவர்கள் கர்நாடகாவின் சட்டசபையில் தமிழ் மக் களைப் பற்றி பேசியிருக்கிறார்கள். * *

பிற மொழியைச் சேர்ந்தவர்கள் இங்கே இருக்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பொறுத்தவரையில் அவர் களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். லிங்குவிஸ்டிக் மைனாரிட்டி என்பதாக அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்றுதான் நாம் சொல்கிறோம்.

ஆனால் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் நான் உங்கள் மூலமாகக் கேட்டுச்கொள்வதெல்லாம் தமிழக சர்க்கார், தமிழ கத்தின் முதலமைச்சர் இன உணர்வோடு, மொழி உணர்வு அவர்களுக்கு இருக்குமானால், தமிழர்கள் இவ்வளவு கொடு மைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னும் சமாதான வெண்புறாக்களைப் பறக்க் விடுவதில் அர்த்தம் இல்லை. திரு. ஹெக்டே அவர்களைப் பார்த்து நீதி விசாரணை வை என்று கேட்கவேண்டும். கண் டனம் தெரிவிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இதே மாதிரி முன்பு நடந்த ஒன்றை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கோலார் தங்க வயலிலே 8 தமிழர்கள்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஒரு வார்த்தை கூட முதலமைச்சர் பேசவில்லை. அப்படியானால் தமிழர்கள் அங்கே இருக்கக் கூடாது என்று அர்த்தமா? தமிழர்கள் அங்கே இருக்கக்கூடாது என்று சொன்னால் * * *

இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாக இருப்பதால் இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் பேசினார் என்றாலும் அவர் தனிப்பட்டவர் அல்ல. ஒரு இயக்கத்தின் சொந்தக்காரர். ஒரு கட்சியின் பொறுப்பான உறுப்பினர். அவரது கட்சியின் கிளை பெங்களூரில் பெரியதாக இருக்கிறது. அவர் கடைசியில் பேசியது தப்பாக வரும். ஆகவே **என்று சொன்னதையெல்லாம் எடுத்து விடுகிறேன். தனிப்பட்ட சிலர் பெயர்களைக் கூட முதலில் சொன்னார்கள் *என்று சொன்ன அவற்றையும் நீக்கி விடுகிறேன்.

**திரு. கே. கல்லன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உதகையில் நடந்த அந்தச் சம்பவம் திட்டமிட்டு ஏற்பட்ட ஒரு சம்பவம் அல்ல. ஏறக்குறைய வருஷம் பூராவும் பல மாநிலங்களில் இருந்து வந்து அங்கே ஷீட்டிங்குகள் எடுக்கிறார்கள். சம்பவம் நடந்த அன்று ஏறக்குறைய 7, 8 ஷீட்டிங் பல பகுதிகளில் நடந்து கொண்டு இருந்தது. திரு. ராஜ்குமார் அவர்களின் படப்பிடிப்பு ஏரிக்கரையில் நடந்து கொண்டு இருந்தது. அங்கே போலீசார் இருந்தார்கள். ஆனால் சில இளைஞர்கள் ஏதோ தெரியாமல் செய்துவிட்டார்கள். அது பெரிய கலாட்டா ஒன்றும் இல்லை. அதைப் பெரிதுப்படுத்திவிட்டு அங்கே சென்று நம்முடைய தமிழ் சகோதரர்களை அவர்கள் தாக்குகிறார்கள் என்றால் அது நம்முடைய எல்லோருடைய கவனத்தையும் கவருகின்ற ஒன்றாகும். ஆகவே, அங்கே வாழும் நம்முடைய தமிழ் சகோதரர்களுக்கு நாம் பாதுகாப்பு அளிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் இதை இப்படியே விட்டுக்கொண்டு இருந்தால் அண்டை மாநிலங்களில் வாழும் நம்முடைய தமிழர்களின் நிலைமை மிகவும் மோசமாகவும் இருக்கும் இந்தச் சம்பவம் மிகவும் பெரிதுப்படுத்தப் பட்டு இருப்பதால், இப்படிப்பட்ட நிலை இந்தியா பூராவிலும் பரவிவிடக்கூடாது. அங்குள்ள தமிழ் மக்களுக்கு இப்படிப்பட்ட நிலை வந்துவிடக்கூடாது அங்குள்ள தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதால், இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**திரு. என் வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது சபை கொஞ்சம் கூடுதலான நேரத்தை எடுத்துக்கொள்வது சிறந்ததாக இருக்கும் என்று முன்னாலேயே சொல்ல விழைகிறேன். 4 ஆம் தேதி அன்று உதகையில் ராஜ்குமாருக்கும், சிலருக்கும் ஏற்பட்ட சம்பவத்தை ஒட்டி இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது என்பதை நாம் பார்க்கவேண்டும். ஏற்கனவே நம்முடைய நாட்டில் பல்வேறு விதமான சிக்கலுக்கு மத்தியில்—இன வெறி, மொழிவெறி கிளப்பிவிடப்பட்டு, அது வளர்ந்து வருகின்ற பின்னணியில் இந்த நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை வற்புறுத்தும் அனைவரும், இந்த நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்று விரும்பும் அனைவரும், இந்தப் பிரச்சினையை கவலையோடும், கவனத்தோடும் பார்க்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

இதை மேலும் எரி நெருப்பாக மாறாமல் அணைப்பதற்கு, அமைதி ஏற்படுத்துவதற்குபான சந்தர்ப்பத்தை இந்த சட்டசபை சிருஷ்டிக்கவேண்டுமென்று மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி விரும்புகிறது. இந்த நாட்டினுடைய ஜனநாயக வழியில் தான் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த வழியில் தான் அனைத்து மாநிலங்களோடும் உறவுகொண்டிருக்கிறோம். துரதிருஷ்டவசமாக 1947 ஆம் ஆண்டு நாம் ஏற்றுக்கொண்ட பிரிவினைகள் அனைத்தும், இந்த நாட்டினுடைய சங்கடத்தை மேலும் சங்கடமாக்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு மத சர்ச்சைகளை இன்று நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடலாகாது.

அறுபத்திஏழு கோடி மக்களைக் கொண்டிருக்கும் பாரத பூமியிலே நாம் அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சண்டையிடுகிறோம். நம்முடைய மொழியைப் பாதுகாப்பதற்காக சண்டையிடுகிறோம். நம்முடைய கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே அண்டை மாநில மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும். இணக்கமான பாதுகாப்பை மத்திய ஆட்சியின் மூலம் இந்த ஜனநாயகத்தைக் காத்திடவேண்டும் என்று விரும்புகிறோம். இதை எதிர்ப்பதற்கான சில தீய சக்திகள் இந்தியாவிலே இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நேற்று கர்நாடகத்தில் நடந்த சம்பவம் மிகவும் துயரமானது. தமிழிலே என்னென்ன வார்த்தைகள் இருக்கின்றனவோ, அதை விட கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே சிறிதளவு கூட யாருக்கும் நாம் விட்டுக்கொடுக்கலாகாது. அதே நேரத்தில் வட மாநிலங்களில் நடக்கும் கொடுமைகளை இந்த அவை நினைவில் கொள்ளவேண்டும். பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறும்

[திரு. என். வரதராஜன்] [1984 மார்ச் 6

அனைத்து அநீதிகளையும், அக்கிரமங்களையும் எதிர்த்து இன்று
அனைத்துக் கட்சிகளையும் சார்ந்தவர்கள் பாராளுமன்றத்தில்
ஒற்றுமைக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.
அறிக்கைகளை விடுகின்றார்கள். தேசத்தினுடைய கூட்டு
றுமை சிதறுவது பயங்கரமான தீ. , நம் நாட்டினுடைய ஒற்
விதமான ஜனநாயகம் முன்னேறுவதை அழித்துவிடும் சகல
யும் கண்டு நாம் அஞ்சுகிறோம் என்று நம்முடைய என்பதை
அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள் என்பதை தலைவர்
கூடாது. இத்தகைய சம்பவங்கள் நடந்த மறந்துவிடக்
நம்முடைய முதலமைச்சர் அவர்களோ, அல்லது பிரச்சினையின் மீது
பாக அவை முன்னவர் அவர்களோ நேற்று இங்கே அவையின் சார்
பித்து, அவர்களே இந்த விவாதத்தை ஆரம்பித்து அறிக்கை சமர்ப்
மிகவும் உபயோகமாக இருந்திருக்கும். இருந்தால்,
பவங்கள் நடந்து முடிந்துவிட்டன. இன்று இவ்வளவு சம்
புறுத்த விரும்புவதெல்லாம், இன்றைக்கும் நான் வற்
முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்பது இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம்
சினைகளினால் அண்டை தான். இந்தப் பிரச்
வாகாமல் பாதுகாக்கவேண்டும். மாநிலங்களோடு மோதல் உரு
காக்கப்படவேண்டும். நம்முடைய உரிமைகள் பாது
கர்நாடக அமைச்சரவர்களும் ஆகவே நம்முடைய அமைச்சரவர்களும்,
சினையைத் தீர்க்கின்ற உடனடியாக இந்தப் பிரச்
மேற்கொள்ளவேண்டும். அளவிற்கு கூட்டு நடவடிக்கைகளை
பற்றி நீதி விசாரணை இரண்டு பக்கத்து சம்பவங்களையும்
டனை அளித்தும், மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்
கும், இந்தப் நிரபராதிகளை பாதுகாக்கக் கூடிய நிலைக்
மான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு
அரசினுடைய முயற்சிகளைத் தொடர வேண்டும். அந்த முறையில்
வலியுறுத்தி இப்பிரச்சினை அணுகுமுறை துரிதமாக இருக்கவேண்டுமென்று
அலுவல்களை ஒத்தி குறித்து விவாதிக்க அவையின் இதர
கிறேன். வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய தமிழகத்தில் மொழி சிறுபான்மையினர்
பலரும் இங்கே மகிழ்ச்சியாக, அமைதியாக வாழ்கிறார்கள்.
இந்தியாவில் இந்த மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட மொழியைச்
சேர்ந்தவர் மட்டுமே வாழவில்லை. எல்லா மொழியைச் சேர்ந்
தவர்களும், மதத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கிறார்கள். ஆகவே
இந்தியா பூராவும் எல்லோரும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும்
அவரவர்களுக்கு ஏற்றமுறையில் வாழ வேண்டுமென்று நம்முடைய
அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழ
கத்தில் தெலுங்கர்கள், கன்னடியர்கள், மலையாளிகள், மராத்தி
யர்கள், சௌராஷ்டிரர்கள் போன்ற பல்வேறுமொழி சிறுபான்மை
யினர் எத்தனையோ நூற்றாண்டுகளாக வாழ்கிறார்கள். அத்தனை
பேர்களும் இந்த மண்ணுக்கு உரியவர்கள், மண்ணின் சொந்தக்
காரர்கள், என்பதனால் தமிழர்களாக ஏற்றுக் கொண்டிருக்
கிறோம். அத்தகைய ஒற்றுமையான, அமைதியான நிலை
தமிழகத்தில் இன்றளவும் இருக்கிறது.



1984 மார்ச் 6] [திரு. ப. நெடுமாறன்]

அதே போல் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் வாழக்கூடிய தமிழர்களுக்கும் எல்லா உரிமைகளும் அளிக்கப்பட வேண்டும். அவர்களும் அந்த நாட்டின் மண்ணின் மைந்தர்களாக, அந்த மாநில மக்களாக, ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம். இந்த அவையிலுள்ள எல்லோருடைய கருத்தும், இந்த அவைக்கு வெளியிலே உள்ள, தமிழ்நாடு பூராவும் உள்ள மக்களின் விருப்பமும் அதுவாகத்தான் இருக்க முடியும். ஆனால் அண்மைக் காலத்தில், அண்டை மாநிலமான கர்நாடகத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகள் அந்த எண்ணத்திற்கு உலை வைப்பதாக இருந்து கொண்டிருக்கிறது, என்பதை நான் மிகுந்த வேதனையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். யார் வந்தார்கள், அவர்களுக்கு என்ன ஏற்பட்டது, போன்ற சம்பவங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே விவரமாகச் சுட்டிக் காட்டி அவற்றைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே கோலாரிலே 8 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலங்கை வாழ் தமிழர்களுக்காக, ஊர்வலம் சென்ற போது சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் அங்கே மட்டும் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதே போல் இன்னும் கர்நாடக மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலே தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். நேற்றும் அதற்கு முதல்நாளும் , கர்நாடகத்திலே வாழக்கூடிய தமிழர்களுக்கு எதிராக, கர்நாடக மாநிலத்திலே பல்வேறு நகரங்களிலே, அங்கே வாழ்கின்ற சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு எதிராக கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்காக இந்தியாவிலே உள்ள ஒவ்வொருவரும் வெட்கி தலைகுனிய வேண்டிய விஷயமாகும். இந்தப் பிரச்சினையை மிக எச்சரிக்கையாக அணுக வேண்டும் என்பதிலே எனக்கு அபிப்பிராயபேதம் இல்லை. ஆனால் நேற்றையதினம் கர்நாடக மாநில சட்டமன்றத்திலே எதிர்க் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் வீரப்ப மொய்லி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உதகமண்டலத்திலே கர்நாடக நடிகர்ராஜ்குமார் அவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றி மத்திய போலீஸ் விசாரணை வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். இன்னொன்றையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ''Inter-State Judicial Commission consisting of High Court Judges from Karnataka and Tamil Nadu'' உடனடியாக நியமிக்க வேண்டும் என்றும், இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரிக்க் வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு அகில இந்தியக் கட்சியைச் சேர்ந்தவர் பொறுப்பு வாய்ந்த கட்சியைச் சேர்ந்தவர் மத்திய அரசையும், பல்வேறு மாநில அரசுகளையும் ஆண்டுக் கொண்டிருக்கக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர், அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். உதகமண்டலத்திலே ராஜ்குமார் தாக்கப்பட்டதற்காக 2 மாநிலங்களைச் சேர்ந்த உயர்நீதி மன்ற நீதிபதிகளைக் கொண்டவர்கள் விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதைப் போல, நேற்றைய தினமும், அதற்கு முன்தினமும், தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற

[திரு. ப. நெடுமாறன்] [1984 மார்ச் 6

கலவரங்களைப் பற்றியும், அதற்கு முன்னால், கடந்த 2 ஆண்டுக் காலமாக தொடர்ந்து கோலாரிலேயும் மற்றும் கர்நாடகத்திலே உள்ள பல்வேறு பகுதிகளிலேயும் நடைபெற்று இருக்கின்ற போலீஸ் துப்பாக்கிச் சூட்டுகளைப் பற்றியும், இன்னும் தமிழர்கள், மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்கள், முஸ்லீம்கள், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு எதிராக நடைபெற்ற, அவர்களுக்கு இழைக்கப்பட்டு இருக்கிற துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும், நீதி விசாரணை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் அறிவித்து இருந்தால், அதை நாம் நிச்சயமாக பாராட்டி இருக்க முடியும். ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அந்த மாநிலத்தில் உள்ள சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய ஒருவர், இப்படி ஒரு அபத்தமான யோசனையைக் கூறுவதன் மூலம், அங்கே வாழக்கூடிய சிறுபான்மையோர்களுக்கு தமிழர்களுக்கும், மற்றவர்களுக்கும் எதிராக அந்த மாநில மக்களைத் தூண்டி விடுகிறார் என்பதை நான் இங்கே வன்மையாகக் கண்டிக்கிறேன்.

(முற்பகல் 10-40)

நேற்றைய தினமும் அதற்கு முன்தினமும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் மிக விரிவாகப் பேசினார்கள். நான் அதற்குள் போகவில்லை. நான் அது சம்பந்தமாக ஒரு விஷயத்தை இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் கவனத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்திலே உள்ள கன்னட நாடு என்ற கட்சியின் தலைவராக சுப்பையா, எம்.எல்.சி. அவர்கள் இருக்கிறார்கள். அவர் ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவர் மட்டுமல்ல. ஒரு நல்ல தேசியவாதி. கர்நாடக மாநிலத்திலே நடிகர் ராஜ்குமார் ரசிகர்கள், ஊர்வலமாகச் சென்று, சென்ற மாதத்திலே நடைபெற்ற, அவர்கள் நடத்திய அந்த வன்முறைக் கலவரங்களை அவர்கள் பகிரங்கமாகக் கண்டித்தார்கள். தமிழர்கள், சிறுபான்மையோர்கள், போன்றவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று அவர் ஒரே ஒருவர்தான் மேல்சபைக்குள்ளேயும், வெளியேயும் பேசுகிறார்கள். அந்த அளவிற்கு, யார் தாக்கப்பட்டாலும், யார் தாக்குதலுக்கு ஆளானாலும் அவர்கள் யாருக்கும் கவலைப்படாமல் அதைப் பற்றிய உண்மைகளை இங்கே தமிழகத்திற்கு வந்து சொல்ல வேண்டும் என்று அவர்கள் விரும்பினார். அவர்களை நான் இங்கே அழைத்தேன். அவர்களும் இங்கே வந்து நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் சந்தித்தார்கள். இங்கே இருக்கக்கூடிய தமிழகத்தின் எதிர்க் கட்சித் தலைவர்களை எல்லாம் சந்தித்தார்கள். அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை சந்திக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் அன்றைய தினம் அவர்களால் சந்திக்க முடியவில்லை, அதற்குப் பிற்பாடு தமிழகத்திலுள்ள பத்திரிகைக்காரர்களையெல்லாம் அழைத்து வந்து பேசினார். அவர் சொன்னது ஒன்றுதான், கர்நாடக மாநிலத்திலே வாழ்கிற தமிழர்களுக்கு, மற்ற மாநில



1984 மார்ச் 6] [திரு. ப. நெடுமாறன்]

சிறுபான்மையினருக்கு எல்லாவிதமான உரிமைகளையும், பாதுகாப்பையும் கொடுக்காமல், நான் இங்கே வந்து, இங்கே வாழ்கிற கன்னடியர்களுக்கு பாதுகாப்பு வேண்டும், உரிமை வேண்டும் என்று கோருவதிலே அர்த்தம் கிடையாது. நான் எதை மற்றவர்களுக்குக் கொடுக்கிறேனோ அதைத் தான் அவர்கள் எனக்கும் கொடுப்பார்கள். அந்த உண்மையை நடிகர் ராஜ்குமார் போன்றவர்கள் உணரவில்லை. அவருடைய சுய நலத்திற்காக, சொந்த நன்மைக்காக ராஜ்குமார் கன்னட வெறியரை தூண்டிவிட்டு, அங்கே வாழ்கிற அப்பாவி மக்களை ஏமாற்றுகிறார். ஆனால் கர்நாடகத்தில் உள்ள மிகப் பெரும்பாலான மக்கள், ராஜ்குமாரின் கருத்துக்களை ஏற்கவில்லை. அவர்கள் என்னுடைய கருத்துக்களைத் தான் ஏற்கிறார்கள். நாங்கள் ஒரு நாளும் இது போன்ற அநீதிகளுக்கும், அக்கிரமங்களுக்கும் உடந்தையாக இருக்க மாட்டோம் என்று, இங்கே எல்லாத் தலைவர்களிடமும் சொன்னார், பத்திரிகைகளிடமும் சொன்னார். பத்திரிகைகளிலேயும் இவையெல்லாம் வந்திருக்கிறது.

அவர் இன்னொன்றையும் வற்புறுத்திச் சொன்னார். நடிகர் ராஜ்குமார் இங்கே வந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார். அவரிடம் என்ன சொன்னார் என்பதை மாண்புமிகு முதல்வர் வாயிலாக நான் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ராஜ்குமார் என்ன சொன்னார் என்பது வேறு. அங்கே வந்து அவர் பேசியது என்ன என்பது வேறு. அங்கே வந்து அவர் தமிழர்களுக்கு எதிராக கலவரங்களை தூண்டி விடுகிறார்கள். இங்கே தமிழகத்திற்கு வந்து, நான் இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தவன். இங்கே 30 ஆண்டுகளாக இருக்கிறேன். என் சொத்து சுகங்கள் இங்கேயிருக்கின்றன. என்னுடைய தொழில் இங்கே தான் நடக்கிறது. இப்படி இருக்கும்போது நான் தமிழர்களுக்கு விரோதமாகப் போவேனா என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே போய், பெங்களூரிலே, தமிழர்களுக்கு எதிராக கலவரங்களை தூண்டுகிறார்கள். ஆக, அவருடைய இரட்டை வேடத்தை அம்பலப்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய முக்கியமான குறிக்கோள், அதற்காகத்தான் தமிழகத்திற்கு வந்தேன். மற்ற தலைவர்களைச் சந்தித்தேன் மாண்புமிகு முதல்வர் அவர்களை சந்திக்க முடியவில்லை. சந்தித்தால், அவரிடம் ராஜ்குமார் என்ன சொன்னார் என்பதை அறிந்து கொண்டு, அங்கே போய் சொல்வேன் என்று அவர் சொன்னார்.

அதுதான் ராஜ்குமார் ரசிகர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஆத்திரம். அதன் காரணமாக நேற்று அங்கு சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். ஏ. கே. சுப்பையாவை உடனடியாக கைது செய்து சிறையிலே போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அந்த மாநில முதலமைச்சர், எந்த குற்றத்திற்காக ஏ. கே. சுப்பையாவை கைது செய்து பிடிப்பது என்று கேட்டிருக்கிறார்கள்.

[திரு. ப. நெடுமாறன்] [1984 மார்ச் 6

கர்நாடக மாநிலத்தில் ஏ. கே. சுப்பையாவைப் போன்ற தேசிய தெளிவு படைத்த சிந்தனையாளர்கள் இன்னமும் இருக்கிறார்கள். அவர்கள் அந்த மாநிலத்து மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறி, அந்த மாநில மக்களை சரியான திசையிலே செலுத்திச் செல்வார்கள் என்ற நம்பிக்கை என்னைப் போன்றவர்களுக்கு இருக்கிறது. அதைப் போல தமிழகத்தைப் பொறுத்த வரையில், எந்தச் சிறுபான்மை மக்களுக்கும் எதிராக, எந்தக் காலத்திலும், எந்தவித நடவடிக்கையையும் தமிழர்கள் எடுத்தது இல்லை. இங்கே எல்லோரும் ஒன்றாக வாழ்கிறோம். சட்ட மன்றத்திலே, பாராளுமன்றத்திலே, பஞ்சாயத்துக்களிலே, பஞ்சாயத்து யூனியன்களிலே எல்லாம் பல்வேறு சிறுபான்மையினருக்கு, பல்வேறு கட்சிகளின் சார்பிலே முக்கியமான பதவிகளை இங்கே, கொடுத்திருக்கிறோம். இந்த சௌஜன்ய நிலை அண்மை மாநிலமான கர்நாடகத்திலும் இருக்க வேண்டும். அதற்கு உத்திரவாதம் அளிக்க வேண்டிய மகத்தான பொறுப்பு கர்நாடக அரசுக்கும் உண்டு. மைய அரசுக்கும் உண்டு.

அந்த வகையில் கர்நாடகத்தில் தொடர்ந்து கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகிற தமிழர்களைப் பாதுகாக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்க வேண்டும். அந்த வகையில் நடவடிக்கைகளை எடுக்க, மைய அரசுக்கும் கர்நாடக அரசுக்கும், இந்த அரசு வலியுறுத்த வேண்டும். அதற்காக இன்னும் விரிவாக விவாதிக்க வேண்டி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் வேண்டுகிறேன்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும் அதற்கு முந்தைய நாளிலும் பெங்களூரிலே தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதையும், சொத்துக்கள் சூறையாடப்பட்டதையும், மற்றவர்கள் அதனால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமையையும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஊட்டியிலே நடைபெற்ற அந்தச் சம்பவம் தான், இதற்குக் காரணம் என்று சொல்வது, ஒரு நொண்டிச் சமாதானம்தான் ஆகும்.

ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே, வன்முறைச் சம்பவங்கள் தொடர் கதையாக பெங்களூரிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் போக்கு மேலும் நீடித்துக் கொண்டே போகும் என்று சொன்னால், பெங்களூரிலே தமிழர்கள் வாழ முடியாத நிலைமை ஏற்படும். எனவே, இதற்கு முற்றுப் புள்ளி வைக்கின்ற நிலைமையிலே, தமிழர்கள் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தோடு தான் இருக்கிறார்கள் என்ற உணர்வை கர்நாடக மக்களுக்கு தெரிவிக்கின்ற முறையிலே, இப்பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 6]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக இங்கே கொண்டு வந்திருக்கின்ற ஒரு பிரச்சினை, உணர்ச்சிவயப் படாத அளவுக்கு நாம் தெளிவாகவும் திடமாகவும் இருந்து முடிவு செய்ய வேண்டிய ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்த்தினார்கள் என்பது மட்டுமல்லாமல் இந்த அவையிலே உள்ள அத்தனை உறுப்பினர்களும் அதை அவ்வப்போது உணர்ந்து வருகிறார்கள். பெங்களூரிலே இப்போது நடைபெற்று வருகிற சம்பவங்கள் உள்ளபடியே தமிழர்கள் அத்தனை பேர்களுக்கும் கொதிப்புணர்ச்சியையும் உள்ளபடியே மிக்க வருத்தத்தையும் அளிக்ககூடிய ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆகவே ஒரு மொழி மாச்சரியத்தின் அடிப்படையில் கலவரங்கள் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது வருந்தத்தக்கது மட்டுமல்லாமல் கண்டிக்கத்தக்கதாகவும் அமைந்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அது மட்டுமல்லாமல் உதக மண்டலத்திலே நடைபெற்ற ஒரு கலவர நிகழ்ச்சியினுடைய எதிரொலியாகத்தான் பெங்களூர் மற்ற இடங்களிலேயும் நடைபெற்றது என்பதை முழுவதையும் ஏற்றுக் கொள்ளவதற்கில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இது ஒரு சாக்காக அமைந்திருக்கிறது என்பதும் உண்மைதான். இப்படிப்பட்ட உணர்வு தொடர்ந்து பல்வேறு நேரங்களில ஏற்பட்டபோது அவ்வப்போது தமிழக அரசின் சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் கர்நாடக மாநில முதலமைச்சருக்கு எடுத்து கூறப்பட்டு அவ்வப்போது அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இப்போது கர்நாடக மாநில முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ஹெக்டே அவர்கள் நிதானம் மிக்கவர்கள் என்பது மட்டுமல்லாமல் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றும் பாங்கு கொண்டவர்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

அந்த வகையிலேதான் அவருடைய சொல்லும் அவருடைய நடவடிக்கையும் தொடர்ந்து அமைந்துகொண்டு வருகிறது என்பது மட்டும் அல்லாமல், இந்த மாநில அரசு எடுத்து கொண்டு இருக்கிற நடவடிக்கைகளை ஒட்டியும் சரி, இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கின்ற உணர்வு பூர்வமான தன்மைகளின் அடிப்படையிலும் சரி அவர்கள் நியாயமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கு ஒரு அமைதி நிலையை உருவாக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்கள் மேற்கொள்வார்கள் என்று நாம் ஓர் அளவு உறுதி கொள்ளலாம். அந்த வகையில் அவருடைய பேச்சு அமைந்து இருக்கின்ற பாங்கையும் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆகவே ஊட்டியில் படப்பிடிப்புக்குச் சென்ற கர்நாடக நடிகர் திரு. ராஜ்குமார் அவர்களை எதிர்த்து சில சமூக விரோதிகள்

சிலர் நடத்திய வேண்டத்தகாத கலவரமும் சரி அதை ஒட்டியதாக கருதப்பட்டு இன்றைக்கு • கர்நாடக மாநிலத்தில் தமிழர்களை எதிர்த்தும் தமிழ் திரைப்படங்களை எதிர்த்தும் அங்கு சில சமூகவிரோதிகள் நடத்தி வருகின்ற விரும்பத்தகாத கலவரங்களும் மிகவும் வருந்துவதற்கரியன மட்டும் அல்லாமல் மிகவும் கண்டிக்கதக்கனவாக அமைகின்றன என்பதை நாம் உள்ளபடியே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழக மாநிலம், கருநாடக மாநிலம் ஆகிய இரண்டு மாநிலங்களிடையேயும் சரி, தமிழக மக்கள் கன்னட மக்கள் ஆகிய இன மக்களிடையேயும் சரி, நல்லுறவும், நட்புறவும் நிலவி வருகின்றன என்பதை யாரும் மறுக்க இயலாது. அந்த நல்ல நட்புறவை தொடர்ந்து நிலை நாட்டி வருவதிலே தமிழக அரசு அக்கரையும் ஆர்வமும் காட்டி வருகிறது.

தமிழகத்திலுள்ள பெரும்பான்மையினரான தமிழ் மக்கள் சிறுபான்மையோரான கன்னட மக்களுக்கு முழு மதிப்பும் மரியாதையும், பாதுகாப்பும் அளித்தே வருகின்றன. அது போலவே கருநாடகத்திலுள்ள பெரும்பான்மையோரான கன்னட மக்கள் அங்கு வாழும் சிறுபான்மையோரான தமிழ் மக்களுக்கு உரிய மதிப்பும், மரியாதையும் தந்தே வருகின்றனர். ஆனால் அங்கேயும் சரி இப்போது ஊட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒட்டி இங்கேயும் சரி சில வெறியர்களால் தூண்டிவிடப்படும் பொறுப்பற்ற சில சமூக விரோதச் சக்திகள் இப்படிப்பட்ட கலவரங்களில் ஈடுபடுகின்றனவே தவிர பொதுவாக நல்ல அறிவு படைத்தவர்கள், அறிந்தவர்கள். படித்தவர்கள், பாங்கு கொண்டவர்கள் பொதுமக்கள் ஆகியவர்கள் கர்நாடக மாநிலத்திலும் சரி தமிழக மாநிலத்திலும் சரி இந்த மொழி மார்ச்சியத்தின் அடிப்படையில் பகைமையை வளர்த்து அதன் மூலமாக பல சேதங்களுக்கு இடம் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தை தவிர்க்கவே எப்போதும் விரும்பி வருகிறார்கள்.

படப் பிடிப்புக்குக் கர்நாடக மாநிலத்திற்கு முன்பு சென்ற சில தமிழ் நடிகர்களை அங்குள்ள சமூக விரோத சக்திகள் விரட்டியது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு காட்டினார்கள். இது கண்டிக்கதக்கது. அந்த வகையில் ஏற்பட்ட உணர்வு தான் ஓரளவுக்கு இங்கே ஊட்டியில் அவர்கள் வந்த போது அதே போல் ஊட்டியில் சில சமூக விரோத சக்திகள் உணர்ச்சி வயப்பட்டவர்களோடு அவர்களும் சேர்ந்து கலவரத்தில் இறங்கியதையும் நாம் கண்டிக்க கடமைப்பட்டு இருக்கிறோம். அதை நாம் ஆதரிக்கவில்லை.

கன்னட நடிகரோ அல்லது பிற மாலநில நடிகர்களோ தமிழ் நாட்டிற்கு வந்து படப்பிடிப்பில் கலந்து கொள்வதை தமிழக அரசு வரவேற்கிறதே அல்லாமல் அதனை தடுக்கும் எண்ணம் தமிழக அரசுக்குத் கிடையாது என்பதை நான் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





(முற்பகல் 10-50)

3-3-1984 அன்று உதகமண்டலம் ஏரியின் அருகில் கன்னட
திரைப்பட நடிகர் திரு. ராஜ்குமார் மற்றும் அவருடைய குழு
வினர் ஆகியோர், ஒரு திரைப்படத்திற்கான வெளிப்புறக் காட்
சியை படமெடுத்துக்கொண்டிருக்கும் போது திரைப்படக் குழு
வினருக்கும், சமூக விரோதிகள் சிலருக்கும் இடையே தகராறு
ஏற்பட்டு அதனால் இரு தரப்பிலும் சிறு காயங்கள் ஏற்பட்டன.
ஆனால் இதனுடைய தன்மைகளை நீங்கள் உணர்ந்துகொள்ளும்
போது சாதாரணமாக ஊட்டி போன்ற இடங்களில் படப்
பிடிப்புக்கு பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு
மொழியைச் சேர்ந்தவர்கள் வருகிறபோது அவர்கள் தங்களுக்கு
காவல் துறை பாதுகாப்பு தரவேண்டும் என்று கேட்பதும்....

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ஒரு கருத்தை சொன்
னார்கள். பெங்களூரில் நடைபெற்ற அந்த விரும்பத்தகாத சம்ப
வத்தை ஒட்டி சிலர் இங்கே ஊட்டியில் தகராறில் ஈடுபட்டார்கள்
என்று சொன்னார்கள். ஒன்றை நாவலர் அவர்கள் திரும்ப திரும்ப
சொல்வதிலிருந்து எனக்கு ஒரு ஐயம் ஏற்படுகிறது. தமிழ்
நடிகர்கள் தமிழ் பட பிடிப்புக்காக போனவர்களை பெங்களூரில்
அந்த நடிகர் ரசிகர்கள் அடித்தார்கள் என்ற உணர்வு சாதாரண
ஒரு தமிழனுக்கு கூட வருவது உண்டு. ஆகையினால் அவர்
கள் தமிழ் உணர்வு கொண்ட தீவிர வாதிகள் அல்லது உணர்ச்சி
வயப்பட்டவர்கள் என்ற வார்த்தையை அவர் பயன்படுத்த
வேண்டுமே தவிர, அவர்களை சமூக விரோதிகள் என்று கொண்டு
போய் ஒரு பேடு லிஸ்டில் வைத்து விடக்கூடாது. அப்படித்தான்
ஒரு காலத்தில் தமிழ் வாழ வேண்டும் என்று சொன்ன
சின்னசாமியை கூட சமூக விரோதிகள் என்று சொன்
னார்கள். நாவலர் அவர்கள் வாயால் தமிழ் உணர்வு படைத்
தவர்களை சமூகவிரோதி என்று சொல்லக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, எதையும் பொறுப்பு உணர்ச்சியோடு நிலைமையை
கருதி எதிர்காலத்தில் எதுவும் ஏற்படக்கூடாது என்ற காரணத்தி
னால்தான் இதை சொல்லி நான் திட்டவட்டமாக தெளிவாக
பயன்படுத்தி வருகிறேனே தவிர மாண்புமிகு உறுப்பினர் அதை
ஒத்துக் கொள்ளவேண்டும். ஏன் என்றால் அதில் சில பல
உண்மைகளை நான் எடுத்துச் சொன்னால் அது வேறு சில பல
விளைவுகளை இங்கே ஏற்படுத்தி விடும் என்பதற்காகத்
தான் ஒரு பெயரை நான் சமூகவிரோதி, சமூக விரோதி என்று
சொல்கிறேன். ஆனால் அவர்கள் வற்புறுத்துகிறபடி வேறு
உண்மையான பெயரை சொல்ல வேண்டும் என்ற நிலைமை
ஏற்பட்டு விடுமானால் வேறுபல சூழ்நிலைகளுக்கு அது இடம்
அளித்து விடும் என்று நான் பொதுவாக சொல்கிறேன். இந்தச்
செயலைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு.
துரைமுருகன் அவர்கள் அது சமூக விரோதச் செயல் என்பதை

அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டும். ஒரு கலவரத்தை நடத்துவது யாராக இருந்தாலும் எந்த இடத்தில் இருந்தாலும் அதை எவ்வளவு கண்டிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இங்கேயும் கண்டிக்க கடமைப்பட்டு இருக்கின்றார்கள் என்ற அளவுக்கு நாம் இங்கே இருக்கின்ற நிலைமையை விட்டு இங்கே அமைதி நிலைமையை பாதுகாக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் எடுத்துக் காட்டியது போல் அங்கு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்கள் தமிழ் மக்கள் மிக அமைதியாக இருந்து மிகப் பொறுமையோடு, பெருந்தன்மையோடு இருக்கும்போது இங்கே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவது நமக்கு நல்லது அல்ல என்று அறிவுறுத்த தக்க அளவுக்கு தமிழகத்தினுடைய மாண்பையும் தமிழகத்தினுடைய தன்மையையும் அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். ஆக அதையும் நாம் உணர வேண்டும். ஏன் இதை சொல்கிறேன் என்றால் படப்பிடிப்புக்கு வருகிறபோது பாதுகாப்பு கொடுப்பதும், பாதுகாப்பு கேட்பதும் ஒரு இயற்கையாக இருந்து வருகிறது. அதைப் போலவே 1-ஆம் தேதி படப்பிடிப்புக்கு இந்த குழுவினர் வருவதற்கு முன்னாலேயே 28-2-1984 அன்று அவர்களுடைய தயாரிப்பு மேலாளர் திரு. விக்ரம் சீனிவாசன் என்பவர் நீலகிரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு படப்பிடிப்பு எடுக்கும் இடங்களுக்கு பாதுகாப்பு தரும்படி விண்ணப்பம் அளித்து இருக்கிறார்கள். வந்த அனைவரும் உதக மண்டலத்தில் இருக்கும் நடராஜ் என்ற விடுதியில் தங்கி இருக்கிறார்கள். அதற்கு பிறகு அவர்கள் தயாரிப்பு மேலாளரிடமிருந்து வந்த விண்ணப்பத்தின் பேரில், நீலகிரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் மாவட்டத்தில் உள்ள எல்லா ஆய்வாளர்களுக்கும் டி.டி.ஓ. 281615ன் படி படம் எடுக்கும் இடங்களில் படம் முடிந்து மாவட்டத்திலிருந்து போகும் வரையில், பந்தோபஸ்து கொடுக்கும்படி அறிவுரையும் வழங்கப்பட்டிருக்கிறது.

அதே மாதிரி 1-3-1984 அன்று குன்னூரில் படப்பிடிப்பு நடைபெற்று இருக்கிறது. அதற்கு ஒரு உதவி ஆய்வாளரும், இரண்டு தலைமை காவல்காரர்களும், 5 காவலர்களும் பந்தோபஸ்திற்கு போய் இருக்கிறார்கள். அந்த குன்னூர் படப்பிடிப்பு ஒழுங்காப் நடந்து முடிந்து இருக்கிறது. அன்று படப்பிடிப்பில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை. பாதுகாப்பு நடைபெற்று இருக்கிறது.

மறுபடியும், 2-3-1984 அன்று அவர்கள் படகு வீட்டில் படபிடிப்புக்காக சென்றார்கள். எப்போதும் பட பிடிப்புற்கு முதல் நாள்தான் முடிவு செய்வார்கள் என்றும் மறுநாள் வெயில் நிலைமை, மேகமூட்ட நிலைமை மற்றவை எல்லாம் பார்த்து இடத்தை மாற்றுவார்கள். திடீர் திடீர் என்று மாற்றும்போது அன்று காலையில்தான் இங்கே படப்பிடிப்பு நடைபெறும் என்று காவல்துறைக்கு அறிவிப்பார்கள்.





முதலில் அவர்கள் அறிவித்திருந்தது, படகு வீட்டுக்குப் பக்கத்தில் படப்பிடிப்பு நடைபெறுவதாக அறிவித்திருந்தார்கள். அதற்கேற்ப காவல் துறையினர் அங்கே சென்றார்கள். ஆனால் படப்பிடிப்புக்காரர்கள், அந்த இடத்தை மாற்றிவிட்டு, அந்தப் படகுத் துறையினுடைய படப் பிடிப்பு இடத்திற்குப் போகாமல், அங்கே இருக்கின்ற வடக்கு வடிகால் மேற்குப் பகுதியில் உள்ள வடிகால் இடத்திற்கு அந்தப் படப்பிடிப்பு இடத்தையே மாற்றி விட்டார்கள். இங்கே போன காவலர்கள் திரும்ப வந்து விட்டார்கள். அதற்குப் பிறகு அங்கேயும் போய், மறுநாள் வேறு இடத்திற்குப் போய் இருக்கிறார்கள். ஆக, அங்கே போயிருந்தபொழுதுகூட, காலை 9 மணியிலிருந்து 12-45 மணி வரையிலும் அந்தப் படப்பிடிப்பு நடந்துகொண்டுதான் இருந்திருக்கிறது.

அதற்குப் பிறகுதான் நான் சொன்னபடி, மாணவர்கள் சிலரும், சமூக விரோதிகள் சிலரும் அங்கே சென்று, அவர்கள் இராஜ்குமாரைக் கேட்டிருக்கிறார்கள், தமிழரையும் தமிழக மக்களையும் மதிப்பதாக நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று அவரைச் சூழ்ந்துக்கொண்டு கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சர்ச்சைக்குரிய இடம் இதுவல்ல, அந்த சர்ச்சையிலே நான் ஈடுபட மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே வாக்குவாதங்கள் வந்து, அங்கு கலவரம் ஏற்பட்டதற்குப் பிறகு, படப்பிடிப்பு நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பிறகு, அதை ரத்து செய்து விட்டு, தாங்கள் இருந்த இடத்திற்குச் சென்றார்கள்.

அதற்குப் பிறகும் போலீசார் விரைந்து, தக்க பாதுகாப்பு தருவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பெங்களூருக்கு அந்தக் குழுவினரோடு சென்று விட்டார்கள்.

அந்த நிலைமையிலேயும் கூட நடிகர் இராஜ்குமார் பெங்களூருக்குச் சென்று என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு உண்மையைப் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். பெங்களூருக்குச் சென்று அவர்கள் நிருபர்களுக்குப் பேட்டியளித்த போது குறிப்பிட்டிருக்கிறார்கள் : "எனக்கு எதுவும் ஏற்பட்டுவிடவில்லை ; கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. மக்களின் அன்பு எனக்கு இருக்கும் வரை எதுவும் நேர்ந்து விடாது. ஊட்டியில் நடந்தது எனக்கு ஒரு அனுபவமாகும். இதற்கு முன்பு இது போன்று பல அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன" என்றுதான் குறிப்பிட்டு நேற்று செய்தித் தாள்களிலே வந்திருக்கின்றது.

அவர் தாக்கப்பட்டதாகவோ, அவருக்கு ஒரு கேடு ஏற்பட்டதாகவோ அவரேகூட பேட்டியிலே சொல்லவில்லை. கலவரம் ஏற்பட்டது ; கல் வீச்சுகள் நடைபெற்றன ; ஆனால் அவருக்கு ஒரு நிலைமையும் ஏற்படவில்லை என்று அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், செய்தித் தாள்களிலே அவரே தாக்கப்பட்டு விட்டார், அவரே தாக்கப்பட்டு விட்டார் அதற்கு என்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகக் கர்நாடகத்திலே உள்ள பல்வேறு பத்திரிகைகளிலேயும், மற்றவைகளிலேயும் வந்து ஒரு கொதிப்புணர்ச்சியை அங்கே ஏற்படுத்தி இருக்கிறது.

கலவரத்திற்கான சூழ்நிலை ஏற்படக் கூடாது என்பதுதான் தமிழக அரசின் எண்ணமாகும். கலவரம் தொடர்பாக ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், காவல் துறையைச் சேர்ந்த டி.ஐ.ஜி, ஊட்டிக்கு விரைந்து சென்று, அங்கேயே தங்கியிருந்து, மேலும் வேண்டத்தகாதவை நடக்காதவாறு கண்காணித்து வருகின்றார்கள். மேலும் புலன் விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையிலேதான் அவர் தாக்கப்பட்டார் என்றும், ஆனால் அவரே கொடுக்கின்ற ஸ்டேட்மெண்டிலேயிருந்து தனக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை, தான் தாக்கப்படவில்லை, ஆனால் கலவரம் நடந்தது என்று அவர் எடுத்துச் சொல்லியிருக்கின்ற இத்தகைய நிலைமைகளின் அடிப்படையிலே தான் பெங்களூரிலே, இருக்கிற தமிழர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதைப் போன்று உயிருக்குப் பாதுகாப்பு அற்ற நிலைமையும், உடைமைகளுக்குப் பாதுகாப்பற்ற நிலைமையும், அவர்கள் செய்கின்ற வாணிகம், வியாபாரம் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பற்ற நிலையும், தமிழிலே பேசினாலே தாக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலேயும் தான் மாண்புமிகு முதல்வரவர்கள் அந்த முதல்வரோடு பேசி ஒரு தக்க பாதுகாப்பை நீங்கள்தான் ஏற்படுத்த வேணடும் ; அரசை நம்பித் தான் அங்கே சிறுபான்மையோர் வாழ முடியும் என்று அவர்கள் எடுத்துச் சொன்ன பொழுது, '' நான் முழுப் பாதுகாப்பையும் தருகிறேன் ; என்னாலான அளவிற்கு எல்லாப் பாதுகாப்பையும் தருகிறேன் ; அங்கே இருக்கின்ற போலீசாரே இந்தக் கலவரத்தை அடக்குகின்ற பொழுது பல்வேறு சமயங்களிலே காயப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னமும் அவர்கள் சொன்னது, ஜனதாக் கட்சியினுடைய அலுவலகம், ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்களே தாக்கப்பட்டிருக்கிறார்கள் ; நானே தாக்கப்படுகின்ற சூழ்நிலையில்தான் இருந்திருக்கிறேன் ; அதை நான் அடக்கி வருகிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த நிலைமைகள் நமக்கு சந்தேகத்திற்கு இடமாய் இருப்பதனாலும், மொழி மாச்சர்யத்திற்கு அடிப்படையாகப் போய் அமைந்து விடக் கூடாது என்ற காரணத்தினாலும், உண்மை நிலைகளை நாட்டுச்குத் தெரிவிப்பதன் மூலமாகவும், கர்நாடகத்திலே வாழ்கிற மக்களுக்குத் தெளிவு பயக்க வேண்டுமென்பதற்காகவும், அங்கே வாழ்கின்ற பல இலட்சக்கணக்கான தமிழர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிற காரணத்தாலும் —அவர் கேட்டு அல்ல —மாண்பு



மிகு உறுப்பினர்களே சொன்னார்கள், அந்த நிலைமைகளைத் தெளிவுபடுத்த, உண்மைகளை விளக்க, அதன் மூலம் உலகு அறிந்து தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்காக, இந்த நிகழ்ச்சி இரண்டு மாநிலங்களுடைய நல் உறவைப் பாதிக்கின்ற வகையில் இருப்பதாலும், ஒரு தெளிவான நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காக, ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதி, இந்தச் சம்பவம் குறித்து ஒரு நீதி விசாரணை நடத்தத் தன்னுடைய அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லி, மேற்கண்ட அரசின் முடிவின்படி, இந்த நிகழ்ச்சி குறித்து நீதி விசாரணை செய்ய, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. நஞ்சப்பன் அவர்களை ஒரு நபர் ஆணைக் குழுவாக நியமிக்க அரசு முடிவு செய்திருக்கிறது. மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்ன பொழுது, நாம் ஒரு விசாரணை வைத்திருக்கிறோமே, அவர்களைக் கேட்க வேண்டாமா என்று கேட்டார்கள். அவர் கேட்டு நாம் வைக்கவில்லை. ஆனால் ஒன்று. இங்கே எப்படி நாம் பெருந்தன்மையோடு நிலைமைகளை விளக்கி, நிலைமைகளை உருவாக்குவதற்கு நீதி விசாரணை வைத்திருக்கிறோமோ, இதனுடைய அடிப்படையைப் பெற்று, அங்கே இருக்கின்ற மாநில முதலமைச்சரவர்களே அங்கே இருக்கின்ற பிரச்சினைகளுக்கு ஒரு நீதி விசாரணை வைத்து, தக்க முடிவை எடுத்து, ஒரு நிலைமைக்கு கொண்டு வருவது நல்லது என்ற ஒரு கருத்தை நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம் ; மாண்புமிகு உறுப்பினர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள் ; நானும் வெளிப்படுத்துகிறேன.

(முற்பகல் 11–00)

ஆனால் அவர்களை நாம் வற்புறுத்தக் கூடாது. நாம் எப்படி பெருந்தன்மையோடு இம்மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கின்றோமோ, அதேபோன்று பெருந்தன்மையோடு அவர்களும் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை காரணமாக இந்தப் பிர்ச்சினையில் அங்கே நடவடிக்கைகள் எடுப்பதைப் பொறுத்த வரையில், அவர்களிடத்திலேயே விட்டுவிடுகிறோம். , இரு மாநிலங்களுக்கிடையேயும் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதும், நிரபராதியாக இருக்கின்ற மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதும்தான் அங்கே இருக்கின்ற மாநில முதலமைச்சர் அவர்களுடைய எண்ணமும் ஆகும். எனவே அந்த வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஓரளவுக்கு நடுநிலையோடு இருக்கின்ற திரு. ஏ. கே. சுப்பையா அவர்களைக் கூட தாக்குகின்ற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. ஆகவே நல்லதொரு நிலைமையை அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று நாம் அத்தனை பேரும் விரும்புகிறோம். இது ஒரு மாச்சரியமான சூழ்நிலைக்கு பிரச்சினையை நாம் கொண்டு செல்லவில்லை என்பதைக் காட்டுகின்றது. இந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்திருப்பதோடு மேலும் பாது

காப்பான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும், ஒரு சுமுகமான சூழ்நிலை இரண்டு பக்கமும் ஏற்பட வேண்டும் என்பதில் நாம் உன்னிப்பாக இருக்கிறோம் என்பதையும் எடுத்துச் சொல்லி, எனவே இந்த அளவில் இது குறித்து மேலும் விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு ஸ்டேட்மென்டைப் படித்தார்கள். அதன்படி முதல் நாள் அவர்கள் சூட்டிங்-க்குப் போய் இருக்கிறார்கள். அதற்காக போலீசினிடத்திலே கேட்டிருக்கிறார்கள், போலீஸ் போய் பந்தோபஸ்து கொடுத்திருக்கின்றது. இரண்டாவது நாள் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் படப்பிடிப்புக்காரர்கள். ஆனால் அதற்குப் பிறகு மேக மூட்டம் காரணத்தால் படப் பிடிப்புக்காரர்கள் அந்த இடத்தை மாற்றி வேறு இடத்திற்குப் போய் விட்டார்கள். ஆனால் நம்முடைய போலீஸ், அவர்கள் இரண்டாவது நாள் படப்பிடிப்பிற்காக எந்த இடத்தைக் குறிப்பிட்டிருந்தார்களோ? அந்த இடத்திற்குப் பாதுகாப்பிற்காகப் போய் இருக்கிறார்கள். ஆனால் அங்கே படப் பிடிப்புக்காரர்கள் இல்லாததால் திரும்பி வந்து விட்டார்கள். அப்படி திரும்பி வந்ததற்குப் பிறகு தான் செய்தி தெரிவிக்கின்றது, படப் பிடிப்புக்காரர்கள் வேறு இடத்திற்குப் போனார்கள் என்று. உடனடியாக போலீஸ், பாதுகாப்பிற்காக அந்த இடத்திற்கு விரைந்து சென்றிருக்கிறது. எனவே தமிழ் நாட்டு போலீஸை பெறுத்த வரையில், அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தன்னுடைய கடமையை சரியாகத்தான் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது நான் அமைச்சர் அளித்த இந்த அறிக்கையிலே இருந்து தெரிகின்றது. அப்படிச் செம்மையாக கடமையை நிறைவேற்றிய காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது சரியல்ல. படப்பிடிப்பு இடத்தை மாற்றியது படப் பிடிப்புக்காரர்கள்தான். அப்படி இடத்தை மாற்றியது தெரிந்தவுடன் அந்த இடத்திற்கு ஓடி இருக்கிறார்கள், போலீஸ். அப்படி கடமையைச் செம்மையாகச் செய்த போலீஸ் எஸ்,பி. யை ஏன் மாற்றம் செய்ய வேண்டும்? தலைமைக் காவலரை ஏன் சஸ்பெண்ட் செய்ய வேண்டும்? நம்முடைய நிதியமைச்சரின் அறிக்கையிலே போலீஸ் தன்னுடைய கடமையை நன்கு செய்ததாகத்தான் இருக்கின்றது. ஆகவே அந்த ட்ரான்ஸ்பர் ஆர்டரைக் கேன்சல் செய்ய வேண்டும். சஸ்பென்சன் ஆர்டரையும் நீக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கைக்கு மதிப்பு தருவதாக இருக்கும். அதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி இரண்டாம் தேதியும், மூன்றாம் தேதியும் நடைபெற்றிருக்கின்றது. எனவே





அந்த மாவட்டத்தின் காவல் துறை அதிகாரி மாற்றப்பட்டதற்கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகச் செய்தி வரவில்லை. மறுநாள் அந்த இடத்திற்கு முன்கூட்டியே பாதுகாப்பிற்காக வராத காரணத்தால் தலைமைக் காவலர் எண் 384 என்பவர் மட்டும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அங்கே இருக்கின்ற டி.ஐ.ஜி. அவர்கள் சென்று அதைச் செய்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று, விசாரணைக்குப் பின், இதிலே ஒன்றும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டால், அவர் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குகின்ற நிலைமை இருக்காது என்பதைத் தெரிவித்துக் சொள்கிறேன். (குறுக்கீடுகள்). அதை நாங்கள் செய்யவில்லை. டி.ஐ.ஜி. அதைச் செய்திருக்கிறார். எனவே விசாரணைக்குப் பின் ஒன்றும் இல்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. (குறுக்கீடுகள்.) ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் காவல் துறையினருக்காக இவ்வளவு தூரம் பேசுகிறார் என்பதில் எனக்கு ஒரு மகிழ்ச்சிதான் ஏற்படுகின்றது. ஆகவே அங்கே நடவடிக்கை எடுத்தது நாமாக இருந்தால், அவர் சொல்வது போல் சரி என்று சொல்லி முடிவு எடுக்கலாம். ஆனால் நடவடிக்கை எடுத்தது டி.ஐ.ஜி. என்பதால் பின்னர்தான் தக்க முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகின்றது.

## 4 அரசினர் சட்ட முன்வடிவுகள்

**(அ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்), தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) இந்திய தண்டனைச் சட்டக் கோவை இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம் சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 6 சட்ட முன்வடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. பிற்பகல் 2½ மணிவரையில் இருந்து முடித்து விடலாம் என நினைக்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : இன்று இரண்டு மசோதாக்கள் பெரியதாக இருக்கின்றன. நாளைக்கும் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் துவங்கப்பட இருக்கிறது. திரு. அன்பில் தர்மலிங்கம் உட்பட கட்சித் தலைவர்கள் எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவு அது. உறுப்பினர்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[முற்பகல் 11-10]

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சட்டத்தையும் தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்)





சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவு மீது, சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்தத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அமைப்புகளுக்கு தேர்தல்களே நடக்காமல் ஒத்திவைத்துக்கொண்டு போவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இதிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் 6 ஆண்டுகள் 6 திங்கள் என்கிற சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு மாறாக 5 ஐந்து ஆண்டுகள் 9 திங்கள் என்று மாற்றிக் கொள்ளலாம். மூன்று மாதங்கள் கால அவகாசம் இருந்தால் போதும். அதற்கு பின்னாலே இதற்கான தேர்தலை நடத்துவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட அங்காடிகள் பற்றியும், அதனுடைய நிர்வாகம் பற்றியும், அரசு மிகநுட்பமாக கவனம் செலுத்த வேண்டும். பொதுவாக ஒரு சர்ச்சையை நாட்டிலே அரசின் சார்பிலே அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். இன்றைக்கு விவசாய விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை நம்முடைய நாட்டிலே கிடைக்கவில்லை, இது நாடு முழுவதும் இருக்கிற ஜனநாயக சக்திகளின் குரல். அநேகமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசினுடைய அல்லது அதனுடைய கட்சியின் குரலும் இதுதான் என்று நான் கருதுகிறேன். ஆனால் அவர்களுக்குச் சில சமயங்களில் இந்த குரலில் குழப்பம் ஏற்படுகிறது. அல்லது எதிர்வரிசையிலே இருப்பவர்கள் ஏதாவது மக்களிடத்திலே வேறு விதமாக அடையாளம் காட்டி இதிலே தப்பித்துக் கொள்ளலாம் என்று அரசு கருதினால், அது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் கடுமையாகச் சொல்லவில்லை, ஆனால் எச்சரிக்க விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட தவறி அவ்வாறு பேசிவிடுகிறார். விவசாய விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை வேண்டுமென்றால் அதிகமான விலை என்று சொன்னால், வாங்கி உண்பவர்களுக்கு விலை ஏறிவிடுமே என்று ; இப்படியெல்லாம் இரட்டைக் குரலிலே பலர் பேசுகிறார்களே என்றால், அவர்கள் தெரிந்து சொல்கிறார்களா அல்லது தெரியாமல் சொல்கிறார்களா என்று புரியவில்லை. நான் கேட்க விரும்புவது, கொடைக்கானலில் விளையும்படியான உருளைக்கிழங்கு ஒரு கிலோவிற்கு அந்த விவசாயிக்கு உண்மையான விலை 50 காசு கூட இல்லை. ஆனால் இன்றைக்கு சென்னையில் இருக்கிற குடிமகன் ஒரு கிலோ உருளைக்கிழங்கு வாங்க 3 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயிக்கா அந்த 2½ ரூபாய் போய்ச் சேர்கிறது ? அதற்குப் பதிலாக இந்த நாட்டிலே இருக்கிற இடைத்தரகர்கள் இவ்வாறு இந்த விலை ஏற்றத்தை உபயோகப்படுத்தி விவசாயிகளை ஏமாற்றி, வாங்கி உண்பவர்களை ஏமாற்றி, சர்க்காருக்கும் பட்டை நாமம் போட்டு, இந்த நாட்டிலே எதேச்சதிகாரத்தை அவர்கள் கையிலே வைத்திருக்கிறார்கள் விலைவாசியிலே. ஆகவே, இந்தச் சட்டம் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. ஆகவே விவசாய விளைபொருள்களுக்குக் கூடுதலான விலைகிடைப்பதினால் விலைகள் நாட்டிலே ஏறிவிடுகிறது என்ற வாதத்தை அரசு கைவிட

[திரு. என். வரதராஜன்] [1984 மார்ச் 6

வேண்டும். இன்றைக்கு இந்த விலைகள் ஏற்றுகிற அதிகாரமே அல்லது சக்தியோ விவசாய விளை பொருள்களுக்கு விலை ஏற்றுவதினால் வருவது இல்லை. அது இந்த நாட்டிலே மோனோபலி என்று சொல்லக்கூடிய ஏகபோக சக்திகளின் கையிலே இருக்கிறது; அவர்களுடைய கறுப்புப்பணத்தின் கையிலே இருக்கிறது. ஆகவே அவர்களால் விவசாயிகளை ஏமாற்ற முடிகிறது. இன்றைக்கு தமிழ் நாடு விவசாயிகள் அனைவரும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களை என்ன கேட்கிறார்கள்? நீங்கள் தஞ்சைக்கு, தென் ஆற்காட்டிற்கு நெல் கொள்முதல் இருக்கிறதே, மத்திய அரசு நிச்சயித்திருக்கிற நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 132 ரூபாய். அதற்கு வறட்சியால் அல்லது வெள்ளத்தினால் நிவாரணம் கொடுக்கிற, கூடுதலாக கொடுக்கிற 35 ரூபாய்; ஆக்வே அந்த 167 ரூபாய் இன்றைக்கு திருநெல்வேலியில் கிடைத்தால் போதும் என்று அம்பாசமுத்திரத்திலும், தாமிரபரணி பகுதியிலும் இருக்கிற விவசாயிகள் கேட்கிறார்கள். தமிழ் நாட்டிலே இவ்வாறு 167 ரூபாய் குவிண்டாலுக்கு கிடைத்தால் போதும் என்று விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுகூட கிடைக்கவில்லை, நீங்கள் அங்கேயெல்லாம் கொள்முதல் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் 175 ரூபாய் அளவிற்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். நம்முடைய கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் நடுத்தர அரிசி ரகம் விலை ஒரு குவிண்டாலுக்கு 350, 400, 450, ரூபாய் என்ற இடைவெளிகளில் விற்றுக் கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற நெல்லிற்கும் இந்த விலைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நான் கேட்கிறேன், இடைத்தரகர்களாலே விலை ஏற்றப்படுகிறது; விவசாயிகளுக்கும் கிடைப்பதில்லை; வாங்கி உண்பவர்களுக்கும் கிடைப்பதில்லை; ஆகவே இடைத்தரகர்களை தடுக்கக்கூடியது தான் இந்த அங்காடிகள் என்ற அடிப்படையான அமைப்பு. இதற்கு தேர்தல் போன்ற முறையான ஏற்பாடுகளைச் செய்யாவிட்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்று தயவு செய்து எண்ணிப்பாருங்கள். 6 ஆண்டுகளுக்கு தேர்தலே இல்லர்விட்டால் தனி அதிகாரிகள் இராஜ்யம் நடைபெறுமானால் ஆபத்து ஏற்படும்.

நேற்று நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. சின்னராசு ஒரு ஆபத்தான கருத்தைத் தெரிவித்தார். அது அரசினுடைய கருத்தாக இருந்தாலும் மிகவும் கண்டிக்க வேண்டிய கருத்தாகும். சாதாரணமான கருத்தல்ல. அவர் என்ன சொன்னார் என்றால், தேர்தெடுக்கப்பட்டவர்கள் வந்தால், அரசியல் கட்சிகளின் சர்ச்சைகள் நடந்தால் அங்கே காரியங்கள் நடைபெறாமல் போய்விடும்; ஆகவே நகராட்சிகளுக்கு, ஊராட்சிகளுக்கு தேர்தல் நடைபெறாமல் நல்ல காரியங்களை நம்முடைய தலைவர் அவர்கள் செய்கிறார்கள் என்று அவர் இந்த சட்டமன்றத்திலே பேசினார். ஒரு அபத்தமான அரசியல் விவகாரம். ஒரு யதேச்சாதிகார மனப்பான்மையை தெரிவிக்கக்கூடியது. தேசத்தில் தேர்ந்தெடுக்கப்படாத அமைப்புகள் நிலைக்க வேண்டும் என்ற கருத்து இருக்குமானால்..



1984 மார்ச் 6]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத்தலைவ அவர்களே, திரு. சின்னராஜ் அவர்கள் பேசும்போது நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அவர் தேர்தல் நடைபெறக்கூடாது, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வரக்கூடாது. அப்படி வந்தால் காரியங்கள் நடக்காது என்ற முறையில் பேசவில்லை. தேர்தல் நடைபெறாத சூழ்நிலையிலும் பல நற்பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்ற வகையில்தான் அந்தக் கருத்தைச் சொன்னார்கள்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வேளாண்மை அமைச்சர் பேச்சுக்களை கவனமாகக் கேட்கிறவன். அது மட்டுமல்ல. அவரது பல்வேறு கட்டுரைகளையெல்லாம் கவனமாகப் படிக்கக்கூடியவன் தானும் திரு. சின்னராஜ் அவர்களின் பேச்சைக் கேட்டதாகச் சொன்னார்கள். அவர் அப்படிக் கேட்கிறபோது ஒன்றை விட்டுவிட்டார் என்று நினைக்கிறேன். அந்தப் பேச்சு குறிப்பேட்டில் இருக்கிறது. எந்த அரசியல் கட்சி சர்ச்சைகளும் இல்லாமல் இருந்ததால் தான் காரியங்கள் நடந்தது என்று சொன்னார்கள். இது ஒரு அபத்தமான கருத்து. எந்த ஒரு நாட்டின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தாலும் சர்வாதிகாரம் பிறந்த உடனே ஏற்பட்டதாக இல்லை. இப்படிப்பட்ட கருத்துக்கள் ஆரம்பத்தில் ஏற்பட்டுத் தான் பின்னாலே அதற்கான சூழ்நிலை உருவாயிருக்கின்றது.

திரு. மா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் நான் நேற்று பேசிய கருத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் நேற்றுப் பேசுகிறபோது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், உறுப்பினர்கள் இல்லாத அந்தக் குறையே தெரியாத அளவிற்கு அரசு பல நல்ல திட்டங்களை அரசின் பொருளாதார உதவியோடு நிறைவேற்றி இருக்கிறது என்பதைத்தான் சொன்னேன். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத குறை மக்களுக்குத் தெரியவேயில்லையென்று தான் சொன்னேன். அரசு அப்படிப்பட்ட ஒரு கொள்கையை வைத்திருக்கிறது என்று பொருள்படும்படி நான் பேசவில்லை. அப்படிப்பட்ட குறையில்லாத அளவிற்கு பணிகள், திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றுதான் சொன்னேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்திருந்தால் ஒரு சமயம் நல்ல திட்டங்களை நிறைவேற்றுகிறபோது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அந்த அளவுக்கு பணிகளைச் செய்ய முடியாமல் கூடப் போயிருக்கலாம் என்று தான் சொன்னேன். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தவறாக நடப்பார்கள் என்று நான் சொல்லவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால், மக்கள் மத்தியில் பதட்டத்தைக் காணோம் என்றுதான் சொன்னேன்.

[1984 மார்ச் 6

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, திரு. சின்னராஜ் அவர்கள் விளக்கியதற்கு நன்றி. அவருடைய பேச்சில் அந்தத் தொனி இருந்தது. அதனால் குறிப்பிட்டேன். குற்றம் சாட்டுவதற்காக சொல்லவில்லை. அப்படிப்பட்ட கருத்தை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணமும் ஆகும்.

நேற்றையதினம் பேசுகிறபோது நம்முடைய துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் ஏதோ ஜோசியம் பார்த்துத் தெரிந்து கொண்டதாகச் சொன்னார்கள். அதாவது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக, திரு. குழந்தைவேலு அவர்கள் இருக்கும் வரையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் வராது என்று சொன்னார்கள். நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சருக்கு அப்படி ஜோசியம் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜோசியத்தைப் பார்த்து நாட்டு நிர்வாகத்தை நடத்த முடியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, ஜோசியம் எப்படி பொய்த்து விட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். நேற்றைக்கே தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு அதற்கான திட்டவட்டமான அறிவிப்புகள் செய்யப்பட்டுவிட்டன. ஆகவே இனிமேல் யாரும் ஜோசியத்தை நம்பவேண்டாம்.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, நம்பக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பமும். நானும் அதைத்தான் வற்புறுத்த விரும்புகிறேன். ஆனாலும், இந்தத் தனி அலுவலர்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயப் பொருள்களைப் பாதுகாத்துக் கொடுத்து விலை ஏறுகின்றபோது விற்பனை செய்து கொடுப்பதற்கு பதிலாக தரகு முதலாளிகள் கமிஷன் ஏஜண்டுகளின் உறவில் சிக்கியிருக்கின்றனர். நம்முடைய நாட்டில் சொல்வார்கள். மாரியம்மனுக்கு ஆயிரம் கண் உண்டு என்பார்கள். மாரியம்மனுக்கு ஆயிரம் கண் உண்டோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் இந்தத் தனி அதிகாரிகளுக்கு ஆயிரம் கண்கள் உண்டு. பருத்தி, நிலக்கடலை, மற்ற பொருள்களை அந்தத் தரகர்களுக்கு மறைமுகமாக விற்கக்கூடிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இதை இன்னும் கொஞ்சம் நுண்ணிப்பாகக் கவனிப்பார்களானால் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே, ஜனநாயக முறையில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை அமைப்பதற்காக தேர்தல் விரைவாக வைப்பதற்கு வழிவகை செய்யுங்கள் என்று கேட்டு, இவ்வாறு தனி அதிகாரிகள் பதவிகாலத்தை நீட்டிப்பதை அரசாங்கம் கைவிடவேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன்.



1984 மார்ச் 6]

(முற்பகல் 11-20)

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்-விளைபொருள் அங்காடி 1959–1979 திருத்த சட்டத்தின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். வேளாண்-விளைபொருள்களை பொறுத்தவரையிலும் நம்முடைய நாட்டில் கொள்முதல் செய்வதும் அல்லது மக்களுக்கு வினியோகம் செய்வதும், தனிப்பட்டவர்களுடைய கையிலே இருக்கக்கூடிய அந்த காரணத்தினால், அறுவடை செய்கின்ற காலத்தில் அனைத்து வேளாண் விளை பொருள்கள் விலை இறங்குவதும், அதற்கு பின்பு அந்த விலை ஏறுவதுமாக நாட்டில நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியாக இன்றையதினம் இருக்கிறது. ஆகவே விவசாயிகளுடைய நிலைமை குறித்து வேளாண் விளைபொருள் அங்காடிகளை ஏற்படுத்தியிருக்கக் கூடிய அரசு, அதே சமயத்தில் தனி அதிகாரிகளை நியமனம் செய்து, அவர்களுடைய விருப்பு, வெறுப்பு என்கின்ற முறையிலே இது நடைபெறுகின்ற காரணத்தினால், இந்த பல்வேறு ஊழல்களுக்கும், ஏனைய சூழ்நிலைக்கும் இடம் உண்டாக்கும் ஒரு நிகழ்ச்சியாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் அறுவடை ஆகின்றபோது அவர்கள் தங்களுடைய அறுவடைக் காலச் செலவுக்கோ, அல்லது அப்போது இருக்கின்ற செலவுக்கோ, இந்த விவசாயப் பொருள்களை அந்தக் கூட்டுறவு அங்காடிகளிலே வைத்து, அவர்களுக்குத் தேவையான பணத்தை பெற்றுக்கொண்டு, விலை ஏறியபின்பு எடுத்து விற்கக்கூடிய நிலை தான இருக்கிறது. ஆனால் இதிலே இருக்கக்கூடிய பிரச்சினை, அதிகாரிகள் சில இடங்களில் அவர்கள் ஓரளவு நேர்மையாக இருக்கக்கூடிய அதிகாரிகளாக இருப்பின், அது தொடர்ந்து ஒரு நல்ல நிலையும், அதே சமயத்தில் வேறு விதமான சூழ்நிலை இருப்பதன் காரணமாக ஊழல்கள் ஏற்படுமோ என்று ஐயுறும் நிலையும் இருக்கிறது. பொதுவாக ஊராட்சி மன்றத் தேர்தலானாலும் சரி, நகராட்சி மன்றத் தேர்தலானாலும் சரி, அது நடைபெறுவதற்குக் கூட ஒதுக்கப்பட்ட இடங்களையும், சட்டரீதியாகக் கொண்டுவந்து அதற்குப் பிறகு காலத்தை நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதைப் பொறுத்தவரையில், தேர்தல் நடைபெறுவதற்கு என்ன சிக்கல் இருக்கிறது என்று தெரியவில்லை. ஏற்கனவே சென்ற தடவை நான் இதே அவையிலே திருத்த சட்டத்தின்போது பேசியபோது, இதே நிலை தொடர்கதையாக நீட்டித்துக்கொண்டே போகிறது, இது எப்போது முடிவு அடையும் என்கிற நிலையில் பேசியபோது மாண்புமிகு அமைச்சரவர்கள், இது முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இது மேலும் தொடர் கதையாக நீட்டித்துக் கொண்டேயிருக்கிறது. மேலும் அதிகமான காலத்தை நீட்டிக்காமல் குறுகிய காலத்தில் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

[1984 மார்ச் 6

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மா , மிகு துணைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் டு வேளாண் விளை
பொருள் அங்காடிகள் சட்டத்தையு தமிழ்நாடு 1978 ஆம்
ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தையும்
மேலும் திருத்துவதற்கான சட்ட ன்வடிவின்மீது இந்திய
தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய ஒரு சில
கருத்துக்களை மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக நம்முடைய சட்டமன்றக் கூட்டத் தொடர்
ஆரம்பமாகிறது என்று சொன்னால்—தமிழிலே ஒரு பழமொழி
சொல்வார்கள். யானை வரும் பின்னே, மணியோசை வரும்
முன்னே என்று—அதுபோல சம்பந்தப்பட்ட சார்புடைய அமைச்
சரவர்கள், இந்த தேர்தலுக்கு என்னென்ன துறையில் வாய்ப்பு
கள் இருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் ஒத்தி வைத்து,
தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கவேண்டு
மென்ற ஒரு சட்டமுன்வடிவை ஒவ்வொரு சட்டமன்ற கூட்டத்
தொடரிலும் கொண்டுவருவது ஒரு வழக்கமாக இருந்துகொண்
டிருக்கிறது. இந்த மாமன்றத்தில் இந்த கூட்டத் தொடரில்கூட,
2, 3 நாட்களாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர
வர்கள் பல தடவை இந்தத் தேர்தலை ஒத்திவைத்திருந்தாலும்
கூட, நல்ல வேளையாக இந்தக் கூட்டத் தொடரிலேயே
தேர்தல் தேதியை அறிவித்து இருக்கிறார்கள்.

அவர்களைப்போல கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்
வழக்கம்போலவே அமைச்சர்கள் மாறினாலும்கூட, அந்த இலாகா
விலே நடைபெற இருக்கிற தேர்தல்களை தள்ளி வைத்து தனி அதி
காரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்து நேற்றையதினம் சட்
டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே இந்த 2 அமைச்சர்
களுக்கும் நான் சற்றும் தாழ்ந்தவன் அல்ல என்ற முறையிலே
நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் தன்
னுடைய பங்கிற்கு நானும் பதவிக் காலத்தை நீட்டிக்கிறேன்
என்ற மசோதாவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நம்
முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சி
துறை அமைச்சராக இருந்து அனுபவம் பெற்றவர். அவர்கள்
உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த காலம் முழுமைக்குமே
பதவியை நீட்டித்து நீட்டித்து, அதற்கான தேர்தல்களும் வந்து
விட்டது. அவர்கள் மீண்டும் இன்றைக்கு வேளாண்மைத்துறை
அமைச்சராக வந்து இருக்கிறார்கள். எனக்கு இருக்கிற ஐயம்
எல்லாம், எப்படிச்சென்ற கூட்டத் தொடரிலே உள்ளாட்சித்
துறை அமைச்சராக இருந்து பதவிக் காலத்தை நீட்டித்துக்
கொண்டு வந்தாரோ, அதைப்போலவே, இந்த 5 ஆண்டுக்
காலத்திலேயும், வேளாண்மைத்துறையினுடைய தனி அதிகாரி
களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டு போகக்கூடாது
என்ற காரணத்தாலே நான் இந்த ஐயத்தை எழுப்புகிறேன்.



1984 மார்ச் 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இங்கே இதிலே அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்
திலே, இந்தக் காரண காரிய விளக்கத்திலே சொல்லியிருக்கிறார்
கள் ஒன்றை, அதை நான் ஊன்றிப் படித்தேன். காரண காரிய
விளக்கம் என்பது, ஏதோ ஒரு சட்ட முன்வடிவு வருகிற நேரத்
தில் சொல்லப்படுகிற ஒரு சடங்காகவே இன்றைக்கு அமைந்து
விட்டதே என்று கூட நான் வருத்தப்படுகிறேன். இதிலே
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டு அங்காடிக்
குழு ஒன்று ஓராண்டுக்காலத்திற்கு அமைக்கப்பட்டு, அதன் பின்னர்
மேற்சொன்ன அங்காடிக் குழுவில் தற்போதுள்ள உறுப்பினர்
களின் பதவிக்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது. என்ன
அவ்வப்போது, நம்முடைய அமைச்சர் அவர்கள் தமிழ் படித்தவர்.
தமிழ் இலக்கியம் கற்றவர். இந்தக் காரண காரிய விளக்கத்திலே
'அவ்வப்போது' என்று போடுகிறார்கள். இந்த 'அவ்வப்போது'
7 ஆண்டுக்காலம் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இது
ஒரு தொடர் கதையாக இருக்கிறது. இதிலே அவர்கள், இந்த
தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் 5—12—1983 ஆம்
நாளோடு முடிவு அடைந்தது என்பதை மெத்த அக்கறையோடு
எடுத்துக்கொண்டு இன்றைக்கு 4 ஆண்டுக்காலம் என்று இருப்
பதை, 5 ஆண்டுகாலமாக என்று திருத்துவதற்காக இந்தச்
சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள்.

இந்தக் காரண-காரிய விளக்கத்திலே மேலும் சொல்லியிருக்
கிறார்கள். ''விரிவான திருத்தங்களைச் செய்ய, குறிப்பாக
அங்காடிக் குழுக்களின் அமைப்பு, அவற்றை ஏற்படுத்தும் முறை
ஆகியவை தொடர்பான விதித்துறைகளில் அவ்வாறு திருத்தங்
கள் செய்ய அரசு கருதுகிறது'' பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, உங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு காலமாக அரசு
விரும்புகிறது ? 7 ஆண்டுக்காலமாகவா? 7 ஆண்டுக்காலமாக
விரும்புவதற்கு இதிலே என்ன இருக்கிறது? இதிலே மேலும்
சொல்லி இருக்கிறார்கள். ''உத்தேச சட்டத்தின் பல்வேறு
கூறுகள் பற்றி முடிவு செய்ய இன்னும் சிறிது காலம் ஆகும்.''
அந்த இன்னும் சிறிதுகாலம் என்ன? அரசியல்வாதிகள் கணக்கிலா?
விஞ்ஞானிகள் கணக்கிலா? இல்லை. ஆராய்ச்சியாளர்கள் கணக்
கிலா? அரசியல்வாதிகள் கணக்கில் என்றால் 5 ஆண்டுக்காலம்,
ஆராய்ச்சியாளர்கள் காலம் என்றால் ஒரு தலைமுறை, அல்லது
இரண்டு தலைமுறை; விஞ்ஞானிகள் கணக்கில் என்றால் பல
ஆண்டுக்காலம் போகுமே? இப்படிக் காரணத்தைச் சொல்வது
பொருத்தமாக இருக்குமா? ஏன் சட்டத்துறையின் மீது பழியைப்
போடுகிறீர்கள்? இதுதான் என்னுடைய கேள்வி எல்லாம். சட்டத்
துறையா இன்னும் 7 ஆண்டுக்காலமாக ஆராய்ந்து கொண்டிருக்
கிறது? நம்முடைய சட்டத்துறையின் மீது எனக்கு நம்பிக்கை
யிருக்கிறது. திறமையான அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று
இதுவரையிலும் நான் கருதிக்கொண்டிருக்கிறேன். இதிலே என்ன
அவ்வளவு நுணுக்கமான சட்டங்கள், உட்பிரிவுகள் எல்லாம்
இருக்கிறது, இத்தனை ஆண்டுக்காலமாக இது நடந்து
கொண்டிருக்கிறது. ஏன் சட்டத்துறையின் மீது பழியைப்

போடுகிறீர்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இன்றைக்கு உள்ளாட்சிகளிலே மக்கள் பிரதிநிதிகள் இல்லை.; கூட்டுறவுத்துறையிலே மக்கள் பிரதிநிதிகள் இல்லை. போனால் போகட்டும். இந்த வேளாண்மை அங்காடிகளிலாவது மக்கள் பிரதிநிதிகள் இருக்கட்டுமே என்றால் அதிலேயும் இல்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றார்கள். அதனால் அவருடைய தொகுதிக்கும் போய் இருப்பார்கள என்று கருதுகிறேன். அண்மையிலே நாங்கள் எல்லாம் தொகுதிக்குப் போய் வந்தோம். 4வது முறையாக இந்த ஆண்டுக் கூட்டத்தொடரில் போனோம். என்னென்ன கேள்விகள் கேட்கிறார்கள் தெரியுமா? சாதாரணப் பிரச்சினையிலேயிருந்து, சாக்கடையிலே இருந்து, குடிநீரிலேயிருந்து, சுகாதார வசதியிலேயிருந்து,, எல்லாப் பிரச்சினைகளிலேயும் அவர்கள் கேட்கிறார்கள். எனவே இப்படி இருக்கின்ற இந்த வேளாண்மை விளைபொருள் அங்காடிகளில் மக்கள் பிரதிநிதிகளைப் போட்டால் ஓரளவுக்கு நன்மை இருக்கும். பல்லாண்டுக் காலமாக கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனாளியாக மடிகின்ற அந்த விவசாயிகளுக்கு உதவி செய்வதாக இருக்குமே. அந்த வேளாண் விளைபொருள் அங்காடிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களில் போய்ப் பார்த்து இருப்பார்கள், என்று நான நினைக்கிறேன். ஏன் என்றால், என்னைவிட அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால். என்ன அந்த அங்காடிகளிலே செய்கிறார்கள்? எனக்குத் தெரிந்த அளவிலே பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். எந்த விவசாயி அங்கே போகிறான்? வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் எனக்கு புள்ளிவிவரம், பேசும் போது கொடுக்கட்டுமே? தமிழ்நாட்டிலே ஓர் ஆண்டுக்கு விவசாயி இவ்வளவு விற்கிறான், இதிலே கூட்டுறவுத் துறையின் மூலமாக அங்காடிகள் மூலமாக இத்தனை லட்சம் ரூபாய்க்கு, இத்தனை கோடி ரூபாய்க்கு, விற்று இருக்கிறார்கள் என்ற கணக்கைச் சொன்னால் பாராட்டலாம். பெரும்பாலான இடங்களிலே யாருமே போவதில்லை. பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. அதிகாரிகள் இருக்கிறார்கள். ஏவலாட்கள் இருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் போவதில்லை. அவர்கள் செய்வது என்ன தெரியுமா? வழக்கமாக வியாபாரிகளிடமிருந்து செஸ் வாங்கிக்கொண்டு போகிறார்கள். அதை வாங்குவதிலே இருக்கின்ற பிரச்சினை பற்றி, எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைப் பற்றிக்கூட அமைச்சரிடம் 2 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே பலமுறை சொல்லியிருக்கிறேன். இப்படி செஸ் வாங்குவதற்காகத்தான் சில அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். விவசாய பெருமக்களுக்கு இதனாலே எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை. சரி, இந்த அங்காடிகள் எப்படித் தான் செயல்படுகின்றன. எப்படிச் செயல்படவேண்டும்? விவசாயிகள் தங்களுடைய விளை பொருள்களைக் கொண்டுவந்து, அங்கே வைத்திருந்து அதற்கான தொகையை அட்வான்சாக, முன் பணமாக பெற்றுக் கொண்டு, நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்க





வேண்டும். அது தானே நம்முடைய நோக்கம். நம்முடைய எண்ணம். ஆனால், அந்த எண்ணம் நிறைவேறுகிறதா ? நிச்சயமாக இல்லை.

(முற்பகல் 11.30)

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இந்த விவசாய கடைகளின் மூலமாக பல்வேறு வகையான தானியங்களை விவசாயிகளிடமிருந்து மொத்தமாக வாங்குகிறார்கள். 20 அம்ச திட்டத்தின் கீழே இலவசமாக சில விதை தானியங்களை கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயிகளிடமிருந்து, இந்த தானியங்களை வாங்கி திரும்ப வியாபாரிகளுக்கே அவை போய் விடுகிறது என்று சொன்னால், அந்தத் திட்டத்தினுடைய முழுமையான் பயன் கிடைக்காமல் போய் விடுகிறதே.

நான் சொல்வது எல்லாம், மக்களுடைய பிரதிநிதிகள் அங்கே இருப்பார்களேயானால், தனி அதிகாரிகளுடைய தனி சாம்ராஜ்யத்தை ஒழித்து, அங்கே மக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழுக்களை அமைக்கலாம். அதனால், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் நன்மை கிடைக்கும். அந்தக் குழுவிலே விவசாயிகளின் பிரதிநிதிகள் இருப்பார்கள். பொது மக்களின் பிரதிநிதிகள் இருப்பார்கள்; வணிகர்களின் பிரதிநிதிகளும் இருக்கட்டுமே. அப்படி எல்லாப் பிரதிநிதிகளும் இருப்பார்களேயானால், இந்த குழுக்கள் மூலமாக, மக்களுக்கு மிக அதிக அளவில் நன்மை செய்ய முடியும். இடைத் தரகர்கள் தான் விவசாயிகளுக்கும், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் இடையிலே ஒரு தடைக்கல்லாக நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கையை குறைப்பதற்காகத் தான் இந்தக் குழு அமைக்க வேண்டும் என்று கேட்கிறோம். அப்படிக் குழு அமைத்தால், இந்த அங்காடிகள் நல்ல முறையில் செயல்படும். எனவே, தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீடிப்பதை விடுத்து, நேற்றைய தினம் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தேர்தலுக்காக ஒரு தேதியை நிர்ணயித்து அறிவித்திருக்கிறார்களே, அது போல நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரும் சொல்லட்டுமே. அதிலே என்ன பிரமாதமான சட்ட சிக்கல்கள் ஏற்பட்டு விடும். அப்படி அறிவித்து, மக்கள் பிரதிநிதிகள் வந்தால் தான் இந்த அங்காடிகள் நல்ல முறையில் செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படும்.

அப்படி ஏதாவது உண்மையான சிக்கல்கள் இருக்குமானால், மக்கள் குழு அமையுங்களேன். தற்போது ஊராட்சி ஒன்றியங்களிலே மக்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறதே அது போல. அப்படி மக்கள் குழுக்களை அமைத்தால் கூட ஓரளவிற்காவது நம்மால் குடிமக்களுக்கு நன்மை செய்ய முடியும். ஏனென்றால், மக்களுடைய பிரதிநிதிகள் அந்தக் குழுக்களில் இடம் பெற்றிருப்பார்கள். ஆகவே அப்படி ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே இந்த மசோதாவை மறுபடியும் மறுபடியும் கொண்டு வந்து, தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடித்துக் கொண்டே

[திரு. என். எஸ். சித்தன்] [1984 மார்ச் 6

போவதை விட, அது நன்மையாக இருக்கும். இப்படி தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே போவதும் ஜனநாயகத்திற்கு நல்லது அல்ல. நமது மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சருக்கு தெரியாதது அல்ல. அவர் அழகிய தமிழிலே விளக்கமாக, நன்றாக பேசக்கூடிய ஆற்றல் உடையவர்கள். ஜனநாயகத்தைப் பற்றி அவர்கள் பேசியதை வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் படித்தும் இருக்கிறேன். ஆகவே, ஜனநாயகத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக இதை அவர் செய்ய முன் வரலாமே என்று கேட்கிறேன். ஒரு ஆண்டு காலத்தில் தேர்தல் வரும் என்று சொன்னாலும்கூட, இன்றைக்கே ஒரு தேதியை அறிவித்து ஒரு நல்ல முன் மாதிரியை உருவாக்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் திருவேங்கடம் அவர்களும், வரதராஜன் அவர்களும், நல்லப்பன் அவர்களும், சித்தன் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருமே எடுத்து, சொல்லியிருக்கிற கருத்துக்களிலே இழையோடுகின்ற ஒன்று இந்த விற்பனை குழுக்களுக்கு, விளை பொருள் அங்காடிகளுக்கு விரைவிலே தேர்தல் நடத்த வேண்டும் என்பதுதான்.

ஆனால் ஏதோ சில காரணங்களைக் கூறி இந்தத் தேர்தலை அரசு தள்ளிப் போடுகிறது என்கிற அவ நம்பிக்கையை அவர்கள் நிச்சயமாக பெறக்கூடாது. என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்தி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நான் ஏற்கனவே இந்த மாமன்றத்திலே எடுத்து தெரிவித்ததைப் போல, அவைகளுக்கு இப்போது இருக்கிற சட்ட முறைப்படி தேர்தல்கள் நடத்துவது என்றால் அது ஏறத்தாழ ஒரு பொதுத் தேர்தலைப் போல நடத்த வேண்டிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு விற்பனை குழுவிற்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்றால், அந்த விற்பனை குழு 10 இலட்சம் ரூபாயை செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. தேர்தலுக்காக 10 இலட்சம் ரூபாயை அந்த விற்பனை குழு செலவு செய்யுமேயானால், அதற்குப் பிறகு வளர்ச்சிப் பணிகள் முற்றிலுமாக தடைபட்டுப் போய்விடும்.

ஆகவே தான் சட்டத்திலே இருக்கிற சில நிலைமைகளை மாற்றி, மேற்கு வங்கத்திலும், ஆந்திராவிலும் இருக்கின்ற சட்டமுன் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு புதிய சட்ட முன்வடிவினை தயாரிக்கிறோம். அந்தச் சட்டமுன்வடிவினை தயாரிப்பதற்கு இவ்வளவு காலமா என்று திரு. சித்தன் அவர்கள் கேட்டார்கள். சட்ட வரைவுகள் என்பது, உருவாக்கப்படுகின்ற சட்டங்கள் என்பது காலா காலத்திற்கும் நிலைத்து நிற்க வேண்டியவை; நீதி மன்றங்களுக்குப் போனாலும் நிலைத்து நிற்க வேண்டியவை. அதை மணல் வீடு கட்டுவது போல அவசர அவசரமாக உருவாக்குவது சரியாக, முறையாக இருக்க முடியாது.



1984 மார்ச் 6] [டாக்டர் கா. காளிமுத்து]

அந்த வகையிலே தான் விரிவான வரைவுகளைச் செய்து
சட்டத் துறைக்கு அனுப்பினோம். சட்டத்துறை மீது பழி போடு
கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்
கூறியிருக்கிறார்கள். பழி போடவில்லை. சட்டத் துறையும்
அதைக் கவனமாகப் பரிசீலித்து, எந்தெந்த வகையிலே சில
மாற்றுத் திருத்தங்கள் செய்யலாம் என்ற வகையில் சில
யோசனைகளைச் சொல்லி இந்தத் துறைக்கு திருப்பி அனுப்பி
யிருக்கிறார்கள்.

ஆகவே, அது பற்றிய பணியினை முடக்கி வைத்துவிட்டு,
அந்த சட்ட வடிவினைக் கொண்டு வராத அளவுக்கு அப்படியே
நிறுத்தி வைத்துவிட்டு, தனி அதிகாரிகளுடைய பதவி காலத்திற்கு
கால நீட்டிப்பு கேட்டால், ஏதோ சமாதானத்திற்காக ஒத்தி
போடுகிறோம், தள்ளிப் போடுகிறோம் என்று குற்றஞ் சாட்ட
வாய்ப்பு இருக்கிறது. ஆனால், முறையாக, ஒழுங்காக, சரியாக,
அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே,
அதை மாற்றிக் கொடுத்தால் அவற்றின் அடிப்படையில் எந்த
வகையிலே தேர்தல் நடத்த முடியுமோ, அந்த வகையிலே தேர்தல்
நடத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள்
குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஏற்கனவே உள்ளாட்சித் துறை
அமைச்சராக இருந்தபோது அவர் தேர்தலைத் தள்ளித் தள்ளிப்
போட்டார், அவர் காலம் முழுவதும் தேர்தலே வரவில்லை.
இன்றைக்கும் அவர் கால நீட்டிப்பு இதற்குக் கேட்கிறார் என்று
குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அவருக்கு ஒன்றைத் தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் உள்ளாட்சித் துறை
அமைச்சராக இருந்தபோதே தேர்தலுக்கான எல்லா ஏற்பாடு
களையும் செய்து, அதை நடத்த வேண்டுமென்ற வகையிலே
முயற்சிகளை செய்து கொண்டிருந்த நேரத்திலே நீங்கள்தான்
எங்களுடைய அரசாங்கத்தைக் கலைத்து ஒரு புதிய திருப்பத்தை
உருவாக்கி தேர்தல் தள்ளிப் போகிற அளவுக்கு நிலைமையை
உருவாக்கினீர்கள். ஆகவே, குற்றம் என்னுடையது அல்ல,
உங்களுடையதுதான் என்பதைப் பணிவன்போடு நான் தெரி
வித்துக் கொள்கிறேன். இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்
கள் எந்த முறையில் இயங்குகின்றன, வருவாய்க் கணக்கு என்ன?
இதை அமைச்சர் சொன்னால் நிச்சயமாக நான் பாராட்டுவேன்
என்று அவர்கள் சொன்னார்கள்.

1977 ஆம் ஆண்டிலே 140 ஆக இருந்த ஒழுங்குமுறை விற்
பனைக் கூடங்கள் இப்போது 257 ஆக உயர்ந்திருக்கிறது என்
பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைப் போலவே,
3.30 லட்சம் டன்களாக இருந்த விளைபொருட்கள் வரத்துக்கள்
4.11 இட்சம் டன்களாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன். அதைப் போலவே 2.59 கோடியாக
இருந்த வருவாய் 4.67 கோடியாக உயர்ந்திருக்கிறது என்பதை
யும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த புள்ளி விவரத்தைக் கொடுப்பார் என்று எனக்குத் தெரியும். ஒவ்வொரு ஆண்டும் வரி விதிப்பதைப்போல இதுவும் உயர்ந்து கொண்டு வரும். ஆனால் தமிழகத்தினுடைய மொத்த விற்பனையில் எத்தனை சதவீதம் இது வகிக்கிறது ? விவசாயிகள் எவ்வளவுக்கு விற்கிறார்கள் ? விளைபொருள்கள் அங்காடி மூலம் எவ்வளவு வருகிறது ? எத்தனை சதவீதம், எவ்வளவு தொகை இதற்கு செலவிடப்படுகிறது ? இந்தக் கணக்கைத் தான் நான் கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் கா.காளிமுத்து : துணைத்தலைவர் அவர்களே, நீங்கள் வருவாய் உயர்ந்திருக்கிறதா என்று புள்ளிவிவரத்தைக் கேட்டீர்கள். நான் வருவாய் உயர்ந்திருக்கிறது என்ற விவரத்தைக் குறிப்பிட்டேன். நீங்கள் அவ்வப்போது ஏற்படக்கூடிய விலைவாசி உயர்வுக்கு ஏற்ப, இதுவும் உயரும் என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு ரூபாயின் மதிப்புக்கூட 16 பைசாவாகக் குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள், மாண்புமிகு நிதியமைச்சர்கூட பாராளுமன்றத்தில் சொல்கிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிடுவது எல்லாம், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் விவசாயப் பெருமக்களாலே வரவேற்கப்படுகின்றன. ஆதரிக்கப்படுகின்றன, தேவை என்று நம்பப்படுகின்றன, அந்த வகையில் விளைபொருட்கள் வரத்துக்கள் அதிகமாவதும், புதிய கட்டடங்கள் உருவாவதும், பல கிராமப்புறங்களிலே எங்களுக்கும் அந்த விற்பனைக் கூடங்களை அமைக்க வேண்டும் என்று கேட்பதுமான நிலைமை இருக்கிறது. ஆகவே அதன்பால் விவசாயப் பெருமக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது, ஆர்வம் இருக்கிறது எனபதைப் புலப்படுத்துகிறதென்பதற்காகத்தான் நான் இந்த விவரங்களைக் குறிப்பிட்டேன். ஆகவே இத்தகைய ஏற்பாடுகளைக் கொண்டு தனி அதிகாரிகளைக் கொண்டு நாம் செய்துகொண்டிருக்கிற காரணத்தினாலே இதுதான் நிரந்தரமானது, இதுதான் காலாகாலத்திற்கும் நீடித்து நிலைத்து நிற்கவேண்டுமென்ற பொருளிலே நான் [illegible] கருத்துக்களைச் சொல்லவில்லை. விவசாயப் பெருமக்களுடைய பிரதிநிதிகள் இதிலே இடம்பெற வேண்டும், மாண்புமிகு [illegible] உறுப்பினர் திருவேங்கடம் போன்றவர்கள் எல்லாம் இருந்து [illegible] அனுபவம் பெற்றவர்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே உறுப்பினர்களாக இருந்து பயிற்சி பெற்றவர்கள். அந்த விவசாயப் பெருமக்களுடைய பிரதிநிதிகள் அதிலே இடம் பெறவேண்டுமென்ற வகையிலே இந்த [illegible] சட்ட[illegible] திருத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் [illegible] சட்டமன்ற உறுப்பினர்களால் [illegible] சில [illegible] அளவுக்கு சில எண்ணங்களைப் [illegible] அளவுக்கு நிலைமை இருக்கிறது என்று [illegible] நேற்றைய [illegible] இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் [illegible] சொன்னார்கள்,

[illegible]







மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலாவது அவர்களையும் கலந்துகொள்ள வைக்கவேண்டுமென்று. நான் இதன் மூலமாக ஒரு அறிவிப்பாகவே தெரிவிக்க விரும்புகிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அலுவலர்கள் இனிமேல் கலந்துகொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் குழுக்களை அமைக்கலாமே என்று திரு. சித்தன் கேட்டார்கள். திரு. சித்தன் அவர்கள் கேட்டதலிருந்து தேர்தலை அரசாங்கம் நடத்தாது, ஆகவே மக்கள் குழுக்கள் தேவை என்கின்ற பாணியிலே அவர் பேசுகின்றார் என்று கருதுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒரு முறையல்ல, பலமுறை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவிட்டேன். நேற்றைய தினம் உள்ளாட்சித் துறை அமைச்சர் தேர்தல் தேதியை அறிவித்ததைப்போல் அமைச்சர் அவர்களும் இங்கே அதை அறிவிக்கலாம். ஆனால் அதற்கு ஏதாவது இடைஞ்சல் இருக்குமானால் அவர்கள் சொன்னார்களே, சட்டத்தை விரிவாக ஆராய்கிறோம், வேறு மாநிலங்களையெல்லாம் பார்க்கிறோம், எத்தனை லட்ச ரூபாய் செலவாகும் என்று இப்போது சொன்னார்களே, அப்படி ஏதாவது சிக்கல் ஏற்பட்டு ஒருவேளை காலதாமதமானால் இதற்கு இடைப்பட்ட காலத்திலே தனியதிகாரிகள் சாம்ராஜ்யம் வரவேண்டுமா ? மக்களுடைய பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கொஞ்சமாவது இருக்கட்டும் என்ற கருத்திலேதான் சொன்னேனே தவிர, தேர்தல் தள்ளிப்போடப்படவேண்டும், அவர்கள் இருக்கவேண்டும் எனற கருத்தில் அல்ல.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஆனால் என்பது ரொம்ப ஆபத்தான வார்த்தை. மக்கள் குழு வேண்டுமென்று கேட்பது ஏதோ தேர்தல் நீண்ட காலத்திற்குத் தள்ளிப்போகும் என்ற உணர்விலே உங்களுக்கு ஏற்பட்ட சிந்தனையால் சொல்கிறீர்கள். நீண்டகாலத்திற்கு தள்ளிப் போகாது என்ற காரணத்தினால் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். ஆகவே மக்கள் குழு தேவை இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்புடைய அலுவலர்களிடத்திலே எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புகளை அங்கே நாம் உருவாக்கித் தருகிறோம். வெகு விரைவிலே அதற்குரிய முறையான தேர்தலை நடத்தத் தக்க அளவுக்கு இந்தச் சட்டமுன்வடிவு இங்கே வரும் என்பதை உறுதியாகத் தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள்

[பேரவைத் துணைத் தலைவர்] [1984 மார்ச் 9

அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். '' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ் நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984) நிறைவேற்றப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 5. அறிவிப்புகள்.

### (அ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஈ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன் வடிவு **(சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

** 1984ம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1984 மார்ச் 6] [செ. அரங்கநாயகம்]

இச்சமயத்தில் இந்த சட்ட முன்வடிவு பற்றி சில முக்கியமான விவரங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நம் நாட்டில் மகளிர் உயர் கல்வியைப் பயனுள்ள வகையில் பரப்புவதற்காக உள்ள வாய்ப்புகளை ஆராயும்பொழுது, பம்பாயி லுள்ள ஸ்ரீமதி நாதிபாய் தாமோதர் தாக்கர்ஸே மகளிர் பல்கலைக் கழகம் மட்டுமே பெண்களுக்காக தனித்து இயங்கும் ஒரு பல் கலைக் கழகம் என்பது புலப்படும். மகளிர் நிலையை பயனுள்ள வகையில் மேம்படுத்துதல் அவசியம் என்பதனை உணர்ந்து எட்டயபுரத்தில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 11, 12 13 ஆகிய நாட்களில் நடைபெற்ற மகாகவி பாதியார் நூற்றாண்டு விழா வின் தொடக்க நாளின்போது முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு உயர்கல்வி அளிப்பது குறித்தும் அவர்தம் நிலையினை மேம் படுத்துவது குறித்தும் பாரதியார் பறைசாற்றியுள்ள கருத்துக் களுக்குப் புகழாரம் சூட்டும் வகையில் தமிழ்நாட்டில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்படுமென்று அறிவித்தார். இம்மாநிலத்தில் மட்டுமல்லாது நம் பாரத நாடு முழுமையாலும் மகளிர் கல்வி வளர்ச்சிக்கு உள்ள தடைகளை அகற்றி, விரை வான வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்குதல், மகளிர் கல்வி நிறு வனங்களுக்கு எல்லா நிலைகளிலும் முன்னேற்றத்தை விரைவு படுத்தும் பொருட்டு ஆலோசனைகள் நல்குதல், மகளிர் சரிநிகர் நிலையை எய்துவதில் உள்ள அனைத்துத் தடைகளையும் குறித்து ஆராய்ந்து அத்தடைகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் காணு தல், ஆகிய காரணங்களுக்காக தனியே ஒரு மகளிர் பல்கலைக் கழகம தொடங்குவது சிறப்பாக இருக்கும் என்று அரசு கருதியது.

பாரதியார் மிக முக்கியமாக வலியுறுத்திக் கூறியுள்ள 'ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்' என்ற கருத்தினை செயற்படுத்திப் பெண்களின் நிலையினை உயர்த்துவதை, அவசரத் தன்மை வாய்ந்ததும், காலத்திற்கேற்றதுமான குறிக்கோளாகக் கொண்டு புதிய முறையில் கற்றல்-கற்பித்தல் திட்டங்களை நம் இந்திய நாட்டுக்கு மட்டுமல்லாமல், அனைத்துலகத்திற்கும் வழங்கக் கூடிய தனித்தன்மை வாய்ந்த ஒரு நிறுவனமாக இப்பல்கலைக் கழகம் அமையும்.

இப்பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்து ஆய்வு செய்ய டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் மகளிர் பல்கலைக் கழகம் சொடைக்கானலில் நிறுவப்பட இருக்கிறது. இவ்வல்லுநர் குழுவில் பல்கலைக் கழக மானியக் குழுவின் சார்பாக பம்பாய் ஸ்ரீமதி நாதிபாய் தாமோதர் தாக்கர்ஸே, மகளிர் பல்கலைக் கழக துணைவேந்தரான டாக்டர் (திருமதி) ஜோதி எச். திரிவேதி, உறுப்பினராக செயலாற்றினார். இவ்வல்லுநர் குழுவில் உறுப்பினராக செயலாற்றிய திருமதி கே. வசந்திதேவி, இப்பல்கலைக் கழக முதல் துணை வேந்தராக மூன்றாண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் அனைவரும் பெண்களாகவே இருப்பர். தகுதி வாய்ந்த பெண்கள் இல்லாது போனால் மட்டுமே ஆண்கள் அப்பதவியில் நியமனம் செய்யப்படுவர்.

பெண்களின் நிலையை உயர்த்த பயன்படும் ஒரு கருவியாகவே இப்பல்கலைக் கழகம் அமைகிறது. தற்போதைய கல்வி முறையில், குறிப்பாக, சமூக அறிவியல் துறைகளில் கிட்டுகின்ற நன்மை ஆண்களுக்குக் கிட்டுகின்ற அளவுக்குப் பெண்களுக்குக் கிட்டுவதில்லை என்ற நிலை மாற வேண்டும் என்பது இப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களில் முக்கியமானதாகும்.

பல்வேறு துறைகளில் மகளிர் தலைமையேற்கும் நிலையினைப் பெறவும், உயர்கல்வி படித்து வேலையற்றிருக்கும் நிலையைப் பெரிதும் மாற்றவும் இயலும் வகையில் இப்பல்கலைக்கழகம் செயல்படும்.

தமிழ்நாட்டில் அமைக்கப்படவிருக்கிற இப்பல்கலைக்கழகம், ஆராய்ச்சி, மகளிர் முன்னேற்றத் திட்டங்கள் குறித்து ஆலோசனை நல்குதல் மற்றும் இத்திட்டங்கள் செயல்படும்போது அதனை தக்கவாறு நெறிப்படுத்துதல் ஆகிய முப்பெரும் குறிக்கோள்களைக் கொண்டதாகும்.

இப்பல்கலைக் கழகம், பிற பல்கலைக் கழகங்களினின்று வேறுபட்டு, ஒருமை வகை தனிப் பல்கலைக் கழகமாக (யூனிவர்சல் டைப்) விளங்கும். இப்பல்கலைக் கழகத்தோடு கல்லூரிகள் இணைக்கப்படமாட்டாது.

கல்விக்குழு, நிருவாகக்குழு, திட்டக் குழு ஆகிய குழுக்களை இப்பல்கலைக் கழகம் கொண்டிருக்கும், கல்விக்குழு மற்றும் நிருவாகக் குழு இரண்டிலும் உறுப்பினர்கள் நியமன அடிப்படையில் பதவியிலிருப்பர்.

இப்பல்கலைக் கழகம் (1) நல்வாழ்வு அல்லது மனித உயிரின வாழ்க்கைச் சூழல் ஆய்வியல் ;

(2) கல்வி ;

(3) மேம்பாடு ;

(4) சமூகம் ;

(5) சட்டம், சட்டப் பிரச்னைகள் ;

(6) உரிய தொழில் நுட்ப இயல், அறிவியல் ;

(7) கிராமியக் கலைகள் உட்பட நுண்கலைகள்—இசை ;

(8) ஆராய்ச்சி முறை மெய் விளக்கத் திரைப்படம் ;

(9) மகளிர் நிலை சிறப்புப் பொருளாதாரம் ;

(10) விதவைகள், பாதிக்கப்பட்ட மகளிரின் தேவைகள் என்ற பத்துத் துறைகளைக் கொண்டதாக இருக்கும்.



மேற்சொன்ன கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதே இப்பல்கலைக் கழகத்தின் சட்ட முன்வடிவின் நோக்கமாகும். இந்தச் சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறும், பின்பு நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் நான் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

அதோடு, மகளிர் பல்கலைக் கழகம் என்ற பெயரினை, ''அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்' என மாற்ற அரசு எண்ணி இருக்கின்றது. அதற்கேற்ப வரைவு முன் வடிவின் பிரிவு 1 உட்பிரிவு (1)-லும், பிரிவு 2 உட்பிரிவு (ஜி)யிலும், பிரிவு 3 உட்பிரிவு (1)லும், ''மகளிர் பல்கலைக் கழகம்'' என்பதனை, ''அன்னை தெரசா பல்கலைக் கழகம்'' என்று மாற்றம் கொண்டு வரப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நம்முடைய கல்வியமைச்சரவர்களால் இந்த மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் பல்கலைக் கழகம் என்ற ஒன்று வரும் என்று எட்டய
புரத்தில் அறிவித்ததாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள்.
நீண்ட நாட்களுக்குப் பின்பு அறிவித்தாலும், அதற்கு வேண்டிய
ஆயத்த வேலைகளெல்லாம் நடைபெற்று, சமீபத்திலே அதைத்
திறந்து வைத்திருக்கிறார்கள். மகளிருக்கு என்று ஒரு பல்கலைக்
கழகம் வருவதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனாலும், மகளிருக்கு என்று இருக்கின்ற அந்தப் பல்
கலைக் கழகம் மற்ற பல்கலைக் கழகங்களைப் போல வேறு பல
அஃபிலியேட்டட் காலேஜாக இல்லாமல் யூனிடரி யூனிவர்சிட்டி
யாக விளங்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எதற்காக
மகளிருக்கு என்று தனிப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது
என்பதைப்பற்றி, காரண காரிய விளக்கங்களிலே விளக்கங்களை
யெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள்.

இதிலே, நம்முடைய அமைச்சரவர்கள் ஒன்றைப் படித்தார்
கள். இதில், எஸ்டாபிலிஷ்மெண்ட் ஆஃப் யூனிவர்சிட்டி என்று
ஒன்றைப் போட்டிருக்கிறார்கள், எதற்காக இதை உருவாக்கு
கிறோம் என்று. For furthering the advancement of learning
and prosecution of research in studies on women's welfare
and for the purpose of providing consultancy and monitory
service for any welfare scheme for women, there shall be esta-
blished a University by the name "The Women's University".
ஆகவே, இந்த இரண்டு காரணங்களுக்காக எஸ்டாபிலிஷ் செய்
திருக்கிறோம் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப்
பிறகு Objects and powers of the University நோக்கங்களிலே

[திரு. துரைமுருகன்] [1984 மார்ச் 6

இங்கே சொன்னார்களே, அது இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. இதிலே முதலிலே என்ன சொல்கிறார்கள்; For furthering the advancement of learning and prosecution of research in studies on women's welfare and for the purpose of providing consultancy and monitory service for any welfare scheme for women என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் இது ஆப்ஜெக்டிலே வருகிறபொழுது Objects and Powers of the University பார்த்தால் The University shall have the following objects and powers—என்னவென்றால் to monitor the women's education at all levels in the State என்கிறார்கள். To monitor the women's education at all levels in the State என்பதற்கும் monitory service for women என்பதற்கும் வித்தியாசம் உண்டு. அதாவது, இதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், monitory service for any welfare scheme for women—க்காக welfare scheme-monitory service—க்காக எஸ்டாபிலிஷ் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஆப்ஜெக்டிலே சொல்கிறபொழுது, for monitoring women's education at all levels in the State அதுவே ஒரு யூனிடரி யூனிவர்சிட்டி. அந்த யூனிவர்சிட்டியிலே உட்கார்ந்து கொண்டு, ஸ்டேட் லெவலில் இருப்பவர்களுக்கு, பெண் கல்விக்காக மானிடரி சர்வீசஸைச் செய்யும் என்றால் எப்படி முடியும்?

மானிடரி சர்வீசஸ் செய்வதற்கு என்று ஏற்கெனவே கல்வி இலாக்கா இருக்கிறது; அங்கே, டி.பி.ஐ. ஆபீஸ் இருக்கிறது; அங்கே அதற்கு வேண்டிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள்தான் அந்த வேலையைச் செய்ய முடியுமே தவிர, இந்த யூனிவர்சிட்டி, ஒரு யூனிட்டரி யூனிவர்சிட்டியாக இருக்கும் பொழுது ஸ்டேட் லெவலில் செய்ய முடியாது. ஆகவே, Establishment of University என்பதற்கும், Objects of th University என்பதற்கும் முதலிலே வேறுபாடு தோன்றுகிறது.

அது மட்டுமல்ல, to offer consultancy service for the development of women's education in the state பெண் கல்விக்காக இவர்கள் செய்வார்கள் என்று. அதற்கும் இவர்கள் அல்ல. அதுவும் நம்முடைய கல்வி இலாக்காவைச் சேர்ந்தது. இதிலே எடுத்தவுடன் முதலிலே Establishment of University—க்கும் Objects and Powers of the University—க்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

(முற்பகல் 11-50)

இதை ஆரம்பித்து வைத்தார்களே, அப்பொழுது என்ன சொல்லியிருக்கிறார்கள்? இதைத் திடீரென்று ஆரம்பிக்கவில்லை. நிபுணர்கள் குழு ஒன்றைப் போட்டார்கள். டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அதன் தலைவர். அவர் அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய திறப்பு விழாவிலே பேசுகின்றபோது சொல்கிறார். எதற்காக இந்தப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது என்று சொல்கிறார்.



1984 மார்ச் [திரு. துரைமுருகன்]

Dr. Malcolm S. Adiseshaiah, M. P. and Chairman of the Committee constituted to set up the Women's University said, the functions of the Univers.ty would be monitering of discrimination between boys and girls in schools and removing them. அதாவது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரு இன வேறுபாடு மாதிரி எல்லா லெவலிலும் அதாவது ஸ்கூல் லெவலிலே இருந்து காலேஜ் லெவல் வரை ஒரு வேற்றுமை இருக்கின்றது. அதை ரிமூவ் பண்ணுவதற்காகத்தான் என்று சொல்கிறார். Acting as Consultants of chools, colleges, and universities to eliminate discrimination between men and women. அதாவது டிஸ்கிரிமினேஷன் பிட்வீன் மென் அன்ட் விமன் இருக்கின்றது. ஆகவே அதை நீக்குவதுதான் இந்தப் பல்கலைக் கழகம் அமைவதன் முக்கிய நோக்கம் என்று எக்ஸ்பர்ட் கமிட்டியின் சேர்மனாக இருக்கின்ற டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா சொல்கிறார். இது எல்லாவற்றுக்கும் மேலாக ப்ரோ சான்சலராக இருக்கின்ற நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் என்ன ஆப்ஜக்டைச் சொல்கிறார் என்று கேட்டால், அதுவும் இந்து பத்திரிகையில் போடப்பட்டிருக்கின்றது. இவர் நம்முடைய லைன், இவர் என்ன சொல்கிறார் என்றால் Mr. C. Aranganayagam, Education Minister, said, the univers ty marked the realisation of the dream of Poet Bharathi who had championed the cause of women. அதாவது மேடைப் பேச்சும், சட்டங்களும் பெண்களுக்கு சமத்துவத்தை ஏற்படுத்திவிட முடியாது. எனவே பாரதி கண்ட புதுமைப் பெண்ணைப் படைப்பதற்காகத்தான் இந்தப் பல்கலைக் கழகம் என்கிறார். ஆக ஒன்று மானிட்டரி சர்வீஸ்; இன்னொன்று விமன் வெல்பேர் சர்வீஸ். எக்ஸ்பர்ட் கமிட்டியின் தலைவராக இருப்பவர் சொல்கிறார். Discriminati n between boys and girls in all school levels, என்று. ஆனால் நம்முடைய கல்வி அமைச்சரோ புதுமைப் பெண்ணைப் படைப்பதற்கு என்கிறார். ஆக எதற்காக இது என்பதில் கூட குழப்பம் இருக்கின்றது. ஆகவே எனக்கு எதைப் படித்தால் அந்தக் குழப்பம் தீரும் என்று கேட்டால் மால்கம் ஆதிசேஷய்யா அவர்களின் ரிப்போர்ட்டை எங்களுடைய கையிலே கொடுத்தால்தான், நாங்கள் அந்தப் படித்தால்தான் தீரும். ஏனென்றால் பத்திரிகைகளிலே அச்சடிப்பதிலே ஒரு வேளை மாறுதல்கள் வந்திருக்கக் கூடும். அந்த ரிப்போர்ட்டைப் படித்தால்தான் எந்த அளவிற்கு மாறுதலாக வந்திருக்கின்றது என்பது தெரியும். எனவே முதல் ஆப்ஜக்டிலேயே, அவசரத்திலே அள்ளித் தெளித்தது போல் நம்முடைய சட்ட இலாக்கா செய்திருக்கின்றது என்பதுதான் என்னுடைய முதல் குற்றச்சாட்டாகும். Disqualification for nomination to the Academic Committee and Executive Council என்று இரண்டு போட்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய பல்கலைக் கழகங்களிலே எப்படி இருக்கின்றது என்று கேட்டால் செனட், அக்காடமிக் கவுன்சில், சிண்டிகேட் என்று மூன்றும் இருக்கின்றது. ஆனால் இங்கே என்ன செய்தார்கள்? அதெல்லாம் வேண்டாம், வம்பு. இருந்தால் யாராவது உள்ளே வந்து கேள்வி கேட்பார்கள். எனவே அப்படிப்பட்ட தொல்லைகள் எல்லாம்

வேண்டாம் என்று சொல்லி இரண்டே இரண்டை மட்டும் போட்டார்கள். அக்காடமிக் கமிட்டி அன்ட் எக்ஸிகியூட்டிவ் கமிட்டி என்ற இரண்டை மட்டும் போட்டார்கள். ஆனால் அக்காடமிக் கமிட்டிக்கும், எக்ஸிகியூட்டிவ் கமிட்டிக்கும் எலக்ஷன் உண்டா என்று கேட்டால் கிடையாது.

இப்போது சிண்டிகேட் என்று மெட்ராஸ் யுனிவர்சிட்டியிலே இருக்கின்றது. அதிலே நாமினேஷனிலே ஒருவர் வருகிறார். அதாவது எஜுகேஷன் செக்கரட்டரி எக்ஸ்-அஃபிஷியோ என்ற அளவிலே வருகிறார். மெடிக்கல் எஜுகேஷன் டீன், எக்ஸ்-அஃபிஷியோ என்ற அளவிலே வருகிறார். டெக்னிகல் எஜுகேஷன் டைரக்டர் எக்ஸ்-அஃபிஷியோ என்ற அளவிலே வருகிறார். அப்படி அக்காடமிக் கவுன்சிலிலே இருந்தும் கொஞ்சம் பேர் வருவார்கள். அப்புறம் செனட்டிலே இருந்து சிலர் வருவார்கள். கிராஜுவேட்ஸ் கான்ஸ்டிட்யூயன்சிலேயிருந்து வருவார்கள். இப்படி எலக்ஷன் பாடியும் வருவார்கள், நாமினேஷன் பாடியும் வருவார்கள். ஆனால் இந்தப் பல்கலைக் கழகத்திலே எலக்ஷன் பாடி கிடையாது. எல்லாமே நாமினேஷன்தான். அக்காடமிக் கமிட்டி, எக்ஸிக்யூட்டிவ் கமிட்டி என்று போட்டு எல்லாவற்றையும் நாமினேஷனுக்கே விட்டு விட்டார்கள். யாராக இருந்தாலும் எலக்ஷன், எலக்ஷன் என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழையக் கூடாது என்பதுதான் எண்ணம். ஆகவே முடித்து விட்டார்கள். இங்கே ஜனநாயகம் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றது. நாமினேஷன் போடுகிறீர்கள். நாமினேஷனிலே யாரை எல்லாம் போடலாம் என்பது வேறு இருக்கின்றது. அதற்கு பிறகு வருகிறேன். சட்டமன்றத்திலே இருப்பவர்கள் செனட்டுக்குப் போய் இருக்கிறார்கள். யுனிவர்சிட்டிக்கு நாம் பணம் கொடுக்கிறோம். யு.ஜி.சி. யிலே இருந்து கொஞ்சம் அவர்கள் வாங்கினாலும் மீதியை எல்லாம் நாம் தான் கொடுக்கிறோம். ஆகவே நாம் பணம் கொடுக்கிறோம் நமது யுனிவர்சிட்டிக்கு என்பதால் நமக்குத்தான் கண்ட்ரோலிங் பவர் இருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால் நாவலர் அவர்கள் ரொம்ப நாட்களாக அட்வகேட் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். அதாவது நம்மிடத்திலே உள்ள ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் ஃபைனான்ஷியல் கண்ட்ரோலராக யுனிவர்சிட்டியிலே இருக்க வேண்டும் என்று சொல்லி வருகிறார். அதற்கு ஒரு பெரிய எதிர்ப்பை அவர்கள் காட்டினார்கள். ஆனால் அப்படிப் போட்டிருந்தால் இன்றைக்கு யுனிவர்சிட்டிகளிலே இப்படிப்பட்ட ராட்டன் அட்மினிஸ்ட்ரேஷன் வந்திருக்காது.

ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை ? சட்டசபையிலே இருந்தும், அல்லது வேறு எங்கிருந்தும் வரக் கூடாது என்பதற்காக நாமினேஷனிலே போட்டிருக்கிறார்கள். எலக்ஷன் வேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் இங்கே அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றது.



அடுத்து ஆஃபீஸ் பேரரர்ஸ் ஆப் தி யுனிவர்சிட்டி யார் யார் என்றால் சான்சலர், கவர்னர், ப்ரோ சான்சலர் நம்முடைய ஹானரபிள் மினிஸ்டர், வைஸ்சான்சலர் அந்த அம்மா, ரெஜிஸ்ட்ரார், ஃபைனான்ஷியல் ஆஃபீஸர் அப்படி என்றெல்லாம் சொல்லி போட்டார்கள். இன்னொருவர் உண்டு. அது யார் என்றால் கண்ட்ரோலர் ஆஃப் எக்ஸாமினேஷன். அவர் இதிலே இல்லை. எல்லா யுனிவர்சிட்டியிலும் அதாவது மெட்ராஸ், காமராஜ், அண்ணாமலை, பாரதியார் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய அனைத்து பல்கலைக் கழகங்களிலும் ஆஃபீஸ் பேரரர்ஸ் என்று சொன்னால் இவர்கள் அத்தனை பேரும் தான் அதிலே அடங்கு வார்கள். ஆனால் இந்த பல்கலைக் கழகத்தில் கண்ட்ரோலர் ஆஃப் எக்ஸாமினேஷன் கிடையாது. கண்ட்ரோலர் ஆஃப் எக்ஸாமினேஷன் தான் எக்ஸாமினேஷன் நடத்த வேண்டும். அவர் தான் ரிசல்ட் அவர்தான் டிகிரி கொடுக்க வேண்டும். அந்த கண்ட்ரோலர் ஆஃப் எக்ஸாமினேஷன் போட வேண்டும். இதிலே இல்லை. அப்படி என்றால் இந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்தில் எக்ஸாமினேஷன் நடக்காதா ? டிகிரியே தரமாட்டீர்களா ? எல்லோரும் ஒன்றாம் க்ளாஸிலே சேர்ந்தால் பாஸ். இரண்டாம் க்ளாஸிலே சேர்ந்தால் பாஸ். மூன்றாம் க்ளாஸிலே சேர்ந்தால் பாஸ், வருஷம் ஆனால் போதுங்க, மார்க்கே வாங்கத் தேவையில்லை. என் பையனைக் கேட்கிறேன், இரண்டாவது படிக்கிறான், டேய், இந்த வருஷம் நீ பெயில் தாண்டா ஆகப் போகிறேன்னு. அவன் ஒன்னும் நடக்காதுப்பான்னு சொல்றான். ஏண்டான்னா, பாஸ், ஆட்டமட்டிக்காக பாஸ். எட்டாவது வரைக்கும் இந்த நிலைமை போகப் போகிறது. அந்த மாதிரி இருக்கப் போகிறதா ? டிகிரி கொடுக்கப் போகிறார்களா ? கொடுக்கப் போகிறார்கள். ஏனென்றால், இதிலே சொல்லியிருக்கிறார்கள். டிகிரி தரப் போகிறோம் என்று. To institute degrees, titles, diploma and other academic distinctions for women—கொடுக்கப் போகிறோம். ஆகவே, எக்ஸாமினேஷன் நடக்கப்போகிறது. அப்படியிருக்கும்போது Controller of Examinations -ஐ ஆபீஸ் பேரராக சேர்க்கவில்லையே, இந்தச்சட்டத்திலே, ஏன் என்றுதான் நான் கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

அதற்கடுத்து இன்னொன்று போட்டிருக்கிறார்கள். The Viec-Chancellor and other officers etc. to be public servants under the Indian Penal Code. என்று. Indian Penal Code-லே அவன் பப்ளிக் சர்வென்ட். எல்லா பல்கலைக்கழக சட்டங்களிலும் இதைப் போட்டிருக்கிறோம் நாம். புதிதாக ஆரம்பித்த பாரதி தாசன் பல்கலைக் கழகத்திலே அவர்களை, பப்ளிக் சர்வன்ட் என்று ஆக்கியிருக்கிறோம். நம்முடைய பாரதியார் பல்கலைக் கழகத்திலே இதை வைத்திருக்கிறோம். தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே வைத்திருக்கிறோம். எல்லா பல்கலைக் கழகங்களிலும் வைத்திருக்கிறோம். ஆனால், மெட்ராஸ் யுனிவர்சிட்டியிலே கிடையாது. பெண்கள் பல்கலைக் கழகத்திலே கூட அவர்கள் தப்பு செய்தால். they wil under the

purview of the Vigilance Commission ஆகையினாலே இலஞ்சம் வாங்கினால் நேராகப் போய்ப் பிடிக்கலாம். மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே இந்த செக்ஷன் கிடையாது. இந்த செக்ஷன் இல்லாததால்தான் மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே நம்முடைய தமிழ் நாடு சர்க்கார், நம்முடைய எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் 4 தரம் இலஞ்சம் வாங்கினார், மால்பிராக்டிஸ் செய்து சொத்தை சேர்த்துக் கொண்டார் என்று முன்னே ரிஜிஸ்திராராக இருந்த திரு. குமாரசாமி மேலே அலிகேஷன் கொடுத்து, அவரை விஜிலன்சிலே பிடிக்க வேண்டுமென்று எழுதியது. இப்பொழுதிருக்கிற செக்கரட்டரி திரு. சுந்தரராஜனே எழுதினார். என்ன சொல்லி அங்கே இருக்கிற ஒரு வாத்தியார் ஸ்டே வாங்கினார் என்றால், இந்தச் சட்டப் எங்களுக்குப் பொருந்தாது. அதற்குள்ளே நாங்கள் வர மாட்டோம் என்று சொல்லி ஸ்டே வாங்கினார். இப்பொழுது ஆரம்பிக்கப் போகிற பெண்கள் பல்கலைக் கழகத்திலே கூட இது பொருந்துமாறு செய்யப்போகிறோம். இந்தப் பல்கலைக் கழகத்திற்குக் கூட கொண்டு வந்து, பப்ளிக் சர்வன்ட் என்று ஆக்குகிற அமைச்சர் அவர்கள் மெட்ராஸ் யூனிவர்சிட்டிக்கு ஒரு அமென்ட்மென்ட் கொண்டு வந்து, அதிலே உள்ளே நுழைத்திருந்தால் நானும் திரு. உமாநாத் அவர்களும் இவ்வளவு பேசியிருக்கவேண்டாம். மெட்ராஸ் யூனிவர்சிட்டி பற்றி இப்படி நாறி இருக்க வேண்டாம். திரு. குமாரசாமி வாலண்டரி ரிடையர்மென்ட் வாங்கிப் போயிருக்க வேண்டாம். நானும் பெரிய மனிதன் என்று எலெக்ஷனுக்குப் போயிருக்க வேண்டாம். இதைக் கேட்டால் அமைச்சர் உடனே சொல்வார், துரைமுருகன் நான் ஒரு காம்ப்ரஹென்சிவ் ஆக்ட் மெட்ராஸ் யூனிவர்சிட்டிக்குக் கொண்டு வந்து இன்ட்ரடியூஸ் பண்ணுகிறேன். அப்பொழுது இதையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று. ஆனால் இது ஒரு அத்தியாவசியமானது. மதுரை யூனிவர்சிட்டியிலே, இரண்டு டெர்முக்கு மேலே, 6 வருஷத்திற்கு மேலே ஒருவர் சிண்டிகேட் மெம்பராக இருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் போட்டார்கள். நாங்கள் சும்மா இருந்திருக்கலாம். மெட்ராஸ் யூனிவர்சிட்டிக்கு கொண்டுவா பார்க்கலாம் என்று சொன்னோம். அவர்கள் இதற்கு மட்டும் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். அதே மாதிரி மெட்ராஸ் யூனிவர்சிட்டி ஆக்டில் இதையும் சேர்த்தால், இன்றைக்குப் பல பேர்கள் தப்பிக்க மாட்டார்கள். இன்றைக்கு ஒரு வாத்தியாருக்கு நம்முடைய முதலமைச்சர் போய் பரிசு கொடுக்கிறார். இஷ்டமானால் அந்த வாத்தியார் போய் வாங்கலாம். கஷ்டமானால் போய் வாங்காமல் விட்டுவிடலாம். அது அந்த வாத்தியாருடைய இஷ்டம். அவர், இந்த முதல் மந்திரியிடம் நான் வாங்க முடியாது என்று பத்திரிகையிலே அறிக்கை விட்டார். விட்ட பெரிய மனிதர் சும்மா இருந்திருந்தால் பரவாயில்லை. பணத்தை மட்டும் வாங்கி விட்டார். பெரிய மனிதன் முதலமைச்சர் கையிலே நான் வாங்க மாட்டேன் என்று சொன்ன வீரம் கடைசி வரையில் இருந்திருந்தால் பரவாயில்லை. அவர் என்ன பண்ணினார்? முதலமைச்சர் கிட்டே வாங்க மாட்டேன் [illegible] என்ன ஆள் பணத்தை மட்டும் வாங்கிவிட்டு



அவர் மேல் ஒரு குற்றம் சுமத்தப்பட்டது. அதற்கு ஒரு ஸ்டே வாங்கினார். என்ன சொல்லி வாங்கினார்? நான் பப்ளிக் சர்வன்ட் இல்லையென்றார். அந்த நிலைமை உருவானது. ஆனால் இப்பொழுது என்ன ஆகியிருக்கிறது? அந்த ஸ்டே வெக்கேட் ஆகியிருக்கிறது. நம்முடைய கல்வி அமைச்சரைக் கேட்கிறேன், புரோ—சான்சலராக இருக்கிற நீங்கள், வைஸ்—சான்சலரை பூரா பைலையும் நாளைக்குக் கொண்டு வாருங்கள் என்று கேளுங்கள். அவர் கொண்டு வந்து வைக்கட்டும். You can take action. யாராக இருந்தாலும் எனக்கு ஆக்கரை இல்லை. நேற்று பத்திரிகையிலே பார்த்தேன், பஞ்சாபிலே இருக்கிற குருஷேத்திரத்தின் வைஸ்—சான்சலரை, கவர்னர் சஸ்பென்ட் செய்திருக்கிறார். அந்த நிலைமை இங்கு உருவாக வேண்டும். அதைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று "Women only to be appointed as officer, etc. No person, other than a women, shall be appointed as an officer of the University or to any post. Provided that where no qualified woman is available for appointment as an officer of the University or to any post in the University, a qualified person other than a woman, may be appointed as such officer to such post, as the case may be", என்று போட்டிருக்கிறார்கள். இது என்ன சார்? Other than a woman என்றால் என்ன சார் அர்த்தம்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆணாகவும், பெண்ணாகவும் இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு துரைமுருகனுக்கே தெரியும்.

திரு. ரா. உமாநாத் : சட்ட முன்வடிவிலே அந்த அர்த்தத்திலே தான் போட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த அர்த்தத்திலேதான் போட்டிருக்கிறார்கள் என்றால், it is bad. அப்படி யாரையும் அப்பாயின்ட் பண்ண முடியாது. Male or Female என்றுதான் இருக்க வேண்டும்.

(நண்பகல் 12—00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது பெண்களைத் தான் போடுவார்கள்; பெண்கள் அல்லாதவர்களைப் போடமாட்டார்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, கோர்ட்டிலே என்ன தீர்ப்பு வருகிறது என்றால் "other than woman". என்றால் ஆணும் இருக்கலாம், அலியும் இருக்கலாம், ஆடும் இருக்கலாம், மாடும் இருக்கலாம்.

[1984 மார்ச் 6

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Intersex cannot be appointed to any office. Even such a person cannot stand for any election.

திரு. துரைமுருகன் : செக் எழுதி அனுப்புகிறோம். காகிதத்திலே தான் எழுதவேண்டுமென்று சட்டம் கிடையாது. ஒருவன் 'கௌ' மேலே எழுதி அனுப்பினான். பேங்கிலே 'கௌவை' கிராஸ் பண்ணி விட்டான். இதற்காக அமெரிக்காவிலே ஒரு லீடிங் கேஸ் நடந்தது. துணைத் தலைவர் அவர்களே உங்களுக்குத் தெரியும். ஆகவே யார் வேண்டுமானாலும் இதை இண்டர்ப்ரட் பண்ணலாம் ; அந்த நிலைமை இருக்கிறது. இன்னொன்று வைஸ்-சான்ஸலர் மெம்பர்களாக யார் யாரை அப்பாயிண்ட் செய்யலாம் என்று சொல்கிறார்கள். பம்பாய் யூனிவர்சிட்டியில் அம்மா ஒருவர் 10 Members of the Teaching staff shall be nominated by the Vice-Chancellor. அந்த ரொட்டேஷனில் ஒன்று ; அதற்கு பிறகு நம்முடைய அமைச்சர் அவர்கள் அப்பாயிண்ட் பண்ணலாம். இப்படி 30 பேர்களை அக்கடமிக் கமிட்டி, எக்சிகியூட்டிவ் கமிட்டி போட்டு எல்லோரும் பெண்களாக இருப்பார்கள் என்கிறது. மகிழ்ச்சி தான். ஏனென்றால் பெண்கள் கல்லூரியில் வேறு யாரும் இருக்கக்கூடாது ; அதை நான் ஒப்புக்கொள்கிறேன். வைஸ்—சான்சிலர் யார்? ஒரு மகளிர். "....The Vice-Chancellor or in her absence any member chosen by the members present, shall preside at a meeting of the Executive Council." இந்த எக்சிகியூட்டிவ் கமிட்டியை யார் பிரசைட் பண்ணுவார்கள். அந்த அம்மா தான், அதாவது வைஸ்—சான்சிலர், என்ன போட்டிருக்கிறார்கள் சட்டத்திலே பாருங்கள்.

"The Vice-Chancellor or in his absence" இதிலே மதராஸ் யூனிவர்சிட்டியிலே போட்டிருப்பதை பார்த்து அப்படியே காப்பி அடிக்கிறார்கள் சார். லா டிபார்ட்மெண்டிலே. நான் கேட்கிறேன் எல்லா சட்டமும் அங்கே அடிபடுகிறது, எப்படி ? எத்தனை பேர்கள் சொல்கிறார்கள் ; மோகன் ஜஸ்டிஸ் ஒன்று சொன்னார். ஆதி திராவிடர் என்ற ஒரு வார்த்தை சேர்க்கப்படாததாலே விருத்தாசலம் பக்கத்தில் அரிசனங்களுக்கு இடம் எடுத்தது கேஸ் அடிப்பட்டது என்று சொன்னார். எத்தனை பேர்கள் படிக்கிறார்கள் ? ஒரு கிளார்க் எழுதுவதை, சூப்பிரண்டெண்ட் பார்த்து, ஜாயிண்ட் செகரட்டரி, செகரட்டரி இத்தியாதி பார்த்து நம்முடைய லா-மினிஸ்டர் பார்த்து அவருக்கு இப்போதுநிறைய வேலை இண்டஸ்ட்ரீஸ் வேறு வந்துவிட்டது, இவ்வளவு பேர் பார்த்த பிறகு நம்முடைய அமைச்சர் கிட்டே வருகிறது. வைஸ்-சான்சிலர் ஒரு பெண்ணாக இருக்குமென்று முதலில் சொல்லிவிட்டு "The Vice-Chancellor or in his absence" என்று போடுகிறபோது இதைக் கூட பார்க்கவில்லை என்றால் பிறகு எதற்கு சார் லா டிபார்ட்மென்ட்? இப்போதுதான் தெரிகிறது, எல்லா சட்டமும் நீதிமன்றத்திற்குப் போனால்



1984 மார்ச் 6] [திரு. துரைமுருகன்]

ஏன் அடிபடுகிறது என்று. ஒரு இடத்திலே போட்டிருந்தால் பரவாயில்லை. அது மாதிரி பல இடங்களில் போட்டிருக்கிறார்கள்.

திரு வ. சத்தியமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, வைஸ்-சான்சிலர் பதவியை 'ஹர்' என்று சொல்வதில்லை ; 'ஹிஸ்' என்று சொல்லப்படுவதுதான் மரபு.

திரு. ரா. உமாநாத் : அப்போது அங்கே டிஸ்கிரிமினேஷன் வந்து விட்டது. பெண்தான் இருக்கும் என்று சொன்ன பிறகு 'ஹிஸ்' என்றுதான் போடுவதென்றால் டிஸ்கிரிமினேஷன் வந்து விட்டது என்றுதான் அர்த்தம்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய மவுனமான ஜட்ஜ்மென்டே எனக்கு திருப்தி. அடுத்து ரெமூவல் ஆப் மெம்பர்ஷிப்க்கு என்ன போட்டிருக்கிறார்கள் என்றால் "....if he has been guilty of gross misconduct....the Executive Council may withdraw any degree or diploma conferred on.." என்று போட்டிருக்கிறார்கள். அங்கேயும் 'ஹி' போட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் யார் யாரை டிஸ்குவாலிபை பண்ணலாம் என்று சொல்கிறார்கள் பாருங்கள்.

"....The Executive Council may also by an order in writing made in this behalf remove any person from the membership of any authority of the University if he becomes of unsound mind or deaf-mute or suffers from leprosy or has applied to the adjudicated or has been adjudicated as an insolvent." அக்கடமிக் கமிட்டியிலே, எக்சிகியூட்டிவ் கமிட்டியிலே எல்லோரும் பெண்கள். "....deaf mute or suffers from leprosy or has applied to be adjudicated....'- டிஸ்குவாலிபை பண்ணலாம் என்று இருக்கிறது. ஊமை, செவிடு, குருடு. தொழு நோய் இருந்தாலும் என்று சொல்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. இந்தச் சட்டத்தில் எப்படி நம்முடைய சட்டத்துறை டிராட் செய்திருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் "......No action under this section shall be taken against any person unless he has been given a reasonable opportunity to show cause against the action proposed to be taken.' ஒருவர் பைத்தியம் என்று 2/3 மெஜாரிட்டி முடிவு செய்து நீக்குகிறார்கள். அப்படி இருந்தாலும் அவருக்கு ரீசனபில் ஆப்பர்சூனிட்டி கொடுக்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். ஒருவனைப்போய் நீ பைத்தியமா என்று கேட்டால் "நானா பைத்தியம் நீதான் பைத்தியம் வி. சி. பைத்தியம், எக்சிக்யூட்டிவ் கவுன்சில் பைத்தியம்"........ (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிச் சொல்லும் போதே நமக்கு அவர் எப்படிப்பட்டவர் என்பது தெரிந்துவிடும், (சிரிப்பு).

திரு. துரைமுருகன் : அன்னை தெரசாவின் பெயரால் இந்தப் பல்கலைக் கழகத்தை அமைத்திருக்கிறீர்கள். மனித சமுதாயத்திற்கு அவர்கள் செய்த ஜீவகாருண்யத் தொண்டுக்காக நோபல் பரிசு அந்த அம்மையாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு அம்மையார் இந்த அளவுக்கு இங்கே பெருமைப்படுத்தப்படுவது வரவேற்கத்தக்கதுதான். அதற்காக உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைக்கக் கூடாது என்கிற கொள்கையையே நீங்கள் அமென்ட் செய்திருக்கிறீர்கள். அந்த அம்மையாருக்கு எதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது தெரியுமா ? தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்களை புறக்கணிக்காமல் அவர்களை மனித உணர்வோடு கருணை உள்ளத்தின் அடிப்படையில் கவனித்து தொண்டு செய்ததற்காக அந்தப் பரிசு அளிக்கப்பட்டது. அப்படிப்பட்ட அம்மையார் பெயரால் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலே தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பதவி வகிக்கக்கூடாது என்று சொன்னால், என்ன அர்த்தம். தொழுநோய் பிடித்தவர்கள் பதவிக்கு வந்தால் என்ன ? மூன்று வருடம்தான் பதவியில் இருக்கப் போகிறார்கள். அதற்குள் கையும், காலும் சீழ்பிடித்து ரத்தக்கண்ணீர் ராதா போல் ஆகிவிடவா போகிறது ? ஆகவே அந்த அம்மையாருக்கு ' ஆனர் ' செய்யும் வகையில் அந்தப் பிரிவை எடுக்க வேண்டும்..

அடுத்து ஒன்றைக் கேட்கிறேன். அங்கே ரெஜிஸ்ட்ரராக இருக்கப்போவது ஒரு அம்மையார். அவரும் தாய்குலத்தைச் சேர்ந்தவர்தான். அதைப்பற்றி இந்தச் சட்டம் என்ன சொல்கிறது ? "......In any case where the inquiry discloses that punishment beyond the powers of the Registrar is called for, the Registrar shall, upon conclusion of the inquiry, make a report to the Vice-Chancellor along with her recommendation :" இங்கே " வித் ஹர் ரெகமண்டேஷன் " என்று போட்டிருக்கிறது. ஆனால் அடுத்து கஸ்டோடியன் என்று வருவதில் " ஹிஸ் " என்று போட்டிருக்கிறது. "..... to be the custodian of the records, the common seal and such other property of the University as the Executive Council shall commit to his charge"

ஏன் இந்த தடுமாற்றம்? (குறுக்கீடு) சட்டத்துறை ஏனோ, தானோ என்று இதை டிராப்ட் செய்து கொடுத்திருக்கிறது. அவர்கள் நினைத்துப் பார்த்திருக்க வேண்டாமா ? சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பார்களே, நீதிமன்றத்திற்குப் போனால் ஜட்ஜ் முகத்தில் வீசி அடிப்பாரே என்று கொஞ்சம் கவனத்தோடு இதைச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவர்கள், எந்த எம். எல். ஏ., படிக்கப் போகிறார். நாமும் படிக்கப் போவதில்லை, அமைச்சரும் படிக்கப் போவதில்லை யாரும் இதைப் படிக்கப் போவதில்லை என்று நம்மை அண்டர் எஸ்டிமேட் செய்ததால் வந்த விளைவுதான் இது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) நான் ஓரிரு கருத்துக்களைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.





திரு. ரா. உமாநாத்: அவர் நிறைய விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். அதனால்தான் பல விஷயங்கள் வெளியே வந்திருக்கின்றன. அவரை மேலும் பேச அனுமதிக்கலாம்.

Mr. Deputy Speaker : You cannot advocate his case.

(பிற்பகல் 12–10.)

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, பல பல்கலைக்கழகங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். நிறைய ஆரம்பித்திருப்பது குறித்து மகிழ்ச்சி. அதனால் நிறைய யு.ஜி.சி. கிராண்ட் கிடைக்கும். மற்ற பல வசதிகள் பெருகும். ஆனால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டவை எப்படி இருக்கின்றன என்றால் ஹைஸ்கூல் நிலைமைக்கு போய்க்கொண்டிருக்கின்றன. பாரதியார் யூனிவர்சிட்டி பாரதியார் இருந்த நிலைமையில் தான் இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். ஆனால் அது சம்பந்தப்பட்ட வேலைகள் எல்லாம் பாதியிலே நிற்கின்றன.

மெட்ராஸ் யூனிவர்சிட்டியில் 4.5 கோடி, 5 கோடிக்குமேல் ஓவர் டியூ இருக்கிறது. 4.5 இலட்சம் ரூபாய் வட்டி கட்டுகிறார்கள். நிதிநிலைமைகளைப் பற்றி ஆராய்வதற்காக சண்முகம் தலைமையில் ஒரு குழுவைப் போட்டார்கள். அவர்களும் அறிக்கை கொடுத்து விட்டார்கள். நிலைமை சீர்திருந்தவில்லை ; 4.5 இலட்சம் வட்டியே கட்டுவதாக இருந்தால் எப்படி சீர்திருந்தும் ?

இப்படி ஓவர் டியூ இருக்கிறதே என்று கேட்டால் குமாரசாமி சொல்கிறார் மெட்ராஸ் கவர்ன்மெண்டுக்கே ஓவர் டியூ இருக்கும் போது நமக்கு ஏன் இருக்கக்கூடாது என்று. அதற்கு அவர்கள் ஒரு முக்கியமான காரணமாக நம்முடைய அரசாங்கத்திலிருந்து அந்த யூனிவர்சிட்டிக்குப் போகவேண்டிய பணம் போய் சேரவில்லை என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தைக் கேட்டால் ' ஸ்டேட்மெண்ட் ஆஃப் அக்கவுண்ட்ஸ் ' அவர்கள் கொடுக்கவில்லை, நாங்கள் அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தைக் கொடுக்கவில்லை என்கிறார்கள். மெட்ராஸ் யூனிவர்சிட்டியின் ஜெனரல் ஃபண்ட் நிலைமை இப்படி இருக்கிறது.

யூனிவர்சிடி ரெஜிஸ்ட்ரார் குமாரசுவாமி வேலையைவிட்டு போய் விட்டார். அவர் போகும்போது 12 இலட்சம் ரூபாய்க்கு ஓவர் கிளெய்ம் செய்துவிட்டு போயிருக்கிறார். அதை இன்றைக்கு சிண்டிகேட் உறுப்பினர் இராமமூர்த்தி நிறுத்தி வைத்திருக்கிறார். 12 இலட்சம் ரூபாய் ஓவர் கிளெய்ம் செய்துவிட்டு போயிருப்பவர் தப்பித்துவிடக் கூடாது. இந்தச் சர்க்கார் குமாரசுவாமி மீது எத்தனையோ ஊழல் புகார்களைத் தெரிவித்திருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலை வரவர்களே, இப்போது அவை முன்னால் இருக்கக் கூடிய சட்ட முன்வடிவிற்கும் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்ற பேச்சுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அதுவும் ஒரு கடுமையான குற்றச்சாட்டைச் சொல்வதற்கு இந்த வாய்ப் பைப் பயன்படுத்திக்கொள்வது சரியல்ல என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, நான்.. (மணியடிக்கப்பெற்றது) இதையெல்லாம் சொல்வதற்குக் கார ணம் வருகிற காலத்திலாவது இப்படிப்பட்ட நிலைமைகள் வரக்கூடாது. பல்கலைக் கழகங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டும். நல்லமுறையில் சீரோடும் சிறப்போடும் பல்கலைக் கழகங்கள் நடைபெற வேண்டும். நான் ஏற்கனவே முதல மைச்சரிடம் சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி ஒருமுறை சொன்னேன் : அவர் மனப்பூர்வமாக அதை ஏற்றுக்கொண்டு தலையிட்டதால்தான் இன்றைக்கு குமாரசாமியை நீக்க முடிந் தது. இல்லை என்றால் அவரைப் பதவியிலிருந்து நீக்கியிருக்க முடியாது. முதலமைச்சர் தலையிட்டதால் அந்தப் பல்கலைக் கழகம் காப்பாற்றப்பட்டது ஆகவே ஓவர்கிளெயம் செய்து விட்டுப் போயிருக்கிற குமாரசாமியை தப்பிக்க விடமாட்டார் முதலமைச்சர் குற்றவாளி தப்பித்துப் போனாலும். முதலமைச்சர் கொக்கிபோட்டு இழுப்பார் என்ற நம்பிக்கையோடு இந்த மசோதாவை வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பல்கலைக்கழக சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். பொதுவாக நிலப்பிரபுத்துவ அமைப்பினுடைய கொடுமைகள் பல. அதில் பெண்ணடிமையும் ஒன்று. அதை ஒழிக்க வேண்டுமென்பது பாரதியின் நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருப்பது கொடைக்கானலில். கொடைக்கானல் ஒரு மலைப் பகுதி. அதனுடைய வளர்ச்சிக்கு பல காரியங்களைச் செய்யலாம். ஊட்டியில் எப்படி போட்டோ பிலிம் தொழிற்சாலையை ஏற்படுத்தி சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோமோ அதைப் போன்று இங்கும் செய்யலாம். அப்படி கொடைக்கானலின் வளர்ச்சிக்காகச் செய்வதுபற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை, கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதே நேரத்தில் வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்கும் கோடைக்கானலில் பெண்கள் பல்கலைக் கழகத்தை அமைத் திருப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது ஒரு பெரிய குறைப்பாடு. இந்த





மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழை, எளிய, நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெண்கள் கல்வி பெற்றாக வேண்டும். அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி யிருக்கலாம். கொடைக்கானலில் இந்தப் பல்கலைக் கழகத்தை அமைத்திருப்பதால் அவர்களுக்கு நல்லமுறையில் கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. காரணம் காஸ்ட் ஆப் லிவ்விங்' எவ்வளவு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

குறிப்பாக, இன்றைக்கு அன்னை தெரசா பெயரிலே இந்தப் பல்கலைக் கழகத்தை வைத்திருப்பதாக அறிகிறோம். அவர் நோபல் பரிசு பெற்றவர் என்று கூறப்பட்டிருக்கிறது. அதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நோபல் பரிசு எதற்காக அளிக்கப்படுகிறது என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண் டும். ஏற்கெனவே, சோசலிச நாடுகளை அவதூறு செய்தவர் களுக்கு கூட நோபல் பரிசு வழங்கப் பட்டிருக்கிறது. அதை நாம் அறிவோம். ஆகவே, நோபல் பரிசு பெற்றவர் என்பதால் இந்த பெயர் என்று நிச்சயமாக இருக்கக்கூடாது. அடுத்து, உயிரோடு இருப்பவர் பெயர் இருக்க வேண்டுமா? கூடாது என்பது இந்த அரசின் கொள்கை. அது இன்றைக்கு ஒரு பெரிய கேள்விக் குறி யாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அன்னை தெரசா பெயரை வைத்திருப்பது எந்த அடிப்படையில் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப் பினர் தெளிவாக பல கருத்துக்களைக் குறிப்பிட்டார். அதுவும் குறிப்பாக நிர்வாகக் குழு, அதைப்போன்று, கல்விக் குழு, அத னுடைய அமைப்பு முறைகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். இதுவரையில் இருக்கிற பல்கலைக் கழகங்களுக்கு நியமனம் மூல மும் குழு உறுப்பினர்களை பூர்த்தி செய்வது உண்டு. தேர்தல்கள் மூலமாகவும், அதைட பூர்த்தி செய்வதும் உண்டு. ஆனால் இந்தக் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் அத் தனையுமே நியமனம். இது ஜனநாயகத்திற்கு சரிதானா? ஜனநாயகத்திற்கு விரோதமானது இல்லையா? பொதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு செனேட் கூட பலவிதமான ஊழல் களை கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்படிப் பட்ட ஒரு நிலையில் நியமனத்தின் மூலமாக ஒரு குழுவை அமைப் பது எந்த விதத்தில் நியாயம் என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன்.

இந்தக் கல்விக் குழு, நிர்வாகக் குழு, இதிலே தேர்தல்— மூலமாகவும் உறுப்பினர் வருவதற்கு ஒரு வாய்ப்பு நிச்சயமாக ஏற்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, ஆசிரியர்களுடைய பிரதி நிதிகளையும், மாணவர்களுடைய பிரதிநிதிகளையும் இந்தக் குழுவிலே இணைக்கவேண்டியது மிக மிக அவசியம் என்று வலி யுறுத்திக்கூற விரும்புகிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 6

அதோடு இன்றைக்கு தேர்வுக் குழுவைப் பற்றிக் குறிப்பிடப் படவில்லை. அது ஒரு பெரிய குறைபாடு. தேர்வுக் குழுவைப் பொறுத்தவரையில், இன்றைக்கு மிக அக்கறையோடு கவனிக்க வேண்டியது அவசியம். இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், தனியான தன்மை தன்னாட்சி என்று கூறப்படுகிறது. பல்வேறு குழுக்களால் இது நிர்வகிக்கப்படுகிறது என்று குறிப் பிடப்படுகிறது. ஆனால். தன்னாட்சி இருக்கக் கூடிய பல்வேறு கல்லூரிகளில் பல்கலைக்கழகங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளை நாம் கவனிக்கவேண்டியது மிக அவசியம். இங்கே ஒரு உதார ணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நேற்றைக்கு இந்தியன் எக்ஸ்பிரசில் ஒரு செய்தி. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழா கடந்த பிப்ரவரி 25-ஆம் தேதி நடந்தது. எம்.பி.ஏ. அதில் 4 பேர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. அதில் கிரேடு கொடுக்கப்பட்டிருக்கிறது. 'ஈ' கிரேடு அதாவது எலக்ட்ரானிக் டாடா பிராசசிங் பேப்பர்க்கு 'ஈ' கிரேடு கொடுக் கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அண்ணாமலை யூனிவர்சிட்டி பற்றி தனியாக கேள்வி கேட்டால், நான் தனியாக விவரமாக, அதற்கு தகுந்த பதில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கூட கேட்டிருக்கிறார் என்று கருதுகிறேன். இப்போது பேசிவிட்டால், அப்போது தேவையில்லாமல் போய்விடும். ஆகவே, முழு விவரங்களையும், கால் அட்டென்ஷன் வருகிறபோது சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (டாக்டர் கே. சௌரி ராஜன்): அமைச்சரவர்கள் தனியாக விளக்கம் சொல்கிறேன் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து இதைத் தவிர்த்துவிட்டு பேசுங்கள். (குறுக்கீடு).

"I have understood the points. It has no relevance to this Bill. I have read the article in the Indian Express".

**திரு. ரா. கிருஷ்ணன் :** அதாவது ஒரு துறையிலே இருக்கக் கூடிய, தன்னாட்சி பெற்ற கல்லூரி, தன்னாட்சி பெற்ற பல்கலைக் கழகத்தில் இருக்கிற தன்மையைப் பற்றி கவனிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அடானமஸ் பொறுத்தவரைக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருக்கும் தனித் துறை எம்.பி.ஏ. அதில் பட்டம் வழங்குவதற்கும் அவர்கள் பேப்பர் திருத்துவதற்கும், தேர்வு வைப்பதற்கும், அவர்களுக்கு தனிப்பட்ட உரிமைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இதிலே குறிப்பிட்ட, செல்வாக்கு படைத்த ஒரு பேராசிரியருடைய மகன் 'ஈ' கிரேடு வாங்கி இருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. இந்த குற்றச்சாட்டு எப்படி வந்தது? அதுமட்டுமல்ல. இதிலே பல் வேறு குழப்பங்கள் இருப்பதாக அறிகிறேன்.



1984 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நான் இந்தப் பிரச் சினையைப்பற்றி லைவஸ் சேன்சலருடன் பேசியிருக்கிறேன். அதைப் பற்றிய முழு விவரங்களையும் நான் தருவதற்குத் தயாராக இருக் கிறேன், என்று சொல்கிறேன். அதற்கான வாய்ப்பை உரு வாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். 'ஈ' கிரேடு என்று சொல்கிறீர்கள். அதே பேராசிரியருடைய மகனுக்கு அந்தப் பேராசிரியரின் கீழே இருக்கிறவர் 'ஈ' கிரேடு தந்திருக்கும்போது, எங்கே செல்வாக்கு தரப்பட்டிருக்கிறது? 'ஈ' கிரேடு என்பது குறைந்த கிரேடு ஆகும். ஆகவே, முழு விவரங்களையும் நான் தரவிரும்புகிறேன். அதைப் பற்றி இப்போது நீங்கள் பேசி, நான் என்ன சொல்கிறேன் என் றால்—இப்போது நீங்கள் பேசியிருக்கிறீர்கள். எனக்கு எந்த அளவிற்கு பொறுப்பு இருக்கிறதோ, அதே அளவிற்கு உங்களுக்கும் இருக்கிறது. 'இந்தியன்-எக்ஸ்பிரஸ்'-ல் விவரங்களைப் போட்டு, போடப்படும் தலைப்பு 'ஸ்கேண்டல்' என்று எழுதுகிறார்கள். அந்த அளவிற்கு பத்திரிகைகள் இன்றைக்கு இருக்கின்றன.

(பிற்பகல் 12-20)

**திரு. ரா. கிருஷ்ணன் :** ஆகவே, நான் குறிப்பிடுவது இந்த தன்னாட்சி, அட்டானமஸ் என்பதிலே பலவிதமான குழப்பங் கள் இருப்பதையும், சில மோசடிகள் இருப்பதாகவும நமக்குத் தகவல்கள் இருக்கின்றன. இதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். அத்தோடு இன்றைக்கு டெல்லிப் பல்கலைக் கழகத்திலே 8 வாரம் அல்லது 8 மாதம் வரை இருக்கக்கூடிய கோர்ஸ்கள் எல்லாம் இருக்கிறது.....

**திரு. ரா. உமாநாத் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 'ஸ்கான்டல்' என்ற வார்த்தையை அந்தப் பத்திரிகை உபயோகப்படுத்தியதினாலே எந்த அளவுக்கு பொறுப்பாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று தாக்குகின்ற வகையிலே, இர்ரெஸ்பான்சிபிலிட்டி என்ற முறையிலே—இம்ப்ளிகேசன்—நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது, பத்திரிகைகள் தான் பெரிய பெரிய ஸ்கான்டல்களை எல்லாம், வெளியே கொண்டு வந்தது, என்பதும் உண்மை என்று சொல்லி a very great service to the country. They have also done என்பதும் மறந்துவிடக்கூடாது. ஆகவே, அது பூரா விவரத்திற் கும் போவதற்குள்ளே ஸ்கான்டல் என்று சொல்விட்டு, இர்ரெஸ் பான்சிபிலிட்டி என்று சொல்லி, இம்ப்ளிகேட் பண்ணுவது சரி யல்ல.

The Press has done a great service by bringing out many cases of corruptions, bribery and other things.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள் அப்படிக் கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன். அப்படி பத்திரிகைகள் கொண்டு வந் திருக்கின்ற எத்தனையோ விஷயங்களை எல்லாம் நாங்கள்

திருத்திக் கொள்ள முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் ஆனால், அதற்காக, ஊழல் போல் இல்லாத ஒரு சம்பவத்தை ஊழல் என்று கொட்டை எழுத்திலே போட்டு ஒரு பல்கலை கழகத்தையோ, ஒரு பேராசிரியரையோ அவமானப்படுத்துவதோ, கேவலப்படுத்துவதோ, அவர்களைப் பற்றி தவறான அபிப்பிராயத்தை உருவாககுவதற்கு, முயற்சியை எடுத்துக் கொள்வதோ, சரியானதல்ல என்பது தான் என்னுடைய வாதம். (குறுக்கீடு) கீழே வந்திருக்கின்ற செய்திக்கும் மேலே போட்டிருக்கின்ற வார்த்தைக்கும் பொருத்தம் இல்லை.

திரு. ரா. உமாநாத் : கீழே வந்திருக்கிற செய்தி பேக்ட்.

MR. CHAIRMAN (Dr. K. SOWRIRAJAN): Suppose it is nct a fact, then it is for the individual to go to the court.

திரு.ரா. உமாநாத் : 'ஸ்காண்டல்' என்ற வார்த்தையைப் போட்டு இருப்பதாலேயே, இர்ரெஸ்பான்சிபிலிட்டி என்று இம்ப்ளை பண்ணுவது என்பது தப்பு என்பதுதான் என்னுடைய கருத்து.

MR. CHAIRMAN (Dr. K. SOWRIRAJAN) : All the matters published in the press have not been proved.

THIRU R. UMANATH : All the matters published in the press are also not untrue.

MR. CHAIRMAN (Dr. K. SOWRIRAJAN) : It is indiviaual's view.Our Hon'ble Minister's view is different your view is different.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்று தலைவர் அவர்களே, பத்திரிகையில் காணப்படுகிற குறைகளை, குற்றங்களை எடுத்துச் சொல்வது, சரி, கடமை, ஆனால் அதே நேரத்தில் தவறான அபிப்பிராயங்களை சில நிறுவனங்கள் மீதோ, தனிப்பட்ட ஒரு பேராசிரியர் போன்ற ஒரு பொறுப்புள்ளவர்கள் மீதோ, அதை ஏற்படுத்துவதற்கு தாங்கள் கருவியாக வந்துவிடக் கூடாது. அந்த பொறுப்பு எல்லை மீறுகிறபோதுதான், அதிலே அதிகமாகப் போய்விட்டால், மஞ்சள் பத்திரிகை என்று சொல்கிறோம்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அப்படியானால் யாராவது ஒருவர் மீது தவறான ஒரு செய்தியை எந்தப் பத்திரிகை வெளியிட்டிருந்தாலும், அப்படி அந்தச் செய்தி தவறாக இருக்குமானால் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போக வாய்ப்பிருக்கிறது. எனவே ஒரு பத்திரிகை, அதிலும் பொறுப்புள்ள பத்திரிகைகள் தவறான செய்திகள் வெளியிட்டால் மக்களுக்கு சில விஷயங்கள் தெரிந்தாக வேண்டும் என்பதற்காக அவர்கள் அந்த பிரத்யேக உரிமையை எடுத்துக் கொண்டு தான் வெளியிடுகிறார்கள்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் சொல்வது ஒரு பெரிய நிறுவனம், அல்லது ஒரு பேராசிரியர் போன்ற நிலையிலே இருக்கின்றவர்கள் மீது, கொண்டு வரப்படுகிற செய்திகள், ரொம்பவும், அதாவது "டைமென்சன்" அதிலே அதிகமாகப் போய், ஊழல் என்கிற "ஸ்கான்டல்" என்ற வார்த்தையை சொல்கிற அளவிற்கு அந்தச் செய்திகள் இல்லை. அதிலே போட்டிருக்கிற செய்திகள் இல்லை. அந்த அளவிற்குப் போக வேண்டாம் என்று நான் கூறுகிறேன். எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே இந்த மாதிரி நிறைய வந்து, இந்த மாதிரி கருத்துக்களை சமுதாயத்திலே பரப்புகிற ஒரு நிலைமை ஏற்படுமானால் இந்தச் சமுதாயத்தை எப்படிக் கெடுக்க முடியும் என்பதற்கு இதுவே உதாரணமாக இருக்கும்.

திரு ரா. உமாநாத் : எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே தான் பெரிய பெரிய விஷயங்கள் எல்லாம் வந்திருக்கிறது. மகாராஷ்டிராவிலே நடந்த விஷயம் பற்றி, அது உண்மையா ? பொய்யா ? என்பதை கோர்ட்டிலே போய் அப்-ஹோல்ட் பண்ணியது. (குறுக்கீடு). அருவடைய கருத்து அது. Don't generalise அது தப்பு. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நோ. நோ. நான் அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு).

திரு ரா உமாநாத் : இதே எக்ஸ்பிரஸ் பத்திரிகை தான் சுப்ரீம் கோர்ட் வரையிலே போயிருக்கக்கூடிய விஷயத்தைப் பற்றி வெளியே கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள். நான் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வருவது எல்லாம் பொய் என்று சொல்லவில்லை. அப்படி என்றால், தினமும் இந்தப் பத்திரிககையை வாங்கி படித்துக் கொண்டு இருக்க நியாயம் இல்லை. நான் சொல்வது இந்த குறிப்பிட்ட விஷயத்தில், இது போன்று எழுதக் கூடாது. பத்திரிகையிலே இப்படி எழுதுவதற்கு ஆரம்பித்தால், பொது வாழ்க்கையிலே இருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பு மக்களிடத்திலே இருக்க முடியாது என்ற அந்த அடிப்படையிலே தான் சொல்கிறேன். இந்தச் செய்தியைப் பொறுத்த வரைக்கும் என்னுடைய அபிப்பிராயத்தை நான் சொல்கிறேன். வருவது எல்லாம் பொய் என்று நான் சொல்லவில்லை.

MR. CHAIRMAN (Dr. K. SOWRIRAJAN) : Let us put an end to this, which has nothing to do with the subject. Hon'ble Member Mr. Krishnan may continue.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்வியைப் பொறுத்த வரையில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் தேதி ஸ்டேட்ஸ்மென் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அது டெல்லி

பல்கலைக் கழகத்தைப் பற்றியது. அதிலே சில கோர்ஸ்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த கோர்ஸ்கள் 8 வாரம் முதல் 8 மாதம் வரை இருக்கக் கூடிய கோர்ஸ்கள். மத்திய அரசாங்கத்தின் உதவியோடும், நிரந்தர துறையினுடைய தொடர்போடும், அந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே விட்டுப்போன கல்வியை தொடர அதாவது டிஸ்கன்டினியூட் செய்யப்பட்ட கல்வியை பயிலுவதற்கும், முதியோர் கல்வியைப் பயிலுவதற்கும் அதிலே ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அந்தப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

ஆகவே, குறிப்பாக இந்தப்பெண்கள் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்தக்கோர்ஸ்களை ஆரம்பித்தால் மிகவும் பொருத்தமாகவும், பயன் உள்ளதாகவும் இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் நான் குறிப்பிட்டுக் கூற விரும்புவது, இது சொடைக்கானலில் இருப்பது அவ்வளவு பொருத்தமாகவும், பயன் உள்ளதாகவும் இருக்காது என்பதால், அதை இந்த அரசு மறு பரிசீலனை செய்து, அதற்காக் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி, முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பெண்கள் பல்கலைக் கழகத்தை அமைப்பது சம்பந்தமாக கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த பசோதாவின் மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பல்கலைக் கழகத்தை அமைப்பதானது மிகவும் வரவேற்கத் தக்கது.

இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்குவது குறித்து 1981 ஆம் ஆண்டு அமரகவி பாரதியாருடைய நூற்றாண்டு விழாவிலே நம்முடைய அரசு தெரிவித்தது. இதில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே பிளேனிங் போர்ட், எக்சிகியூட்டிவ் கவுன்சில், அக்கடாமிக் கவுன்சில் போன்ற அத்தனைக்கும் நாமினேஷனாக போட வேண்டும் என்கிற நிலை இருப்பது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமா அல்லது எப்போதுமே இந்த நிலைதான் இருக்க வேண்டும் என்பது முடிவா, என்கிற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பின் விளக்க உரையில் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இரண்டாவதாக ரெஜிஸ்டிரார் அப்பாயின்ட்மென்ட்டைப் பொறுத்தவரையிலே 58 வயது வரையிலும் இருக்கலாம் என்ற நிலைமையை நாம் சொல்கிறோம். ஆனால் பிறகு, அவர்கள் எப்படித் தான் பணியை செய்தாலும், எக்ஸ்டென்ஷன் என்ற முறையிலே பதவியை நீட்டித்துக் கொடுக்கின்ற நிலைமையை உருவாக்கினால் அது நடைமுறையில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு இடம் அளிக்கும். வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அவர்களுக்கு





நண்பர்கள் என்ற காரணத்தால் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்படுகிறது என்று ஒரு பக்கம் அரசுக்கு கெட்ட பெயர் வரும். இன்னொரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம். நாடே அதில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் அவதிப்படுகிறோம். படித்தவர்களுக்கு, தகுதி வாய்ந்தவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத அவல நிலைமையில் நாம் இருக்கிறோம். ஆகவே சட்டங்களை இயற்றுகின்ற போதே, ஏனோ தானோ என்று இயற்றி, பிறகு அரசாங்கம் அதனுடைய சௌகரியப்படி எக்ஸ்டென்ஷன் கொடுக்கிறது என்று எண்ணுகிற நிலைமையை உருவாக்காமல் இருப்பதற்கு, கல்வித் துறையிலாவது நாம் முன் வர வேண்டும். காரணம் கல்வி அமைப்பிலே தான் இந்த நாட்டினுடைய முன்னேற்றமும் பொருளாதார முன்னேற்றமும் அடங்கியிருக்கிறது. ஆனால் பல்வேறு ஆண்டுக் காலமாக இதில் நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

படித்துப் பட்டம் பெற்ற பிள்ளைகளுக்கு உத்தியோகம் கொடுக்க முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். அதுவும் பெண்கள் முன்னேற்றம் அதிகமாகிவிட்ட இந்தக் காலத்தில் தகுதியானவர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. பெண்களுக்கென்று தனியாக இப்படி பல்கலைக் கழகம் இல்லாத காலத்திலும் கூட, பெண்கள் முன்னேற்றத்தில் சிறந்து வந்திருக்கிறார்கள். நிறைய தகுதி உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் தகுதி உள்ளவர்களுக்கு நம்மால் வேலை வாய்ப்பு கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, எக்ஸ்டென்ஷன் என்ற ஒரு நிலைமை இல்லாமல் இருக்க வேண்டும். அப்படி இல்லாத நிலைமையை உறுதிப்படுத்தி இந்தச் சட்டத்திலேயே கொண்டு வந்திருந்தால், இது மிகச் சிறந்ததாகவே இருக்கும். வருங்காலத்தில் உள்ளவர்களுக்கு நம்பிக்கையூட்டும்.

ஆகவே, இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தின் அமைப்பிலே தற்போது இல்லை என்றாலும் கூட, வருங்காலத்திலாவது அதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உறுதி தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, செனெட் மெம்பர்கள், அவர்களைக் கூட நாமினேஷன் முறையில் வைக்காமல், அவர்களை தேர்ந்தெடுக்கின்ற வகையில் சட்டத்திலேயே இடம் கொடுத்து, இதைச் செய்திருந்தால் பின்னால் இதிலே ஏதும் தவறே வராது. ஆனால் அப்படி இல்லாமல் தற்போது அது இருக்கிறபடியே வைத்துக் கொண்டு பணி செய்வோமேயானால், இது ஏதோ தங்களுக்கு சாதகமானவர்களுக்கு, அல்லது வேண்டியவர்களுக்கு, அல்லது ஆளும் கட்சிக்காரர்களுக்கு அந்தப் பதவியை கொடுப்பதற்காக வைக்கப்பட்டு இருக்கிறது என்கிற ஒரு கெட்ட பெயர் வந்துவிடும். அப்படி வராமல் இருக்கின்ற முறையில், இன்றைக்கே இந்த பில்லுக்கு அமெண்ட்மெண்ட் கொண்டு வந்தோ, அல்லது பில்லை நிறைவேற்றிய பிறகு உடனடியாக செய்வதற்கு வாய்ப்பு இருந்தால் செய்தோ, அல்லது மீண்டும் வேறு சந்தர்ப்பத்திலோ, அவர்களை

தேர்தல் முறையில் அப்பாயின்ட் செய்ய, அந்த முறையை உருவாக்க நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் உறுதி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதைப்போலவே 45-வது பக்கத்திலே, ''நல்வாழ்வு அல்லது மனித உயிரின வாழ்க்கைச் சூழல் ஆய்வியல், கல்வி, மேம்பாடு, சமூகம், சட்டம்—சட்டப் பிரச்சினைகள், உரிய தொழில் நுட்பவியல்—அறிவியல், கிராமியக் கலைகள் உட்பட நுண்கலைகள்—இசை, ஆராய்ச்சி முறை-மெய்விளக்க திரைப்படம், மகளிர் நிலை—சிறப்புப் பொருளாதாரம், விதவைகள்—பாதிக்கப்பட்ட மகளிரின் தேவைகள்'' என்றெல்லாம் துறைகள் இருக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே ஜாதி பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு என்ன கேடுகள் குறுக்கே இருக்கின்றன. ஜாதி என்ற பேராலே என்ன அவல நிலைமைகள் இருக்கின்றன என்பதை எல்லாம் ஆராய்வதற்கு முயற்சி செய்யக்கூடிய முறையிலே மாறுபட்ட கருத்துக்களை உண்டாக்குவதற்கு கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு சோஷியல் ரெவல்யூஷன் என்ற முறையிலே உருவாக்கக்கூடிய பகுதியை பல்கலைக் கழகத்திலே சேர்ப்பீர்களானால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்களைவிட பெண்களிடத்திலே தான் அதிகமான அளவிலே ஜாதி முறைகள் மூடப் பழக்க வழக்கங்கள் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில், அமரகவி பாரதி வாழ்ந்த காலத்திலேயும் சரி, அதற்குப் பின்னால் 100 ஆண்டுகள் கழித்தும் சரி, பெண்கள் மத்தியிலே அப்படிப்பட்ட நல்ல நிலைமையை உருவாக்குவதற்கு சமுதாயத்தின் மூலமாக கொண்டுவருவதற்கு முடியவில்லை. பெரியாருக்குப் பிறகு அப்படிப்பட்ட சீர்திருத்த வார்த்தைகளைச் சொல்வதற்கு ஆட்கள் இல்லை என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும். காரணம் ஓட்டு வாங்குகிற ஒரே காரணத்தினால் நாம் இதைச் சொன்னால் ஓட்டு அதிகம் கிடைக்காதோ என்ற பாவமான நிலையில் பயந்தாங்கொள்ளியாக அரசியல்வாதிகள் அரசியல் தலைவர்கள் நடமாடுகின்ற, அதிகமானவர்கள் வாழுகின்ற இந்த நேரத்திலே இந்த பல்கலைக் கழகத்திலாவது பெண்களுக்கு உயரிய நிலையை, உரிமையைத் தருகின்ற முறையிலே இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பெண்கள் மத்தியில் மனமாற்றத்தை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், பாடத் திட்டங்களை அந்த முறையிலே உருவாக்குவதற்கு கல்வியமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன், அவர்கள் பின்னுரையிலே அதைப்பற்றிச் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

இந்தக் கல்லூரிகள் அமைக்கப்படுகிறபோது ஒவ்வொரு சமயத்திலும் மலைவாழ் மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டம் பெற்றவர்கள், படித்தவர்கள் இருக்கிறார்கள், எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சைக் கேட்டால் படித்தவர்கள், தகுதியுள்ளவர்கள்





இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கக் குறிப்பேடுகளும் நமக்கு அதைத்தான் சொல்கிறது. ஆனால் உத்தியோகத்திலே கொடுக்கிறபோது பட்டம் பெற்றவர்கள், படித்தவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்லி ஆரம்ப காலத்திலே செய்யாது விட்டுவிட்டு, பின்னாலே கேட்கிறபோது அமைச்சர் ஒவ்வொரு துறையிலும் சொல்கிறபோது அது ஆரம்பத்திலே நடந்துவிட்டது, அப்போதே முடிந்துவிட்டது, இனி மேல் வரும் சந்தர்ப்பத்திலே அவர்களுக்கு ரிசர்வேஷன் கொடுக்கப்படும் என்று ஆறுதல் மொழியாக நமக்குச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அது எந்த அரசாங்கமாக இருந்தாலும், மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி, பப்ளிக் அன்டர்டேக்கிங் ஆக இருந்தாலும் சரி, கவர்ன்மென்ட் அண்டர்டேக்கிங்காக இருந்தாலும் சரி, ஏன் சட்டமன்றமாக இருந்தாலும் சரி, பாராளுமன்றமாக இருந்தாலும் சரி அவர்களுக்குக் கொடுக்கவில்லை. சட்டமன்றத்திலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவில்லை. பாராளுமன்றத்திலே கொடுக்கவில்லை. அரசாங்க உத்திரவை அரசாங்கமே கௌரவப்படுத்தவில்லை. இதுபோன்ற பல்கலைக் கழகம் புதுமையாகத் தொடங்கப்படுகிறபோது எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சைக் கேட்கிறபோது படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அனுபவம் உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முன்வரவேண்டும். அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணம் உள்ளவர்கள். அவர்கள் எண்ணத்தில் எனக்குச் சந்தேகம் இல்லை. உத்திரவிடலாம். ஆனால் அந்த உத்திரவு கௌரவிக்கப்படுகிறதா ? நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். 150 ஆண்களாக இருக்கிற சென்னைப் பல்கலைக் கழகத்திலே எத்தனை சதவீதம் வேலை செய்கிறார்கள் ? ஏதோ அரசாங்கம் ஒருவரைக் கொண்டுவந்து போட்டபிறகும்கூட அந்தப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் எழுதியும்கூட அரசாங்கத்திலே உள்ளவர்கள் அட்டானமஸ் பாடி என்று சொல்லி அந்த மக்களுக்குக் கொடுக்க வேண்டிய சதவீதத்தை அரசாங்கத்தின் உத்திரவை அமல்படுத்து கிறபோது மறைமுகமாக அரசாங்க அதிகாரிகள், மேலிடத்தார்கள் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய சதவீதம் கிடைக்காமல் செய்து கொண்டு இருக்கிறார்கள். 150 ஆண்டுக்காலமாக அந்தப் பல்கலைக் கழகம் இருந்தும் இன்று வரையிலும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அந்த மக்கள் தகுதியற்றவர்கள், மூடர்கள் என்று ஒத்துக் கொள்ள வேண்டும். இரண்டு, தகுதியாகச் செய்வதற்கு திறமையற்ற அரசாங்கம் தகுதியற்ற அரசாங்கம் என்று ஒத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சௌரிராஜன்) : வைஸ்-சான்ஸலராக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் தான் இருக்கிறார்.

திரு. எல். இளையபெருமாள் : இப்படி ஒவ்வொரு துறையிலேயும் அந்த மக்களை தலைமையாகக் கொடுத்து அவர்கள் செய்யாத முறையிலே இக்கட்டை உண்டாக்கச் செய்தால் ஜாதி

வெறிகள் என்பதும், செய்யாவிட்டால் தகுதியற்றவர்கள் என்பதும் சொல்கிறார்கள். இதற்கெல்லாம் தான் சொன்னேன், மறைமுகமாக அரசாங்கம் இடுகிற கட்டளையை செய்யவில்லை. நான் ஆல் இண்டியா சேர்மனாக இருந்தபோது எனக்குத் தெரியும். நீங்கள் நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள். நான் சொல்லிக் கொள்கிறேன், நான் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவன், நான் ஆல் இண்டியா சேர்மனாக இருந்தேன். சுப்ரீம் கோர்ட் தான் இந்த தேசத்திற்கு எல்லாம், கடவுள் என்று சொன்னால்கூட நான் ஒத்துக் கொள்வேன். அங்கே நான் கேட்டேன். இந்தப் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன். இங்கே ஜாதி வித்தியாசம் கிடையாது, ஆகவே அதைப்பற்றிய ஒரு லிஸ்ட் வைத்துக் கொள்ளவில்லை, ஆகவே உங்களுக்குத் தரமுடியாது என்று சொன்னார்கள். பிறகு 1969-ல் நான் ஒரு கடிதம் எழுதினேன். பின்தங்கியமக்களுக்குக் கொடுக்கப்படுகிறதா? எத்தனை பேர்கள் பணிசெய்கிறார்கள் என்று கேட்டேன். இத்தனை பேர்கள் என்று கொடுத்தார்கள். மறுபடியும் நான் சுப்ரீம் கோர்ட் சீப் ஜஸ்டிஸ்க்கு எழுதினேன். பின்தங்கிய மக்களுக்கு நீங்கள் வைத்திருக்கின்ற கருணையை விட கான்ஸ்டிட்யூஷனிலே ஸேப்கார்ட் இருக்கிறபோது—பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர் அம்பேத்கார், உத்தமர் காந்தி ஆகியவர்கள் இதற்கெல்லாம் போராடி இதற்காகவே பூனா ஒப்பந்தத்தை ஏற்படுத்தி—கான்ஸ்டிட்யூஷன் பிரகாரம் கொடுத்திருக்கிற அந்த மக்களுக்கு நீங்கள் குறிப்பேடுகள் வைக்கவில்லை ஏன் என்று கேட்டபோது, அவர்கள் நான் ரிப்போர்ட்டை முடிக்கிறவரையிலும் அதற்கு பதிலே அனுப்பவில்லை. நீதி வழங்குகிறவர்கள், நீதிநாயகர்களாக இருக்கிறவர்கள் அரசியல் சாஸனத்திலே குறிப்பிடப்பட்டதை கௌரவப்படுத்தவில்லை என்பதைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. இந்த சமுதாய மக்களை சூப்பிரின்டென்டெண்ட்களாக, கலெக்டர்களாக பல்கலைக் கழகத் துணைவேந்தராக அமைத்துவிட்டால் போதாது. யாராக இருந்தாலும் சட்டப்படி செய்யத் தவறினால் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை அரசாங்கத்திற்கு வந்தாலொழிய இது நடக்காது. இன்றைக்குக்கூட ஹைக்கோர்ட்டிலே சட்டப்படி 18 சதவீதம் கொடுக்க வேண்டும் என்றாலும் கடந்த பத்தாண்டுக் காலமாக கொடுக்கப்படவில்லை. திரு. வரதராஜனை வேண்டுமானால் அவர்கள் சுட்டிக்காட்டுவார்கள். அவர் புரமோஷனில் வந்தார். டைரக்ட் ரெக்ரூட்மெண்டிலே 1952 முதல் இன்றைய வரையிலும் ஹைகோர்ட் ஜட்ஜுகள் நியமிக்கப்படவில்லை. 'There is reservation in promotion for Scheduled Castes and Scheduled Tribes' என்று கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா உத்திரவு இருந்தும்கூட 1952 இல் இருந்து இன்று வரையிலும் 'There is no reservation in promotion for Scheduled Castes except for Deputy Collectors' posts' என்ற நிலைமை இருப்பதை நான் மாற்றுத் தலைவருக்குச் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறேன். ஆகவே கல்வியமைச்சர் அவர்கள் இது புதுமையாக வருகிற ஸ்தாபனமாக இருக்கி காரணத்தினால் கொஞ்சம் கடுமையாக இருக்கவேண்டும். தகு





யுள்ளவர்கள், திறமையுள்ளவர்கள் அனுபவம் உள்ளவர்கள் ஆகியவர்களுக்குத்தான் நான் கேட்கிறேனே தவிர ஏதோ படியாதவர்களுக்காக நான் கேட்கவில்லை. தாழ்த்தப்பட்டவனாக பிறந்துவிட்டான், ஆகவே கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நான் என்னுடைய ரிப்போர்ட்டிலேயே சொல்லியிருக்கிறேன். இந்த நாட்டிலே எந்த மனிதனாக இருந்தாலும் பிராமின் ஆக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், யாராக இருந்தாலும் சரி, தீண்டாமை இந்த நாட்டிலே ஒழிக்கப்படவேண்டுமானால் யாரெல்லாம் ஏழைகளாகப் பிறந்தாலும் அத்தனை பேர்களும் ஆதிதிராவிட மக்களுக்கு கொடுக்கிற சலுகைகளைக் கொடுக்க ஒரே ஒரு கண்டிஷன்தான், அவன் தீண்டாமையை அனுசரிக்காது, மற்ற மக்களோடு சமத்துவமாக வாழ்வதற்கு தகுதியாக இருக்கிறேன் என்று உறுதி கொடுப்பானானால் ஏழை என்ற பெயராலே கொடுப்போம் என்பதுதான் 1969 ஆம் ஆண்டிலே என்னுடைய கமிட்டியின் ரெக்கமன்டேஷன் கொடுத்து இருப்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நாளும் நான் தாழ்த்தப்பட்டவன், ஆகவே எனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று ஒரு கேவலமான நிலைமைக்கு துணிபவன் அல்ல. தகுதி, திறமை இருக்கிறது, அனுபவம் இருக்கிறது, இந்த நாட்டிற்கு என் சேவை தேவை என்று நினைக்கிற அப்படிப்பட்டவர்களுக்கு புறக்கணிக்காமல் அரசியல் காரணமாக, மதம் காரணமாக, ஜாதி காரணமாக செய்கிற பாவமான காரியம் நாட்டில் நடக்கிறது. தமிழ்நாட்டில் நடக்கிறது. அப்படி நடக்காமல் இருப்பதற்கு இதுபோன்ற நல்ல கருத்துக்களை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அன்னை தெரசாவைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு உயிரோடு இருந்தாலும் கூட வெளிநாட்டுப் பெண்மணி இந்த நாட்டிலே வந்து ஏழை மக்களுக்காக நிராதரவான கைம்பெண்களுக்காக தொழுநோயாளிகளுக்காக பிச்சையெடுக்கிற சமுதாயம், அவல நிலையில் இருக்கிறவர்கள் சுதந்திரம் வந்தும் கூட இன்னும் சொத்தற்றவர்களுக்கு நேரடியாக உதவி செய்கிற சட்டம் இல்லை. அப்படி இருந்தாலும் கூட இன்றைக்கு பேங்குகள் நேஷனலைஸ் செய்துகூட நேரடியாக அன்னை இந்திரா காந்தி அவர்கள் 5 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை குறைந்தபட்சம் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவர்கள், குறைந்த பட்சம் 25 வயதுக்கு மேல் 35 வயதுக்குட்பட்டவர்களுக்கு அந்த உதவியைக் கொடு என்று சொல்லியுங்கூட இன்றைக்கு பேங்கிலே உள்ளவர்கள் மனிதத் தன்மையை விட்டு மிருகத்தனமான உணர்வோடு கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று நம்முடைய குறிப்பேடுகள் சொல்கின்றன.

(பிற்பகல் 12-40)

இப்படிப்பட்ட ஒரு அவல காலத்தில் அன்னை தெரசா அவர்கள் வெளிநாட்டில் பிறந்து, இந்திய மக்களுக்காகச் சீரும் சிறப்புமாகப் பணிபுரிந்து, கஷ்டமான காரியங்களுக்குத்

தன்னைத் தயார் செய்து கொண்டு, தன்னுடைய வாழ்க்கை பூராவும் கஷ்டப்பட்டு, தான் கன்னியாக இருந்து வருகிறார்கள். அவர் உயிரோடு இருந்தும் இந்த நினைவைத் தமிழக அரசு செய்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன். அந்த அம்மையாருக்கு நன்றி சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மகளிர் பல்கலைக் கழகத்திற்கான இந்த மசோதாவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அன்னை தெரசாவின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எந்தப் பெயரை வைக்கிறோம் என்பது அல்ல பிரச்னை. எந்த நோக்கத்திற்காக இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது என்பதைப்பற்றி மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் இங்கே சில குறிப்புகளைக் கோடிட்டுக் காட்டினார்கள்.

பெண் அடிமை சமுதாயத்தை நீக்கவேண்டுமென்ற பாரதியின் நூற்றாண்டு விழாவின் நினைவாக இந்தப் பல்கலைக் கழகம் துவங்கப்படும் என்று அன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப்படுவதாகச் சொன்னார்கள். பெண்ணுக்கு விடுதலை வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என்ற பாரதியின் வாய்மொழி வெல்ல வேண்டுமென்பதற்காக இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப் படுவதாகச் சொன்னார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இப்படிப்பட்ட பல்கலைக் கழகத்தால் சரிநிகர் சமானமானச் சமுதாயம் அமைந்து விடுமா என்றால் முடியாது என்பதுதான் என்னுடைய ஆழமான கருத்து.

இந்த நாட்டிலே பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் வரதட்சிணைக் கொடுமைகள், வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஏற்படும் கொடுமைகள், விதவைகள் படுகின்ற கொடுமைகள், வாழ்விழந்த நலிவுற்ற பெண்கள் ஆகியவர்களுக்கு இந்தச் சமுதாயத்தில் எப்படிப்பட்ட பாதுகாப்பு கிடைக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் பெண்களுக்குச் சமானம் கிடைக்கும்.

சோவியத் நாட்டில் 18 வயது நிரம்பிய பெண் இரவு 12 மணிக்குக்கூட, தனியார் கார் அல்ல, அரசாங்கத்திற்குச் சொந்தமான வாடகைக் காரை ஓட்டிச் சென்று வாழ்க்கை நடத்தும் உத்தரவாதத்தை சோவியத் பூமி கொடுத்திருக்கிறது. எப்படிப்பட்ட சரிநிகர் சமானமான வாழ்க்கையைப் பாரதி சுட்டிக் காட்டினானோ, அப்படிப்பட்ட சமுதாயத்திற்கு வழி காண நாம் இந்தப் பல்கலைக் கழகத்தை அமைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய இந்த முயற்சியைப் பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம்.





இந்தப் பல்கலைக் கழகத்தைக் கொடைக்கானல் மலையிலே அமைக்கவிருக்கிறோம் என்று சொல்கிறோம். இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாங்கள் எதிர்க்கிறோம். ஏனென்றால், இன்று இதுபோன்ற மலைப் பிரதேசமான இடங்களுக்குப் பெண்களை அழைத்துச் சென்று, அதுவும் தன்னாட்சி கொண்ட, பெண்களே நிர்வாகம் செய்யும் முறையில் அமைக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தாலும், இன்று சீர்கெட்ட சட்டஒழுங்கு நிலையிலே அந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியாது. மேலும், அங்கே பல்லாண்டுக் காலமாக நாம் கட்டி வளர்த்து வந்த மலை வளம் அழிக்கப்படும் என்பது எங்களுடைய கடுமையான குற்றச்சாட்டாகும்.

இப்படிப்பட்ட உயர்ந்த பல்கலைக் கழகத்தைத் தமிழகத்தில் உள்ள ஆற்று வளமும், இயற்கை வளமும் நிறைந்த பூமியிலே நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாக அமைப்பு முறையைப் பொறுத்தவரையில், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு முறை இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைப்பு முறையின் மூலம் நிர்வாகத்தைச் சீரமைக்க முடியும் என்று கருதவில்லை. என்றாலும், குறைந்த பட்சம் தாங்கள் எண்ணுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டவும் தேர்ந்தெடுக்கப்பெற்ற முறையில் அந்த நிர்வாக அமைப்பு முறை இருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. இந்தக் கல்வி முறையைப் பொறுத்தவரையில் விதவைகளைப் பற்றியும், அடித்தளத்தில் வாழும் மக்களைப் பற்றியும் ஆராயவும், சில பட்டமளிப்புகளை வழங்கவும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாம் விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறோம். புதிய புதிய படைப்புகளைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

தொழிலாளர்களை உருவாக்கக்கூடிய, நவீன விஞ்ஞானங்களைப் படிக்கக்கூடிய முறையைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தன்னாட்சி முறை என்று சொல்லி இருக்கிறீர்கள். இன்றைக்கு தன்னாட்சி முறையிலே செயல்படக்கூடிய கல்லூரியாக இருந்தாலும், பல்கலைக் கழகமாக இருந்தாலும் அங்கே எல்லாம் நடைபெறுகின்ற தவறுகளைப் பற்றிச் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட தவறுகள் இந்தப் பல்கலைக் கழகத்திலும் தோற்றுவிக்கின்ற வகையிலே தன்னாட்சி முறை ஏற்படுத்தப்படுவது என்பது கூடாது என்ற கருத்தினைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மு. அப்பாதுரை] [1984 மார்ச் 6

நாட்டிலே இருக்கின்ற அனைவரும் நல்ல முறையிலே கல்வி வசதியினைப் பெறவேண்டும் என்ற வகையிலே இப்படிப்பட்ட பல்கலைக் கழகங்களை எல்லாம் நாம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் பெரியவர் திரு. இளையபெருமாள் அவர்கள் அரை மணி நேரத்திற்கும் மேலாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு சென்னை நகரிலே 10-க்கும் மேற்பட்ட, ஆதி திராவிட மாணவர்கள் படிக்கக்கூடிய விடுதிகள் மூடப்பட்டிருக்கின்றன. இந்த மாத இறுதியிலே அந்த மாணவர்களுக்கு தேர்வு எல்லாம் நடக்க வேண்டி இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆதி திராவிட மாணவர்கள் படிக்கக்கூடிய விடுதிகள் மூடப்பட்டிருக்கின்றன. எனவே அவற்றை எல்லாம் திறப்பதன் மூலம்தான் படிப்பைக் காப்பாற்ற முடியும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்று அமைகிறேன்.

*திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மகளிர் பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட பில்லை நான் பெண்கள் சார்பிலே முழுமனதோடு வரவேற்கிறேன். அது மட்டுமல்லாமல் தன்னுடைய காலத்தை எல்லாம் இந்த நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் அர்ப்பணம் செய்துகொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னை தெரசா அவர்களின் பெயர் அந்த பல்கலைக் கழகத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் அன்பே உருவாகக் கொண்டவர்கள்; ஏழைகள் பால் இரக்கம் கொண்டவர்கள். தொழுநோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும் பராமரிப்பு கொடுத்து அவர்களைத் தொட்டு குளிப்பாட்டி இப்படி பலவிதமான நல்ல காரியங்களையும் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு உத்தமியின் பெயரைச் சூட்டியதற்காக நான் பாராட்டுகிறேன்.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் இந்த நாட்டிலே என்று பாரதியார் சொன்னார்கள். அவர் உண்மைக் கவிஞன், புதுமைக் கவிஞன். எனவே அவர் கவிதையிலே வடித்துச் சொன்னார். ஆனால் அத்தி பூத்ததுபோல் அங்கொன்றும், இங்கொன்றும் என்ற அளவிலேதான் பெண்களின் சமுதாயம் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே பாரதியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் அந்தப் பெண்களை உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையிலே இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய எண்ணத்திலே உதித்திருக்கின்றது. எனவே இவ்வளவு பெரிய சிறப்பான ஒரு அம்சத்தை உருவாக்கிக் கொடுத்ததற்காக நான் மறுபடியும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 6] (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்)

இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய நோக்கம் மகளிர் கல்வி வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காகவும், மகளிர் நலன் குறித்த ஆராய்ச்சிகளைப் பெண்களே மேற்கொள்வதற்காகவும், மகளிர் தொடர்பான எந்தவகையான நல்ல முன்னேற்றத்திற்கும் ஆலோசனை நெறி முறை ஆகியவற்றை வழங்குவதற்காகவும்தான் இந்தப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி என்றால் படிப்பு மாத்திரம் இல்லை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். சமுதாயத்தில். இன்றைக்கு பெண்களுக்கு ஈக்குவாலிட்டி என்ற வகையில் சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்பது நடைமுறையில் இருந்தாலும் கூட, அப்படி சட்டம் இருந்தாலும் கூட என்ன நிலைமை இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்கிறான் என்றால் அவ்வாறு திருமணம் செய்த பின் இரண்டு மூன்று குழந்தைக்குத் தாயான பிறகு அந்தப் பெண்ணை விட்டுவிட்டு எங்கோ ஓடி விடுகிறான். அப்படிப்பட்ட நிலைமையில் பெண்கள் வாழ வழியில்லாமல் இருக்கிறார்கள் பெண்களைக் கைவிட்டு விடுகின்ற நிலைமை ஏற்பட்டதன் காரணத்தால் டெசர்ட்டட் என்ற அளவில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்விலே மறுமலர்ச்சி ஏற்படுவதற்குரிய வழிவகை காண்பதற்காகத்தான் இந்த பல்கலைக் கழகம் அமைக்கப்படுகிறது.

ஆனால் இது கொடைக்கானலிலே ஆரம்பிக்கப்படுகின்றது. நான் அன்றைய தினம் கவர்னர் உரையிலே பேசுகிறபோதே சொன்னேன். கொடைக்கானலில் வைக்கப்பட்டிருப்பது சரியில்லை என்று சொன்னேன். அங்கே வரு[illegible]தில் நான்கு மாதங்கள் குளிர் நடுங்கும். அப்படி நடுங்குகின்ற குளிரிலே இந்தப் பெண்கள் எப்படி இருக்க முடியும்? மேலும் அங்கே காஸ்ட் ஆஃப் லிவ்விங்கும் அதிகம். சாப்பாடு கீழே 3 ரூபாய் என்றால் அங்கே 6 ரூபாய். அறை வாடகை கீழே 10 ரூபாய் என்றால் அங்கே 30 ரூபாய். இப்படி இருக்கக்கூடிய நிலைமையில் இந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்திலே, சாதாரணமாக பணக்கார பெண்கள் வசதி படைத்தவர்கள் சேருவதற்குத்தான் வாய்ப்பு இருக்குமே தவிர, ஏழைப் பெண்கள், சாதாரண குடும்பத்திலே பிறந்த பெண்கள், அரிசன சமுதாயத்திலே பிறந்த பெண்கள், குறைந்த ஸ்காலர்ஷிப்பை வைத்து அங்கே சென்று படிக்க முடியுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

(பிற்பகல் 12-50)

நீங்கள் அங்கே வைத்தாலும் கூட, குளிர் காலத்திலே, அந்தக் குளிரைத் தாங்கக்கூடிய அளவிலே அவர்களுக்குக் கம்பளி ஆடைகளைக் கொடுக்கவேண்டும். நாம் எல்லாம் வாங்கிக் கொடுக்க முடியாது; என்றாலும் ஒரு சொல்லுக்குக்

சொல்கிறேன். கம்பளி உடை வாங்கிக் கொடுத்து, தங்கள் குழந்தைகளைப் படித்துவிட்டு வாருங்கள் என்று கல்லூரிக்கு அனுப்புகிற நிலைமையில் பெற்றோர்கள் இல்லை. ஆகையினால், அங்கே எவ்வளவு செலவாகுமோ, அதற்கு நீங்கள் வழிவகை செய்யுங்கள். அந்தப் பல்கலைக் கழகத்திலே பயிலவிருக்கும் ஒரு பெண்ணுக்கு ரூ. 300 செலவாகும் என்றால், ரூ. 300 ஸ்காலர் ஷிப் கொடுங்கள். ஏழைகளுக்கு அந்த அளவு உதவி கொடுத்து அந்த அளவிலே செய்யுங்கள். இல்லாவிட்டால் தயவு செய்து அந்த இடத்தை மாற்றிக் கொண்டு கீழே பெரிய குளத்திலே வையுங்கள். மலை அடிவாரத்திலே பல ஏக்கர் நிலங்கள் காலி யாக இருக்கின்றன. அங்கே அல்லது வத்தலகுண்டு அல்லது திண்டுக்கல்லிலே அந்தப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்தால் பல பெண்கள் தங்களுடைய பிரச்னைகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு இந்தப் பல்கலைக் கழகத்திலே சேருவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்றுதான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு இந்தப் பல்கலைக் கழகத்திலே ஒரு பார்ஷியாலிட்டி மாண்புமிகு கல்வி அமைச்சருக்கும் முதலமைச்சருக்கும் அதை நினைவூட்டுகிறேன். 'நீங்கள் கொண்டு வந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். ஆனால் மதுரையிலே உள்ள காமராஜர் பல்கலைக் கழகத்தின் அந்தஸ்து இந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்திற்குக் கிடையாது. சென்னை யிலே உள்ள சென்னைப் பல்கலைக் கழகத்தின் அந்தஸ்து இந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்திற்குக் கிடையாது. பம் பாயிலே உள்ள திருமதி நாதிபாய் தாமோதர் தாக்கர்சே மகளிர் பல்கலைக் சழகத்திற்கு என்ன அந்தஸ்து இருக்கிறதோ அதே அளவு இதற்கும் இருக்கவேண்டும். அந்தப் பல்கலைக் கழகத்திலே,அங்கே இருக்கிற பெண்கள் கல்லூரி அத்தனையையும் இணைத்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையா என்று எனக்குத் தெரியவில்லை. அது உண்மையாக இருந்தால் அந்த அளவிற்காவது இந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு அந்தஸ்து கொடுக்கக் கூடிய அளவிலே இங்கே இருக்கக்கூடிய பெண்கள் கல்லூரிகள் அனைத்தையும் இணைத்து, மற்றவர் களுக்குக் கொடுக்கக்கூடிய அந்தஸ்தை நீங்கள் கொடுப்பீர் களானால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இங்கே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

'இந்தப் பல்கலைக் கழகத்தில் அதிகாரி பதவிக்கு அல்லது வேறு பதவிக்கு நியமிக்கும் தகுதி வாய்ந்த மகளிர் இல்லை யென்றால்' என்றுள்ளது. ஏன் சார், தகுதி வாய்ந்த மகளிர் இல்லையா ? எத்தனை பெண்கள் பி. ஏ. படித்துவிட்டு, எம். ஏ. படித்து விட்டு நிர்வாகத்திலே சிறப்பான முறையிலே பணியாற்றி வருகிறார்கள். கலெக்டர்களாக இருக்கிறார்கள். பல பெண்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். கல்லூரியிலே முதல்வராக இருந்த நல்ல அனுபவமும் பெற்ற, 50, 55 வயதான வர்கள் தங்களுக்குப் பதவி வேண்டாம், மற்றவர்களுக்குக்



கொடுக்கலாம் என்று தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்து விட்டு—வாலண்டரி ரிட்டையர்மென்ட் வாங்கிவிட்டு-வெளியிலே இருக்கிறார்கள். இப்படிப் பல பெண்கள் இருக்கிற நேரத்திலே மகளிர் இல்லாவிட்டால் ஒரு ஆணைப் போடலாம் என்று இருப்பதைத் தயவு செய்து எடுத்து விடுங்கள். அது வேண்டாம். அது இருக்க வேண்டாம் என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி துணை வேந்தரை அமர்த்துகின்றோம். பதிவாளரை அமர்த்துகின்றோம். பதிவாளரை அமர்த்தும் போது அனுபவம் இல்லாதவர்களைப் போட வேண்டாம். நல்ல அனுபவம் வாய்ந்த, நல்ல திறமையாக வேலை செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் கேட்டால் பெயர்களைக் கொடுக்கின்றோம். அப்படி இருக்கின்றார்கள் பல பெண்கள் 30 ஆண்டுக் காலம் கல்லூரியிலே முதல்வராகப் பணியாற்றி விட்டு இன்றைக்கு வெளியிலே இருக்கிறார்களே அவர்களுடைய அறிவையும் திறமையையும் நீங்கள் பயன்படுத்தியாக வேண்டும். அதைப் பயன்படுத்துவதற்காக இந்தச் சட்டத்தைத் தளர்த்திக் கூட, நியமிக்க வேண்டும். 58 வயதானவர்களைப் பதிவாள ராகப் போடக் கூடாது என்று இருக்கிறது. அதை மாற்றி இப்படி ஓய்வு பெற்றவர்களின் திறமையானவர்களின் அறிவையும் திறமையையும் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு, நீங்கள் சட்டப் பிரிவுகளைத் தளர்த்த ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல, இன்றைக்கிருக்கிற சூழ்நிலையில் ஆராய்ச்சி என்பது வேறு. இந்த ஆராய்ச்சியிலே குழுக்களை அமைக்கின்றோம். உண்மையிலே என்னுடைய பர்சனல் ஒப்பினீயன்—என்னுடைய தலைவரைக் கூட நான் கலந்துகொள்ள வில்லை—அந்தக் குழுக்களிலே தகுதி வாய்ந்த உறுப்பினர்களை நியமனம் செய்ய வேண்டும். அந்தப் பல்கலைக் கழகம் நல்ல வளர்ச்சி அடைவதற்கும் எல்லா கட்டிடங்களும்-கட்டி முடிக்கிற வரையிலும், ஏற்கனவே நியமித்த குழுக்கள்தான் இருக்க வேண்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் தேர்தல் வைக் கலாம். அதற்குப் பிறகு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வைத்து கோளாறு வந்து விடாமல், அந்த அடிப்படையில் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். படித்த பல இலட்சக் கணக்கான பட்டதாரிப் பெண்கள் இன்றைக்கு வேலை வாய்ப் பில்லாமல் அழுது கொண்டிருக்கிறார்கள். சர்வீஸ் கமிஷன் குரூப் 4 தேர்வுக்கு என்னிடத்தில் மட்டும் 117 பெண்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒருவரிடமும் எந்தப் பெயரையும் கொடுக்கவில்லை. நான் என்ன செய்ய முடியும் ? ஒன்றுமே செய்ய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பெண்களுக்கு இந்தப் பல்கலைக் கழகத்திலே ஒரு பிரிவை ஏற்படுத்தி, அவர்களுக்குத் தொழில் கல்வி, அளிக்கக் கூடிய வகையில், மாநிலம் முழுவதும் இருக்கிற பட்டதாரி பெண்களைக்

கணக்கெடுத்து அதற்கேற்ப சிவில் இன்ஜினீயரிங், எலக்ட்ரானிக்ஸ் போன்ற பகுதிகளிலே அவர்களுக்குத் தொழில் கல்வியை இந்தப் பல்கலைக்கழகம் மூலமாக ஆரம்பித்து, அவர்கள் படித்து முடித்த உடனேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் அது உண்மையிலேயே சாலச் சிறந்ததாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அது மாத்திரமல்ல. இன்றைக்கு நாம் பல்கலைக் கழகக் கல்வி நிர்வாகத்திலே பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய அளவிலே, வேலையற்ற பட்டதாரி பெண்களைக் கணக்கெடுத்து, 50 சத விகிதம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு தர வேண்டுமென்று பெண்களின் சார்பிலே கூறி, இந்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கான இந்தச் சட்டமுன்வடிவின் மீது பல்வேறு நல்ல கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்கள் சமுதாயத்தில் சமத்துவ நிலையை அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு அதற்கான வழிவகைகளை ஆராயவும், யோசனைகளைச் சொல்லவும், பல்வேறு அறிவுபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவுமான ஒரு மைய கேந்திரமாக, அறிவு கேந்திரமாக கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக்கழகம் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் இன்றைக்கு அதைத் துவக்கி இருக்கிறோம். அதற்கேற்பதான் நோக்கங்களும் மற்ற பல்வேறு விதிமுறைகளும் வகுக்கப்பட்டு இன்றைக்கு சட்டமுன்வடிவாக அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அதை ஆதரித்து பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிற பல்வேறு கருத்துக்களை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேர்தல் இல்லாத அமைப்புகள் என்று சொன்னார்கள். இது நடைமுறைப் படுத்தப்படுகிற போது தேர்தல் மூலம் சிலபேரை நாம் உள்ளே கொண்டு வருவது தேவையென்கிற நிலைமை ஏற்படுமேயானால் அதற்காக திருத்தங்களை அந்தச் சமயத்தில் நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதிலே ஒன்றும் பெரிய தடை கிடையாது. ஆனால் இப்போதிருக்கிற நிலைமையில் இது ஒரு முன்மாதிரியான தனிப்பட்ட வகையான பல்கலைக்கழகமாக நாம் துவங்கி விட்டதால் இதை நிலை நிறுத்தவும், நாம் ஏற்றுக்கொண்ட நோக்கங்களை நிறைவேற்றுகிற முறையிலும் இதை செயல் முறைக்கு கொண்டு வருவதற்கும் பல்வேறு நியமங்களை நாம் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த நேரத்தில் தேர்தல் போன்றவற்றை நாம் தவிர்ப்பது நல்லது என்று கருதித் தான் இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவிலே அதைச் சேர்க்கவில்லை என்பதைக் குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சுட்டிக் காட்டிய தவறுகள் பெண்ணிற்கு பதிலாக ஆண் என்று வந்திருப்பது கிளரிக்கல் மிஸ்டேக்ஸ்தான் தேவைப்பட்ட இடங்களில் அதைத் திருத்தி விடுவார்கள். கெசட்டிலே ஒரு மாதிரியாக இருக்கிறது. சட்டமுன்வடிவிலே வேறு மாதிரியாக போட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தத் தவறுகள் திருத்திக் கொள்ளப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கு அடுத்து அன்னை தெரசா அவர்கள் பெயரை வைத்திருப்பதற்கு பல உறுப்பினர்கள் வரவேற்று பேசியதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் உயிரோடு இருந்தாலும் வயது முதிர்ந்தவர்கள்; உலக மதிப்பை பெற்றிருக்கிற நிலையிலே, தாய்மார்களிலே மிகச்சிறந்த பெருமையும், மதிப்பும் உடையவராக இருக்கிற காரணத்தால் அப்படிப்பட்டவர்கள் பெயரை வைப்பது நல்லது என்று கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் அவர்களின் பெயரை இந்தப் பல்கலைக்கழகத்திற்கு வைத்திருக்கிறது. அதைப் பல்வேறு சமூகத்தினரும், பிரிவினர்களும் வரவேற்றுக்கொண்டிருப்பதைப்போல இங்கே உறுப்பினர்களும் வரவேற்று இருப்பதைக் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புதியதாக துவங்கப்படுகிற இந்தப் பல்கலைக் கழகம் நல்லமுறையிலே செயல்பட, இன்றைக்கு சமுதாயத்திலே பெண்கள் தங்களுடைய சம உரிமைகளை அனுபவிக்கமுடியாத நிலையை களையவேண்டுமென்ற நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும். அதை நிறைவேற்றுவதில் எல்லா உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்கள் குறிப்பிட்டதை நானும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சட்டத்திலும், மேடைப் பேச்சுக்களிலும் மற்ற எல்லா இடங்களிலும் பெண்களுக்கு சம உரிமை தரப்படுகிறதே தவிர நடைமுறைக்குச் செல்கிறபோது அவர்கள் அந்தச் சம உரிமையை அனுபவிப்பது இல்லை. சோவியத் யூனியனில் இரவு 12 மணிக்குக்கூட ஒரு பெண் டாக்சி ஓட்டிச் செல்லக்கூடிய அளவிற்கு உரிமையை அனுபவிக்கிறாள். ஆண் எந்த அளவிற்கு உரிமையை அனுபவிக்கிறானோ அந்த அளவிற்கு பெண்ணும் அங்கே உரிமையை அனுபவிக்கிறாள். அதே நிலைமை நம்முடைய சமுதாயத்தில் இல்லை. ஒரு பெண் அனுபவிக்க முடியவில்லை; ஆனால் ஆண் மட்டும் உரிமைகளை அனுபவிக்கிறான். இதற்குக் காரணம் அந்த ஆண்தான் என்பதை இந்த நேரத்தில் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

(பிற்பகல் 1-00)

சமுதாயத்தில் ஆண்களின் தன்மையைப் பொறுத்துத்தான் பெண்களின் பாதுகாப்பு அமைகிறது. பெண்களுக்குப் பெண்களே பாதுகாப்புத் தருகின்ற நிலைமை இல்லை என்று சொன்னார்கள். ஆண்கள் என்று சொல்லிக் கொள்வதில் நாம் வெட்கப்

படக்கூடாது. இரவு 8 மணிக்கு, அல்லது 12 மணிக்கு ஒரு ஆண் தனியே தைரியமாக நடந்து செல்ல முடிகிறது. ஆனால் ஒரு பெண் இரவு நேரத்தில் அப்படி பயம் இன்றி செல்ல முடியாத தற்குக் காரணம் சிங்கமோ, புலியோ அல்லது கரடியோ அல்ல. ஆண்கள் தான். அவர்களுக்கு பாதுகாப்புத் தருவதற்கு முன்வர வேண்டும். அப்படி ஆண்கள் முன் வருகிறபோதுதான் பெண் களுக்கு இந்தச் சமுதாயத்தில் நிச்சயமாகப் பாதுகாப்பு கிடைக்கும். இதை உணருகின்ற அளவிற்கு சில ஆய்வு முறைகளை இப்போது நாம் அமைக்க இருக்கும் பல்கலைக் கழகம் மேற்கொள்ள வேண் டும். பெண்களுக்கு சமத்துவம் அளிக்கிற அளவில் இந்த பல்கலைக் கழகம் செயல்படுமானால், நம்முடைய நோக்கம் நிச்சயமாக ஈடேறும். அதற்கேற்ப நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவிற்கும் நான் இந்தச் சட்ட முன்வடிவிற்கு அளித்திருக்கும் திருத்தங்களுக்கும் நல் லாதரவு தந்து இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"In clause 2, in sub-clause (g), *for* "Women's University" *substitute* 'Mother Teresa Women's University"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 2, திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.





பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"In clause 3, in sub-clause (1), *for* "The Women's University", *substitute* "The Mother Teresa Women's University".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 3, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 4 முதல் 52 வரை, அட்டவணை ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்க பெறவேண்டும்."

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"In clause 1, in sub-clause (1), *for* "Tamil Nadu Women's University Act, 1984", *substitute* "Mother Teresa Women's University Act, 198 .".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"In the preamble, *after* the second paragraph *insert* the following paragraph, namely—

"AND WHEREAS a decision has been taken to name the University as "The Mother Teresa Women's University".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந் தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவ எண். 1/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

** 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ஜே. எஸ். இராசு] [1984 மார்ச் 6

அவர்களுக்கு போக்குவரத்துக்கான பயணப்படி, நாட்படி வழங்குவதற்கு இப்போது இருக்கிற சட்டத்திலேயே வழிமுறை இருக்கிறது. அப்படி இருக்கும் போது இந்தச் திருத்தச் சட்டம் ஏன்? இப்போது யாருக்காக இந்தச் சட்டத்தை கொண்டு வருகிறீர்கள்? சட்டப்பேரவை அரசுக் கொறடா, சட்ட மேலவை அரசுக் கொறடா ஆகியோருக்கு பயணப்படி தரவேண்டுமென்று விரும்புகிறீர்கள். சட்டப் பேரவை அரசு தலைமை கொறடா திரு. மணிமாறன் அவர்களுக்கு பயணப்படி கொடுக்கப் போகிறீர்கள். (குறுக்கீடு) மணிமாறன் என்றால் அந்த இடத்தில் வரக்கூடிய யாராக இருந்தாலும் அவருக்கு என்று பொருள். அவர்களை தவிர மற்றவர்களுக்கு இதிலே வாய்ப்பு இல்லை. ஆனால் நீங்கள் இப்பொழுது பயணம் போகாமல் இருக்கிறீர்களா? சட்டப் பேரவை கொறடா பயணம் போகாமல் இருக்கிறாரா? அல்லது மேலவை கொறடா பயணம் போகாமல் இருக்கிறாரா?

(பிற்பகல் 1-10)

இப்போது அறவே பயணப்படிகள் பெறாமல் இருக்கிறார் களா? சம்பளம் பற்றி பிரச்சனை இல்லை. பயணப்படி சம்பளத்தை விட அதிகம். எங்களுக்குள்ள உரிமைகள் உங்களுக்கும் உண்டு. மேலவையிலுள்ள கொறாடாவிற்கும், இந்த அவையில் உள்ள கொறாடாவிற்கும் இந்த படிகள் தர வேண்டுமென்ற முறையில் தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். தனியாகக் கொண்டு வந்தால் நாங்கள் எதிர்ப் போம் என்பதற்காக, எதிர்க்கட்சி தலைவருக்கும் சேர்த்து கொண்டு வந்திருக்கிறீர்கள். ஹ்ரஷா செரீப் அவர்கள் எங்காவது பணம் இல்லாததால் போகாமல் இருக்கிறாரா? இதிலே உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று கருதி, இந்தச் சட்டத்திலேயே நாங்கள் எல்லாம் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்பதற்காக எதிர்க்கட்சி தலைவரையும் சேர்த்துக்கொண்டு வந்திருக்கிறீர் களே தவிர, வேறு அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் இதிலே என்ன பேச இருக்கிறது என்று சொல்கிறார். இதிலே இருக்கிறது.

இப்போது எதிர்கட்சி எம். எல். ஏ.க்கள் தொகுதியிலே அரசாங்க நிகழ்ச்சிகள் நடைப்பெற்றால் அதற்கு ஆளுக் கட்சி எம். எல். ஏக்களை அதிகாரிகள் அழைக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சி எம். எல்.ஏ.க்கள் தொகுதியிலே நடைபெறுகிற அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்களை அழைப்பது இல்லை. அப்படிப்பட்ட ஒரு மனோபாவத்தை உருவாக்கி கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம்.

பள்ளிக்கூடம் திறக்க, பாலத்தை திறக்க, பள்ளிக்கூடங்களுக்கு அடிக்கல் நாட்ட விழாக்கள் நடத்தினால், அதிகாரிகள் சும்மா இருக்கமாட்டார்கள். கலெக்டர், ரூம் ரிசர்வ் செய்வது, கூட் ரிசர்வ் செய்வது போன்ற வேலைகளை எல்லாம் செய்வார்கள்



1984 மார்ச் 6] [திரு. ஜே. எஸ். இராசு]

அன்பில் தர்மலிங்கத்தையும் ஹாஜா செரீப் அவர்களையும் கூப்பிட்டு, இந்த பாலத்தை திறந்து வையுங்கள் என்று கேட்பார் களா? ஆளும் கட்சி எம்.எல்.ஏ. க்களை மட்டுமே திறந்து வையுங் கள் என்று கூப்பிடுவார்கள். ஆளும் கட்சி எம். எல்.ஏ. க்கள் தொகுதியில் நடைபெறும் அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு எதிர்க் கட்சிக்களை சார்ந்த உறுப்பினர்களை கூப்பிட்டு, இந்த கல்லூரி திறந்து வையுங்கள் என்று சொல்ல மாட்டார்கள். இப்பொழுது கொறடாக்களைச் சேர்த்து புதியதாக போட்டிருக்கிறீர்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு கருத்து. அந்தந்த தொகுதியைச்சார்ந்த எம். எல்.ஏ.க்களையும், மந்திரிகளையும் கூப்பிடுவார்கள். யாராவது கொறடாவைக் கூப்பிடுவார்களா? ஜெனரல் ஆஸ்பத்திரி, ஃபேமலி பிளானிங், லெப்ரசி போன்ற நிகழ்ச்சிகள் வைக்கிறோமே அதற்கெல்லாம் யாராவது கொறடாக்களைக் கூப்பிடுவார்களா? ஆனால் இந்தச் சட்டம் அதிகாரிகளை என்ன தூண்டுகிறது என்று சொன்னால் இனிமேல் கொறடாக்களைக் கூப்பிடுங்கள் என்று சொல்கிறது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தச் சட்டம் தூண்டு கிறதோ இல்லையோ, நீங்கள் தூண்டிக்கொண்டிருக்கிறீர்கள். எனக்கு இந்தச் சட்டத்திலே எதை தூண்டுகிறது என்று தெரிய வில்லை. இப்பொழுது இராசு அவர்கள் சொன்னதிலிருந்து தான் இதிலே எவ்வளவு தூண்டுதல் இருக்கிறது என்று தெரிகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : ஆகவே இன்றைக்கு ஒரு அவசரச் சட்டத்தை ஆளுநர் போட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன அவசரச் சட்டம் வேண்டியிருக்கிறது? என்ன எமர்ஜென்சி, என்ன அர்ஜென்சி? சட்டசபை நடக்கின்ற போது பேசி, நீங்கள் ரெக்வஸ்ட் பண்ணி, நீங்கள் கொண்டு வந்திருக்கலாம் உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது. அப்போது நீங்கள் ஓ. கே. கொடுத்து கைதூக்கி இருக்கலாம். இந்த சின்ன விஷயத்திற்கு ஆளுநர் அவர்களுடைய அவசரச் சட்டத்தை கொண்டுவரக்கூடிய அளவிற்கு அவசரம் என்ன வந்தது. முக்கியத்துவம் என்ன, அர்ஜெண்ட் என்ன? நெசசிட்டி என்ன?

நம்முடைய நாவலர் அவர்கள் கல்வியமைச்சராக இருந்த போது, என்னுடைய தொகுதிலேயே ஒரு உயர் நிலைப் பள்ளி கட்ட வேண்டுமென்று கேட்டால் கூட, அவர் ஏதோ தன்னுடைய பாக்கெட்டிலிருந்து கொடுப்பதுபோலத்தான் பேசு வார். அப்பேர்ப்பட்ட நாவலரே இதற்கு ஏன் சம்மதம் கொடுத்து கொண்டு வந்திருக்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு சில சலுகைகளை பெறுவது அந்தந்த ஆட்சியிலுள்ளவர்கள் உரிமை. அது எல்லோ ருக்கும் தெரியும். நமக்கும் தெரியும். இதற்கு ஒரு பெயரைச சொல்வார்கள். ஐரோப்பாக்கண்டத்தில், மேற்கு நாடுகளில்

எல்லாம்'சேல்ஸ் ஆப் போஸ்ட்ஸ்' பதவிகளை விற்று விடுவார்கள்
அதுபோல இப்போது நாம் ஆளும் கட்சியில் இருக்கிறோம்.
நம்மால் முடிந்த அளவிற்கு போஸ்ட்ஸ் உருவாக்கினால், ஆளும்
கட்சியினர் அனுபவிக்கலாமே என்றுதான் இந்த சட்ட முன் வடிவு
கொண்டுவரப்பட்டிருக்கிறது. இல்லையென்றால், திருச்சியிலே
இருக்கின்ற அன்பில் தர்மலிங்கத்தையா சென்னையில் நடை
பெறும் அரசாங்க நிகழ்ச்சிக்கு கூப்பிடுவார்கள்?
உமாநாத் அவர்களைக் கூப்பிட முடியுமா? விப்பை கூப்பிடலாம்.
டெபுட்டி ஸ்பீக்கர் அவர்களைக் கூப்பிடலாம்.
கூப்பிடலாம். ஆனால் எங்களை கூப்பிடுவார்களா? எல்லோரையும்
கூட தொகுதிகளுக்கு வருகிறார்கள். என்னுடைய தொகுதிக்கோ, மந்திரிகள்
திருவேங்கடம் போன்ற உறுப்பினர்களின் தொகுதிக்கோ
கள் வருகிறார்கள். அப்படி வருகிற போது எம்.எல்.ஏக்கள் வருகி மந்திரி
றார்கள் இது முடிந்து போன விஷயம். ஆனால் விப் அங்கே ஏன்
வரவேண்டும் எதிர்கட்சி தலைவருக்கும் விப்புக்கும்
என்ன வேலை.? தனிப்பட்ட முறையிலே எதிர்க்கட்சி தலைவரை அங்கே
ஒரு விழாவிற்குக் கூப்பிட்டு, அவர்களுக்கு மரியாதை தரக்கூடிய
அளவிற்கு அதிகார வர்க்கத்திற்கு, நீங்கள் தாராள மனப்
பான்மையை உருவாக்கியிருக்கிறீர்களா? தலைவர் அவர்களே
நீங்கள் மன்னிக்கவேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நாங்
கள் அலுவலகங்களிலே போய் இருக்கிறோம். கலெக்டரைப்
போய் பார்த்து இருக்கிறோம். அதிகாரிகளைப் போய் பார்த்து
இருக்கிறோம். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, நாங்கள் அதிகாரி
களைப் பார்த்து இருக்கிறோம், பழகியிருக்கிறோம். அப்போது
எல்லாம் இல்லாத அளவிற்கு இன்றைக்குப் பலர் அல்ல, சில
அதிகாரிகள், எங்களைப் போன்ற எம். எல். ஏ.க்களும் என்ன
கூறுகிறார்கள், தெரியுமா? நீங்கள் எந்த கட்சி என்று கேட்கக்
கூடிய அளவிற்கு ஆளும் கட்சியினருக்கு ஒரு தனித்த உணர்வை
ஒரு பெரிய மரியாதையை உண்டாக்கக்கூடிய சூழ்நிலையை
ஆளும் கட்சி வர்க்கத்தினர் உண்டாக்கிவிட்டு, எதிர்க்கட்சி
தலைவர் பயணப்படிக்கு அவர்களை பங்சனுக்குக் கூப்பிடுவது
என்றால், எந்த அதிகாரிகள் கூப்பிடுவார்கள். எங்களையே
அவர்கள் கூப்பிட வருவதில்லையே! அப்படி இருக்கும் போது,
மற்றவர்களை எப்படி நீங்கள் கூப்பிடமுடியும். ஆகவே நான்
ஏற்கனவே சொன்னது போல ஆளும் கட்சியினுடைய மெஜாரிட்
டிலே இந்த ஆட்சி பொறுப்பிலே இருக்கின்ற நம்முடைய கொறடா
போன்றவர்களுக்குவாய்ப்பு கொடுப்பதற்காகக் கொண்டு வரப்
படுகிற அவசரச் சட்டம் தான் இது என்று சொல்லி, இதை
தான் எதிர்க்கிறேன் என்று கூறி என் வார்த்தையை முடிக்
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவினுடைய
நோக்கத்தை பற்றி நான் என்னுடைய முன்னுரையிலே சுருக்
கமாகக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் ராஜூ அவர்
களும் கருத்துக்களை எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே





இந்த அவையை பொறுத்த வரையிலும் எதிர்கட்சித் தலைவர்கள்
மற்றவர்கள், கொறடா, பார்லிமெண்டரி செகரட்டரி போன்ற
வர்களுக்கான வசதி வாய்ப்பையும் ஏன் மாண்புமிகு உறுப்பினர்
களுக்கான வசதி வாய்ப்பையும் கூட மெல்ல மெல்ல ஆனால்
உறுதியாக நாம் செய்து கொண்டு தான் வருகிறோம். எதற்
காக நான் சொல்ல வருகிறேன் என்று சொன்னால், நானும்
எதிர்க்கட்சி தலைவராக இருந்த போது, 5 ஆண்டு காலம்
எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, ஒரு கடைநிலை
ஊழியர் வேண்டும் என்று நான் அன்றைய முதல் அமைச்
சரிடம் கேட்டேன். என்னுடைய நேர்முக செயலாளரைக்கூட
நான் கேட்கவில்லை. ஒரு கடைநிலை ஊழியர் வேண்டும் என்று
கேட்டேன். அவர்கள் வேறு சில மாநிலங்களைக் கேட்டு
விட்டு, அங்கெல்லாம் இல்லாதிருப்பது காரணமாக இங்கே
தருவதற்கு இல்லை என்று தான் எனக்கு பதில் வந்தது. ஒரு
கடை நிலை ஊழியர் கூட இல்லாத அளவிற்குத்தான் எதிர்க்கட்சி
தலைவருடைய நிலை இருந்தது. இதற்குப் பிறகு மாண்புமிகு
உறுப்பினர்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சி தலைவருக்கு
வசதியும் வாய்ப்பும் ஆண்டுக்காண்டு திராவிடமுன்னேற்றக்
கழகம் ஆட்சியிலே இருந்த போதும், எப்படிச் செய்யப்பட்டது,
என்பதும், இப்போது எப்படி செய்யப்பட்டு வருகிறது என்பதும்,
அந்த கூறுபாடுகளிலே ஒன்றாகத்தான் இது நடைபெற்று
வருகிறதே தவிர, இதிலே இன்னார் தான் வருவார், இன்னார்
போவார் என்பதல்ல. இப்போது மாண்புமிகு உறுப்பினர் ராஜூ
அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியினருக்கு அடுத்த ஆட்சி நம்முடைய
ஆட்சிதான் என்ற ஒரு கனவு இருக்கிற காரணத்தாலே. அதிலே
மாண்புமிகு உறுப்பினர் ராஜூ அவர்களே, கொரடாவாக
வரும் நிலை இருக்கிற காரணத்தாலே, அப்படி வரும்
போது ஒரு வசதி வாய்ப்பும் இல்லாமல் போய் விடக்கூடாது
என்பதற்காகத்தான்.

திரு. துரைமுருகன்: நாவலர் அவர்கள் ரொம்பவும் ஜாக்கிர
தையாகப் பேசுகிறார் என்பதை புரிந்துகொண்டேன். அதாவது
அப்படி ஒரு நிலைமை வந்தால், தாம் எதிர்க்கட்சித் தலைவராக
வரக்கூடிய அந்த நேரத்திலே இந்த சான்ஸை விட்டுவிடக்கூடாது
என்று இப்பொழுதே இதைக்கொண்டு வந்திருக்கிறார்கள்.
ரொம்ப தேங்க்ஸ்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நான் 150 ரூபாய் சம்பளத்தோடே, கடைநிலை
ஊழியர் இல்லாமலே எதிர்க்கட்சித் தலைவராக இருந்து வந்த
வன் என்று காட்டிவிட்ட காரணத்தாலே அதிகமாக
ஆசைப்படமாட்டேன் என்பதை ஊர் அறியும், உலகம் அறியும்,
நீங்கள் அறியாவிட்டாலும் கூட. எனவே இதுதான் நோக்கமே
தவிர, வேறு தனிப்பட்ட யார் வருகிறார்கள், யார் இருக்கிறார்
கள், யார் போகிறார்கள் என்பதல்ல. ஆகவே இதனுடைய
நோக்கத்தை புரிந்துக்கொண்டு இதை நிறைவேற்ற வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதிலே இப்போது நீங்கள் கொடுக்கப் போகிறீர்கள். சரி. நாவலர் சொல்கிறார். சரி, நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதற்காக ஒரு 'ஆர்டினன்ஸ் ஏன் கொண்டு வந்தீர்கள்? இதை டிமான்டிலேயே பேசியிருக்கலாம் அல்லவா. இப்போது ஆர்டினன்ஸ் என்பது ரொம்பவும் ஆர்டினரியாக ஆக்கிவிட்டீர்கள். அதற்காக ஒரு அவசரச் சட்டம் தேவையா? திரு. ஹாஜா செரீப்பையோ, அல்லது மணிமாறனையோ கூப்பிட்டு, வழிச்செலவுக்கு பணம் இல்லை, அதனாலே போகவில்லை. பள்ளிக்கூடம் திறப்பதற்குக் கூப்பிட்டார்கள், வழிச்செலவுக்கு இல்லை என்று நின்று போய் விட்டார்களா? ஹாஜா செரீப் சொத்தை ஆயிரம் பேர் தின்று விட்டு போகிறார்கள். அதற்கு என்ன அவசரம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஹாஜா செரீப் அவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையிலே பேசுவது நல்லதல்ல. நாளைக்கு நீங்களே கூட எதிர்க்கட்சி தலைவராக வரலாம். (குறுக்கீடு). இன்றைக்கு ஹாஜா செரீப் அவர்கள் எதிர்க்கட்சி தலைவராக இருக்கிறார்கள். முன்பு கலைஞர் அவர்கள் இருந்தார்கள். எனவே அப்படிப் பேசுவது சரியல்ல.

(பிற்பகல் 1–20.)

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த டிஸ்கஷனில், குறிப்பாக பலராலும் வெகு ஷார்ப்பாக கொண்டு வந்த பாயின்ட், தற்போது இதற்கு அவசரச் சட்டம் கொண்டு வர அவசியம் என்ன என்றுதான். அதற்கான விளக்கம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலே இல்லை, ஆகவே Let us know what was the necessity ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவசரச் சட்டத்திலேயும் கொண்டு வரலாம். அவசரம் இல்லாத நிலைமையிலேயும் கொண்டு வரலாம். அதை முடிவு செய்ய வேண்டியது அரசு. அவர்களுக்கு சில வசதிகளைச் செய்ய வேண்டும். சிலபல இடங்களில் அவர்களுக்கு தங்குவதற்கான நிலைமையிலே உருவாக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவசரச் சட்டமாகக் கொண்டு வந்தோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நீண்ட விவாதமாக ஆக்கிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. துரைமுருகன் : இல்லை. ஒரே ஒரு விஷயம்தான். அவசரச் சட்டத்தைப் பற்றி அல்ல.





நம்முடைய நாவலர் அவர்கள் சொன்னதில் இருந்து என்ன புரிந்துகொண்டேன் என்றால், இப்போது கொண்டு வராமல், டிமாண்ட்ஸ் வரும்போது கொண்டு வந்தால், கொரடாக்கள் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு இந்த வகையில் இன்னின்ன செலவு, இன்னின்ன பயணப் படிகள் என்று குறிப்பிட்டு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால் அங்கத்தினர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு மட்டுமா என்று கேட்பார்கள். ஆகவே அதை இப்போது கொண்டு வந்து விட்டால், எங்களை ஏமாற்றிவிடலாம் என்று ஒரு அபிப்பிராயம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அவர்கள் சொன்னது போல ஒரு அடிப்படை உண்டு. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1984) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) பணிப்பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அடுத்து பயணப் பேருந்துகள் பற்றிய சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மொழிவார்கள். இதன் விவாதத்தை 1–30 மணியளவில் நிறுத்திக் கொண்டு, நாளைக்குத் தொடரலாம்.

THIRU P. PONNURANGAM : Sir, I move my, disapproval to the ordinance; as follows :—

"That this House disapproves the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Amendment Ordinance, 1984 (Tamil Nadu Ordinance No. 4 of 1934) promulgated by the Governor on the 28th January 1984."

திரு. கு. பா. பழனியப்பன் : நான் வழி மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. க. மூத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் உண்மையிலேயே பஸ்களையெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்குமானால் உள்ளபடியே நான் வரவேற்பேன். இதற்கு எதிர்ப்பு இருக்கிறது என்பது நாட்டிலே இருக்கிற அனைத்துத் துறைகளும் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று சொல்கிற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் கூட நேற்றுத் தந்திருக்கிற திருத்தங்கள் மூலமாக வெளிப்படுகிறது. பல உறுப்பினர்கள் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏனென்றால் மூலச் சட்டத்திலே சொல்லப்பட்டது மீறப்பட்டிருக்கிறது. இது பெரிய மோசடி. நீங்கள் சொல்கிறீர்கள், உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பை

*1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1984 மார்ச் 6] [திரு ப. பொன்னுரங்கம்]

அமல் நடத்துகிறோம். தேசிய மயமாக்குகிறோம் என்று. While upholding the said Act, the Supreme Court has observed that as some portions of the Act in view of the timelag, might have become out of date, a few consequential amendments might have to be made to the Act. In order to give effect to the orders of the Supreme Court, and keeping in view the priorities of the State Government and to carry out its declared objective to implement the programme of nationalisation. ....இதுதான் தேசிய மயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பு. அதற்கேற்ப சட்டத்தைத் திருத்துகிறோம் என்று சொல்கிறீர்கள். சுப்ரீம் கோர்ட் காலத்தைத்தான் சொல்கிறது. காலத்தில் கைவைக்கவில்லை.

1973 ஆம் ஆண்டு மூலச் சட்டத்திலே 5 ஆண்டுகளுக்குள், நீலகிரி மாவட்டம் தவிர, மற்ற மாவட்டங்களிலே இருக்கிற Stage carriages as well as Tourist buses Contract Carriages. போன்றவைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கலைஞர் ஆட்சிக் காலத்திலே நிர்ணயித்து எந்த எந்த மாவட்டங்களிலே எத்தனை எத்தனை பஸ்கள் என்று கூட அந்தச் சட்டத்திலே போடப்பட்டிருக்கிறது.

*Schedule I.*

| | |
|---|---|
| Nilgiris | 133 |
| Dharmapuri | 262 |
| Ramanathapuram | 423 |
| Kanniyakumari | 439 |
| South Arcot | 471 |
| Salem | 496 |
| Tirunelveli | 500 |
| Thanjavur | 540 |
| North Arcot | 598 |
| Tiruchirappalli | 642 |
| Chengalpattu | 645 |
| Madurai | 845 |
| Coimbatore | 1,056 |
| Madras | 1,371 |

இதைப் படிப்படியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவும் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்? எந்த மாவட்டத்திலே குறைவாக இருக்கிறதோ அதைப் படிப்படியாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதைத்தான் நியாயப்படுத்தியிருக்கிறது சுப்ரீம் கோர்ட். அது ரொம்பவும் நியாயமானது. இந்தச் சட்டம் எப்படி வந்தது என்பதைச் சொல்கிறபோது இந்திய அரசிய

லமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 39 இல் ' பி ' மற்றும் ' சி'க்கு ஏற்ப மூலச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவு என்ன சொல்கிறது என்றால்

(*a*) that the citizens, men and women equally, have the right to an adequate means of livelihood ;

(*b*) that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good;

(*c*) that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment :

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்டேட்டை சார்ந்த பொது மக்களுக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாதபடி வளர்ச்சிக்கு ஏற்ப இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி மாநில சர்க்கார் எதை யும் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் தம் உரையை நாளை தொடர்ந்து நிகழ்த்த லாம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7—3—1984 காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ), சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

108. 1982-83-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கையும் ஆய்வுரை யும் (தமிழ் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத் தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

109. 1975-76-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரிசனக் குடியிருப்பு வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாம் ஆண்டறிக்கையும் சிறப்பு அம்சங்களும் (தமிழ் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

49. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (இரண்டாம் பட்டியல்).



## இணைப்பு I

(294 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட 184—வினா எண் 17922—க்கான விடையைக் காண்க).

(அ) தமிழ்நாடு அரசு நிறுவனமான ''எல்காட்'' டிஜிட்டல் கைக்கடிகாரங்களைத் தயாரித்துள்ளது. இவைகளை விற்பனை செய்ய தனியார் வியாபாரிகளுக்கு உரிமம் அளிக்கப் பட்டுள்ளது.

(ஆ) விற்பனையாளர்களை நியமிக்கும் பொருட்டு செய் தித் தாள்களில் உரிய விளம்பரம் செய்யப்பட்டது. கீழே குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்களின் அடிப்படையில் விற்பனை யாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்:

1. டிஜிட்டல் மின்னணுக் கைக்கடிகாரங்களை விற்பனை செய்வதற்கான விழைவும் திறமையும்.

2. நல்ல விற்பனைக்கூட வசதிகள்.

3. விற்பனையகம் அமைந்துள்ள இடநிலைமை.

4. மின்னணுப்பொருட்கள்/கைக்கடிகார வாணிபத்தில் அவர்களுக்குள்ள புகழ் மதிப்பீடு.

5. விற்பனையாளரின் கடன் பெறத் தகுதி.

6. பிணையத் தொகை அளிப்பதற்கான விருப்பம், மற்றும்

7. எல்காட்டின் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற் கான இணக்கம்.

விற்பனையாளர்களின் பட்டியல்.

1 திருவாளர்கள் சக்கரவர்த்தி எண்டர்பிரைசஸ்,
53-ஏ தானா தெரு,
புரசைவாக்கம்,
சென்னை 600 007.

ஷி செய்தான்யா,
59, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை,
வியாசர்பாடி,
சென்னை 600 039.

தேவ்ஸ் விஷன்,
52, சாந்தோம் நெடுஞ்சாலை,
சாந்தோம், சென்னை.

தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 3 முதல் 6 வரையிலான பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள பதவிகளை வகிப்பவர்கள் அதாவது, அமைச்சர்கள், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர், தலைமை பார்லிமெண்டரி செயலாளர், பார்லிமெண்டரி செயலாளர் ஆகியோர் தங்களுடைய சுற்றுப் பயணத்தைப் பொறுத்த வரையில் மாநில அரசு விதிகளில் முடிவு செய்துள்ள வீதங்களிலும் அத்தகைய நிபந்தனைகளின் படியும், பயணப்படி, நாட்படிகளைப் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாவர் என அச்சட்டத்தின் 9-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. சட்டப் பேரவை அரசுத் தலைமைக் கொறடா, சட்ட மேலவை அரசுக் கொறடா, சட்டப் பேரவை, சட்ட மேலவை எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோர் மாநில அரசு அல்லது அரசுத் துறையில் ஓர் அதிகாரியாகப் பணியாற்றுகையில் அவ்வரசின் யாதொரு துறையின் யாதொரு அதிகாரி ஏற்பாடு செய்கின்ற விழாக்களில் கலந்து கொள்வதற்காகச் செல்லும்போது இது தொடர்பாக அரசு இயற்றுகிற விதிகளில் முடிவு செய்யப்பட்டுள்ளவாறு உள்ள அத்தகைய வீதங்களிலும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டும் பயணப்படி, நாட்படி ஆகிய வசதிகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர் என வகை செய்யவும், தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இச்சட்ட முன்வடிவினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, சம்பள வழங்கும் சட்டத்தை மேலும் திருத்துகின்ற வகையில் கொண்டு வந்திருக்கிற இந்த திருத்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தனிப்பட்ட முறையிலும் அமைச்சராக இருக்கிறபோதும் எவ்வளவோ சிக்கனமாக இருக்கிற நிதியமைச்சர் நாவலர் அவர்கள் எப்படி இப்படிப்பட்ட ஒரு திருத்தத்திற்கு அல்லது அவசரச் சட்டத்திற்கு அனுமதி வழங்கி, விவாதத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இப்படி ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இப்போது என்ன அவசரம் வந்துவிட்டது ? நாட்டில் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் விட்டுவிட்டு, ஆளுநர் மூலமாக அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து, அதைச் சட்டமாகக் கொண்டு வரக்கூடிய அளவுக்கு அவசரம் என்ன என்பது இதனுடைய காரண விளக்க நோக்கத்திலேயும் சொல்லப்படவில்லை. ஒருவேளை நாவலர் அவர்கள் இறுதியிலே சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

அமைச்சர்கள், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத்தலைவர், தலைமை பார்லிமெண்டரி செயலாளர், பார்லிமெண்டரி செயலாளர் ஆகியோர் சுற்று பயணம் செய்யும் போது

விற்பனையாளர்களின் பட்டியல்.

| | | |
|---|---|---|
| 4 | திருவாளர்கள் | தோஷி அண்டு தோஷி<br>74, தேவராஜ் முதலி தெரு,<br>பார்க் டவுன், சென்னை-600 003. |
| 5 | ஷை | கனி அண்டு சன்ஸ்,<br>55, ரட்டன் பசார்,<br>சென்னை-600 003. |
| 6 | ஷை | ஜுபால் எண்டர்பிரைசஸ்,<br>280, மவுண்ட்ரோடு,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-600 018. |
| 7 | ஷை | ஜெயபாரத் சைக்கிள் மார்ட்,<br>முடிச்சர் ரோடு, தாம்பரம்,<br>சென்னை-600 045. |
| 8 | ஷை | ஜெயம் அண்டு கம்பெனி,<br>ஏ77, 3வது அவின்யூ,<br>அண்ணா நகர், சென்னை-600 040. |
| 9 | ஷை | மெலாடி டைம்ஸ்,<br>ஏ-16, பேஸ்மெண்ட்,<br>ஜெமினி பார்சன் காம்ப்ளெக்ஸ்,<br>சென்னை-600 002. |
| 10 | ஷை | மெட்ரானிக்ஸ்,<br>ஸ்பென்சர்ஸ் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ்,<br>பாரிஸ் கார்னர், சென்னை-600 001. |
| 11 | ஷை | நந்தி டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ்,<br>லாடிஸ் பிரிட்ஜ் ரோடு,<br>அடையாறு, சென்னை-600 020. |
| 12 | ஷை | போரா டிவி சேல்ஸ்,<br>41, ஆர்காட் ரோடு,<br>கோடம்பாக்கம், சென்னை-600 024. |
| 13 | ஷை | பில்லாஸ்,<br>287/14, லாயிட்ஸ் ரோடு,<br>ராயப்பேட்டை,<br>சென்னை-600 014. |
| 14 | ஷை | பி. ஆர். அண்டு சன்ஸ்,<br>855, அண்ணா சாலை,<br>சென்னை-600 002. |



விற்பனையாளர்களின் பட்டியல்.

| | | |
|---|---|---|
| 15 | திருவாளர்கள் | ராகம்,<br>37, பாரதிதாசன் ரோடு,<br>ஆள்வார்பேட்டை,<br>சென்னை-600 018. |
| 16 | ஷை | ராஜ்சன் வாட்ச் கம்பெனி,<br>3/1 புரசைவாக்கம் நெடுஞ்சாலை,<br>புரசைவாக்கம், சென்னை-600 007. |
| 17 | ஷை | சுகி எலக்ட்ரானிக்ஸ்,<br>16, வீரராகவன் தெரு, நங்கநல்லூர்,<br>சென்னை-600 061. |
| 18 | ஷை | டிவி. எலக்ட்ரானிக்ஸ்,<br>திருவல்லூர் ரோடு, பெரம்பூர்,<br>சென்னை 600 011. |
| 19 | ஷை | டிவி ட்ரானிக்ஸ்,<br>96, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>புது வண்ணாரப்பேட்டை,<br>சென்னை-600 081. |
| 20 | ஷை | விகி எண்டர்பிரைசஸ்,<br>5/12, மௌண்ட் பூனமல்லி ரோடு,<br>நந்தம்பாக்கம், சென்னை 600 089. |
| 21 | ஷை | விஜயா எண்டர்பிரைசஸ்,<br>துரைசாமி ரோடு, தி. நகர்,<br>சென்னை-600 017. |
| 22 | ஷை | விவேக் அண்டு கம்பெனி,<br>205, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,<br>புரசைவாக்கம்,<br>சென்னை-600 007. |

## இணைப்பு II.

*(305 ஆம் பக்கத்திலுள்ள நட்சத்திரக் குறியிடாத 6 —வினா எண் 7070க்கான விடையைக் காண்க.)*

(அ) மற்றும் (ஆ) —

வட ஆற்காடு மாவட்டம், செய்யார் வட்டம், அசனமாப் பேட்டையிலிருக்கும் அருள்மிகு இராமநாத ஈஸ்வரசுவாமி ஆலயத்தில் 12—6—1980 அன்று நடு இரவில் பிரதோஷ விநாயகர், அம்மன் மற்றும் மாணிக்கவாசகர் ஆகிய மூன்று சிலைகள் களவாடப்பட்டுள்ளன. மேற்கண்ட களவு பற்றி 13-6—1980 அன்று காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதன் தொடர்பாக, புலனாய்வு விசாரணை குற்ற எண். 113/80-ன் படி ஆரணி துணைகாவல் ஆய்வாளர் குழு பம்பாய் சென்று 7—3—1981 அன்று பம்பாய் காவல் துறையின் உதவியுடன் ராமனிக்லால்பட் என்பவரிடமிருந்து மேற்கண்ட மூன்று சிலைகளும் மீட்கப்பட்டன. இதன் தொடர்பாக முருகன், கணேசன், துரைசாமி, வீரகண்ணன் ஆகிய நான்கு பேர்களை 13—3—1981 அன்று காஞ்சீபுரத்தில் கைது செய்து 23—4—1981 அன்று மோரணம் காவல் நிலைய ஆய்வாளரால் செய்யார் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்தில் வழக்கு எண் 334/81-ல் தாக்கல் செய்து, வழக்கு விசாரணை செய்யப்பட்டு குற்றம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணமாகவில்லை என்று முடிவு செய்து குற்றவாளிகள் 18—8—1982 அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(இ) —

(1) பழம்பெரும் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் குறித்த 1972 ஆம் வருடத்திய தொல் பொருள் பதிவு சட்டத்தின்படி, ஆலயங்களிலுள்ள தொன்மையான விக்கிரகங்கள் மற்றும் சிலைகள் பதிவு செய்யப்படுகின்றன.

(2) விக்கிரகங்களை நிழற்படம் எடுத்து ஆல்பம் தயார் செய்து ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள விக்கிரகங்கள் ஒரு தனி பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

(3) போதிய பாதுகாப்பு வசதியற்ற ஆலயங்களிலுள்ள விக்கிரகங்கள் அருகில் உள்ள பெரிய ஆலயங்களில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

(4) சிலைகள் உள்ள இடங்களுக்குப் போதுமான காவல் நியமனம் செய்யப்படுகின்றது. பாதுகாப்புப் பதிவேடு பேணப்பட்டு, அதில் காவலர்கள் தினப்படி பணி மாற்றம் ஆகும்போது பூட்டப்பட்டுள்ள பூட்டுக்கள் போதுமான பாதுகாப்பு இல்லாமலிருப்பின் கூடுதல் பூட்டுக்கள் பூட்டப்படுகின்றன.

(5) ஒவ்வொரு சன்னதிக்கும் கதவு அல்லது கதவுக்கு மேல் இரும்புக் கம்பியாலான கதவுகள் போடப்பட்டு வருகின்றன.



(6) சிலைகள் பாதுகாப்பாக வைக்கும் இடத்தைப் பாதுகாக்கவும், மேற்படி இடத்திற்கு அவசியமான பந்தோபஸ்து செய்யவும், அந்தந்த ஆலயங்களின் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரசு மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

(7) ஆலயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டாச்சாரியார்கள் அல்லது குருக்கள் அல்லது பண்டாரங்கள் இருப்பின் தினப்படி அல்லது ஆலயத்திற்குத் தகுந்தவாறு பணி மாற்றம் செய்யும் போது பணி மாற்றப் பதிவேட்டில் (Turn R gister) கையொப்பம் பெறப்படுகிறது. ஒரே ஒரு பட்டாச்சாரியார் அல்லது குருக்கள் அல்லது பண்டாரம் இருந்து சன்னதிகள் பலவாக இருந்தால் ஒரு சன்னதியிலிருந்து மற்றொரு சன்னதிக்கு செல்லும் போது முந்தைய சன்னதி பாதுகாப்புக்காகப் பூட்டிச் செல்லப்படுகிறது. மேற் சொன்னவர்கள் இல்லாத சமயம் எந்தச் சன்னதியும் திறந்து வைக்கப்படுவதில்லை.

(8) ஆலயங்களின் உள்ளேயும் வெளியேயும் சுற்றிவர காவலர்கள் வைக்கப்பட்டு, டெல்டேல் கடிகாரங்களும் வைத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

(9) சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடும் நபர்களைக் கவனித்து காவல் துறையினருக்குத் தகவல் கொடுக்கவும் அவசியமானால் லைசென்ஸ் பெற்ற துப்பாக்கி வாங்கிக்கொடுத்து பயிற்சி அளிக்கவும், ஆணையரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கூடிய வரையில் கூர்க்காவையே நியமனம் செய்யப்பட இருக்கிறது.

(10) களவு நடந்த உடனே காவல் துறைக்கும், ஆணையருக்கும் தெரிவிக்கப்பட்டு அரசுக்கும் அறிக்கை அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(11) ஆலயச் சிப்பந்திகளின் நடவடிக்கைகளைக் 'கண்காணிக்க வேண்டுமென்றும், ஏதாகிலும் ஒரு சிப்பந்திகளின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டால் தீவிரமாகக் கண்காணித்து அவர் மீது காவல் துறையில் ஏதாவது புகார்கள் உள்ளதா என விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தேவையானால் காவலர்களின் புகைப்படம் எடுத்து காவலரின் விவரங்களுடன் வைத்துக் கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(12) விக்கிரகங்கள் பாதுகாப்பாக இருப்பதனை காவல் துறையினர் அடிக்கடி கண்காணிக்க காவல் நிலையத்திலிருந்து பட்டாப் புத்தகம் பெற்று அதில் ரோந்து வரும் காவலர்களின் கையொப்பம் பெறப்படுகிறது.

(13) சிலைத் திருட்டு நேர்வுகள் கடுமையான குற்றங்களாகக் கருதப்பட்டு ஒவ்வொரு நேர்வும் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாதந்தோறும் குற்ற வழக்குகளின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களின்போது சிலைத் திருட்டுகளில் புலன் விசாரணையின் முன்னேற்றத்தையும் ஆய்வு செய்கின்றனர், உள்ளூர் காவல்துறை சிலைத் திருட்டு வழக்கு

களில் புலன் விசாரணை செய்வதில் சிரமப்பட்டால் அவ்வழக்குகள் காவல் துறையின் குற்றவியல் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(14) காவல் துறையின் இரவு நேரத்துக் காவலர், மதிப்புமிக்க சிலைகளுள்ள கோயிலுக்கு அடிக்கடி சென்று கோவிலில் அல்லது அதற்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில், கையொப்பமிடுகின்றனர். உள்ளூர் காவல்துறை அலுவலர்களும் இவ்விதக் கோவில்களுக்கு அடிக்கடி சென்று கண்காணித்து வருகின்றனர்.

(15) சிலை திருடர்கள் பற்றியும், திருடப்பட்ட சிலைகளை வாங்குபவர்கள் பற்றியும் சம்பந்தப்பட்ட காவல் அலுவலகத்தில் பட்டியல்கள் பேணப்பட்டு சிலை திருடுவோர்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் சிலைகள் திருடும் குற்றவாளிகளின் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அவற்றினை முக்கியமாக காவல்துறை ரேகைப் பதிவு அலுவலகங்களில் வைத்திருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(16) காவல்துறை சார்நிலை அலுவலர்கள் கோவில்களை அடிக்கடி கண்காணிப்பதுடன் காவல்துறை கண்காணிப்பாளர்களும் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட மதிப்பு வாய்ந்த சிலைகள் வைக்கப்பட்டிருக்கும் கோயில்களுக்கும், மற்ற இடங்களுக்கும் சென்று பார்வையிடுகின்றனர்.

(17) தென் மாநிலங்களில் நடைபெறும் கற்சிலை மற்றும் வெண்கலச் சிலைகள் திருட்டு பற்றியும் அவைகளைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவ்வப்போது கால முறையில் நடைபெறும் தென் மாநிலங்களின் காவல் துறைத் துணைத் தலைவர்களின் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டு மாநிலங்களிடையே நடைபெறும் சிலைக் கடத்தலைத் தடுப்பதற்குத் தொடர் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

(18) சிலை திருட்டு வழக்குகளை நடத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் ஒரு கூடுதல் நீதித்துறை தலைமை நடுவர் கொண்ட தனி நீதிமன்றம் (Additional Chief Judicial Magistrate) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு உதவி செய்ய இரண்டாம் நிலை அரசுக் குற்றத் துறை வழக்கறிஞர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(19) சென்னையில் சிலை திருட்டு வழக்குகளைப் புலன் விசாரிப்பதற்காக காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் இரண்டு ஆய்வாளர்கள் மற்றும் சில பணியாளர்கள் கொண்ட காவல்துறை தனிப்பகுதி ஒன்று இயங்கி வருகிறது.

மேலும் எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தலைமை செயலகத்தில் வணிகவரி அறநிலையத்துறை அரசுச் செயலாளர், காவல்துறை அதிகாரிகள், இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர், தொல் பொருள் துறைத் தலைவர், சுங்க இலாகா அதிகாரிகள் ஆகியோருடன் கால முறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.





## இணைப்பு IV

(314 ம் பக்கத்திலுள்ளபடி உடுக்குறியிடாத 23 வினா எண் 9709 க்கான விடையைக் காண்க).

புதுடில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் வகுத்துள்ள அளவு முறைகளின்படி (Norms) காப்புறுதி செய்து கொண்ட 1,000 பேர்களுக்கு ஒரு மருத்துவர் வீதம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் (E. S. I. Dispensaries) நியமனம் செய்யப்படுகிறார்கள். இந்த அளவு முறைகள் ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்குப் பொருந்தாது. ஈட்டுறுதி மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில் அவற்றின் படுக்கைகள் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவர்களும் பிற அலுவலர்களும் நியமனம் செய்யப்படுவர்.

2. தமிழ்நாட்டில் தற்பொழுது 119 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும், 5 ஈட்டுறுதி மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றின் அளவு முறைகள் அடிப்படையில், மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்ட விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. அளவு முறைகளின்படி மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்காத விபரம் இணைப்பு 2-ல்கொடுக்கப்பட்டுள்ளது.

3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் கூடுதல் மருத்துவ அலுவலர்கள் ஒப்பளிப்பு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அளவு முறைகளின்படி மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள மருந்தகங்கள்.

(1) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் :

சென்னை மண்டலம் :—

1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மீஞ்சூர்.
2. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், (மொபைல்), சென்னை.
3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பெரம்பூர்-3.
4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் திருவொற்றியூர்-1.
5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருவொற்றியூர்-2.
6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், தொண்டையார்பேட்டை-2.

தமிழ் நாடு வனத்தோட்டக் கழகம்.

| (1) | | (2) | (3) |
|---|---|---|---|
| 1 | காரைக்குடி. | 10,000 | திரு. கே. பழனி பிள்ளை, தெற்குத் தெரு, காடம்புலியூர், தென்னாற்காடு மாவட்டம். |
| 2 | காரைக்குடி. | 16,544 | திரு. முகமது குஞ்சு, நூர்ஜஹ்ான் முந்திரி கம்பெனி உரிமையாளர், சந்தன தோப்பு, கொல்லம்-4. |
| 3 | காரைக்குடி. | 9,665 | திருவாளர்கள் காஸ்மி முந்திரி கம்பெனி, கொல்லம். |
| 4 | காரைக்குடி. | 10,000 | திருவாளர்கள் ஏ. பி. கே. முந்திரி இண்டஸ்ட்ரீஸ் கிலி கொல்லூர், கொல்லம். |
| 5 | காரைக்குடி | 60,000 | திரு. முகமது குஞ்சு, கொல்லம். |
| 6 | புதுக்கோட்டை. | 20,000 | திரு. கோபிநாதன் பிள்ளை, கோபிநாத் மீன் ஏற்றுமதி கம்பெனி, உளியாக்கோவில், கொல்லம். |
| 7 | புதுக்கோட்டை | 20,000 | திருவாளர்கள் விஜயலட்சுமி முந்திரி கம்பெனி, ஜெயங்கொண்டம் அண்டு போஸ்ட் திருச்சி. |
| 8 | திருச்சி .. | 7,123 | கோனி முந்திரி கம்பெனி, போஸ்ட் பாக்ஸ் 252, கண்ணையா பில்டிங்ஸ், சின்னக்கடா, கொல்லம். |
| 9 | திருச்சி .. | 10,000 | திரு. முகமது குஞ்சு, கொல்லம் |
| 10 | திருச்சி .. | 5,000 | சோனி முந்திரிக் கம்பெனி. |
| 11 | திருச்சி .. | 30,000 | திரு. பி. கோபிநாத் பிள்ளை. |
| 12 | திருச்சி .. | 30,000 | திருவாளர்கள் விஜயலட்சுமி முந்திரி கம்பெனி. |
| 13 | திருச்சி .. | 30,000 | ஏ. பி. கே. முந்திரி இண்டஸ்டிரீஸ். |
| 14 | திருச்சி .. | 15,250<br>6,519 | திரு. முகமது குஞ்சு, கழிக்கப்பட்ட முந்திரிக் கொட்டைகள் உள்ளூர் (விற்பனை திருச்சி மண்டலம்.) |
| 15 | கடலூர் .. | 10,000 | திரு. ஏ. பி. கே. முந்திரி இண்டஸ்டிரீஸ். |
| 16 | கடலூர் .. | 10,000 | திரு. முகமது குஞ்சு. |
| | .. | 10,000 | திரு. முகமது குஞ்சு. |
| | .. | 10,000 | திரு. முகமது குஞ்சு. |





அளவு முறைகளின்படி மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்காத ஈட்டுறுதி மருந்தகங்கள் :

சென்னை மண்டலம் —

1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், அடையார்.
2. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், அம்பத்தூர்.
3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஆவடி.
4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சூளை.
5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், எழும்பூர்.
6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஆர்பர்.
7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கீழ்ப்பாக்கம்-1.
8. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கீழ்ப்பாக்கம்-2.
9. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கோடம்பாக்கம்.
10. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கொண்டிதோப்பு.
11. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மவுண்டுரோடு.
12. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மைலாப்பூர்.
13. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பல்லாவரம்.
14. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பெரம்பூர்-1.
15. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பெரம்பூர்-2.
16. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ரெட்ஹில்ஸ்.
17. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், செம்பியம்.
18. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சைதாப்பேட்டை-1.
19. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சைதாப்பேட்டை-2
20. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், தாம்பரம்
21. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருவொற்றியூர்-3,
22. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருவல்லிக்கேணி.
23. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், தொண்டையார்பேட்டை-1.
24. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், வில்லிவாக்கம்.
25. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், நந்தம்பாக்கம்.

[1984 மார்ச் 6

மதுரை மண்டலம் :—

7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பரவை.

8. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பழனி.

9. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், நெய்க்காரன் பட்டி.

10. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மேலூர்.

11. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், தூத்துக்குடி.

12. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், செங் கோட்டை.

13. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருச்சி (மொபைல்).

14. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மணப்பாறை.

15. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், இராம்ஜி நகர்.

16. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கரூர்.

17. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், புலியூர்.

18. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், புதுக் கோட்டை (மொபைல்).

19. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், காவேரி நகர்.

20. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், புதுக் கோட்டை.

21. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கும்பகோணம்

22. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், தஞ்சாவூர்.

23. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், நாகப் பட்டினம்.

24. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், நாகர் கோயில்.

25. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருவரும்பூர்.

26. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், நெல்லிக் குப்பம்.

27. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருத்தங்கல்

கோவை மண்டலம் —

28. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கோவை (மொபைல்-1).

29. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கோவை (மொபைல்-2).



1984 மார்ச் 6]

## இணைப்பு III.

(310 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 17—வினா எண் 8959க்கான விடையைக் காண்க.)

1980–81 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத்துறை மற்றும் தமிழ் நாடு வனத்தோட்டக் கழகத்தில் ஏலத்தில் விற்கப்பட்ட முந்திரிக் கொட்டைகளின் விபரம்.—

| வரிசை எண்ணும் மண்டலமும். | | விற்கப்பட்ட முந்திரிக் கொட்டை அளவு (கிலோவில்). | வாங்கியவரின் பெயர். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 | மதுரை .. | 8,000 | பெரியார் முந்திரிக் கொட்டை தொழிலாளர் கூட்டுறவு சங்கம். |
| 2 | வேலூர் .. | 14,400 | ஆர். ஆர். கேஷ்யூஸ், கொல் லம். |
| 3 | வேலூர் .. | 75,000 | திருவாளர்கள் விஜயலட்சுமி கேஷ்யூஸ் கம்பெனி, குழித் துறை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 4 | வேலூர் .. | 11,000 | திரு. டி. ஆர். வெங்கடாசலம் செட்டி, பண்ருட்டி. |
| 5 | வேலூர் .. | 500 | திரு. எம். தஞ்சன், தெள்ளூர் பாளையம். |
| 6 | வேலூர் .. | 300 | திரு. வி. பி. ராமசாமி செட்டி, கோக்கலூர், வட ஆற்காடு, மாவட்டம். |
| 7 | சேலம் .. | 310 | திரு. சித்தா கவுண்டர், சிக் கணம் பூண்டி, ஓமலூர் திரு. பொன்னுசாமி, ஊரூர். |
| 8 | திருச்சி .. | 12,000 | திரு. ஆர். ஆர். கேஷ்யூஸ், கொல்லம். |
| 9 | திருச்சி .. | 7,351 | திரு. கே. பழனியாபிள்ளை, காடம்புலியூர். |
| 10 | திருச்சி .. | 13,000 | திருமதி ஜமீலா இப்ரகிம், ஆர். அண்டு ஆர். கேஷ்யூஸ், கொல்லம். |
| 11 | திருச்சி .. | 890 | சந்தைக் குழு, விருத்தாசலம். |

[1984 மார்ச் 6

படுக்கை எண்ணிக்கைகள் அளவு முறைகளின்படி மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள ஈட்டுறுதி மருத்துவ மனைகளின் விபரம்:

| தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையின் பெயர். | பதவிகளின் பெயர். | தற்போது ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ள பதவியின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை, சென்னை-அயனாவரம்-600023. | மருத்துவக்கண்காணிப் பாளர் (Superin-tendent)<br>அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் (Civil Surgeon Specialists)<br>மருத்துவ உதவிஅலு வலர் (சித்த மருத்து வம்). | 1<br>19<br>1 |
| 2. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை, கே.கே. நகர் சென்னை-78. | கண்காணிப்பாளர்<br>அறுவைச்சிகிச்சை நிபுணர்கள். | 1<br>3 |
| 3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத் துவமனை, மதுரை. | கண்காணிப்பாளர்<br>அறுவைச்சிகிச்சை மருத்துவர். | 1<br>3 |
| 4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத் துவமனை, கோயம்புத்தூர். | கண்காணிப்பாளர்<br>இளநிலை மருத்துவ நிபுணர்கள். (Junior Specialists) | 1<br>4 |
| 5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத் துவமனை, வேலூர். | கண்காணிப்பாளர்<br>அறுவைச்சிகிச்சை உதவி மருத்துவர்கள். (Assistant Surgeons) | 1<br>6 |



1984 மார்ச் 6]

கோவை மண்டலம்—தொடர்ச்சி.

51. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், போத்தனூர்.
52. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கணபதி.
53. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பெரியநாயக் கன்பாளையம்.
54. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பீளமேடு.
55. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஒத்தக்கல் மண்டபம்.
56. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், துடியலூர்.
57. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், காரமடை.
58. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், உடுமலைப் பேட்டை.
59. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருப்பூர்-1.
60. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருப்பூர்-2.
61. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மேட்டூர் டேம் (அப்பர்.)
62. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சேலம்.
63. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஆம்பூர்.
64. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஆரணி.
65. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், அரக்கோணம்.

படுக்கைகள் எண்ணிக்கைக்கேற்ப அளவு முறைகளின்படி கூடுதல் பதவிகள் ஒப்பளிப்பு வழங்கப்பட வேண்டிய ஈட்டுறுதி மருத்துவ மனைகள் :—

| மருத்துவமனையின் பெயர். | ஒப்பளிப்புச் செய்யப்பட வேண்டிய பதவிகள் பெயர். | பதவி களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை, அயனாவரம், சென்னை-600 023. | அறுவை சிகிச்சை உதவி மருத்துவர் (பொது அலுவல்). | 13 |
| 2 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை, கே. கே. நகர், சென்னை-600 078. | அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள். | 6 |
| 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை, மதுரை. | அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள். | 6 |
| 4 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை, கோயம்புத் தூர். | (i) அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள். | 6 |
| | (ii) அறுவைச் சிகிச்சை மருத்துவ நிபுணர்கள். | 4 |
| 5 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை, வேலூர். | அறுவைச் சிகிச்சை மருத் துவ நிபுணர்கள். | 3 |

[1984 மார்ச் 6

மதுரை மண்டலம் —

26. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பொன்னகரம்.

27. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், முனிசாலை.

28. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மணிநகரம்.

29. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், தல்லாகுளம்.

30. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருநகர்.

31. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மதுரை (மொபைல்).

32. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பழங்காநத்தம்.

33. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், விருதுநகர்.

34. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திண்டுக்கல்.

35. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சிவகாசி.

36. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், இராஜபாளையம்.

37. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கோயில்பட்டி.

38. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், தாழையூர்.

39. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருநெல்வேலி

40. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், விக்கிரமசிங்கபுரம்.

41. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், திருச்சி.

42. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருநதகம், திருநெல்வேலி (மொபைல்).

43. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், வடலூர்.

கோவை மண்டலம் —

44. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஒண்டிபுதூர்.

45. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், உப்பிலிப்பாளையம்.

46. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், இராமநாதபுரம்.

47. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பாப்பநாயக்கன் பாளையம்.

48. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஆர். எஸ். புரம்.

49. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், காட்டூர்.

50. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், செல்வபுரம்.



1984 மார்ச் 6]

கோவை மண்டலம் —தொடர்ச்சி.

30. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சவுரிப்பாளையம்.

31. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், வெள்ளலூர்

32. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மதுக்கரை.

33. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், குனியமுத்தூர்.

34. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், இருகூர்.

35. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சூலூர்.

36. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஸ்ரீமுகை.

37. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சோமனூர்.

38. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பல்லடம்.

39. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பொள்ளாச்சி,

40. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், உடுமலைப்பேட்டை. (மொபைல்).

41. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஈரோடு.

42. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஆத்தூர்.

43. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மேட்டுப்பாளையம்.

44. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், மேட்டூர் டேம்.

45. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சேலம் (மொபைல்).

46. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், கூனூர்.

47. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், பள்ளிப்பாளையம்.

48. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சங்கரி.

49. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், குமாரபாளையம்.

50. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், குடியாத்தம்.

51. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், வாணியம்பாடி.

52. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், வேலூர்.

53. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், இராணிப்பேட்டை.

54. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சிங்காநல்லூர்.

## இணைப்பு— V.

(316-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 27 வினா எண் 10188-க்கான விடையைக் காண்க).

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 5 வருடங்களில் படிப்படியாக நிறைவேற்றியுள்ள திட்டப்பணிகள்

| வருடம். | சுற்றுலா விடுதி (ஓட்டல் தமிழ்நாடு) | துவங்கிய நாள். |
|---|---|---|
| சுற்றுலா விடுதிகள் : | | |
| 1977 | (1) சிதம்பரம் .. .. .. | 25—02—1977 |
| | (2) தஞ்சாவூர் .. .. .. | 07—02—1977 |
| 1980 | (3) மதுரை (3 நட்சத்திர ஓட்டல்) | 29—12—1980 |
| 1982 | (4) கோயம்புத்தூர் (3 நட்சத்திர ஓட்டல்). | 28—05—1982 |
| குடில்கள் : | | |
| 1979 | (1) உதகமண்டலம் .. .. | 31—03—1979 |
| | பெருவழி விடுதிகள் : | |
| 1978 | (1) இராணிப்பேட்டை .. .. | 24—09—1978 |
| 1979 | (2) உளுந்தூர்பேட்டை .. | 27—08—1979 |
| இளைஞர் இல்லங்கள் : | | |
| 1981 | (1) ஏற்காடு .. .. .. | 02—08—1981 |
| 1982 | (2) உதகமண்டலம் .. .. | 28—05—1982 |
| | (3) மாமல்லபுரம் .. .. .. | 30—05—1982 |
| | (4) மண்டபம் .. .. .. | 11—10—1982 |
| | (5) இராமேஸ்வரம் .. .. | 12—10—1982 |
| | தங்குமிடம் (Camping site) : | |
| 1982 | (1) மாமல்லபுரம் .. .. | 30—05—1982 |

மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை :

1982—83 1,289 + 174 (துவங்கும் நிலையில் உள்ளது). (2—2—1983 நாளில்) —1,463 மொத்தம்.



**2. இக்கழகத்தினால் தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் மற்ற வளர்ச்சிப் பணிகள் :**

மாமல்லபுரத்தில் அரும் பொருட்காட்சியகம் அமைத்தல், இராமேஸ்வரத்தில் துயில்கூடம், கன்னியாகுமரியில் இளைஞர் இல்லம் கட்டுதல், உதகமண்டலத்தில் ஏரி ஓரத்தில் சிற்றுண்டி விடுதி கட்டுதல், உல்லாச இரயில் வண்டி வாங்குதல், அதற்கான இருப்புப்பாதை அமைத்தல், சிறுவர் களியாட்டப்பூங்கா அமைத்தல், முதுமலையில் துயில்கூடமும், சிற்றுண்டியகமும் கட்டுதல், பிச்சாவரத்தில் துயில் கூடங்கள், குடில்கள், படகுத்துறை, சிற்றுண்டியகம் அமைத்தல் ஆகிய அரசுப் பணிகள் அனைத்தும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கொடைக்கானலில் " கோக்கர்ஸ் வாக் " என்னுமிடத்திலும், குறிஞ்சி ஆண்டவர் கோயிலிலும், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இரு தொலை நோக்கி இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடைக்கானலில் 76 படுக்கைகள் கொண்ட இளைஞர் இல்லம் (துயிலக விடுதி) கட்டி முடிக்கப்பட்டு செயல்படவுள்ளது. ஒகனேக்கல்லில் 42 படுக்கைகள் கொண்ட இளைஞர் இல்லமும் கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் துவங்கும் நிலையிலுள்ளது. மேலும் கொடைக்கானலில் சிற்றுண்டியகம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரியில் 16 படுக்கைகள் கொண்ட பெருவழி விடுதி ஒன்று கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் துவங்கும் நிலையில் உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை பொழுதுபோக்கு வளாகத்தில் 40 படுக்கைகள் கொண்ட கூடுதல் குடில்கள் 20 கட்டி முடிக்கப்பட்டு துவங்கும் நிலையிலுள்ளது.

**3. இக்கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் :**

சென்னை நகரத்தில் ஒரு ஓட்டல் கட்டுவதற்கும் மற்றொரு ஓட்டல் வாங்குவதற்கும் கருத்துக்கள் உள்ளன. மாவட்டங்களில் சில இடங்களில் ஓட்டல்கள் கட்டுவதற்கான கருத்துருக்கள் ஆலோசனையில் உள்ளன. திருத்தணியில் மற்றும் காரைக்குடியில் பெருவழி விடுதி கட்டும் திட்டங்கள் உள்ளன.

4. போக்குவரத்து :

1972 ஆம் ஆண்டில் இரண்டே இரண்டு சொகுசுப் பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவில் தற்போது 20 சொகுசு பேருந்துகள் உள்ளன. இவற்றில் 3 குளிர்பதன வசதி பெற்றவை. தற்போது இக்கழகம் தமிழ்நாடு மற்றும் தென்னிந்தியாவில் ஏழு நாட்கள் சிக்கனச் சுற்றுலா நடத்துகிறது. வார இறுதி சுற்றுப்பயணம் ஒன்றும் துவக்கியுள்ளது. மேலும், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு நாள்தோறும் சுற்றுலாக்களை நடத்துகின்றது. இக்கழகம திருப்பதிக்கு அன்றாடம் சுற்றுலாப் போக்குவரத்து பயணங்களை நடத்துகிறது. நகர்வலப் பயணமும் இக்

கழகத்தால் சென்னையில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகிறது. இப்பயணத் திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. பல புதிய சுற்றுலாப் பயணத் திட்டங்களும் தேவைக்கேற்ப தொடங்கப்பட உள்ளன. இந்தியாவிலேயே முதல் முதலாக சுற்றுலா முகவர்கள் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இக்கழகத்தினால் அமர்த்தப்பட்டுள்ளனர்.

## இணைப்பு VI.

*(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—52 வினா எண். 11941 க்கான விடையைக் காண்க.)*

''அரசுத் தொழிற்சாலைப் பணியாளர்கள் உதவி பெறும் வருங்கால வைப்பு நிதித் திட்டம் என்ற பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஒன்றினை அரசு 1—4—70 முதல் கொண்டு வந்தது. இத்திட்டம் அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைப் பிரிவுகளில் பணியாற்றும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இதனால் வருங்கால வைப்பு நிதி (பல்வகை) சட்டத்தினை இந் நிறுவனங்கள் நடைமுறைப்படுத்துவதிலிருந்து இறுதியான விதிவிலக்கு அளிக்கும் வகையில், தற்காலிக 'தளர்த்துதல் ஆணை' யொன்று 38 நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது.

2. வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திலிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட வேண்டிய மொத்தத் தொகையான சுமார் ரூ. 176 இலட்சங்களில் ரூ. 15 இலட்சங்கள் ஏற்கனவே மாற்றப்பட்டுவிட்டது. மீதித் தொகையான சுமார் 161 இலட்சங்களை மாற்றம் செய்யும் வழி வகைகளுக்கென, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தமிழக அரசுக்கு செயற்குறிப்பொன்றினை அனுப்பியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இணைப்பு VII.

*(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—53 வினா எண். 12038-க்கான விடையைக் காண்க.)*

(அ) அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு நியாய வாடகை, நிர்ணயம் செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் 1976 நவம்பரில் நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட துணை ஆணையரைத் தலைவராகவும் அறநிலையத்துறையின் செயல் பொறியாளரை தொழில் நுட்ப உறுப்பினராகவும் ஆலயச் செயல் அலுவலரைச் செயலாளராகவும் கொண்டனவாக அவை இருந்தன. இக்குழுக்கள் பொதுப் பணித்துறை பின்பற்றும் விதி



முறைகளின்படி கட்டிடங்களுக்கு வாடகையினை நிர்ணயித்தன. 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைச் சட்டப் பிரிவுகளின்படியும், அச்சட்டத்தின்பாற்பட்ட விதிமுறைகளின்படியும் அறநிலையக் கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யும் பொறுப்பு சம்பந்தப்பட்ட ஆலயத்தின் அறங்காவலர் குழுவினைச் சார்ந்தது. அநேகமாக எல்லா பெரிய ஆலயங்களுக்கும் அறங்காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாலும் அறநிலையத் துறையின் பொறியியல் பிரிவின் செயற்பொறியாளர் பதவி 1—2—1979 முதல் நீக்கப்பட்டாலும், மேற்குறிப்பிட்ட நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் தேவையில்லை என்று கருதப்பட்டு 1—2—1979 முதல் நீக்கப்பட்டன.

(ஆ) வாடகை உயர்வினை முறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்ட வழிகாட்டி முறைகள் பின்வருமாறு :—

குடியிருப்புக் கட்டிடங்கள் (Residential Buildings) மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் (Non-Residential Buildings) (அதாவது மருத்துவ மனை, பள்ளிகள், அரசு அலுவலகங்கள் உள்ள கட்டிடங்கள்) :—

(1) இந்தக் கட்டிடங்களுக்கு 1385 ஆம் பசலி ஆரம்பித்தது முதல் வாடகை உயர்த்தப்படாமல் இருந்தாலும், அல்லது 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் கொடுக்கப்பட்ட அறிவுரைகளின்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் அவைகளைத் திருத்தி 1385-ம் பசலியில் உள்ள வாடகையைவிட அரைப் பங்கு (50 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயிக்கலாம்.

(2) 1382 ஆம் பசலி முதல் வாடகை உயர்த்தப்படாமல் இருந்தாலும் அல்லது நியாய வாடகை ஏற்கனவே உள்ள அறிவுரைகளின்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அவைகளைத் திருத்தி 1382 ஆம் பசலியில் உள்ள வாடகையுடன் ¾ பங்கு (75 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(3) 1382-ம் பசலிக்கு முன்பு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை அந்த வாடகை உயர்த்தப்படாமலோ, நிர்ணயம் செய்யப்படாமலோ இருந்தாலும் அவைகளுக்கு 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் ஒரு பங்கு (100 சத விகிதம்) சேர்த்து நியாய வாடகை நிர்ணயம் செய்யலாம். கடைகள், வியாபார நோக்குள்ளவை (Commercial Buildings).

இப்பிரிவில் கடைகளுக்கும் மற்றும் இதர வியாபார நோக்குள்ளவைகளுக்கு விடப்பட்ட கட்டிடங்கள் அடங்கும். இம்மாதிரியான கட்டிடங்களுக்கு கீழே கொடுத்துள்ள வழிகாட்டி

முறைப்படி வாடகை உயர்வு செய்து நியாய வாடகைக் குழுவின் பரிசீலனைக்கு வைத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்:—

(1) ஆலயங்களின் மூலம் வசதிகள் செய்து தரப்பட்டுள்ள கட்டிடங்கள், கடைகள் மற்றும் இதர வியாபார நோக்குள்ளவைகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு 1385-ம் பசலி முதல் வாடகை உயர்த்தப்படாமலோ, அல்லது திருத்தம் செய்யப்படாமலோ இருந்தால் அவைகளுக்கு 1385-ம் பசலியில் உள்ள வாடகையுடன் ¾ பங்கு (75 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(2) 1382-ம் பசலி முதல் இக்கட்டிடங்களுக்கு வாடகை உயர்வு செய்யப்படாமல் அல்லது திருத்தப்படாமல் இருந்தால், 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் 1 1/8 பங்கு (112.50 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(3) 1382-ம் பசலிக்கு முன்பிருந்து வாடகை உயர்த்தப்படாமல் அல்லது திருத்தம் செய்யப்படாமல் இருக்கும் கட்டிடங்களுக்கு 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் 1½ பங்கு (150 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

ஆலயத்தினால் எவ்வித வசதியும் செய்து தரப்படாத கடைகள் மற்றும் வியாபார நோக்குள்ள கட்டிடங்கள்.

(1) ஆலயங்களின் மூலம் கடைகளுக்கும மற்ற வியாபார நோக்குள்ளவைகளுக்கும் (தையல், அங்காடிக்கடை முதலியவை) வாடகைக்கு விடப்பட்டிருக்கும் கட்டிடங்களில் எவ்வித வசதிகளும் செய்து தரப்படாமலும், இருந்தால் மேற்படி கட்டிடங்களுக்கு குடியிருப்புக் கட்டிடங்களுக்கு முதலில் குறிக்கப்பட்டுள்ள வழிகாட்டி முறைகளின்படி வாடகை உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(2) குற்றாலம் போன்ற இடங்களில் பருவ காலத்தில் மட்டும் வியாபாரம் நடைபெறுவதால் பருவம் அல்லாத மற்ற காலங்களுக்கு இப்பொழுது நிர்ணயிக்கப்படும் பருவ கால வாடகையில் 3/4 பங்கு வசூலிக்கலாம்.



## இணைப்பு VIII.

(333 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 59 வினா எண் 12552 க்கான விடையைக் காண்க.]

(அ) சேமிப்பின் அவசியத்தினை இளம் வயது முதற்கொண்டே கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சஞ்சயிகா என்ற பள்ளி சேமிப்புத் திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஊக்கத்தோடு செயல்படும் பள்ளிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒவ்வொரு ஆண்டும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தை மேலும் விளம்பரப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 1982—83 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தினரால் வெளியிடப்படும் ஒரு லட்சம் நோட்டுப் புத்தகங்களின் பின் பக்கத்தில் பள்ளி சேமிப்பு வங்கி பற்றி விளம்பரம் வெளியிட அரசு ஆணையிட்டுள்ளது. சிறு சேமிப்பின் அவசியத்தினை உணர்த்தும் பொருட்டு ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரி அளவில் மாணவ, மாணவிகளுக்கான நாவண்மைப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) 1980—81 ஆம் ஆண்டில் மட்டும் 2,71,336 மாணவ மாணவியர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

## இணைப்பு IX.

(349 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத— 93 வினா எண். 3603-க்கான விடையைக் காண்க)

(அ) நீர் நுட்பவியல் மையம் ஒன்று கோவையில் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஆரம்பிக்க திட்டம் உள்ளது.

(ஆ) அமைக்க இருக்கும் நீர் நுட்பவியல் நிலையத்தின் பணிகள் கீழ் வருமாறு :—

(1) முற்போக்கான ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் நீர்த் தேக்கம், கட்டுப்பாடு, வளர்ச்சி, பயன்படுத்துதல் ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

(2) அடிப்படையும், அதனைச் சார்ந்த கோணங்களில் வேளாண்மை தொழிற் கூடங்கள், வீட்டிற்குத் தேவையான நீரைப் பயன்படுத்துதலை ஆராய்ச்சி செய்து பரிந்துரைத்தல்.

(3) பயிர், மண், பொறியியல், பொருளாதாரம் முதலிய துறைகளைக் கற்பிப்பதன் மூலம் மாணாக்கர்கட்கு, பரந்த அறிவினைப் புகட்டுதல்.

(4) பல்துறை இணைந்த ஆராய்ச்சிகளால் நீரைச் சேமித்தல், நீர் சுழற்சிகளை ஆராய்ச்சி செய்து அவற்றால் நீர்ப்பாசன வடிகால் முறைகளை அறிவியல் ரீதியில் நீரின் தன்மையால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை அகற்றி நிலவளத்தைப் பெருக்க முயற்சித்தல்.

(5) கருத்தரங்கம், கண்காட்சி போன்றவைகளால் கல்வி ஆராய்ச்சி விரிவுரை முதலிய நோக்கத்துடன் நீர் நிர்வாகத்தை பயன்படுத்தல்.

(6) நீர்த்தேக்கத்தின் அளவிற்கேற்ப வேளாண்மை தொழிலில் ஈடுபடுவோர்க்கு நீர் நிர்வாகத்தின் மூலம் வேளாண் துறையினை முன்னேறச் செய்தல்.

(7) மாநில அரசிற்குத் தேவையான தொழில்நுட்ப பரிந்துரைகள் மற்றும் செய்திகளை வழங்கி நீர் சுரங்கத்தில் கிடைக்கும் அரும்பொருட்களை தேவைக்கேற்ப வழிமுறைவகுத்து வழங்கிட பரிந்துரைத்தல்.

(8) ஆராய்ச்சி தொடர்பான கட்டுரைகள், நூல்கள் போன்ற வெளியீடுகளால் நீரினைச் சார்ந்த செய்திகளை வெளிப்படுத்துதல்.

(9) ஆராய்ச்சியின் மூலம் நீர் வளர்ச்சி, கணக்கீடு, நிர்வாகம், சேமிப்பு பயன்படுத்துதல் போன்ற பகுதிகளில் உருவாகும் கொள்கைகட்கு ஏற்ப அதற்குரிய செயல்முறைகளை உருவாக்குதல்.

## இணைப்பு X.

(365 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—125 வினா எண் 14344-க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாட்டிலுள்ள இந்துசமய நிறுவனங்களைப் பொறுத்து எழும் பொதுப் பிரச்சினைகள் பற்றி கருத்துக்களை அரசுக்கு அவ்வப்பொழுது எடுத்துக் கூறுவதற்கு, செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், ஓர் உயர் மட்ட ஆலோசனைக் குழு 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதற் கூட்டம் 18—11—1981 அன்று திருச்சியில் கூடியது. இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் :

1. இந்து மக்களின் சமய உணர்வில் உறுதிபாட்டிற்கு தமிழகத்திலுள்ள இந்து ஆலயங்களும், இதர இந்துசமய நிறுவனங்களும் பொதுவாக இயங்க வேண்டிய நிலை.

வழிபாட்டில் எல்லோரும் பங்கு கொள்ளவும், சமயக் காரியங்களில் இந்துக்கள் அனைவரையும் ஈடுபடுத்தவும், தக்க நடவடிக்கைகள் ஆலயங்களில் எடுக்கப்பட வேண்டும்.

2. இந்து சமய வளர்ச்சிக்கு திருக்கோயில்களும், இதர இந்து சமய நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் : திருக்கோயில்களில் பக்தர்கள் சாதிபேதமின்றி ஒருமைப்பாட்டுணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய உணர்வை உருவாக்குவதற்கும், ஒற்றுமை நிலை ஏற்படுவதற்கும்



கூட்டு வழிபாடு உதவும். கிராமங்களில் சமயப் பெரியோர்களின் மத பிரச்சாரம் நடைபெறவேண்டும். ஆலய வரலாற்று நூலை பல மொழிகளில் பிரசுரம் செய்ய வேண்டும். தமிழ் அர்ச்சனை முறையை அதிகமாக மேற்கொள்ள வேண்டும். சீரான நிர்வாகம் நடைபெற வேண்டும்.

3. இந்துக்களின் சமுதாய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு திருக்கோயில்களும் இதர இந்து சமய நிறுவனங்களும் செயல்படுத்தக் கூடிய ஆக்கப் பணிகள் ;

பண வசதி உள்ள ஆலயங்கள் சிறிய ஆலயங்களுக்கு நிதி தந்து உதவ வேண்டும். பெரிய ஆலயங்களும், மடாதிபதிகளும் கிராமங்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு, கிராம மக்களின் பல்வேறு வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக ஏழை எளிய பிற்பட்ட சமூகத்தினர், ஆதி திராவிடர் ஆகியோரின் வாழ்க்கை முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

4. அறநிலையச் சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தை அதிகப்படுத்தக்கூடிய வழி வகைகள் ஆகியவை :

தற்பொழுது இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான விளை நிலங்களின் குத்தகைதாரர்கள் தங்கள் விருப்பம் போல் உரிமை மாற்றுவதை தடை செய்ய வேண்டும். குத்தகைக் கட்டுப்பாடு நிவாரணச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும். கூட்டுப்பண்ணை முறையில் சாகுபடி செய்வதைப் பரிசீலிக்க வேண்டும். குறைந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ள நீண்டகால (99 வருட) குத்தகை ஒப்பந்தம் உள்ள இனங்களில் குத்தகையை ரத்து செய்யவும், நியாயமான குத்தகையை நிர்ணயம் செய்து வசூலிப்பதற்குத் தேவையான நடவடிக்கையை சட்ட ரீதியில் எடுக்க வேண்டும். மடத்து நிலங்களை அரசு எடுத்துக் கொண்டு நஷ்டஈடு கொடுக்கலாம் என்றும் விவாதிக்கப்பட்டது.

சமீபத்தில் ஏற்படுத்திய சட்ட திருத்தத்தின் விளைவாக ஆலயத்தின் விளைபொருள் பங்கு 40 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. நிலச் சட்டங்களின் சட்ட விதிகளை ஆராய்ந்து இந்த குறைந்த அளவு குத்தகையையாவது சரியாக வசூலித்து ஆலயத்திற்குக் கொடுப்பதற்கு வேண்டிய வழி வகைகளை ஆராய்ந்து கருத்துக்களைத் தெரிவிக்க உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் உட்குழு ஒன்று அமைத்து ஆராய்ந்து குழுவின் மூலம் அரசிற்கு தக்கப் பரிந்துரை செய்யலாம்,

மேற்கண்ட பரிந்துரையின் அடிப்படையில் உட்குழு என்று அமைக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு XI

(368 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 130— வினா எண் 14531 க்கான விடையைக் காண்க.)

அட்டவணை.

| வரிசை எண். (1) | குறியீடு எண். (2) | முகவரி. (3) | தொழிலாளர்களின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 1 | 51—6162—74 | ஆஞ்சநேயா மோட்டார் டிரான்ஸ்போர்ட், ஈரோடு. | 40 |
| 2 | 51—6165—11 | நடேசன் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், 147/148, பெருந்துறை ரோடு, ஈரோடு. | 558 |
| 3 | 51—6198—19 | ஈரோடு பிளீச்சிங் அண்டு ஃபினிஷிங் கம்பெனி, அவல் பூந்துறை ரோடு, ஈரோடு. | 34 |
| 4 | 51—5907—06 | ஸ்ரீகிருஷ்ணா ஆயில் மில்ஸ், 189, சத்தி ரோடு, ஈரோடு. | 34 |
| 5 | 51—7055—21 | ஈ. கே. ஹாஜி மொகம்மீது மீரா சாகிப் அண்டு சன்ஸ், பாமனபுரம, அக்ரஹாரம் போஸ்ட், ஈரோடு. | 133 |
| 6 | 51—7056—21 | ஈ. சே. ஹாஜி மொகம்மது இப்பராகிம் சாகிப் அண்டு சன்ஸ், பெரிய அக்ரஹாரம் கிராமம், ஈரோடு. | 56 |
| 7 | 51—7096—13 | தமிழ்நாடு ேரா ஆப்பரேடிவ் டெக்ஸ்டைல் பிராசசிங் மில்ஸ், பெரிய அக்ரஹாரம் போஸ்ட், ஈரோடு. | 215 |
| 8 | 51—7119—21 | லெதர் ஃபினிஷிங் சென்டர், பெரிய அக்ரஹாரம் போஸ்ட், ஈரோடு. | |
| 9 | 51—7121—11 | ஆர். எஸ். பி. ஏ. வி. பி. கேலண்டரிங் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், எஸ். எப். 323/1, சக்தி ரோடு, பெரிய சேனீர் கிராமம், ஈரோடு. | 22 |
| 10 | 51—7135—65 | டான்லி மெஷின் டூல்ஸ், சென்னிமலை ரோடு, சொர்ணம்பட்டி, ஈரோடு. | 160 |
| 11 | 51—7337—06 | ஸ்ரீரங்கா பவுண்டரி, ரைஸ் அண்ட் ஆயில் மில்ஸ், 47-ஏ, பார்க் ரோடு, ஈரோடு. | 13 |
| 12 | 51—7360—90 | தி ஈரோடு பொன்னின் வொர்க்கர்ஸ் இண்டஸ்டிரியல் கோ ஆப்பரேடிவ் சொசைடி லிமிடெட், பெருந்துறை ரோடு, குனலம்கட்டை, ஈரோடு. | 23 |
| 13 | 51—7408—21 | ஈ. கே. லெதர் மேனுபேக்சரிங் கம்பெனி, பவானி ரோடு, பெரிய அக்ரஹாரம், ஈரோடு-5. | 36 |
| 14 | 51—14075—56 | பிரசாஷ் மெட்டல் இண்டஸ்டிரிஸ், கவர்மெண்ட் இண்டஸ்டிரியல் எஸ்டேட், ஈரோடு. | 15 |
| 5 | 51—14042—19 | பாலகிருஷ்ண கேலண்டரிங் மில்ஸ், 101-ஏ, ஈஸ்வரன் கோயில் தெரு, ஈரோடு. | 59 |

| வரிசை எண். | குறியீட்டு எண். | முகவரி. | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 16 | 51—14100—11 | அருரம் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், 151, பெருந்துறை ரோடு, ஈரோடு. | 68 |
| 17 | 51—14108—05 | அங்கப்பா ரைஸ் அண்டு ஆயில் மில்ஸ், பெருந்துறை, ஈரோடு. | 15 |
| 18 | 51—14128—02 | தி நீல்கிரிஸ் டெய்ரி ஃபார்ம் (பிரைவேட்) லிமிடெட், வண்டிப்பாளையம், ஈரோடு. | 130 |
| 19 | 51—14209—19 | குமாரன் கேலண்டரிங் மில்ஸ், எஸ். எப். 309, நாராயண வலசு திண்டல் போஸ்ட், ஈரோடு. | 37 |
| 20 | 51—14279—32 | சிவகுமார் ஆயில் மில்ஸ், 8-பி, பெருந்துறை ரோடு, ஈரோடு. | 25 |
| 21 | 51—14396—74 | கணேஷ் ஆட்டோமொபைல்ஸ், 36, சென்னிமலை ரோடு, ஈரோடு. | 19 |
| 22 | 51—16531—02 | ஈரோடு டிஸ்ட்ரிக்ட் கோ ஆப்பரேடிவ் மில்க் புரொடியூசர்ஸ் யூனியன் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னிமலை, ஈரோடு. | 101 |
| | | .. | 1,803 |





## இணைப்பு XII.

(120 ஆம் பக்க உடுக்குறியிடாத 172—வினா எண் 16034க்கான விடையைக் காண்க.)

(அ) 1982 ஆம் ஆண்டு +2 வகுப்புகளில் 100 சதவிகிதம் வெற்றி பெற்ற பள்ளிகள் 23 ஆகும். அவை பின்வருமாறு :—

| வரிசை எண். | பள்ளியின் பெயர். | தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | வி. எஸ். கே. டி. மெட்ரிக் மேநிலைப் பள்ளி, சிவகாசி. | 3 |
| 2 | சி. வி. பி. ஏசி. ஆர். ஆர். மெட்ரிக் மேநிலைப்பள்ளி, ராஜபாளையம். | 7 |
| 3 | நகராட்சிப் பெண்கள் மேநிலைப் பள்ளி, இராமநாதபுரம். | 14 |
| 4 | அரசு மேநிலைப்பள்ளி, ஜி. கல்லுப்பட்டி | 15 |
| 5 | எஸ். ஐ. வி. மெட்ரிகுலேசன் மேநிலைப் பள்ளி, சிறுமுகை. | 18 |
| 6 | அரசுப் பெண்கள் மேநிலைப் பள்ளி, கடையநல்லூர். | 26 |
| 7 | புனித ஜேம்ஸ் மேநிலைப் பள்ளி, பாளக்குறிச்சி. | 31 |
| 8 | புனித மேரி மெட்ரிகுலேசன் மேநிலைப் பள்ளி, கடலூர். | 31 |
| 9 | எஸ். எச். சி. மேநிலைப் பள்ளி, விழுப்புரம். | 32 |
| 10 | புனித மேரி மேநிலைப் பள்ளி, சென்னை-1. | 38 |
| 11 | எஸ். கே. எஸ். எஸ். டி. மகளிர் மேநிலைப்பள்ளி, சௌகார்பேட், சென்னை-1. | 40 |
| 12 | தூய சிலுவை ஆங்கிலோ-இந்திய மேநிலைப் பள்ளி, தூத்துக்குடி. | 42 |

| வரிசை எண். | பள்ளியின் பெயர். | தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 13 | புனித கொலம்பஸ் மேநிலைப் பள்ளி, ஜி.டி., சென்னை-1. | 46 |
| 14 | புனித ஜோசப் மெட்ரிகுலேசன் மேநிலைப்பள்ளி, சேலம். | 56 |
| 15 | கார்மல் தோட்ட மெட்ரிகுலேசன் மேநிலைப்பள்ளி, கோயம்புத் தூர். | 59 |
| 16 | டவ்டன் கொரி மகளிர் மேநிலைப் பள்ளி, சென்னை-7. | 61 |
| 17 | தூய இருதய மகளிர் மேநிலைப்பள்ளி, ஸ்ரீவில்லிபுத் தூர். | 83 |
| 18 | வி. வி. மேநிலைப்பள்ளி, வெங்கடாசல புரம். | 85 |
| 19 | புனித ஜோசப் ஆங்கிலோ-இந்திய மகளிர் மேநிலைப் பள்ளி, மேல புதூர், திருச்சிராப்பள்ளி. | 89 |
| 20 | எல். எப். கான்வென்ட் சென்டர் நிலைப்பள்ளி, சென்னை-6. | 4 |
| 21 | ரோசரி மெட்ரிகுலேஷன் மேநிலைப் பள்ளி, சாந்தோம், சென்னை-4. | 116 |
| 22 | பாத்திமா மெட்ரிகுலேஷன் மேநிலைப் பள்ளி, சென்னை-24. | 136 |
| 23 | ஜி. ஜி. ஜெயின் மகளிர் மேநிலைப் பள்ளி, சென்னை-1. | 24 |

(ஆ) ஒருவர்கூட வெற்றி பெறாத பள்ளி ஒன்றே ஒன்று மட்டும்தான். அது கடலூரிலுள்ள மஞ்சக்குப்பம் அரசு மே நிலைப் பள்ளியாகும். அப் பள்ளியிலிருந்து ஒன்பது மாணவர்கள் தேர்வு எழுதினர்



## இணைப்பு XIII.

(391 ஆம் பக்க உடுக்குறியிடாத 177— வினா எண் 16164க்கான விடையைக் காண்க.)

சோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம், குமர லிங்கம் காவல் நிலைய எல்லையிலுள்ள கொழுமம் என்ற ஊரில் கள்ளத்தனமாக ஒரு சாராய ஆலை இயங்கி வருவதாகக் கோவை ஊரக மாவட்ட மதுவிலக்கு இயங்கும் பிரிவுக் கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு 21–7–1982 அன்று 'தகவல் கிடைத்தது. உடனடியாக 22–7–1982 அதிகாலை 2–00 மணி யளவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தமது ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் கள்ளத்தனமாக இயங்கி வந்த அந்த சாராய ஆலையை முற்றுகையிட்டனர். கார் நிறுத்தும் அந்த இடம் 1/32 என் கதவிலக்கமிடப்பட்டது. பழனியைச் சேர்ந்த எம். சாகுல் அமீது, வி. எம். சர்க்கரை முகமது மற்றும் முகமது உசேன் என்பவர்களுக்குச் சொந்தமானது. குற்றவாளிகள் இந்த இடத்தை அந்த இடத்தின் சொந்தக்காரர்களிடமிருந்து வாட கைக்கு எடுத்திருந்தனர். குற்றவாளிகளான (1) சேட்டு முகமது, த/பெ. சையது முகமது, பாலசமுத்திரம், இளமம், பழனி மற்றும் (2) பழனிச்சாமி, பழனி ஆகிய இருவரும் வேலம்பட்டை, கள்ளச்சாராயம், அமோனியம் குளோரைடு, சிங்க் சல்பேட், ஊமத்தை விதைகள் ஆகியவற்றிலிருந்து மது கஷாயம் என்ற பெயரில் போதை தரும் பொருளைத் தயாரித்து, பாட்டில்களில் அடைத்து விற்று வருவது தெரிய வந்தது.

இதன் தொடர்பாக குற்றவாளி சேட்டு முகமது கைது செய்யப்பட்டார். மற்றொரு குற்றவாளி பழனிச்சாமி 8–8–1982 அன்று கைது செய்யப்பட்டு எதிர்பார்ப்பு ஜாமீன் பெற்று இருந்ததால், ஜாமீனில் விடப்பட்டார். 13,000 லிட்டர் மது கஷாயம் கைப்பற்றப்பட்டது. மேலும் மதுகஷாயம் தயா ரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த வேலம்பட்டை, கருவேலம் பட்டை, கள்ளச் சாராயம், சிங்க் சல்பேட், அமோனியம் குளோ ரைடு மற்றும் ஏனைய நச்சுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. மதுகஷாயம் ஊற்றி அடைக்க வைக்கப்பட்டிருந்த 1,000 காலி புட்டிகளும் கைப்பற்றப்பட்டன. இந்த மதுகஷாயம் உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடிய நச்சுப் பொருள் கலந்த மதுவகை என்று தெரிந்தவுடன் மாதிரிப் பொருட்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு மதுகஷாயம் அனைத்தும் அழிக்கப் பட்டுவிட்டது. கோவை ஊரக மாவட்ட இயங்கும் பிரிவு குற்ற எண் 1320/82 பிரிவு 4 (1) (எ) மதுவிலக்கு சட்டத்தின் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட குற்ற வாளி சேட்டு முகமது, பொள்ளாச்சி உப கோட்ட நீதிமன்ற நடுவர் முன்பு ஆஜர்படுத்தப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். மாதிரிப் பொருளாக எடுக்கப்பட்ட 'தச மூல கஷாயம்' பகுதி அறிவியற் ஆய்வுகூடத்திற்கு இரசாயனப் பரிசோதனைக்கு அனுப் பப்பட்டது. கோயம்புத்தூர் பகுதி அறிவியல் ஆய்வக உதவி

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

51

### *In Madras City.*

Account Test Institute, Egmore Madras-600 008.
The City Book Company, Madras-600 004.
Higginbothams (Private) Ltd., Madras-2.
V. Varadachary & Co., Madras-1.
C. Subbiah Chetty and Company, Madras-600 005.
The Universal Book House, Moore Market, Madras-600 003.
Sitaraman and Company, Madras-600 014.
Mohan Pathippagam and Book Depot, Madras-600 005.
C. Venkatesan Chetty and Company, No. 8-C Pycrofts Road Madras-600 005.
The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madars-600 001.
The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-600 001
New Century Book House (Private) Limited, Madras-600 002.
Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-600 008.

### In Mofussil of Tamil Nadu.

A. Venkatasubban and Company, Vellore (North Arcot District)-632 001
Bharathamatha Book Depot, Thanjavur.
S. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
Appar Book Stall, Thanjavur.
P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Brothers, Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
B. Aruldass, Villupuram (South Arcot District).
Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road Coimbatore-12.
Mercury Book Company, No. 20, Karuppa Gounder Street Coimbatore-1.
S. M Jaganathan Book House, P.B. No. 327, No. 25, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
Ganesh Stores, South Car Street, Sivakasi.
Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
A. K. Chandriah Chettiar and Sons Salem-636 001.
Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem-636 001.
Meenakshi Pathippagam, Pudukkottai.
K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
Jayakumari Stores, Nagercoil, Kanyakumari District.
Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
Ajantha Book Centre, Salem-1.
Sri Vidhya Book Shop, No. 63, Tennure High Road, Tiruchirappalli-2.
Sri Rama Vilas Book Shop, No. 90, Amman Sannathi, Madurai-1.
Sarvothaya Ilakkiya Pannai, No. 32/1, West Velli Street, Madurai-1.
Vijaya Book House No. 93, Cherry Road, Salem-636 001.

### In Other States.

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
6. Prabhu Book Service, Gurgaon, Haryana
7. K. P. Bagchi and Company, No. 286 B.B, Ganguli Street, Calcutta-12.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.

136223
சென்னை-600 008

இயக்குநர் இம்மாதிரிப் பொருட்களில் மயில் துத்தம் (Chloral Hydrat ) கலந்து உள்ளதாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாடு மதுவிலக்கு (சட்டம் 4 (1) (எ) R/W 11 (A) பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு முதல் வகுப்பு குற்ற வியல் நீதிபதி (மதுவிலக்கு), பொள்ளாச்சி நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

## இணைப்பு XIV.

*(396 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 185—வினா எண் 16431க்கான விடையைக் காண்க.)*

(அ) ஆம். மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை யொட்டி மகாகவி பாரதியாரின் புகழ் பரப்ப வெளி நாடுகளுக்கு கலைக்குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

(ஆ) மகாகவி பாரதியாரின் புகழ் பரப்ப மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவினையொட்டி வெளிநாடுகளில், குறிப்பாக தமிழ் மக்கள் வாழும் இடங்களில், மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெறும் பொழுது பாரதியாரின் பாடல்கள் அடங்கிய நிகழ்ச்சிகளை மட்டுமே வழங்க மைய அரசின் நிதி உதவியுடன் கலைக் குழுக்களை அனுப்பி வைக்கலாமென்று முடிவு செய்யப்பட்டது. கலைக் குழுக்களை அனுப்பி வைக்கும் மொத்த செலவினத்தில் 50 விழுக்காடு தமிழ்நாடு அரசும, 50 விழுக்காடு மைய அரசிலுள்ள இந்திய கலாச்சார நட்புறவுக் கழகமும் ஏற்றன. இங்கிலாந்தில் இந்திய தூதரகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் திரு. வலம்புரிஜான் அவர்கள் இலண்டனில் 11-2-1982 அன்று மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ள அனுப்பப்பட்டார்.

(இ) அரசின் முடிவின்படி இலண்டனில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவிற்கும், பிஜி, ஆஸ்திரேலியா, மற்றும் மலேசியாவில் நடைபெற்ற நூற்றாண்டு விழாக்களுக்கும், மொரீஷியஸ் தீவில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவிற்கும் கலைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

V 211 3 N84

(ஈ) இலண்டனில் 11-12-1982 அன்று நடைபெற்ற விழாவில் பங்கேற்க டாக்டர் பத்மா சுப்பிரமணியம் தலைமையில் [illegible] பேர் அடங்கிய குழு அனுப்பி வைக்கப்பட்டது. ஆஸ்திரேலியா, பிஜி தீவுகள், மலேசியா ஆகிய நாடுகளுக்கு 13-1-1983 முதல் [illegible]2-1-1983 வரை செல்வி உமா தண்டாயுதபாணி தலைமையில் [illegible] பேர் அடங்கிய குழு அனுப்பி வைக்கப்பட்டது. மொரீஷியஸ் தீவுக்கு 4-2-1983 முதல் 14-2-1983 வரை 'பாரதி கண்ணம்மா' நாட்டிய நிகழ்ச்சியினை நடத்த செல்வி வெண்ணிற ஆடை நிர்மலா தலைமையில் 13 பேர் அடங்கிய குழு அனுப்பப்பட்டது.

N84.59-8